KZ2:4.6
N13
119983

உ

சிவமயம்.

காலிபரிபாலனசிகிச்சாதீபம்

என்கிற

# மாட்டுவாகடம்.

இஃது

திருநெல்வேலி

நெல்லையப்பிள்ளையவர்கள்

இயற்றியதுடன்,

---

மதுரை

த. குப்புசாமிநாயுடு

அவர்களால்

பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு யாவரும்

எளிதிலறிந்துகொள்ளும்பொருட்டு

பிழையறச்சீர்திருத்தி

கோளப்பஞ்சேரி

செல்லப்பமுதலியாரது

சென்னை,

ஜீவகாருண்யவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.


---

1913

இதன் விலை ரூபா - 1 4 0

KZ24:6
N13

119983



உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

ஜெயத்திமாகரம்

# குஞ்சிஐயபாரதிகள்

இயற்றிய.

## நிலைமண்டிலஆசிரியப்பா.

சீர்பெறுசெல்வத்திருநகரத்தி
லேர்பெற்றுமேவுவேளாளர்நாயகன்
பாரினைக்காக்கும்பண்புடையாளன்
காரினைக்காக்குங்கவிகைபுரிந்தான்
நாயகமாகநின்றகாலிங்க
நாயகோத்திரத்திலணியமணியாம்
ஐந்தருவும்விரலையொத்தாற்
சந்ததஞ்சொர்ணந்தருங்கொடைக்கன்னன்
அங்கணமுத்துக்குமாரசுவாமித்துரை
சங்கமாய்ப்போற்றத்தவத்தினிலுதிக்க
மைந்தரின்மூன்றுவருமங்களசீலன்
செந்திருநாளுந்திகழ்புயலோலன்
நம்பன்மாமதத்திருட்டியகமிட்டி
மெம்பர்களுள்ளும்விறல்கெழுவேந்தன்
தந்திரத்தொழில்கள்சாற்றுதற்கரிய
மந்திரமுணர்த்தவல்லமையாளன்

மன்னவரேத்தவருமதியுள்ளான்
தன்னிகர்தானுந்தருமநன்னெறியான்
சிந்தாநீர்முக்குளச்செல்வபொதிவபோற்
செந்தமிழ்க்கவிதைநினைந்துநின்றுதெளிவான்
இம்பிலாந்தரசரேவருமதிழ
வெங்கணறுஞ்செங்கோலியற்றிடுதிருப்பன்
அரவணைத்துயில்வோனுமெனவந்த
சரவணமுத்தையாகிதிதனையும்
விப்பிரநியர்ப்புகழ்மென்மைதங்கியதோர்
சுப்பிரமணியக்குணபூபனையுங்
காதலினரியகனிட்டாய்க்கொண்டு
மேதினிதன்னில்விளங்கியமேரு
வல்லிமாமுனையுரர்மகனென்னுமழகன்
நெல்லையப்பேந்திரபூபனும்வள்ளல்
பாலியமுதல்யாப்பமியல்புபலவுங்
காலந்தெரிந்ததன்னையிருவிம்
பற்பலவாண்டுப்பண்டிதர்பகர்ந்த
கற்புவாகடங்கள்கற்றதிறனுங்
கைவிலொன்லியங்கனிபெனவிந்த
வையமின்றனாவாசகருடையாய்
மாட்டுலக்கணமும்வமுவுமுற்றும்
நாட்டியநெரூவாகன்னிலத்தலமும்
நடைகதிமந்தமகாடிக்குறிப்பிட்
டடைவுடன்பார்க்குமனவினநனைவும்
நித்தியல்கொடுக்கநிகழ்க்குதினியும்
சுத்தீர்க்கட்டச்சொல்லியவியல்பும்



சிறையுடனிதஞ்செய்வேவர்டிபியவமும்
பாவுசிநக்குளிப்பாட்டுமுறையும்
சிறந்திடுவிசேஷவினைநிதானமும்
திறக்குமசலர்ச்செய்ததுமொழுங்கு
அந்தமிக்கிணியும்பிணிதீர்த்தே
உய்த்திடவ்வகையாயுரைத்திடுமருந்தும்
ஆசைநனியதனிற்கட்டபேறிவாற்
றிசையெலாம்விளங்கத்திட்டிமெமாட்டு
வாகடமென்னுமுறந்தெனித்தால்
வாகுடனுலகினிலளம்பெறவாழி.

திருநெல்வேலி

அ. சங்கரநாராயண பிள்ளையவர்கள்

குமாரரும்

இந்நூலிற்காரிக்குஞ்செல்லம்மாதாயுத்திரருமான

சு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

இயற்றிய,

கட்டளைக் கலித்துறை.

பயன்குறியாதுலகோர்க்குபகாரம்புரிந்துசெய
அயன்படைத்தேயருணெல்லையப்பேந்திரனுக்கியமில்
வியன்பெறுவாகடநூலினியார்க்கும்விளங்கவைத்தான்
நயன்பொதிவாய்மைசுப்பிரமணியநாதிபனே.

உ

கணபதி துணை.

# முகவுரை.

சர்வ ஜெகத்பிதாவாகிய ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் நாற்காலுயிர்வருக்கங்களுள் மனிதர்களின் முக்கிய பிரயோசனத்துக்காக உரித்தானவைகளால் மாட்டுவருக்கம் அதி உத்கிருஷ்டமென்பது சர்வசாஸ்திரசம்மதம். அவற்றில் ஆண்வருக்கமாகிய எருதுகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடங்களுக்குச் செல்பவர்களும் பளுவான சாமான்முதலியவைகளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பவர்களுமாகிய இவர்களுக்கு வண்டி இழுத்தல்முதலிய வேலைகளையும் வேளாண்மைத் தொழிற்கு உழுதல் பரம்படித்தல் போரடித்தல்முதலிய தொழில்களையும் மற்றும் பிரவிர்த்திக்காரருக்கு பொதிசுமத்தல் இயந்திரஞ் சுற்றுவித்தல் முதலிய பல அலுவல்களையும் எளிதாகவுஞ் சகாயமாகவுஞ் சடுதியாகவு முடித்துக்கொள்வதற்கு உபயோகப்படுகின்றன; அன்றியும்,

"தொழுதூண்சுவையின் உழுதூணினிதான்,"
உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்.

என்று மஹான்கள் வாக்கியத்திற் சொல்லியவண்ணம் இந்தவுலகத்திலுள்ள சமஸ்ததொழிற்குங் கார



ணமாகவுஞ் சிறந்ததாகவு மிருப்பது உழவுத்தொழில் அவற்றிற்கு முக்கியகாரணமாகியவை.

வானமழைபெய்திடதாலும்வளம்படுவதெவராலே
ஞானமறையவர்வேள்விநலம்பெறுவதெவராலே
சேனைகொடுபொருமன்னர்செருக்களத்திற்செருக்கும
யானைவலியெவராலேயேருழவர்வலியாலே [க
ணட்டுவார்பிறருளரோவுலகுதனிலுழுபகடு
பூட்டுவார்புகழன்றிப்பிறர்புகழும்புகழாமோ
நாட்டுவார்சயத்துவசநயப்பாரையிவர்க்குநிகர்
காட்டுவார்யார்கொலிந்தக்கடல்சூழ்ந்தவையகத்தே.
பார்பூட்டுந்திசையனைத்தும் பகடுகளும்பரம்பூணு
போர்பூட்டுங்காமனுக்கன் பொருசிலைமேற்சரம்பூட்டான்
கார்பூட்டுங்கொடைத்தடக்கைக்காவலர்வாளாடர்
ஏர்பூட்டினல்லதுமற் றிரவியுந்தேர்பூட்டானே.

என்றபடி யெருதே

பெண்வருக்கமாகிய பசுக்கள், மெய்க்குறுதி பாலன்று நெய்யாலது என்றபடி, திவ்யாமிர்தமாகிய க்ஷீரத்தைக்கொடுத்து அதனாற் சரீரபலம் புஷ்டி முதலியவைகளைக் கொடுப்பதுமன்றி அக்ஷீர சம்பந்தமான அநேக வஸ்துக்களையுங் கொடுக்கின்றன. அன்றியும் இவ்வெருதுகளும் பசுக்களும் இந்துமதாசாரக் கிரியைகளுக்கு இன்றியமையாவான அநேக முக்கியபொருள்களையுங் கொடுக்கின்றன.

இவ்வாறு முக்கியபிரயோசன வஸ்துவாயிருக்கிற மாடுகளின் குணகுணம், அவற்றைப் பாதுகாக்

தத்தக்க முறை, அவற்றிற்கு விபரீத முதலியவைகளே ரிட்டால் நிவிர்த்திக்கவேண்டிய விதிமுறை என்னுமி வைகள் மனிதர்கட்குப் பெரும்பாலும் திட்டமாகத் தெரியவேண்டியவையா யிருக்கத் தெரியா திருக்கிறது தக்கதன்றென்பதையார்தான் ஒத்துக்கொள்ளாதார்.

ஆனால் இவற்றைப்பற்றிய சாஸ்திரம் இத்தக்கதாகவிருந்தும் யாதுகாரணத்தினாலோ மற்றச் சாஸ்திரங்கள்போல பண்டிதர்களால் அப்பியாசிக்கப் படுகிறதில்லை. பாமரர்கள் பெரும்பாலும் தங்கள் விவேகத்துக்கு எட்டினமட்டும் அப்பியாசித்திருக்கிறதுண்டு. அவ்வைத்தியர்களுங்கூட சமயத்தில் உதவுவார்களென்பது துர்லபம். அதுபோலவே வைத்தியரா யிருந்தும் செய்வித்துக்கொள்ள வாய்க்காமையால் ஜனங்களுக்கு விளைகிறவருத்தமும் கஷ்டமுமதிகம். இப்படி யிருக்க இக்குறையை நிவிர்த்திக்கும்பொருட்டுப் பல விடங்களிலுமிருந்து அவ்வைத்தியசாஸ்திரப் பிரதிகளை வருத்தி யாராய்ந்தும், நெடுநாளை அனுபவசாலிகளிடத்தில் விசாரித்தும், எனக்குத்தெரிந்த முப்பதுவருடத்து அனுபவங்களைத்தும் இந்நூலைச்சேர்த்து மாட்டுவாகடமென்றுபெயர்கொடுத்துச் சித்தப்படுத்தினேன். இந்நூற்கு 1845 - ம் வருடத்தில் அசிஸ்டெண்டு சர்ஜன் டப்ளியு கில்கிரிஸ்டு துரையவர்கள் அங்கிலேய பாஷையிற் பிரசித்தஞ்செய்திருக்கிற புத்தகம் கொஞ்சஞ்சாதகமா



யிருந்தது. இது சருவஜனங்களும் எளிதில் வாசித்துணர்ந்து கருதியபயனை யடையவேண்டு மென்ற ஒரேநோக்கங்கொண்டு இலேசான நடையில் எழுதப்பட்டமையால் எழுத்து, சொல், நடை முதலிய குற்றங்கள் இருப்பினுங் குணமே ஸ்வரூபமாக உடைய பேரறிவாளர் அவர்கள் இசையிற் குற்றமே இன்மையால் சமஸ்தமுங் குணமாகவே அங்கீகாரஞ்செய்வார்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்
தா. நெல்லையப்பபிள்ளை.

## விளம்பரம்.

இதனால் சகலமானபேர்களுக்கு தெரிவிப்பதியாதெனில் அடியில்கண்ட புத்தகங்கள் வேண்டியோர்கள் எமது விலாசத்துக்கு லெட்டர்எழுதி வி.பி மூலமாய்ப்பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| திருவாசகவுரை | 2 | 4 | 0 |
| நன்னெறி அரிச்சந்திரவிலாசம் | 2 | 0 | 0 |
| சோதிடச்சில்லரைக்கோர்வை 23-புத்தகம் சேர்ந்தது | 1 | 8 | 0 |
| சர்வார்த்தசிற்பசிந்தாமணி | 1 | 8 | 0 |
| யாப்பலங்காரிகைமூலமும்உரையும் | 1 | 0 | 0 |
| ஸங்கீதஸ்வரபூஷணி | 0 | 10 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 1 | 0 | 0 |
| மாட்டுவாகடம் தனி | 0 | 12 | 0 |
| ஷை மாட்டுவாகடம் இரண்டாம்பாகம் | 0 | 12 | 0 |
| அசுவசாஸ்திரம் தனி | 0 | 12 | 0 |
| 2-ம்-ஒன்றாய்சேர்ந்தது | 1 | 4 | 0 |
| சட்டைகொத்து-22-புத்தகம்ஒன்றாய்சேர் | 0 | 12 | 0 |
| பிரதாபமுதலியார்சரித்திரம் | 1 | 0 | 0 |
| பஞ்சதசப்பிரகரணம் | 1 | 0 | 0 |
| மகாராஜாதுறவு | 0 | 12 | 0 |
| சோதிடவகிரகமாலை | 0 | 8 | 0 |
| சோதிடபாலபாடம் | 0 | 8 | 0 |
| விஷ்டாநுபூதிமூலமும்உரையும் | 0 | 10 | 0 |
| வைதியகுரள் | 0 | 8 | 0 |
| வைதியகைமுறை | 0 | 8 | 0 |
| புலிப்பாணிசோதிடதாய்மகளேசல் | 0 | 10 | 0 |
| சாதகரகசியம் | 0 | 12 | 0 |

கோ. செல்லப்பமுதலியார்,
நெ. 32, நம்புல்லையர் வீதி,
சென்னை.

TAMIL

# MATTUVAGADUM

# மாட்டுவாகடம்.

## தெய்வவணக்கம்.

கரிகுழலுங்கருவிழியுமதிமுகமுமொழிப்பிரபைத்தோடார்காது, மிருதனமுமபயவரதத்துடனேபனிக்குவடமேடார்கையு, மரியதின்மருங்கலைய வடியேற்குப்பலகலையுமளித்தென்றுவிற், மிபுரமுழால நடமாடுகின்றபாரதிதாள்பணிதல்செய்வாம்.

## ※ மாடுகளின் இலக்ஷணம்.

சவாரிவண்டிகளுக்கு உபயோகமாய் வருகிற காளைமாடுகள் இதின் கீழேகண்ட லக்ஷணங்களைப் பொருந்தியிருந்தால் உத்தமம்.

நிறம்—மயிலை கருமயிலை சங்குவெள்ளை கருவெள்ளை சந்தனப்புல்லை இருண்டசெவலை இந்தஆறு நிறங்களும் உத்தமம்.

சரீரம்—நீண்டதாகவும் குதிரைச்சரீரம்போலத் திரட்சியாயுமிருக்கவேண்டும் முன் பின் உயரம் சமமாயிருக்கவேண்டும்.

எலும்புகள்—பருமனாகயிருக்கவேண்டும்.

ரோமங்கள்—அழுத்தமாயிருக்கவேண்டும்.

தலை—சிறிதாயிருக்கவேண்டும்.

முகம்—நீண்டதாகவுஞ் சதையன்னியினு மிருக்கவேண்டும்.

கொம்புகள்—பொடியாகவுங் கறுப்பு நிறமாகவு மிருக்கவேண்டும்.

கண்கள்—பெரிதாயிருக்கவேண்டும்.

காதுகள்—சிறிதாயிருக்கவேண்டும்.

நாடி—இரட்டைநாடி அல்லது ஒதுக்குநாடியாயிருக்கவேண்டும்.

கழுத்து—இரட்டைக்கழுத்தாயிருக்கவேண்டும்.

நாரை—தொங்காமல் ஒட்டியிருக்கவேண்டும்.

கடைவயிறு—கைக்கு ஒரு ஒட்டைநீளத்துக் கதிகப்படாம லிருக்கவேண்டும்.

குறுக்கு—இரட்டைக்குறுக்காயிருக்கவேண்டும்.

தொப்பூழ்—ஒட்டியிருக்கவேண்டும்.

பிட்டி—விரிவாகயிருக்கவேண்டும்.

வால்—பொடியாகவுஞ் சாணிபோடும்போது தூக்கி மடக்கிக்கொள்ளுந் தன்மையுள்ளதாகவு மிருக்கவேண்டும்.

பின்பக்கம்—விரிவாகயிருக்கவேண்டும்.



பவளவாய்—சிறுசாகயிருக்கவேண்டும்.

தாரை—கறுப்புநிறமாயிருக்கவேண்டும்.

கால்கள்—கனமாகவுங் குறியதாகவு மிருக்கவேண்டும்.

சந்துகள்—அடைப்பாக யிருக்கவேண்டும்

குளம்புகள்—குத்துக்குளம்பாயுங் கற்குளம்பாயு மிருக்கவேண்டும.

சுழிகள்—சிமிழின்மேல் ஒற்றைச் சுழியிருப்பது உத்தமம் அதற்கு ரிஷபச்சுழியென்றுபெயர். முதுகிற் பட்டரைச்சுழியிருக்கவேண்டும்.

இந்தச்சுழி சிமிழிலிருந்து பின்னே ஒருசாணுக்குள் ஒற்றையாகயிருக்கும்.

அல்லது நடுமுதுகுக்குப்பின்னேயும் ஒற்றைச் சுழி யிருக்கலாம் இதற்குப்பின் பட்டரைச்சுழியென்றுபேர்.

நெற்றியில் இரண்டுசுழி ஒன்றின்கீழொன்று நேரே கீழ்நோக்கியிருப்பது உத்தமம் இதற்குக் குடைமேற் குடையென்றுபேர்.

குறிப்பு—மாடுவிலைக்குவாங்கப் பார்க்கும்போது அந்தமாடு தன் ஒற்றைவிலாவை அல்லது வயிற்றை நக்கினாலும் தன் தலையைக் கீழுமேலுமசைத்தாலும் நல்ல குணமென்றயித்துக்களாலெண்ணப்படுகிறது.

## * மாடுகளுக்குரிய குற்றங்களும் அடையாளமும் - அழிவும் - பலனும் - அறியும்வகை

சவாரிவண்டிகளுக்கு உபயோகமாய் வருகிற காளைமாடுகள் இதின் கீழே கண்ட குற்றங்களைப் பொருந்தியிருக்கலாகாது.

அவையவம்—கருடமுகம் அல்லது முகவெண்டலை. அடையாளம்—முகத்தில்மட்டும் வெள்ளைநிறமாயிருக்கும்.

அவையவம்—ஊற்றுக்கண். அடையாளம்—கண்ணிலிருந்து தண்ணீர்வடிந்துகொண்டிருக்கும். பலன்—நாட்சென்றால் பார்வைகுன்றும்.

அவையவம்—சதைக்கண். அடையாளம்—கண்ணின்கடையிற் சிவந்தநிறமாகச் சதைபடர்ந்திருக்கும். பலன்—ஷை. வகைப்படி.

அவையவம்—புள்ளிக்கண். அடையாளம்—கடைக்கண்ணில் வெள்ளைநிறமாகப் புள்ளியிருக்கும்.

அவையவம்—தொங்குகாது. அடையாளம்—காதுகள் நேரே விறைப்பாயில்லாமற் கீழ்நோக்கித் தொங்கிக்கொண்டிருக்கும். பலன்—வேகமிராது.

அவையவம்—கொள்ளிக்கொம்பு. அடையாளம்—கொம்பின்முனை தட்டையாகவுங் கறுப்பாய்ந்தும் உச்சியிற் கொஞ்சம் பள்ளமாகவுங்கூர்ந்து பார்க்கில் அந்தயிடந் தீநிறமாகவுமிருக்கும்.



அவையவம்—தோற்கொம்பு. அடையாளம்—கொம்பு அலைந்துகொண்டிருக்கும்.

அவையவம்—இடங்கட்டுக் கொம்பு. அடையாளம்-வலதுகொம்பு முன்னாகவும் இடதுகொம்பு பின்னாகவுங்கூடி ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும்.

அவையவம்—தடிக்கொம்பு. அடையாளம்—கொம்பு நிரம்பவும் பருமனாயிருக்கும்.

அவையவம்—காடுபார்த்தகொம்பு. அடையாளம்—வலதுகொம்பு வலதுபுறத்தைப் பார்க்கச் சாய்ந்தும் இடதுகொம்பு இடதுபுறத்தைப் பார்க்கச் சாய்ந்துமிருக்கும்.

அவையவம்—பருந்தலை. அடையாளம்—தலை உடலளவுக்கு மிகுதியாகயிருக்கும். பலன்—மந்தநடையாகயிருக்கும்.

அவையவம்—ஒற்றைநாடி. அடையாளம்—முன்காலடி மத்தியில் ஒருநரம்பு ஓடியிருக்கும். பலன்-சரீர மெலிவாகயிருக்கும்.

அவையவம்—தொங்கு நாரை. அடையாளம்—கழுத்தடியில் அதிகமாகத் தசைதொங்கும். பலன்-மந்த நடையாகயிருக்கும்.

அவையவம்—ஒற்றைக்கழுத்து. அடையாளம்—மாட்டின்தலையைக் குனியச்செய்து பார்த்தாற் கழுத்தின் மேற்பக்கம் படலமாயில்லாமல் ஒடுங்

ஸினதாகயிருக்கும். பலன்—கழுத்துப் பிலமிருக்கமாட்டாது.

அவையவம்—ஓட்டுக்கழுத்து. அடையாளம்—கழுத்து உடலினளவுக்குத்தக்க நீளமும் பருமனுமில்லா திருக்கும். பலன்—கழுத்துப்பில மிருக்கமாட்டாது.

அவையவம்—சாய்வுசிமிழ். அடையாளம்—சிமி முதிகமாய்ப் பருத்து நடக்கும்போது சாயும்.

அவையவம்—முதுகுநெளிவு. அடையாளம்—முதுகுமத்தியில் நெளிந்திருக்கும். பலன்—குறுக்குப்பிலமிருக்க மாட்டாது.

அவையவம்—முன்தணிவு. அடையாளம்—சரீரத்தின் மேற்புறத்திற் சிமிழோரமாயிருக்கிற முன்பக்கம் பின்பக்கத்தைப் பார்க்கிலுந் தணிந்திருக்கும். பலன்—வண்டியில் தலைகுனிந்தே வரும்.

அவையவம்—தொங்குதொப்பூழ். அடையாளம்—ஒட்டியிராமல் தொங்கிக்கொண்டிருக்கும். பலன்—சற்றுத்தூரம் ஓடினால் அயர்ந்துபோம்.

அவையவம்—இறங்குசட்டம். அடையாளம்—வாலடியி லிரண்டுபக்கமும் பின்குறுக்கின் பிரதான எலும்பிலிருந்து அதிகமாகக் கீழ்நோக்கிச் சாய்ந்திருக்கும். பலன்—பின்பெல மிருக்கமாட்டாது.

அவையவம்—பூவால் அல்லதுவெடிவால். அடையா



ளம்—வால் நுனியில்மட்டும் வெள்ளைநிறமிருக்கும்.

அவையவம்—தடிவால். அடையாளம்—மிகவும்பருத்திருக்கும். பலன்—மந்தமாயிருக்கும்.

அவையவம்—தொடையடிகூழை. அடையாளம்—வால்முடுக்குக் கீழ்வராமல் தொடைக்குச்சமமாகக் கூழைபாக இருக்கும். அதில்ரோமமில்லாமலும் அல்லது சொற்பமாயுமிருக்கும்.

அவையவம்—வெள்ளைக்கால். அடையாளம்—ஒற்றைக்காலில்மட்டும் வெள்ளைநிறமிருக்கும்.

அவையவம்—சாத்துக்கால். முன்காலின்முட்டிகள் சமீபமாய் உட்பக்கம் நெருங்கியிருக்கும். பலன்—ஓடமாட்டாது.

அவையவம்—இணையடிகால். அடையாளம்—நடக்கும்போது முன்கால்களொன்றோடொன்று உரையும், பலன்—ஓடமாட்டாது.

அவையவம்—பின்னுகால். அடையாளம்—நடக்கும்போது பின்னத்தின் காலிரண்டும் நேரேவையாமல் மாறி மாறி வைக்கும்.

அவையவம்—வெட்டுக்கால். அடையாளம்—நடக்கும்போது பின்காற்குளம்பின் முனையைப் பூமியில் தேய்த்துக்கொண்டு நடக்கும். பலன்—குளம்பு சீக்கிரத்திலற்றுப்போகும்.

அவையவம்—மந்திக்கால். அடையாளம்—பின்கால்

முட்டுகிரம்பவும்வளைந்திருக்கும். பலன்—சவாரியிற் சீக்கிரத்திற் கால்ஓய்ந்து போகும்.

அவயவம்—அரைகுளம்பு. அடையாளம்—நடக்கும்போது முன்காற்குளம்பைத் திருக்கிப் பூமியில் தேய்த்துக்கொண்டுநடக்கும். பலன்—தேய்படுகிற குளம்பு சீக்கிரம் அற்றுப்போகும்.

அவயவம்—விரிகுளம்பு. அடையாளம்—குளம்பினிருபாகமும் நெருங்கியிராமல் விரிவாயிருக்கும், பலன்—மண் கல் முதலானது குளம்பினிடையிலேறித் துன்பமுண்டாகும்.

அவயவம்—பணைப்புள்ளி. அடையாளம்—சரீரமெங்குங் கவிப்பணம்போல வெள்ளையாகப்புள்ளிகளிருக்கும். பலன்—இந்தப்புள்ளி நூற்றுக்கதிகமா யிருந்தாற் குற்றமில்லை யென்று சேர்த்துக்கொள்ளுவாருமுண்டு இக்குற்றம் வெள்ளைமயிலை பீத்தநிறமுள்ள மாடுகளுக் கிராது.

அவயவம்—தொழுமறை அல்லது பால்மறை. அடையாளம்—சரீரமெங்குஞ் சுமார் ஒருதுட்டு அகலம் வட்டம்வட்டமாயிருக்கும். பலன்—இது குற்றமல்ல வென்று சொல்வாருமுளர்.

அவயவம்—தடிமறை. அடையாளம்—மேற்கண்ட விதப்படி தடிப்பாகயிருக்கும் கையினால் தடவினால் தடிப்புத்தோன்றும். பலன்—சற்றுதூரம் வெளியிற்போனா லிளைத்துப்போகும்.



அவயவம்—நண்டுவாதம். அடையாளம்—கட்டுத்தலத்திலிருந்து அவிழ்த்தவுடனே நடக்கும்போது கொஞ்சதூரம் பின்கால்களிரண்டு அல்லது ஒன்று நொண்டிநடக்கும்.

அவயவம்—கால்வாரி. அடையாளம்—கட்டுத்தலத்தில் நிற்கும்போது முன்காலைக்கொண்டு பூமியைப் பறண்டிக்கொண்டுநிற்கும்.

அவயவம்—உடலாட்டம். அடையாளம்—கட்டுத்தலத்தில் நிற்கும்போது சரீரத்தை யெப்போதும் அலைத்துக்கொண்டே நிற்கும்.

அவயவம்—நடுகொடுக்கி. அடையாளம்—முன்வாயிற் சுழியிருக்கும் அல்லது முன்வாயினிறத்துக்குப் பேதமான நிறத்தில் நெருக்கமாய்ப் புள்ளிகளிருக்கும் அல்லது கொடிப்போல படர்ந்திருக்கும்.

அவயவம்—இடிமேலிடி. அடையாளம்—நெற்றியிலிரண்டு அல்லது மூன்று சுழிகளொன்றைப் பார்க்க ஒன்று யெதிர்த்திருக்கும் அல்லதுமேல்நோக்கி யிருக்கும்.

அவயவம்—வாய்ப்பூட்டு. அடையாளம்—கீழ்வாய் முகக்கட்டையில் இரண்டுசுழியிருக்கும்.

அவயவம்—செவிப் பாய்ப்பு அடையாளம்—கன்னக்கட்டை ஓரமாகக் காதின் அடியின்கீழ் தன்னிறத்துக்குப் பின்னமான நிறத்தில் ஒரு நீண்ட சுழியிருக்கும்.

வலம் இடமாக அசைத்தாலுஞ் சகுனவிரோதமென்று எண்ணப்படுகிறது,

## * எருத்துப்புரை.

மாடுகளுக்குப் பிணி அணுகாமற் கூடியவரை காப்பாற்றுவதற்கு அவைகளை யெப்போதுங் கட்டியிருக்கிற புரையைச் சரியானவிதத்திலுந் துப்புரவாயும் வைத்திருக்கவேண்டுவது அவசியம்.

எருத்துப்புரை கூடியவரை உயர்வானமேடுள்ளதாயுங் காற்றுச் சாதாரணமாயுள்ளே பிரவேசிக்கவும் உள்ளேயிருக்கிற துர்க்கந்தக்காற்று வெளியேபோகும்படிக்கான விதமாய்க் கட்டப்பட்டிருக்கவேண்டும் நிறம்பத்தணிவாகவும் இருட்டாகவும் காற்றோட்டத்துக் கிடமன்னியிலுமிருக்கலாகாது வருஷகாலங்களில் வெளிப்பக்கத்தில் விழுகிற ஜலந் தினுற் புரையின் தளம் நேருற்றுக்கொள்ள இடமன்னியில் உயர்வாயிருக்கவேண்டும் மேலுந்தளம் மேடுபள்ளமன்னியிற் சமமாகவும் அளிப்பக்கத்தைப்பார்க்கிலும் மாட்டின் கீற்பக்க மாடு நீர்விட்டாற் சாதாரணமாய் வெளியேபோய்விடும்படிக்கான விதத்திற் கொஞ்சஞ் சலோப்பாயுமிருக்கவேண்டும் தளஞ்சாதமண்ணாயிருக்கிற விஷயத்தில் மாடுநீர்விடுகிற திறற் சக்தியுண்டாகவுஞ் அடிக்கடி ஜீர்ணமாய்ப்போகவுங்கோரிடுமானதாற் சாலக்கனமாய்ப்பரத்திக்கெட்டிச் செய்யவேண்டும் அவர்களைச் சுண்ணும்பு குருமண் அல்லது செம்மண்ணுல் மூன்றுபாதத்துக்கொருதட



வையாவது பூசிச்சுத்தப்படுத்தவேண்டும் தினந்தோறும்விழுகிற நீர் சாணம் குப்பை முதலானவைகளை யிரண்டுதடவைக்குக் குறையாமலெடுத்து வெளிப்படுத்திக் கூடியவரை துப்புரவுசெய்யவேண்டும் அசுத்தங்களால் மாடுகளுக்கு நோயணுகாமற் செய்வதற்குப் பன்றிநெய்யுஞ் சோற்றுக்கற்றாழையும் உசிதமான பதார்த்தங்கள் ஆனதால் எருத்துப்புரையின் மூக்குகளிற் கற்றாழை மூட்டைக் கொண்டுவந்து எப்போதுந்தூக்கி வைக்கவேண்டியதுந்தவிரப் பன்றிநெய்யைக் கலசங்களில் வைத்துத் துணியில் மூடிக்கட்டிப் புரைக்குள் தூக்கியிருக்கவேண்டும்; வாரத்துக்கொருதரம் அந்தப்பன்றிநெய்யிற் கொஞ்சமெடுத்து மாட்டின்கண் மூக்குச் செவி யிதுகளிற்றேய்த்துவுள்ளுக்குங்கொஞ்சங் கொடுக்கவும் இலநாளைக்கொருதடவை புரைக்குள் சாம்பிராணிப்புகைகாட்டுவது உத்தமமாயிருக்கும்.

## * மாட்டுக்கு தினஞ்செய்யவேண்டியநியமம்.

சவாரிமாட்டைத் தினந்தோறுங் காலமே ... மணிக்குஞ் சாயந்திரம் நாலுமணிக்குங் கட்டுத்தறியைவிட்டு அவிழ்த்த உடனே தலையுயர்த்திருக்கும்படி தூக்கிக்கட்டிச் சவரிபிரஷ்செய்த குசப்பான் அல்லது வைக்கோலால் சொரண்டி அழுக்குமுதலானது போகும்படி சரீரமுழுக்கச்சேய்த்துப் பின்பு சரீரத்திலிருக்கிற கழிவு ரோமங்கள் உதிரும்படி கைகளினுற் சரீரமுழுக்க மாலீஸ்செய்து அடைத்து முகு

ங் கண் காது மூச்சுச் சாடு கால்கள் இவைகளைக்குளிர்ந்த தண்ணீரினுற் கழுவி அந்தயிரம் உலருகிறவரை அப்படியேயிறுத்தியிருந்து பின்பு மாட்டையவிழ்த்து முன்கட்டியிருந்த இடமல்லாத வேறொருயிடத்திற் கட்டித் தீனிபோடவேண்டும்.

சவாரிபோனல் அப்படிப் போய்வந்தவுடனே மாட்டின் வாயிலிருக்கிற வெண்ணுரையைக் கையினுல் துப்புரவாகவழித்து மேற்கண்டபடி மாலீஸ்முதலானதுசெய்து தண்ணீர்குடிக்கச்செய்து கட்டுத்தறியிற் கட்டவேண்டும். சவாரிபோய்வந்தவுடனே வாயிலிருக்கும் வெண்ணுரையை வழிக்காவிட்டால் அந்தநுரை மாட்டின்வயிற்றுக்குள் போகவும் அதினுல் மாட்டுக்கு வியாதியுண்டாகவும் நேரிடும்.

மாலீஸ்செய்கிறதினுல் மாட்டுக்குத் தினந்தோறுந் தேகத்திலுண்டாகிற வலி தீரவும் சோம்பல்நீங்கி சுறுசுறுப்புண்டாகவுங் கழிவுரோமங்களுதிரவு மிடமாயிருக்கும். இப்படிச்செய்யாவிடில் மாட்டின் தோலில் உட்புறத்திற்கிருமிகளுற்பத்தியாகி அதினுல்தினவு முதலான பலவிதமான சருமவியாதிகள் சம்பவிக்குமென்று டாக்டர் கிங்றிஸ்ட்டு துரையவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

## *தண்ணீர்குடிக்கச்செய்யுந் நன்மை.

காலமே மேற்குறித்தபடி மாலீஸ்செய்தபின்பு சுமார் ௮-அல்லது ௯-மணிக்குஞ் சாயங்காலம் அப்படி மாலீஸ்செய்யுமுன் ௪-மணிக்குந் தண்ணீர்குடிக்



கச் செய்யவேண்டும் அன்றி சவாரி மாடுகளுக்குக் காலமேயாவது சாயங்காலமாவது சமீபதூரஞ் சவாரிபோக வேண்டியிருந்தால் அப்படிப்போய்வந்த பின்பும் தூரப்பத்தூரஞ் சவாரிபோக வேண்டியிருந்தால் அப்படிப்போவதற்கு சுமார் ஒருமணி நேரத்துக்குமுன்புந் தண்ணீர்குடிக்கச் செய்யவேண்டும். சவாரிமாடுகளுக்கு சுத்தஜெலங்கொடுப்பதே உசிதம். கழுநீர்முதலான ஊறல்ஜெலங்குடித்தால் வயிறு பெருகவுஞ் சவாரியில் எருதுமான கெடுதலுமுண்டாகும். பாரவண்டிமாடுகளுக்கு ஊறல் ஜெலங்கொடுப்பது மெத்தப் பிரயோசனந்தான் பருத்திவிதையை முதநாள் ஊறைத்து காடிகழுநீர் அல்லது சுத்த ஜெலத்திற் கலக்கிவைத்திருந்து மறுநாளதைத் தொட்டியில்விட்டு பிசிலக்கொஞ்சம் முழுப்பருத்திவிதையைத் தூற்றிக் குடிக்கச்செய்யவேண்டும்.

## * தீனி.

மாடுகளுக்குப்போடுகிற * தீனிகளில் சோளுந்தட்டு எல்லாவற்றிலும் உடைபோருமுள்ள தன்மையுள்ளது. அது கிடையாத இடங்களிற் கார்ச்சம்பா நெல்வைக்கோல் உசிதமானது. மற்றவைக்கோல் முதலான ௦ தீவனங்கள் அவ்வளவு பிரயோசனமுள்ளதல்ல, பச்சைப்புல் பொதுவாய் நன்மையுள்ளதாகவிருந்தாலுஞ் சவாரிமாடுகளைத்தின்றால் சவாரியில் எருக்கலுண்டாகுமானதால் அவ்வகைமாடுகளுக்

* தீனி என்பதும், ௦ தீவனம் என்பதும் உணவு.

செலுத்தி ஊறினவிதை புளித்துப்போகாதிருக்கும்படி ஒருபாத்திரத்தால் மூடிவைக்கவேண்டும். வைக்கோலை யுழக்குவதின் பிரயோசனம் விதையில் மண் ஒட்டாமலிருக்கவேண்டியதற்காகத்தான். கடலை காணம்பருத்திவிதை இவைகளெல்லாவற்றையும் மேற்கண்டபடி பக்குவஞ்செய்வதற்கு முன்னாடி கல் மண் ரோமம் முதலானவைகளை நீக்கிப்போடவேண்டியதில் சாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்தத்தினுசுகளுடன் தவிட்டைச்சேர்த்துப் போடுவது சவாரிமாடுகளுக்கு நன்மையானதல்ல காணி ஜாஸ்தியாகவும் கெலித்தியாகவும் போடுகிறதற்குத் தண்ணீர் அதிகமாகக் குடிக்கும் அதினால் வயிறு பெருக்கிறதற்குங் காரணமாகும். ஆனாற் பாரவண்டிமாட்டுக்குத் தவிடுசேர்த்துப்போடுகிறது நலந்தான்.

## * உயரமான எருதுகளுக்கு தினந்தோறும் போடவேண்டிய தீனியின் அளவு.

| | | |
|---|---|---|
| தனிப்பச்சைக்கடலை | படி | ௨ |
| தனிப்பச்சைக்காணம் | ,, | ௧ |
| தனிப்பருத்திவிதை | ,, | ௩ |
| பச்சைக்கடலையும் பச்சைக்காணமும் | | |
| பச்சைக்கடலை | ,, | ௧ |
| பச்சைக்காணம் | ,, | ௧வ |
| பச்சைக்கடலையும் பருத்திவிதையும் | | |
| பச்சைக்கடலை | ,, | ௧ |
| பருத்திவிதை | ,, | ௨ |
| பச்சைக்கடலையும் பச்சைக்காணமும் பருத்திவிதையும் | | |
| பச்சைக்கடலை | ,, | அ |
| பச்சைக்காணம் | ,, | ௧ |
| பருத்திவிதை | ,, | ௨ |
| பச்சைக்காணமும் பருத்திவிதையும் | | |
| பச்சைக்காணம் | ,, | ௧வ |
| பருத்திவிதை | ,, | ௨வ |



* மேற்குறித்த உயரத்துக்குக் கம்மி சாஸ்தியுள்ள மாடுகளுக்கு அந்தந்தத்தரத்துக்குத் தக்கபடி யிந்தப் பிரமாணத்தைத்தான் நிதானித்துக்கொள்ளவேண்டும் விசேஷதீவனந் தினந்தோறும்போட்டுவர சௌகரியமில்லாதவர்கள் ஒன்றுவிட்டு மறுநாளாவது தப்பாமற் போட்டுவரவேண்டும். அப்படிக்கானால் மேற்குறித்த அளவுக்குக் கொஞ்சஞ்சாஸ்திசெய்துகொள்ளவேண்டும்.

## * குளிப்பாட்டல்.

மாட்டை வாரத்திலொருதபாவுக்குக் குறையாமலும் இரண்டுதடவைக் கதிகப்படாமலும் குளிப்பாட்டவேண்டும் ஆழமாயுங் கூடியவரை சுத்தமாயு

முள்ள தண்ணீரிற்கொண்டுபோய்ப் பவனவாய்தெரியும்படி நிறுத்திவைத்துத் தேகமெல்லாஞ் செவ்வையாய்த் தேய்த்துக் குளிப்பாட்டித் தண்ணீரிற்கொஞ்சம் நீந்தும்படி செய்துகொண்டுவந்து * காசாவிற்கட்டியிருந்து ஈரம் உலர்ந்தபின் கட்டுத்தறியிற்கட்டவேண்டும் குளிப்பாட்டியானவுடனே சவாரிபோகாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும் ஒருவேளை நதிமுதலான விடங்களுக்கு சவாரிபோயிருந்து அவ்விடத்திற் குளிப்பாட்டும்படி நேரிடுகிறபக்ஷத்திற் குளிப்பாட்டியானதின்பேரில் வண்டியில் மாட்டை ஓட்டாமல் தன்னடையாகக் கொண்டுவரவேண்டும் பாறவண்டிமாட்டை நடந்துவந்தவுடனே குளிப்பாட்டுவது நல்லது ஆனால் பின்பு அன்றைத்தினம் நடையில்லாமலிருக்கும்படி செய்யவேண்டும்.

### * வெள்ளைப்பூண்டு மசாலா.

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பூண்டு | பலம் | ௫ |
| மஞ்சள் | ,, | உ |
| மிளகு | ,, | உ |
| சுக்கு | ,, | உ |
| ஓமம் | ,, | கவ |
| கருஞ்சீரகம் | ,, | உ |
| காட்டுச்சீரகம் | ,, | உ |
| கடுகுரோகணி | ,, | வ |

* காசாவிற்கட்டுதலென்பது—மாட்டுத்தலையை யேறதூக்கிக்கட்டுதலாம்.



| | | |
|---|---|---|
| வால்மிளகு | ,, | உ |
| வாய்விளங்கம் | ,, | உ |
| வசம்பு | ,, | வ |
| மாசிக்காய் | ,, | உ |
| மறுட்டிமொக்கு | ,, | க |
| அபினி | ,, | வ |
| ஈருள்ளி | ,, | உம |
| வெல்லம் | ,, | ம |

இவைகளை நன்றாயிடித்துப் பத்துபலம் நெய்விட்டுப் பிசைந்து எலுமிச்சங்காய்ப் பிரமாணமுருட்டிவைத்துக்கொண்டு சவாரிபோய் வந்தவுடனே கொடுத்துவரவேண்டும். மாடு தாசாவாகும்.

### * இஞ்சிமசாலா.

| | | |
|---|---|---|
| இஞ்சி | பலம் | க |
| மிளகு | ,, | வ |
| வெல்லம் | ,, | ௫ |

இவைகளையிடித்துக் காலமே கொடுக்கவேண்டியதுந்தவிர மாலையில் வெல்லம் பலம்-௫, நெய்பலம் ௫, இவ்விரண்டுங் கொடுக்கவேண்டியது. இந்தப்படி ஒருமாசங் குறையாமல் தினந்தோறுங் கொடுக்கவேண்டும் மாடு தாசாவாகும்.

### * ஆட்டுத்தலைமசாலா.

செம்மறி ஆட்டின்தலை இரண்டு கொலட்டு யிவைகளைத் தீயில்வாட்டி ரோமங்களைப்போக்கித்தறி

த்து ஒருபானையிற்போட்டு அது மூழ்கும்படி தண்ணீர்விட்டு எலும்புகள் வெள்ளைநிறம் வருகிறவரை வேகவைத்து வெந்தபின்பு எலும்புகள் முழுக்கப்பிறக்கி உதறியெடுத்து வேறொருபாத்திரத்திற் போட்டு வேறுதண்ணீர்விட்டு நன்றாய்க்கழுவி அந்த எலும்பைத் தூரப்போட்டுவிட்டுக் கழுவினஜெலத்தை முந்தின தண்ணீருடனேவிட்டு அதிலிருக்கிற வெந்த மாம்சங்களையெடுத்து வேறுபாத்திரத்தில் வைத்துக்கொண்டு மேற்படி தண்ணீரில் இரண்டுபடி பச்சை அரிசியைத்தட்டி வேகவைக்கவேண்டியது வெந்தபின்பு மேற்படி மாம்சங்களையுங்கூடப் போட்டு இரண்டுபடி திரித்த உழுந்துமாவையுந் தட்டிக்கிண்டிக் கொஞ்சநேரஞ்சென்று இறக்கி,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | * பலம் | ௧ |
| மிளகு | ,, | ௨ |
| சீரகம் | ,, | ௧ |
| கொத்தமல்லி | ,, | ௩ |
| இஞ்சி | ,, | ௩ |
| சுக்கு | ,, | ௩ |
| ஓமம் | ,, | ௩ |
| வசம்பு | ,, | வ |
| கடுகு | ,, | கவ |
| ஈருள்ளி | ,, | ௫ |
| வெள்ளைப்பூண்டு | ,, | ௫ |

* ஒருபலமென்பது—ரூபாயிடை ௩வ.



| | | |
|---|---|---|
| நறுக்குமூலம் | ,, | கவ |
| திப்பிலி | ,, | கவ |
| காருகோலரிசி | ,, | கவ |
| மிளகாய்வத்தல் | ,, | அ |
| சன்ன இலவங்கப்பட்டை | ,, | உ |
| சிறுநாகப்பூ | ,, | க |
| காயம் | ,, | வ |
| நல்லெண்ணெ அல்லது நெய் | ,, | க |

இந்தமருந்துகளில் ஓமத்தை மிளவறுப்பாக வறுத்தும் மற்றதைப் பச்சையாகவு மிடித்துத் தூள்பண்ணி ஷை தூளையுமதில்தட்டி எண்ணெயையும்விட்டுப் பிசைந்து இரண்டுமாடுகளுக்குங் கவளமாகக் கொடுக்கவும் சாயங்காலங் குடிக்க வெந்நீர்விடவும். மூன்றுநாள் குளிர்ந்த தண்ணீரிற் கொண்டுபோய் நிறுத்திக் குளிப்பாட்டவும். நாலாநாள் முதல் விசேஷதீனிவைக்க வேண்டும். ஐந்தாநாள் முதல்வண்டியிற் கட்டலாம். இந்தமசாலா விருநத்துக்கிரண்டு தபாக் கொடுத்துவந்தால் மாடுபுஷ்டியாக இருக்கும்

## ※ பெரும்பூசினிக்காய் மசாலா.

ஒரு * பெரும்பூசினிக்காயை கைபோகும்படியான அகலத்தில் வட்டமாக ஒருபக்கத்திலறுத்து அந்தவழியாக மேற்படி காய்க்குள் தட்டப்பயறு பச்சைப்பயறு வபல்பயறு கலப்பயறு அவலைத்தி, விரித

* பெரும்பூசினிக்காயென்பது—சாம்பல்பூசினிக்காயென்றும் தடியங்காயென்றும்வழங்கப்படும்.

ட்டான்பயறு கடலை துவரை உளுந்து பொச்சை காணம் வகைக்குக் கால்படி வீதஞ்சேர்த்து மேலே சொல்லியபடி அறுத்ததண்டினால் மூடி ஒருமண்பாத்திரத்தில்வைத்து மேல்ச்சட்டிபோட்டு மூடி சீலைமண்செய்து பூமிக்குள் ஒருவாரம்புதைத்துவைத்திருந்து எட்டாநா ளெடுத்துப் புளித்த பசுவின் மோர்படி யிரண்டில்விட்டு நன்றாயாட்டிக் கொடுக்கவேண்டியது மாடுபுஷ்டியாகும்.

## ✻ உடம்புமசாலா.

வெண்ணுடிப்பு இரண்டுகொண்டுவந்து நசமுங் தலையுந்தள்ளி மற்றதை மைப்போலயிடித்து,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ௧ |
| மிளகு | ,, | ௨ |
| சுக்கு | ,, | ௨ |
| வெள்ளைப்பூண்டு | ,, | ௫ |
| ஈருள்ளி | ,, | ௫ |

இவைகளையுங் கூடச் சேர்த்திடித்து அரைப்படி உளுந்துமாவுஞ்சேர்த்துப் போதுமான நெய்யுங் நல்லெண்ணெயும் விட்டுப்பிசைந்து மாங்காய்ப்பிரமாண முருட்டிவைத்துக்கொண்டு தினந்தோறுங் குமார்ந்து ஒவ்வொரு உண்டைவீதங் காலையிற் கொடுத்துவரவேண்டும்.

## ✻ வெள்ளருச்சிமசாலா.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ௨ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | ௧ |



| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௧ |
| கிராம்பு | ,, | ௧ |
| சாதிக்காய் | காய் | ௪ |
| சாதிபத்திரி | பலம் | ௪ |
| ஏலம் | ,, | ௨ |

இவைகளையிடித்துத் தூள்செய்துவைத்துக் கொண்டு கீட்டுப்படிவெள்ளருச்சியைநன்றாயிடித்து அதையும் ௧௦-படி உளுந்துமாவையுங்கூடப்போட்டு ௩௰ கோழிமுட்டையையும் உடைத்துவிட்டு நல்லெண்ணெயை அதில்விட்டு நன்றாய்ப்பிசைந்து, இரண்டுமாடுகளுக்குங் கவளமாகக் கொடுத்து சாயங்காலங் குடிக்க வெந்நீர்விடவும், மூன்று நாள்குளிர்ந்த ஜலத்திற்கொண்டுபோய்க் குளிப்பாட்டி வந்தவுடனே யிரண்டுபடி பச்சையரிசில் சாதம்பொங்கி தயிர்விட்டுப்பிசைந்து கவளமாகச் செய்துகொடுக்கவும் இந்தப்படி நாலாநாளுக்குளிப்பாட்டி வந்தவுடனே கொடுக்கவேண்டும். ஆறுநாள் முதல் விசேஷதீனிவைக்கலாம் இந்தஆறு நாளும் வண்டி ஏருமுதலானதும் கட்டக்கூடாது.

## ✻ ஜீரணமசாலா.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ௧ |
| மிளகு | ,, | ௫ |
| வெள்ளைபூடு | ,, | ௫ |
| இஞ்சி | ,, | ௰ |

இந்தமருந்துகளை யிடித்து அறுகொள்ளுமான கடைநெய்விட்டுப் பிசைந்து கவளமாகக் கொடுக்கவும்

சாயங்காலங் குடிக்க வெந்நீர்விடவும் மூன்றுநாள் குளிர்ந்தசலத்திற் கொண்டுபோய் நிறுத்திக் குளிப்பாட்டி சாயங்காலமுதல்விசேஷதீனிவைக்கலாம் நாலாநாள்முதல் வண்டிமுதலாகிதம் கட்டலாம்.

## ✻ உட்னசாந்திமசாலா.

வேனிற்காலத்துக்கு மாட்டுக்குக்காங்கையேறாமலிருக்கும் பொருட்டு ஒருதபா அல்லது இரண்டுதபா இதனடியிற்கண்ட மசாலாக்களைக் கொடுத்துவரவேண்டும்.

மாடு ஒன்றுக்கு ஒருபடி பச்சைக்காணத்தைஊறப்போடாமல் நன்றாயாட்டிப்போதுமான தனிப்பனங்கள்ளிற்கலக்கி ஒருபாத்திரத்தில் விட்டுக் குடிக்கச்செய்யவும் இதை வோட்டவேண்டுமானால் நன்றாய்க்கைதேர்ந்தவர்களாற் வோட்டவேண்டுங் கொஞ்சந்தவறினாற் சுவாசக்குழலிலேறி மாட்டுக்குமோசம் வரும்,

௨. ஒருபடி பச்சையரிசியைப் பொங்கி அந்தச்சாதத்தில் நல்லதயிர் படி - ௨, சருளளி பலம்-௨௰, அரிந்துப்போட்டு மூன்றுமொன்றாகப் பிசைந்து இரண்டுமாடுகளுக்குங் கவளமாகக் கொடுக்கவும் மறுநாள் குளிர்ந்ததண்ணீரிற் குளிப்பாட்டவேண்டும் மூன்றுநாள் விசேஷதீனிவைக்கவேண்டும்,

௩, வெந்தியம் பலம்-௨௫- நன்றாய்யரைத்து அதிலொருபடிநெய் அல்லது நல்லெண்ணெ-படி-௩- சேர்த்து இரண்டுமாடுகளுக்குங் கொடுக்கவும் சாயங்காலம் குடிக்கக் கொஞ்சம் வெந்நீர் விடவேண்டும்.



மூன்றுநாள் குளிர்ந்த சலத்திற்குளிப்பாட்டி அன்று முதல்விசேஷ தீனிவைக்கவும் நாலாநாள்முதல் வண்டி வகு முதலானதிற் கட்டலாம்.

## ✻ இருவுமது

| | | |
|---|---|---|
| கடலைமாவு | படி | ௨ |
| உளுந்துமாவு | ,, | ௨ |
| வெந்தையமாவு | ,, | ௨ |

போதுமானநல்லெண்ணை விட்டுப்பிசைந்து மாங்காய்ப்பிரமாண முருட்டி வைத்துக்கொண்டு தினந்தோறும் ஒருஉருண்டை கொடுத்துவரவும்

## ✻ நல்லபாம்புமசாலா,

ஒருநல்லபாம்பைத் தலைமுதல் ஒருசாண்நீளம் அறுத்துத் தள்ளி விட்டு உடலுக்குள் அரைக்கால்படி பச்சைக்கடலையைச் செலுத்தி அரைபல ரசமும் விட்டுப் புதுப்பாண்டத்தில் அடைத்துமூடி மேலே சீலைமண்செய்து பூமியில் மூன்றுவாரம் புதைத்து வைத்திருந்து எடுத்து மேற்படிகடலைகளை மட்டுமெடுத்து வைத்துக்கொண்டு மாடொன்றுக்கு நாலுகடலை வீதம் அன்றாடங் கொடுத்துவரவேண்டும் மாட்டுக்கு வேகமுண்டாகும்,

## ✻ குமட்டிக்கா யூறுகாய்

பேய்க்குமட்டிக் காய்களை - ௨௰ - கொண்டுவந்து நாலுபிளப்பாக அறுத்து அதில்,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ௭ |
| மிளகு | ,, | ௩ |

| | | |
|---|---|---|
| வசம்பு | பலம் | வ |
| கருஞ்சீரகம் | ,, | ௧ |
| காட்டுச்சீரகம் | ,, | ௧ |
| கடுகுரோகிணி | ,, | ஒ |
| நறுக்குமூலம் | ,, | ௧ |
| மிளகாய்வற்றல் | ,, | ௩ |
| வெள்ளைப்பூடு | ,, | ௰ |
| குராசானிஓமம் | ,, | ௧ |
| வாய்விளங்கம் | ,, | ஒ |
| வெட்பாலைஅரிசி | ,, | ஒ |
| வெந்தையம் | ,, | ௨ |
| இந்துப்பு | ,, | ௫ |
| கறியுப்பு | படி | ௨ |

இவைகளையிடித்து சாயில்சேர்த்து மண்பாத்திரத்தில் வைத்து மூடி சீலைமண்செய்து குதிரைலாயம் அல்லது எருதுகொட்டாயில முப்பதுநாள் புதைத்துவைத்திருந்து பின்பு அதையெடுத்து வைத்துக்கொண்டு மாடொன்றுக்கு ஒருகாய் வீதம் காலையில் காலையில் கொடுத்து வரவேண்டும். இதினால் சிலவியாதிகள் வராமல் தடைப்படுவதுமன்றி அதுகளுக்கு போதுமானவரையில் தீனிதின்று தண்ணீருஞ் செரியானபடி குடிக்கும்.

## ※ எருதுகளுக்கு கொடுக்கும் லேகியம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ௭ஒ |
| மிளகு | ,, | ௬ |



| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | ௫ |
| திப்பிலி | ,, | ௨ |
| வங்காளசுக்குமூலம் | ,, | ௭ |
| கருஞ்சீரகம் | ,, | ௨வ |
| சாருகோலஸிஸி | ,, | ௨வ |
| கொத்தமல்லி | ,, | ௩ |
| சருவனி | ,, | ௫ |
| வெள்ளைப்பூடு | ,, | ௩ |
| மிளகாய்வற்றல் | ,, | ௩ |
| § சோம்பு | ,, | ௫ |
| இந்துப்பு | ,, | ௧ |
| கண்டங்கத்திரிவேர் | ,, | ௬ |
| வேலிப்பருத்திவேர் | ,, | ௭ |
| கொமட்டிவேர் | ,, | ௰௪ |
| கடுகு | ,, | ௫ |
| சிறுவெல்லிவேர் | ,, | ௩ஒ |
| கொழுஞ்சிவேர் | ,, | ௩ |
| நத்தைசூரிவேர் | ,, | ௩ |

இந்தவேர்களை நிழலிலுலர்த்தி யிடித்துப் பொடிசெய்து மேற்படி மருந்துகளையு மிடித்துப் பொடிசெய்து ஒன்றாய்க் கலந்து பிரண்டையையிடித்து சாறுபிழிந்து அந்தச்சாறைவிட்டு இந்தப்பொடிகளையும் பிசைந்து மாங்காய்ப்பிரமாணமாக உருண்டைசெய்து ஒருமண்பாண்டத்தில் வைத்துவைக்கவும் மேற்படிபிரண்டை ரசமுழுதும் மருந்துடன் சேர்த்து கா

§ சோம்பு என்பது சட்சத்திரச்சீரகம்.

ய்ந்தபின்பு அதில் பவ்வத்து உண்டையாக வெடுத்து ஒருமண்பானையில் போட்டுநொறுக்கி அதற்குப்போதுமான சாராயம்விட்டுப் பிசைந்து நார்த்தங்காய்ப் பிரமாணமாக உருண்டைசெய்து மண்பானையில்வைத்துக்கொண்டு ஓறுநாள்விட்டு, மறுநாள்ளிரவுஉள்ளுக்குக் கொடுத்துவரவேண்டும் இம்மருந்தினுல் தினந்தோறுந் தின்கிறதினி சாதாரணமாய் ஜீரணமாகி அதினுல் மாடுபுஷ்டியாகவும் விசேஷமாய் வியாதிகள் உண்டாகாம லிருக்கவும் ஹேதுவாகும்.

### ✳ அலரிவேர்லேகியம்.

| | | |
|---|---|---|
| அலரிவேர் | பலம் | ௨௰ |
| பேய்க்குமட்டிவேர் | பலம் | ௨௰ |
| ஊமத்தைவேர் | பலம் | ௨௰ |
| எட்டிக்கொட்டை | பலம் | ௧ |
| சாதிக்காய் | பலம் | ௨ ஒ |
| ஜாபத்திரி | பலம் | ஒ |
| கிராம்பு | பலம் | ௧ |
| ஏலம் | பலம் | ௧ |
| அபினி | பலம் | வ |

இதுகளை யெல்லாம் பொடிசெய்து அதற்குபோதுமானநெய்விட்டு அதிரசபாகம்போல் கிளரிவைத்துக்கொண்டு பாக்குப்பிரமாணங் காலமே காலமே கொடுத்துவர வேகமுண்டாகும் இந்தப்படி எப்பொழுதுங் கொடுத்து வரலாம்.

### ✳ சவாரிலேகியம் - நிஜாம்முறை

| | | |
|---|---|---|
| சுத்திசெய்தகெஞ்சா | பலம் | ௨௰ |
| மிளகு | ,, | ௰ |



| | | |
|---|---|---|
| சாதிக்காய் | பலம், | ௫ |
| கசகசா | ,, | ௫ |
| மருட்டிமொக்கு | ,, | ௫ |
| பெல்லம் | ,, | ௪௰ |

இதுகளைஒன்றுசேர்த்து யிடித்துப் பத்துபலம் நெய்விட்டுப பிசைந்து புன்னைகொட்டைப் பிரமாணமுருட்டி வைத்துக்கொண்டு சவாரிபோகும்போது கொடுக்கவேண்டும்,

### ௨. இதுவுமது.

| | | |
|---|---|---|
| அபினி | பலம் | ௧ |
| சாதிக்கீரய் | ,, | ௨ |
| மருட்டிமொக்கு | ,, | ௭ |

இதுகளை இடித்து நெய்விட்டுப்பிசைந்து வைத்துக்கொண்டு சவாரிபோகும் போது ஒரு ரூபாயிடை கொடுத்துவரவேண்டும்.

### ✳ அதிகலாகிரியானுல் முரிப்புவகை.

எலுமிச்சம்பழம் ஈருள்ளி இரண்டுதிலுசம் நெய்யில்கலந்து கொடுக்கவேண்டியதுந்தவிர புளிச்சதண்ணீருங் குடிக்கச்செய்ய வேண்டும் சாந்தமாகும்.

குறிப்பு—இவ்விரண்டுவகை லேகியமும் போதையை உண்டாக்கத்தக்கதுகளானதால் புஷ்டியாயுள்ள மாடுகளுக்கு மட்டுங் கொடுக்கலாம் தார்ப்பலமுள்ள மாடுகளுக்குக் கொடுத்தால்லாகிரிதாங்காமற் கீழேவிழுந்துவிடும்.

புஷ்டியாயுள்ள மாடுகளுக்குக் கொடுக்கிற விஷயத்திலும் வண்டிஓட்டுறவன் ஜாக்கிரதையா யிருக்க வேண்டியது.

## * லேப்பு

மாடுஅதிகதூரஞ் சவாரிபோனதினு லுண்டான கால்கடுப்பு இரத்தக்கட்டுக்கு அடியிற்கண்ட பரிகாரஞ் செய்ய வேண்டும்.

கோடைத்தண்ணீரிற்கொஞ்சம்வெள்ளாட்டுச்சாணியை யரைத்துக்கலக்கிக்கொதிக்கவைத்திறக்கியிளஞ்சூட்டுடனே மாட்டின்சரீரமுழுதகக்காயக்காய இரண்டுமூன்றுதபா அடிக்கவேண்டும் மறுநாள்பெரியபாத்திரங்களில் வெந்நீர்போட்டுவைத்துக்கொண்டு கைபொறுக்கும்படியான சூட்டுடனே தகரமல்லது லேசானபோகிண்ணத்தினுற்கொதிமாட்டின் காதுசந்துகள் நெஞ்சுக்கொழுந்துமற்றுஞ்சரீர முழுக்கவும் நன்றாயடிக்கவேண்டும் மூன்றுநாட்காலமேகுளிர்ந்த தண்ணீரிற்கொண்டுபோ யொருமணிநேரம் நிறுத்திக்குளிப்பாட்ட வேண்டியது.

அப்படிக்குளிப்பாட்டின மறுநாள் அல்லது இரண்டாநாள் உள்ளுக்கு இதனடியிற் கண்ட மசாலாக்கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௪ |
| திப்பிலி | ,, | ௧ |
| நறுக்குமூலமை | ,, | ௨ |



இந்தமூன்றுமருந்துகளையும்ஒன்று இரண்டாக இடித்து ஒருமண்பாத்திரத்திற்போட்டுவெற்றிலை பலம்-௨ ங்கூடப்போட்டுக் குறுணித் தண்ணீர்விட்டு முதல் நாளிராத்திரியே தீப்போட்டுமறுநாள்க்காலையில்ஒருபடியாகவற்றவைத்து இறுத்துஅந்தக்கசாயத்திற்கோழிமுட்டை ௨௫-சம் உடைத்துவிட்டுமுக்காற்படி நல்லெண்ணெயுங்கூடவிட்டு இரண்டு மாடுகளுக்குக் கொடுக்கவும். சாயங்காலக்கொஞ்சம் வெந்நீர்குடிக்கவிடவேண்டும் மூன்றுநாள் குளிர்ந்த சலத்தில் ஒருமணிநேரம் நிறுத்திக் குளிப்பாட்டவேண்டும் அன்றுமுதல் விசேஷ தீவனம் வைக்கலாம். நாலாநாள்முதல் வண்டிஏரு முதலானதிற் கட்டலாம் கால்கடுப்பு லேசாயிருக்கிறவிஷயத்தில் மேல்கண்டபடி லேப்பு அடித்தாற்போதும். இந்தமசாலா மேற்படி லேப்பு அடித்துச் சிலநாளைக்குப் பின்புங் கொடுக்கவும்.

## * கண்டங்கத்திரிக்காய்லேப்பு.

கண்டங்கத்திரிக்காய் முள்முருக்குக்காய் ஆமணக்குமுத்து இம்மூன்றையுமிடித்துப் பெரியபாத்திரத்திற்போட்டுப் போதுமான தண்ணீர்விட்டு வேகவைக்கவேண்டியது கொதிக்கிறசமயத்தில் சேம்பரகுமாரிகோதும்பைமாவு கடுகுப்பொடி ‡ கரியபவளப்பொடி இதுகளையும்போட்டுநன்றாய்க்கிண்டிவேகவைத்துக்கீழேயிறக்கிவைத்துக்கொண்டு அதிற்கொஞ்சம் கல்லுதவிரைவிட்டுக்கிண்டி யிளஞ்சூட்டுடனேமாட்டின்

‡ கரியபவளமென்பது—சாம்பராம்.

சீரமெல்லாமடிக்க வேண்டியது மறுநாள் மேலே சொல்லியிருக்கிறவிதப்படி வெந்நீரடிக்கவேண்டும் மூன்று நாட்காலமேகுளிர்ந்தண்ணீரிற்கொண்டுபோ யொருமணிநேரம் நிறுத்திக்குளிப்பாட்டவேண்டியது,

## ※ வாய்கழுவுதல்,

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | பலம் | ௨ |
| வால்மிளகு | ,, | வ |
| மிளகு | ,, | ௧ |
| காட்டுசீரகம் | ,, | ௧ |
| கருஞ்சீரகம் | ,, | ௧ |
| வசம்பு | ,, | வ |
| அக்கராக்காரம் | ,, | ௨ |
| கறியுப்பு | ,, | ௧௨ |

இவைகளில் உப்புத்தவிரமற்றதை ஒன்று இரண்டாக இடித்து உப்பையுஞ்சேர்த்துப் பதக்குத்தண்ணீரிற்போட்டுக்கொதிக்கவைத்து அந்தச்சக்கையில் மாட்டுக்கொருபிடி உள்ளுக்குக்கொடுத்து மற்றதைக்கொஞ்சங்கொஞ்சமாகவெடுத்துநாக்கிலன்றுபழுக்கத்தேய்த்து மேற்படி வெந்நீரைவிட்டுவிட்டுவாயைநன்றாய்க்கழுவவேண்டும் இந்தப்படி மாதமிரண்டுதடவைசெய்யவேண்டும் இதினாற் கபம், கோழைகள்வெளியாகவும் பல்லிற்சேரப்பட்டகாரையெடுபடவும் வாயினுண்டாகுந் துற்கந்தம் நீங்கவும் நாவறண்முதலானவியாதிகள்வராமலிருக்கவும் ஹேதுவாகும்

லேகியவகுப்பு முற்றிற்று.

---


உ

கடவுள் துணை.

# வியாதியும் பரிகாரமும்
# அறியும் வகை.

## காப்பு.

முத்திவழிதனையறிந்து வாழுங்கும்ப
  முனிராமதேவரிடைக் காட்டர்பின்னும்
சித்தசெனர்வெவ்வேறாய் மகிழ்ந்துசொல்லிச்
  சிறந்திலகுமாட்டின் வாகடத்தையெல்லாம்
நித்தியமும்பாரிலுள்ளோர் மருமவேண்டி
  நேசமுடனுரைசெய்தே யச்சிற்போடச்
சத்திசிவன்புதல்வரை வந்தித்த
  தந்திமுகன்பன்னிருகைச் செவ்வேள்காப்பே.




நாவித்தநமசிவாயா நாயுருவிநமசிவாயா
நாகம்போந்திரி நமன்போலவாரவனை
நாவுருவத்தைச்ச நாயுருவிகாளிசுவா.

## புல்லுந்தண்ணீரும்ஓதிக்கொடுக்க சக்கரம்.

உ. ஓலமஹாகணபதயே நமஹா.

நயவசிம. நயவசிம. மயசிநவ. நயவசிம, நயவ சிம.

| | | | |
|---|---|---|---|
| 12 | 15 | 19 | 5 |
| 18 | 6 | 11 | 16 |
| 7 | 21 | 13 | 10 |
| 14 | 9 | 8 | 20 |

மநயவசிம நய வசி. சிநவமய. யவசிம நயவ சி மந.

சிமநயவசிமநயவ வசிமநயவசி மநய
வமயசிந உசிநவம
நயவசிமநயவசிம மநயவசிமநயவசி.

ஓம்-மாதக்கி-ஓம் பரமேஸ்வரி-பார்வதி-இலட்சுமி-கொம்போடே வகுதகோமாரி- அமூல்வெக்கை, சீதவெக்கை, தோன்றும் எப்பேர்ப்பட்டவியாதிகளெல்லாம் நாஜேதிய புல்லோடும் தண்ணீரோடும் போகப் போக-சுவாகா.

சாதாரணமாய் எல்லாமாட்டுகேட்க்கும்

### தண்ணீர் ஓதிக்கொடுக்க மந்திரம்.

எட்டுதிக்கும் கட்டினேன்-பமூலிகத்தையுங் கட்டினேன்-பத்ரதிசையும் கட்டினேன்-படமெடுத்தாடும் பாம்பையுங் கட்டினேன்-கொல்லவந்த சூர்வான் சூர்பரியைக் கட்டினேன்-வடக்கேபோகிற வடமண்டலமுங்கட்டினேன்-அழைக்களதிர் வாசீர் சிவாசிவா சுவா சுவாமி ஆணை கில்




## அடைப்பன நோய்

* செய்குணம்—பட்படென ஆடும்திசைத்து கிடக்கும் பலகால் தீர்விடும்.

* மருந்து—கொன்றையிலையும் வெற்றிலையும் அரைத்து வெண்ணீர் கலக்கிப் புகட்டவும்.

இந்தப்படிச் சுடவும்.




* மருந்து—குமட்டியிலையும் கொழுஞ்சியிலையும் இழுவாய்கொல்லியிலையும் அரைத்துக் காடியிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். வெண்ணீர் வைக்கவும்.

* நசியம்—சிறுகீரை குப்பைமேனி தைவேளை வெங்காயம் வெள்ளைப்பூடு வசம்பு மிளகு சுக்கு இவைகளைச் செரிபாகமாய் வைத்துக் கொண்டு சீலையிற் பொட்டளங் கட்டி, மூக்கில்நசியம்விடவும்.

* வேறுநசியம்—முகங்கழுக்கும் உடல்வீங்கும் அசந்து நிற்கும்.

பசுமாட்டுக்கு இடதுபாரிசமும்
காளைமாட்டுக்கு வலதுபாரிசமும்
இதைப்படிச் சுடுபோடவும்.



வேறு.

நீர்தாரின்றி நிற்கும் இலைதிமொழுக்கிறசெருமலாய்ச்செருமும்.

நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| கோடங்கிழங்கு | பலம் | ௧ |
| வெந்தயம் | ,, | ௧ |
| வெள்ளுள்ளி | ,, | ௧ |
| வசம்பு | ,, | ௧ |

இவைகளையரைத்துக் கவளமிட்டி தனடியிற் கண்டிருக்கிற பிரகாரம் நசியஞ்செய்யதீரும்.

மேற்படிவியாதிக்கு நசியம்.

நெரிஞ்சிக்கொழுந்து
சீந்திக்கொழுந்து
வேலிப்பரித்திம்வர்
கொல்லங்கோவைக்கிழங்கு

இவைகளைச் சிறுநீர்விட்டுத்தட்டி செவிமூக்கில்நசியஞ்செய்யத்தீரும்.

வேறு,

கட்டுத்தறியை அடிக்கடி முட்டிக் கொள்ளும்.

நிவர்த்தி,

பூவரசன்விரையை பொடிசெய்து உரிவெண்ணெயிற்போட்டுக்கசக்கி சிரசில மூளைக்குச்சரியாய்பூசவுடனே குணங்கொடுக்கும்.

வேறு.

நாக்குவீங்கி நாக்கில் தண்ணீர்கழன்றுவிழும்



நிவர்த்தி.

புங்கம்பழத்தை வெந்நீர்விட்டரைத்து உள்ளுக்கு கொடுக்க உடனே குணங்காட்டும்

வேறு.

பூவரசன்விரை-எள்ளு இவ்விரண்டையும் வெந்நீர்வார்த்தரைத்துக்கொடுக்கவும்.

வேறு

வயிறுவீங்கும் மயிர்சிலிர்க்கும்தலையை தாழ்த்திக்கொண்டே நடக்கும் மேயாது.

நிவர்த்தி,

வெதுப்படைக்கி-சிங்கன்குப்பி -மிளகு இவைகளையரைத்துக்கொடுக்கவும்,

வேறு,

கிடையாக்கிடக்கும் தண்ணீர்போலக்கழியும்

நிவர்த்தி

கற்பாசியிலையை இடித்துசன் சாரம்பிழிந்துக் கொண்டு பசுவின்பாலும்நெய்யுங்கலந்துக் கொடுக்கவும்,

வேறு,

முழங்கால் சமக்குவீங்கும்மயிர்சிலிர்க்கும் சிவந்தநீர்விடும்.

நிவர்த்தி.

மூளகு நீலுப்பைபுண்ணுக்கு அவுரிசாற்றிலரைத்துக்கொடுக்கவும்.


இந்தப்படிசலையிற்
சுடவும்

## முட்டடைப்பன் நோய்

* செய்குணம்—திட்டுதிட்டென் றுமுக்குந்திருப்பிப் பாரத்து திகைப்படும் கொஞ்சநேரஞ்சென்ற பின் நாக்குங்குளிர்ந்துபோகும்

மருந்து—கொஞ்சமிளகை வாயிற்போட்டுமென்று மாட்டினது கண்களிலுங் காதுகளிலும் வாயிலும் பவனவாயிலும் உடனே ஊதவும் செருப்படியிலையை யிடித்துப் பிளிந்து சரீரமெங்குந் துவாலைபோடவேண்டும். பிரேதஞ்சுட்ட மூட்டம்பிரிக்குமுன் அதற்குள் அக்கினியுடனிருக்கிற சாம்பலைக்கொண்டுவந்து அதில் ஒரு மாங்காயளவு அரைப்புட்டி சாராயத்திற்கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிக்கவெந்நீர்விடவும்,

இருவிலாவிலுந் நெஞ்சிற்
குருக்காகச் சூடுபோடவும்



அல்லது—மிளகு வெத்திலை உப்பு மூன்றையும் வாயிற்போட்டு மென்று நாசியிலூத வேண்டியது மிளகாய் வத்தல் பலம்-௧. இலுப்பைப்பிண்ணாக்கு பலம்-௨, கடல்நுரை பலம்-வ, சிறுநீர்விட்டு அரைத்துகால்படி சிறுநீரிற்கலக்கிக் கொடுக்கவும்.

௨. இதுவுமது.

*செய்குணம்—மயிர்சிலிர்க்குஞ்செவிதாழும்கண்சிவந்திருக்கும் கண்சிறுக்கும் வயிறுஊதும் வாய்



திறவாது தீவனந்தின்னாது நாடியைத்தாழ்பூடும் மூச்சுத்திட்டுத்திட்டென மண்ணைதிரவிடும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—வெள்ளைப்பூடு | பலம் | ௧ |
| வசம்பு | ,, | வ |
| சுக்கு | ,, | ௧ |
| இலுப்பைப்பிண்ணாக்கு | ,, | வ |
| சிறுதும்பை | பிடி | ௧ |
| குப்பைமேனி | பிடி | ௧ |
| [illegible] | பிடி | ௧ |
| நொச்சியிலை | பிடி | ௧ |


இவ்வளவுமொன்றாயிடித்துக் காற்படி உப்பில் கலக்கிக்கொடுக்கவேண்டும் குடிக்கவெந்நீர்விடவும் இருவிலாவிலுஞ்சூடுபோடவும்.

௩. இதுவுமது.

* செய்குணம்—காலுகாலுங் கிடுகிடெனப்பதறும்நெஞ்சுவீங்கும் விழுந்தெழுந்திருக்கும் மணலைக்கவ்வும்மாக்குமாக்கென்று கதறும்.

மருந்து—வேலிப்பருத்தியிலையுஞ் சிறுகுறிஞ்சா இலையும் கொத்தாங்கொவ்வைஞ்சியிலையுஞ் சீந்தியிலையும் முடக்கத்தானிலையும் இடித்துவகைக்குக்காற்படி சாறுபிழிந்து கொடுக்கவேண்டும். குடிக்கவெந்நீர்விடவும்.

இருவிலாவிலுஞ்
நெஞ்சிற்குருக்காகவுஞ்
சூடுபோடவும்



வேறு.

மூக்கும் குண்ணி அங்கந்தலைக்குகொண்டிருக்கும்

நிவர்த்தி.

கொச்சியை உமியுடன் கொண்டுவந்திடித்து
துப்பிலிச்சாறு படி வ
தேங்காய்ப்பால் ,, வ

இவைகளை பொன்னாய்க்கலந்து புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக் கட்ட... வாயிற்கட்டவும் ○—

வேறு,

திட்டுத் திட்டென்று மூக்குந்திரும்பிப்பாராது.

நிவர்த்தி.

ஐயுங்-கிலியுஞ்-சவ்வும்-சிவாயநமவென்றுதியானித்துக்கொண்டு எருக்கம்பாலைறு கடலை ஒருமாட்டின் மூக்கிலிடித்து பிளவைமென்று அபானவாயிலுங் காதிலும் ஊதத்தீரும்.

வேறு.

முன்னங்காலும் பின்னஞ்சக்கும் வீங்கும்.

* மருந்து—முப்புமெரித்தான் பலம் ௧
குளப்பாலைவேர் ,, ௧

இரண்டையும் அரைத்துப் பசுவின்பாலிற் கொடுக்கவும் வியாதி தீரும்.



அமுக்கிருவேர் வசம்பு புலாத்திவேர் சிற்றரத்தையும் அரைத்து மேல் பூசவும்.

இரண்டு தொடையிலுமாகுமே போடவும் { } ——

வேறு.

பிரண்டைக்கொழுந்து பிடி ௧

இதையரைத்துக் காடியிற்கலக்கி மூன்றுநாள் புகட்டத்தீரும்.

## முன்னடைப்பன் நோய்.

* செய்குணம்—முன்னங் காலிரண்டையும் தெத்தி வைக்கும் வாய் அசைபோடாது இரண்டுகாலும் நடுக்கும் நாசிவோக்கும் பிறைதின்னாது.

* மருந்து—இலுப்பைப் பிண்ணாக்கு மனுக்காரைத் தொலி வல்லாரைக்கு எலும்பிச்சங்காயளவு அரைத்துச் சோடைக்காலாதாக்கபடி ஒன்றில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

* நசியம்-கொஞ்சம் மிளகும் வெள்ளைப்பூடு மரைத்து பெய்ப்பீர்க்கஞ்சாறும் சிறுநீரும் சேர்த்துக் கலக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு கண்களிலும் மூக்கிலும் நசியம் பண்ணத்தீரும் குடிக்க வெந்நீர்வைக்கவும்.

இடதுவிலாவிற்குடல் —○—

| | | |
|---|---|---|
| ஆடாதோடைச்சாறு | ,, | வ |
| சீரகம் | பலம் | ௧ |
| வெள்ளுள்ளி | ,, | ௧ |
| வசம்பு | ,, | ௧ |
| ஓமம் | ,, | ௧ |
| நெத்திலிக்கருவாடு | ,, | ௧ |

இச்சாறுகளையொன்றாய்க் கலந்ததில் மற்றமருந்துகளை யரைத்துப்போட்டுக் கொடுக்கத்தீரும்.

வேறு.

| | | |
|---|---|---|
| நெத்திலிக்கருவாடு | பலம் | ௰ |

இதையரைத்துக் காடித்தண்ணீரிற் கலக்கிப் புகட்டத்தீரும்.

வேறு.

| | | |
|---|---|---|
| மஞ்சணத்திக்கொழுந்து | பிடி | ௪ |
| ஓமம் | பலம் | ௨ |
| வெள்ளுள்ளி | ,, | ௨ |
| வசம்பு | ,, | ௨ |
| சுக்கு | ,, | ௨ |

இவைகளையரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டத்தீரும்,

## முன்னடைப்பன் பின்னடைப்புக்கும் நோய்க்குமருந்துகள்.

| | | |
|---|---|---|
| வெருகங்கிழங்கு | பலம் | ௩ |



| | | |
|---|---|---|
| இலுப்பைப்பிண்ணாக்கு | ,, | ௩ |
| மிளகு | ,, | ௩ |

இதுகளையரைத்துக் கோழியவரையிலைச் சாற்றிற்கலந்துக்கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

வேறு.

| | | |
|---|---|---|
| பிரண்டை | பலம் | ௫ |
| கோழியவரையிலை | ,, | ௫ |
| கரியுப்பு | ,, | ௫ |
| கோழிக்காரம் | ,, | ௫ |
| சுக்கு | ,, | ௫ |

இவைகளையரைத்து வேப்பெண்ணெயில் மத்தித்துக்கொடுக்கவும்.

## பின்னடைப்பன் நோய்.

* செய்குணம்—பின்னர் தடையும் பவனவாயும் அடைக்கவீக்கும் கடைக்கண்ணிலே தண்ணீர் வடியும் கண்குழியும தினிதின்றுதமேலேசைடும் காலைத்தூக்கும்

* மருந்து—முருங்கைப்பட்டை வெள்ளைப்பூடு வகைக்கு மாங்காயளவு வசம்பு எலுமிச்சங்காயளவு பிரண்டையும் அரைத்து ஒருபடிகாடியிற் கலக்கிக்கொடுக்கவேண்டும்.

இருவிளாவிலும்சூடுபோடவும் ○

உ. இதுவுமது.

* செய்குணம்—பின்னங்கால் கடைகட்டாதுநீர்வலம் இறங்காது வயிற்றில்வலிகூறும் படுத்துப் படுத்து எழுந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—மஞ்சள் | பலம் | ௧ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | ௧ |
| அக்கராக்காரம் | ,, | ௨ |
| பெருங்காயம் | ,, | ௪ |
| சுக்கு | ,, | ௨ |
| குரோசாணிஓமம் | ,, | ௧ |
| கடுகு | ,, | ௧ |
| திப்பிலி | ,, | ௪ |
| மிளகு | ,, | ௨ |
| மிளகாய்ப்பழம் | ,, | ௧ |
| வெள்ளைப்பூடு | ,, | ௨ |

எருக்கலம்பூ ஒருபிடி—இவ்வளவும்இடித்து சாரயம் விட்டுப்பிசைந்து கவளமாகக் கொடுக்கவேண்டும் இடதுகடை வயிறதிற்சூடு போடவேண்டும்.

௩. இதுவுமது.

* செய்குணம்—சாணிபோடாது வயிறுமும் நீளநின்று மேல்நீர்க்கும் பிருக்குபடுக்கும்.

* மருந்து—குருசுபாக்கு,பலம்-௧-கடுக்காய்த்.[illegible] பலம்-௧-இம்மருந்து இரண்டையும் [illegible] நன்றாய்க்கருகின [illegible]



[illegible]காயளவுசேர்த்து ஊறுபடிவெந்நீர்கலக்கிக்கொடுக்க வேண்டும். கையில்நல்லெண்ணெயைத் தடவிக்கொண்டுஎனவாய்க்குள் விட்டுசாணியையெடுக்கவும்,குடிக்கவெந்நீர்விடவும் இடதுவிலாவிலும் நெஞ்சைக் கட்டி சூடு போடவேண்டியது.

| | | |
|---|---|---|
| * அல்லது—வெள்ளைப்பூடு | பலம் | ௧ |
| வசம்பு | பலம் | ௧ |
| குப்பைமேனியிலை | பிடி | ௨ |
| கோழியவரையிலை | பிடி | ௨ |
| மணத்தக்காளியிலை | பிடி | ௨ |

இவைகளை ஒன்றாய்ச்சேர்த்து அரைத்து வெந்நீர்கலக்கி உள்ளுக்குப் புகட்டவேண்டும்.


௪. இதுவுமது.

* செய்குணம்—கன்னிக்கும் கண்ணீர்வடியும் பேசாதும் சாணிபோடாது நீர்விடும் பேய்முகமாயிருக்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—சுக்கு | பலம் | ௧ |
| கடுகு | ,, | ௧ |

காரையிலை, பேய்க்குமட்டியிலை, கொளுஞ்சியிலை, நொச்சியிலை. வகைக்குப் பிடி-௧-இவைகளை யரைத்து மோரிற்கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

இந்தப்படிக் கிடதுவிலாவிற்சுடவும்



வேறு.

எருவிடாது நீர்விடும் கண்வெந்து நீர்வடியும்பிளை சாடும் பேய்முகமாகும்,

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| களிப்பாக்கு | பலம் | ௩ |
| கடுக்காய்த்தோல் | ,, | ௩ |

கத்தாளஞ்சோறு ஒருதேங்காயளவு இரட்டி ஆறு படிதண்ணீரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்,

நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| காரையிலை | பிடி | ௩ |
| கொளிஞ்சியிலை | ,, | ௩ |
| பேய்க்குமட்டியிலை | ,, | ௩ |
| நொச்சியிலை | ,, | ௩ |
| சுக்கு | பலம் | ௧ |
| கடுகு | ,, | ௧ |

இவைகளையிடித்து மோரிற்கலக்கிக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்கிடது விலாவிற்சுடவும்



ஊர்நடைப்பன் நோய்.

* செய்குணம்—வயிறூதும் இரை தின்றது செரியாமூம்.




* மருந்து—நேத்திலிக் கருவாடு பலம்-௩, வெந்தயம் பலம்-௩. நன்றாயரைத்து இரண்டுபடி நீரிற்கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

* அல்லது—வெள்ளைப்பூடு பலம் ௩

| | | |
|---|---|---|
| ஓமம் | ,, | ௧ |
| வசம்பு | ,, | ௰ |
| சீரகம் | ,, | ௨ |
| கருவாடு | ,, | ௧ |

இந்தசரக்குகளையும் ஒன்றாயரைத்து இத்துடன் மணத்தக்காளிச்சாறும் கருநொச்சிச்சாறும் ஆடாதோடைச்சாறும் இம்மூன்றும் வகைக்குப்படி கால் விதம் சேர்த்துக் கொடுக்கவும்.

இடதுவிலாவிற் சுடவும்.



௪. இதுவுமது.

* செய்குணம்—வயிறூதும் எருவிடாது [illegible] நீர்விடும்.

* மருந்து—கருத்தக்காக்கணங்கொடியை சமூலத்தோடே மாங்காயளவு இடித்து [illegible] பலம் அரைத்து ஒருபடிவெந்நீரிற்கலக்கிக் கொடுக்கவேண்டும், குடிக்கவெந்நீர் விடவும்.

இருவிலாவிலுஞ் சுடவும். (வர)

௫. இதுவுமது,

* செய்குணம்—வயிறுவீங்கும் அசைந்து நிற்கும் நீர் [illegible] கட்டிவிடும்.

| | | |
|---|---|---|
| ※ மருந்து—மஞ்சள். | பலம் | ௭ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | க |
| அக்கரக்காரம் | ,, | ௭ |
| சுக்கு | ,, | உ |
| காயம் | ,, | வ |
| கடுகு | ,, | ௭ |
| குரோசாணிஓமம் | ,, | க |
| திப்பிலி | ,, | ௭ |
| மிளகாய்ப்பழம் | ,, | க |
| மிளகு | ,, | உ |
| வெள்ளைபூடு | ,, | உ |
| எருக்கலம்பூ | பிடி | க |

இவ்வளவும் சேர்த்து ஒன்றாயிடித்து அதற்கு போதுமான அரக்குச்சாராயம்விட்டு பிசைந்து கவளமாகச்செய்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படி இரண்டுவிலாவிலுஞ் சூடுபோடவும். ஸ்ரீ

வேறு.


வயிறூதும் வாயில்நீர்வடியும் திட்டுத்திட்டென்று மூக்குஞ்சாணம் போடாது.

நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| நெய்க்கொட்டான்பழம் | பலம் | ரு |
| கோழிக்காரம் | படி | ஞ |

இவைகளையரைத்து ஒருபடிகாடியிற் கலக்கிப் புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கிடது விலாவிற்சுடவும்,





வேறு.


வயிறூதுஞ் சாணம்போடாது.

நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| கருந்தக்காக்கணன் சமூலங்கொண்டுவந்து இடித்துப்பிழிந்தசாறு | படி | வ |
| நீர்க்கெண்ணெய் | ,, | வ |
| பழம்புளி | பலம் | உ |

இடி சாற்றையும் எண்ணெயையு மொன்றாய்க்கலந்ததில் புளியைக்கரைத்துப் புகட்டத்தீரும்,

இந்தப்படிக்கிடது விலாவிற் சுடவும்.



வேறு.


சாணம்போடாதவயிறுபொருமும் இரைதின்னாது உடல்வீக்கும்.

நிவர்த்தி,

| | | |
|---|---|---|
| கழிப்பாக்கு | பலம் | ங |
| கடுக்காய் | ,, | ங |
| கற்றாளைச்சோறு | ,, | உ௭ |

இவைகளில்கழிப்பாக்கையும் கடுக்காயையும் பொடித்துக் கற்றாளைச்சோற்றிற்போட்டுப்பிசைந்து வெந்நீரிற்கலக்கிப் புகட்டவும்,

இந்தப்படிக் கிடது விலாவிற்சுடவும்.



வே று.

| | | |
|---|---|---|
| குப்பைமேனியிலை | பிடி | ௨ |
| கோழியவரையிலை | ,, | ௨ |
| மணத்தக்காளியிலை | ,, | ௨ |
| வெள்ளைப்பூடு | பலம் | ௧ |
| வசம்பு | ,, | ௧ |

இவைகளையரைத்துப் புகட்டத்தீரும்.

வேறு.

| | | |
|---|---|---|
| வசம்பு | பலம் | ௨ |
| மஞ்சணத்திக்கொழுந்து | ,, | ௫ |
| நாவல்வேர் | ,, | ௫ |
| பழம்புளி | ,, | ௯ |

இதுகளையிடித்துக்காடியிற்கலக்கிப்புகட்டத்தீரும் இதற்கு முன்சொன்னபிரயோகத்திற்சொல்லியபடிக் கிடாவிலாவிற்சுடவும்.

வே று.

வயிறூதும் கண்சிவக்கும் வாயில்நீர்வடியும் இரைதின்னாது.

நிவர்த்தி,

| | | |
|---|---|---|
| மதுக்காரைவேர்ப்பட்டை | பலம் | ௫ |
| மிளகு | ,, | ௨ |
| வெள்ளுள்ளி | ,, | ௨ |

இவைகளையரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டத்தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்

இந்தப்படிக்கிடா விலாவிற்சுடவும். (ரு)



## கோட்டடைப்பன்குணம்.

கழுத்துக்கோணும் அரைமேச்சலாய்மேயும்

நிவர்த்தி,

இந்தப்படிகழுத்திலும் முதுகிலுஞ்சுடவும். உ உ உ

உ உ உ

ஸ்ரீ உ உ உ


## நெஞ்சடைப்பன் நோய்.

* செய்குணம்—நெஞ்சடிக்கும் வாயிலிருந்து நீர்வடியும் செருமும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—மிளகு | பலம் | ௨ |
| திப்பிலி | ,, | ௨ |
| வசம்பு | ,, | ௪ |
| வெள்ளைப்பூடு | ,, | ௨ |
| காயம் | ,, | [illegible] |
| குப்பைமேனி | பிடி | ௧ |
| தைவேளை | ,, | ௧ |
| வெள்ளறுகு | ,, | ௧ |

இவ்வளவு ஒன்றாயிடித்து உருண்டைசெய்துக் கொடுக்கவேண்டும், குடிக்கவெந்நீர்விடவும்.

இந்தப்படி இருவிலாவிற் சூடுபோடவும்,



௨. இதுவுமது,

* செய்குணம்—காதுகள் மடங்கித் தொங்கும் தலை யிறக்கமா யிருக்கும் நாடிபடபட வென்றடிக்கும் கொம்புகளுங் காதுகளுஞ் சிலவேளை சூடாயுஞ் சிலவேளைக் குளிர்ந்தும் ; மாறிமாறியிருக்கும் சதாரணமாய்ச் செருமல்காணும் மேல்மூச்சுவாங்கும் கண்ரெப்பைகளின் உள்ளத்தோல் இரத்தங்கட்டி உப்பியிருக்கும் ஏதோ ஒவ்வொரு வேளையில் படுத்திருக்காலுஞ் சதாரணமாய்ப் படுக்காது கடைசியாய் வியாதிமுற்றிச் சுவாசக்குழலில் கெடுதியுண்டாய் சுவாசம் அதிகமாய் நாறும் எருதுகளை சவாரிகளிலும் மைத்தவேலைகளிலும், அதிக ஓட்டம் ஓட்டுவதினுலுங்குளிர்காற்றிலும் மழையிலும, அடிபடுவதினுலு,மிந்த வியாதி யுண்டாகிறது.

* மருந்து—கர்ப்பூரம் பொட்டிலுப்பு கரியபவளம், அபினி வகைக்கு அரையேயரைக்கால் ரூபாயிடை மூன்றும் ஒன்றாய்ச்சேர்த்து பொடிசெய்து அதற்குபோதுமான தேன்விட்டுப் பிசைந்து மூன்று உருண்டையாகச்செய்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளையுங் கொடுக்கவேண்டியது, அதிகமாய் பேதியானல் மேற்படி கரியபவளத்தைத்தள்ளிமைந்தனைதப் போடவேண்டும்-௨-ரூபாயிடை சேர்வாளக் கொட்டையை யரைத்து சு



ன்றுமாகாணிப்படி-தேங்காயெண்ணெயிற் கலக்கி ஒருமணிநேரங் கொதிக்கவைத்து இறக்கி வைத்துக்கொண்டு மார்புக்கு இரண்டுபக்கத்திலுங் கால்மணிநேரம் நன்றாயழுத்தித் தேய்க்க வேண்டியது அந்தஇடங் கொப்பளித்துவிடும்.

வேறு.

நெஞ்சடைத்துச்செருமும் வாயில்நீர்வடியும்,

நிவர்த்தி,

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௧ |
| சுக்கு | ,, | ௧ |
| கோரக்கிழங்கு | ,, | ௧ |

இவைகளைச் சிறுநீர்விட்டரைத்து பசுவின்நெய்பலாவது ஆழாக்குநல்லெண்ணெயிலாவது குழப்பிக் கொடுக்கவும்இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்திரும்.

வேறு,

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௧ |
| கோரக்கிழங்கு | ,, | ௧ |

இவைகளை முன்போலரைத்துக் கொடுக்கத்தீரும்.

வேறு.

நெஞ்சு தடித்துச்செருமும் நாலுகாலும்பருகும்

நிவர்த்தி.

மேற்சொல்லியமருந்தை மூன்றுநாள்கொடுத்து.

இந்தப்படி நாலு
காலிலுஞ்சுடவும்

வேறு.


நெஞ்சடைத்து நீர்பாயும் செருமும்

நிவர்த்தி.

| | |
|---|---|
| செருப்படி | மிளகு |
| நாய்கடுகு | சுக்கு |

ஒருகளஞ்சிப் பிரமாணம் கூட்டி இருசேர்வார்த்து அரைத்து ஆழாக்கு செய்யுங்கூட்டி மூன்றுநாட் கொடுக்க சொஸ்தமாகும்.

இந்தப்படிக்கி
இரண்டு விலாவிலும்
சூடுபோடவும்.



—*—

## உள்ளடைப்பன் நோயின் குணம்.

வேறு.

மயிர்சிலிர்க்கும் வாயில் நீர்வடியும் தூங்கிவிழும்.

நிவர்த்தி,

| | | |
|---|---|---|
| அகத்தியிலைச்சாறு | படி | ௨ |
| ஆவின்நெய் | ,, | ௩ |
| மிளகு | பலம் | ௫ |
| ஈருள்ளி | பலம் | ௫ |

இச்சாற்றையும் நெய்யையும் ஒன்றாய்க் கலக்கதில் மற்றமருந்தை யரைத்துப்போட்டுக் காய்ச்சிக்கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கிறதும்.



வேறு.

மிளகாய்-பச்சைவெற்றிலை, இவ்விரண்டையும் உரலில்போட்டு இடித்து உள்ளுக்குங்கொடுக்க குணமாகும்.

## * கேளியடைப்பன் நோய்.

* செய்குணம்—இவனந்தின்று தாசாணிநெகிழ்த்துப் போடும் சரீரத்தை நெளிக்கும் சுருக்கா கடைக்கும் விழும் எழுந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—கடுகு | பலம் | ௰ |
| வெள்ளைப்பூடு | ,, | ௧ |
| வெந்தையம் | ,, | ௧ |
| மாதளம்பிஞ்சு | ,, | ௪ |
| கல்வற்கொழுந்து | ,, | ௫ |
| சித்திரைப்பாலடை | ,, | ௭ |

இவைகளெல்லா மொன்றாய்ச்சேர்த்து அரைத்து நாலுபடி தேங்காய்ப்பாலிற கலக்கி உள்ளுக்கு கொடுக்கவேண்டும்.

## * சங்கடைப்பன் நோய்

* செய்குணம்—அசிதிமச்சல்மேயும் திகைத்துநிற்கும் கொஞ்சநாட்சென்றபின்பிடக்குசெருமும் இளைக்கும் அலைக்கண்போட்டுத் தூங்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—அரிதாரம் | பலம் | ௨ |
| சீனி | ,, | ௫ |


அரைப்படிசாராயத்திற்சேர்த்துஉள்ளுக்குக்கொடுக்கவேண்டும்,

* நசியம்—திப்பிலி பலம் ரு

| | | |
|---|---|---|
| மிளகு | | வ |
| வெற்றிலை | ,, | வ |
| உப்பு | ,, | ௨ |

கண்டங்கத்திரிப்பூம் ௨. இவ்வளவும் அரைத்துச் சித்திரமூலச் சாற்றிற்கலக்கி வடிகட்டிக் காதுமூக்கு இவைகளில் நசியம்பண்ணவும் குடிக்கவெந்நீர் விடவும்.

இந்தப்படி இருவிலா விலுஞ்சுடவும்.



## * சதையடைப்பன் நோய்.


* செய்குணம்—நல்லபசுமாட்டிற்கும் முகம்வீங்கும் அதிமேய்ச்சல்மேயும் பல்காலுஞ்சுருக்கு நீர்விடும் நிலத்தைப் பரண்டுந்தண்ணீர் அரைவாய்க்கொண்டு குடிக்கும் சாணிவரண்டுபோடும்.

* மருந்து—வில்வஇலை பலம் ௧ வெள்ளைப்பூலாவிலை பலம்-௧ அந்தகடுக்காய்த்தோடு இவ்வளவு மொருபானையிற் போட்டு ஆறுபடி தண்ணீர்விட்டுமூடிக்கொதிக்கவைத்து ஒருபடிதண்ணீராக வற்றினபின்



பிறக்கி யிறுத்துக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும் இருவிலாவிலுஞ் சூடுபோடவேண்டும்.

இந்தப்படிக்
கிரண்டுவிலாவிலும்
சூடுபோடவும்.



## * சந்தடைப்பன் நோய்.

* செய்குணம்—முன்னங்காலும்பின்னங்காலும் வீங்கும்.

* மருந்து—முப்புமெரித்தான்வேர் பலம் ௧. குளப்பாலைவேர் பலம் ௧. இரண்டையு மரைத்து அரைப்படி பசுவின்பாலிற் கலக்கிக்கொடுக்க வேண்டும்.

* அல்லது—

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௧ |
| சுக்கு | ,, | ௨ |
| திப்பலி | ,, | வ |
| காயம் | ,, | ௩ |
| வசம்பு | ,, | வ |
| மஞ்சள் | ,, | ௨ |

குப்பைமேனி நாய்வேளை வெள்ளறுகு இம்மூன்றுவகைக்குப்பிடிஒன்று இவ்வளவுமிடித்து அரைப்புட்டி சாராயம்விட்டுப் பிசைந்து கவளங் கொடுக்கலாம்

ஒருபெட்டைக் கோழியிரத்தமும் அரைப்புட்டிசாராயமுஞ் சேர்த்துக்கொடுக்கலாம பிரண்டையை யிடித்துச் சட்டியிற்போட்டு வறுத்துத் துணியிற்கட்டிச்சூட்டுடனே வீக்கத்தில் ஒத்தற்போடவும் அமுக்கிராவேர் வசம்பு சிற்றகத்தியிலையிவைகளையரைத்துக் கொதிக்கவைத்து வீக்கத்திற் பூசவும் குடிக்க வெந்நீர்விடவும்.

வீங்கியிருக்கிற இடங்களில் இந்தப்படிக்கு சுடவும்.




## ※ சேருக்கடைப்பன் நோய்.

* செய்குணம்—மயிர் சிலிர்க் கிருக்கும் கண்களிற் பீளைசாடும் அடிவயிறு ஊதிக் கொண்டிருக்கும் கிறுபூறெனஇளைக்கும்.

* மருந்து—சுக்கு பலம் ௧. கோவைதண்டும் எருக்கிலையும் வகைக்கு மாங்காயளவு சுக்குடன் சேர்த்தரைத்து பசுவின்மோரு படி ஒன்றனில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கு இருவிலாவிலும் சூடுபோடவும்







## ※ மூக்கடைப்பன் நோய்.

* செய்குணம்—தீவனந்தின்றது ஒருகாலிலொன்றும் திக்குதிக்கென் றுமூக்கும் படுத்தால் எழுந்திராது

* மருந்து—சருக்கிலி படி ௧ சிவனார்வேம்பு பூத்தியிலை வகைக்கு மாங்காயளவு அரைத்து ஆட்டுமோர் படி ஒன்றனில்கலக்கி உள்ளுக்குக்கொடுக்கவேண்டும்,

இந்தப்படிக்கு இரண்டுவிலாவிலுஞ்சுடவும்.



## ※ வாட்டடைப்பன் நோய்.


* செய்குணம்—கண்கள் சிவந்திருக்கும் வயிறூதும் மூக்கு அடைத்து நிற்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—சித்தகத்தியிலை | பிடி | ௧ |
| வாதையிலை | ,, | ௧ |
| சிவனார்வேம்பு | ,, | ௧ |
| சாக்கொன்றையிலை | ,, | ௧ |
| புங்கயிலை | ,, | ௧ |

சிறுதும்பையிலை ,, க
குப்பைமேனியிலை ,, க
தைவேளை ,, க

இவைகளை யிடித்துச் சார்பிழிந்து அதில், வசம்பு பலம்-வ. வெற்றிலை பலம்-ச. புகையிலை பலம்-வ. இவைகளை ஒன்றாயரைத்து மேற்படி சாற்றிற் கலக்கி அத்துடன் கால் படி சாராயமுங்கூட சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். குடிக்கவெந்நீர்காட்டவும்.

இந்தப்படிக்கி இருவிலாவிலு நெத்திலுஞ் சுடவும்



## ✻ விரட்டடைப்பான் நோய்


✻ செய்குணம்—ஆட்டுப்பிழுக்கைபோற் சாணிபோடும் நடக்கமாட்டாது.

✻ மருந்து—வசம்பு பலம்-வ. வெள்ளைப்பூடு பலம்-க. இவ்விரண்டையும் அரைத்து ஒருபடிவெந்நீரிற் கலக்கி உள்ளுக்குக்கொடுக்கவும், குடிக்க வெந்



நீர்வைக்கவேண்டும். அதிற்கொஞ்சம் வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும்.

இந்தப்படிக்கிருவிலா விலுஞ்சுடவும்.




## ✻ சாட்டடைப்பான் நோய்

✻ செய்குணம்—நாக்கை நீட்டும் உடல்பாக்கும் மூச்சு மூச்சென்று உடலை அலைக்கும்.

✻ மருந்து—அத்திக்காய் படி-உ. மஞ்சள் பலம்-உ. மிளகு பலம்-க. திப்பிலி பலம்-வ. இவைகளையரைத்து இரண்டு படி காடியிற்கலக்கிக் கொடுக்கவும்

இப்படிக்கிஇரு விலா விலுஞ்சுடவும்.



## ✻ திரட்டடைப்பான் நோய்,

✻ செய்குணம்—மாட்டின்வயிற்றில்ஒருபுறத்திற்கொஞ்சம்வீக்கம்போ லப்புடைப்பாகவுந் திரண்

டுகாணும் தீனி தின்னாது கொண்டையிலறு
டைக்கும் எழுந்திரிக்காட்டாது கிடையு
ங்கொள்ளாது வருத்தபடும்.

* மருந்து—பெருந்தும்பைச் சாறு படி-அ. சிறுதும்
பைச்சாறு படி-அ. வற்றில சுக்கு பலம்-க. மி
ளகு பலம் க. இவைகளை யரைத்து உள்ளுக்கு
கொடுக்க வேண்டும் குடிக்கவெந்நீர் விடவும்.
இந்த மருந்துகளையே சரீரமுழுதும் துவசலே
போடவேண்டும்.

## * காத்தடைப்பான் நோய்.

* செய்குணம்—உடம்பின் இடதுபக்கத்தில் வீக்க
முண்டாகும். அதைக்கையினால் தட்டிப்பார்
த்தால் டொங்டொங்கென்று கேட்கும் மாடு
வெகுவருத்தப்படும் அடிக்கடி எழுந்திருக்கி
றதும் படுக்கிறதுமாய் அரட்டல் புரட்டலா
மாயிருக்கும் காலினால் வயிற்றை அடிக்கு
க்கொள்ளும் மூச்சு அதிக தீவரமாயிருக்கும்.

* மருந்து—கடுகு பலம் எ. பொடிசெய்து வைத்துக்
கொண்டு அத்துடன் ஒரு பலம் நெய்யும் வெந்
நீர் படி-உ. வார்த்து இரண்டையும் அத்துடன்
சேர்த்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்
டும்.

## * குரட்டடைப்பான்நோய்.


* செய்குணம்—அசைவாய்க்கொண்டு தீனிதின்னும்
கழுத்தைக்கோணலாய் வைத்துக் கொண்டு
நடக்கும்.



* மருந்து—சாறுபடி அரைக்குறி விளாம்பழ ஒன்று
இடிச்சு ஈ ரிரண்டு அரைத்து சாயத்தில் கலக்கி
உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

* அல்லது—ஏலம் பலம் ச. வெல்லம் பலம்-அ, சர்க்
கரை பலம்-உ. இவைகளை பொடித்துக் உள்ளுக்
குக்கொடுக்கலாம் குடிக்க வெந்நீர் விடவும்.

சூதகிற்றுடு
போடவும்




## * தாக்கடைப்பான் நோய்.

* செய்குணம்—தீவனந் தின்னாது கொண்டைச்சி
வி பெருத்துப்பார்க்கும் கண் பூ நட்டிவிழி
க்கும் நடைக்கண்ணால் பார்க்கும் இரண்டு
நாள் போனபிறகு வயிற்றிக்கி விழுந்துகிட
க்கும்.

* மருந்து—எலுமிச்சம்பழம் சாறு படி அரைகால்
கண்டங்கத்திரிச் சாறு படி அரைகால்வெள்ளை
ப்பூடு பலம் ரு. இவையரைத்து மேற்படிச்சாற்
றிற்கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும், அதில்
கொஞ்சம் எடுத்து வடிகட்டிக்கொண்டு கண்க

ள் காதுகள் மூக்கு இம்மூன்று விடங்களிலும் நசியம்செய்யவும் குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படிக்
கிருவிளாவி
லூஞ்சுடவும்



## ※ நாக்கடைப்பன்நோய்.

* செய்குணம்—திவனந்தின்னாது கழிஞ்சுபோம்தலையை உயர்த்திப்பார்க்கும் இரண்டுநாசிகளிலுஞ் சளிபோலேயும் வெள்ளையாகவும் உறைந்திருக்கும் நாக்குத்தடித்திருக்கும்.

* மருந்து—அத்திக்காய்படி-உ. ஆவரம்பட்டை பலம்-க. இலந்தைப்பட்டை பலம்-க. இம்மூன்றையுமிடித்து இரண்டுபடிகாடியிற்கலக்கிக்கொடுக்கவேண்டும் அதிற்கொஞ்சம்வடிகட்டி நாசியில் நசியம்பண்ணவும் எருக்கிலையை அரைத்து சிறுநீரிற்கலக்கித் துவாலைபோடவும் இடதுவிலாவிற்சுடவும்.

வேறு,

இரைதேடாது நிலைத்துநிற்கும் நாக்குத்தடித்திருக்கும்.

நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| அத்திக்காய் | பலம் | ய |
| ஆவரைவேர்ப்பட்டை | ,, | ய |



இவைகளை இடித்துக் காடிவிட்டுப்பிசைந்து ஒருபடிசாறுபிழிந்து புகட்டிரும்

இந்தப்படிக்கிருகன்னத்
திலுஞ்சுடவும்



## ※ கதவடைப்பன்நோய்.

* செய்குணம்—வாய்திறவாமலிருக்கும் கண்சிவந்திருக்கும்.

* மருந்து—இந்துப்பு பலம்-வ. சீனிக்காரம் பலம்-உ காயம் பலம்-உ. வேப்பங்கொழுந்து பிடி-க. இவைகளைநன்றாயரைத்து வெந்நீர் அல்லது ஒருபடி பசுவின்பாலிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்,

| | | |
|---|---|---|
| * அல்லது—சுக்கு | பலம் | க |
| மிளகு | ,, | உ |
| திப்பிலி | ,, | வ |
| வசம்பு | ,, | வ |
| காயம் | ,, | உ |

இவைகளையரைத்து கழுநீருமூத்திரத்திற் கலக்கிக் கொடுக்கவேண்டும், சாயங்காலம் வெந்நீர்காட்டவும்.

கட்டத்தொண்டைமேலாக வலதுகால்கீழாக இழுத்துத்தலையைக் கட்டிசுடவும்,

வேறு,

கொம்பைசுற்றிகிக்கும் வாய்திறவாது கண்சிவக்கும்

நிவர்த்தி


| | | |
|---|---|---|
| இந்துப்பு | பலம் | ௳ |
| பெருங்காயம் | ,, | ௳ |

இவைகளையரைத்து ஒருபடிபசுவின் பாலிற்கலக்கி புகட்டவும் இந்தப்படிமூன்றுநாளைக்கொடுக்கத்தீரும்

இடதுபக்கமேலைத் தொண்டைமுதல் வலதுகால் வரையிழுத்து மூன்றுசூடுபோடவும்.

அல்லது

இந்தப்படிக் கிரு



விலாவினுஞ்சுடவும்,

இந்தப்படிகொம்பை



சுற்றிச் சுடவும்.

வேறு.

வாய்கிட்டுக் கண்சிவக்கும்

நிவர்த்தி,

| | | |
|---|---|---|
| இந்துப்பு | விராகநிடை | உ |
| பெருங்காயம் | ,, | உ |


இவைகளையெனமாய்ப்பொடித்துகாற்படிகாடியிற் கலக்கிப் புகட்டக்தீரும்,

இந்தப்படி இருகன்



னத்திலுஞ்சுடவும்.

இந்தப்படிதலையைக்



சுட்டிச்சுடவும்




## ※ மந்தடைப்பன் நோய்

* செய்குணம்—வாய்திறந்துக் குனோரணியுந்தன்னைத் தானறியாமலுந் திவனந் தின்னுமலு மிருக்கும்.

* மருந்து—வெதுப்படையும், ஒட்டடையும், வசைக் குப்பிடி ஒன்று, இடித்து ஒருபடி மோரிற்கலந்து கொடுக்கவேண்டும்.

புத்துமண்ணைக் கரைத்துக் காய்ச்சி மூன்றுநாள் தேகமுழுதும் பூசவும.

இந்தப்படி நெத்தியிற்




சுடவும்

## ※ நீரடைப்பன் நோய்

* செய்குணம்—நீர்சொருத்துமுக்கும் சப்பிட்டு அலறும் குள்ளிக்கொண்டுநிற்கும்.

* மருந்து—உளமச்சியையிடித்து வடிகட்டிக்கொண்டு காற்படி வாழைக்கிழங்குக் தண்ணீர் அரைபடி அல்லது தேங்காபா லரைப்படியிற் கலக்கிடன் ஜக்குக்கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கி
இருகடைவியத்திலுஞ்
சூடுபோடவும்



* வேறு.

ஏழூகடுக்காயுங், கருஞ்சீரகமும், வசம்பும், கடுகும், நாமதாளியும், மஞ்சணத்தியிலையும், இந்த ஆறுதினுசுகளையும் அரைத்து இத்துடன் பழம்புளியும் கூட்டிக் காடியிற்கலக்கிக் கொடுக்கவும்.

இந்தப்படிக்கி
சூடுபோடவும் 

—*—

## * கல்லடைப்பன் நோய்

* செய்குணம்—நீனிதின்னும் சாணியுங்குணமாகப் போடும் ஆனால் அசதியாகவிற்கும் கொஞ்ச நாளிற் கல்லுவந்து செறுக்குப் பின்புகோலிற் கட்டும்

| | | |
|---|---|---|
| * மருந்து—வெள்ளைப்பூடு | பலம் | ௧ |
| கடுகு | ,, | வ |
| வெந்தையம் | ,, | ௧ |
| மாதளம்பிஞ்சு | ,, | ௩ |
| நவ்வற்கொழுந்து | ,, | ௩ |
| சித்திரைப்பாலை | ,, | ௭ |

இவைகளையரைத்து காலுபடி வாழைக் கிழங்குச் சாற்றிற் கலக்கி கொடுக்கவேண்டும்,

இந்தபடிக்கோலிற்குறுக்கே
மூன்றுசூடுபோடவும் 

வேறு,

இரத்தமாய்நீர்விடும் காற்குலேப்புறம்வீங்கும்

85 43



நிவர்த்தி


| | | |
|---|---|---|
| நருள்ளி | பலம் | ௰ |
| மிளகாய்சந்தனம் | ,, | ௧ |
| அதிமதுரம் | ,, | ௧ |
| நற்சீரகம் | ,, | ௧ |
| இலவங்கப்பட்டை | ,, | ௧ |
| விருசங்கொழுந்து | பிடி | ௩ |
| தித்தியிலை | ,, | ௩ |

இவைகளையரைத்து ஆவின் வெண்ணெய்யிலாவது மோரிலாவது கலக்கிப் புகட்டத்தீரும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு

| | | |
|---|---|---|
| அத்திப்பிஞ்சு | படி | ௧ |
| பரித்துப்பிஞ்சு | ,, | ௧ |

இவ்விரண்டையும்மயனமாயரைத்து பசுவின்மோரிற் கலக்கிப்புகட்டத்தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

இந்தப்படிக்கிடது
விலாவிற்சுடவும் 

## சளைமுக்கடைப்பன் குணம்

கிருபூரென்றிளைக்குங் கண்ணில் நீர்வடியும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| கோவையிலை | பிடி | ௪ |
| வெள்ளுள்ளி | பலம் | ௩ |
| சுக்கு | ,, | ௨ |

இவைகளையரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டவும்
இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படி மூக்கிற் சுடவும் } —

※ மூக்கடைப்பன் நோய்

※ செய்குணம்—நீறு நீறுஎன்றும் செருமும், கண்ணில் நீர்வடியும்.

* மருந்து—சுக்கு பலம்-௧, வெள்ளைப்பூடு பலம்-௧, கொடுப்பையிலை பிடி-௨, மிளகு பலம்-௧ இவைகளையிடித்து இரண்டுபடி காடியிற் கலக்கி உள்ளுக்குக்கொடுக்கவேண்டும்.

※ நசியம்—சுக்கு வசம்பு மிளகு தைவேளையிலை இவைகளை சரிபாகமாய் சேர்த்திடித்துப் பிழிந்து வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும்.

மூக்கரைச்சாறணைவேர் மிளகு வசம்பு இவைகளையரைத்து மேற்படி சாறணையிலைச் சாற்றிற்கலக்கித் தலைபோடவும்.

இப்படிக்கி மூக்கிற்சுடவும். ≡

௨ இதவமது

※ செய்குணம்—மூக்கையடைத்துக் குறுகுறுவென்றும் திக்குத்திக்கென்று செருமும்.


* மருந்து—கண்டங்கத்திரிப்பழம் பலம்-௨, மிளகு பலம்-ஐ, வசம்பு பலம்-வ, குப்பைமேனி தை



வேளை நொச்சிக்கொழுந்து வகைக்கு பிடி-௧, உப்பு படி-ஐ. இவைகளையிடித்து மோரிற்கலக்கிக்கொடுக்க வேண்டும்.

※ நசியம்—நொச்சியிலையும் ஈருள்ளியு மிடித்துச்சார்பிழிந்து நீரிற்கலக்கி வடிகட்டி நாசியில் நசியம்பண்ணவும் அல்லது கண்டங்காய் ஊறிய தண்ணீரிலும் மேற்படி நசியம் பண்ணலாம்.

இந்தப்படிக்கிரு விலாவிலுஞ் சுடலாம்.



இந்தப்படி மூக்கிற்சுடவும். —|—


௩ இதவமது

* செய்குணம்—அதிமேய்ச்சல் மேயும் சாணிருணமாகப்போடும் இன்றுதிகைத்து நாசியிற் செருமும் நாட்சென்றால் மூக்கிலிருந்தொழுகும் சோறுபோலேறும்,

* மருந்து—சுக்கு பலம்-௧, வெள்ளைப்பூடு பலம்-௧, வசம்பு பலம்-வ, இத்துடன் நொச்சியிலை குப்பைமேனி தைவேளை சிறுதும்பை சங்கங்குப்பி எருக்கிலை இவைகள்வகைக்குபிடி ஒன்றுஞ் சேர்

த்து யிடித்து சிறுநீர்விட்டு குழப்பிஉள்ளுக்குக் கொடுக்கவும், குடிக்கவெந்நீர் விடவேண்டும்,

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சூடுபோடவும்



இந்தப்படி மூக்கு நேரிற்சுடவும், —|

இதுவுமது

* செய்குணம்—மூக்கிலிருந்து சளிமிகுதியா யுண்டாகும் சுல்ப்பகாச்சலுங் காணும், குளிர் காற்றாவது ஈரமாவது படவொட்டாமல் மாட்டை ஜாக்கிரதையாய் வைத்திருக்கவேண்டியது.

* மருந்து—பொட்டிலுப்பை இங்கிலீஷ் யிடைரூபா ஒன்றில் மூனறுநாள் காலே மாலே இரண்டுவேளையும் நீனியிற் கலந்து கொடுக்கவேண்டும்.

வேறு,

மூக்கடைத்து குறுகுறெனச் சீறும்,

நிவர்த்தி

நொச்சியிலை
நருள்ளி

இவைகளைச்சமமாய்ச் சிறுநீர்விட்டுத்தட்டி நாசியிற்பிழியத்திரும்-




வேறு

கண்டங்கத்தரிப்பழம்
கரியுப்பு
தைவேளையிலை
வசம்பு
குப்பைமேனியிலை

இவைகளைச்சமமாய்ச்சிறுநீர் விட்டுத்தட்டி நாசியிற்பிழியத்தீரும்.

இந்தப்படிக்கிருவிலா
விலுஞ் சூடுபோடவும்!



வேறு,

மூக்கடைத்துக் கிருபூரென்றிரைக்கும் கண்ணில் நீர்வடியும்,

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| பொன்னாங்கணிசமூலம் | பலம் | ௰ |
| சுக்கு | ,, | ௰ |
| மிளகு | ,, | உ |
| வெள்ளுள்ளி | ,, | உ |

இவைகளை யரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டத்தீரும்,

இந்தப்படி முதுகிற் சுடவும்

000
000
000


## தலைமூக்கடைப்பன் குணம்


மூக்கடைத்து நெடுமூச்சுவாங்குந் தடுமாறும்

நிவர்த்தி

மிளகு
திப்பிலி
சித்திமிலை

இவைகளைச்சமமாய்ச் சிறுநீர்விட்டிடித்து சீலைத்தட்டி நாசியிற்பிழியவும்.

இந்தப்படி மூக்கில் சுடவும் 

இந்தப்படி தலையைச் சுற்றிலுஞ்சுடவும் 


## ※ மூக்குத்தண்டடைப்பன் நோய்

* செய்குணம்—மூக்குத்தண்டு வீங்கித்தடுமாறுய்நெடுமூச்சு வாங்கும்

* மருந்து—சுக்கு பலம்-௧, மிளகு பலம்-௧, திப்பிலி பலம்-௧, இம்மூன்றையுமொன்று யரைத்து ஒருபடிகாடியிற் கலக்கிஉள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.



* நசியம்—மிளகு திப்பிலி இரண்டுமொரு அளவாகச் சேர்த்தரைத்து சித்திரிலைச்சாற்றிற் கலக்கி வடிகட்டி நாசியில் நசியம்பண்ணத்தீரும்.

இந்தப்படி தலையிற்சுடவும், 

இந்தப்படி மூக்குமேற் சுடவும் 

## சகல அடைப்பனுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | வ |
| புளியமடற்கிழங்கு | ,, | வ |
| சிறுகுறட்டைக்கிழங்கு | ,, | வ |
| தில்லைவேர்ப்பட்டை | ,, | வ |
| கொடிவேலிவேர்ப்பட்டை | ,, | வ |
| திருகுகள்ளிவேர்ப்பட்டை | ,, | வ |
| எருக்கம்வேர்ப்பட்டை | ,, | வ |
| பெருங்காயம் | ,, | வ |


இவைகளை இடைப்படி கல்வத்திலிட்டு எருக்கம்பழுப்புச்சாற்றிலும் கோழியவரையிலைச் சாற்றிலுந் தனித்தனியே மெழுகுபோலாட்டி பாக்களவா யுருட்டினைத்துக்கொண்டு வேளை யொன்றுக் கொருவுண்டைவீதம் ஷமத்திலேயிற் சுருட்டிக்கொடுக்கவும். வியாதிஅதிகரித்திருந்தால் மேற்படி உண்டைக்கொடுத்தவுடன் ஒருபலம் இலுப்பைப் பிண்ணாக்கை யரைத்துக் கொடுத்துவரவும் வியாதிதீரினல் கோழிக் காரமும் பெருங்காயமும் வகைக்கொருபலம் வீதமிடித்துக் கொடுத்துவர சகல அடைப்பனுந் தீரும்.

## * ஈரல்முட்டி நோய்

* செய்குணம்—தீவனந்தின்னாது திகைத்துக்கொண்டு நிற்கும் வயறூதும்,

* மருந்து—மாட்டைமல்லாத்திக்கொண்டு கெஞ்சாங்கொழுந்தில் அரைக்காற்படி நெய்யைக்காச்சி சாணியைவழித்துக் கொண்டுவிடவும் பின்புமிளகு படி அரிக்கால் ஓமம்படி அரிக்கால் அதிமதுரப்பட்டை பலம்-௨, சுக்கு பலம்-க, திப்பிலி பலம்-௨, கிராம்பு பலம்-ய, இலவங்கப்பட்டை பலம்-௨, கருஞ்சீரக பலம்-௨, சீரகம் பலம் ௨ பாகலிலை பிடி-ச, இவைகளைச் சேர்த்தரைத்து காற்படி வேப்பெண்ணை விட்டுப்பிசைந்து கொடுக்கவேண்டும் அல்லது காடியிலும் பிசைந்து கொடுக்கலாம்,

இந்தப்படி இரு விலாவிலும் சூடுபோடவும்



## உ இதவுமது,


* செய்குணம்—தீவனந்தின்னாது புல்லரிக்கும் வாயில்நீர்வடியும் செருமும் அசைபோடாது கண் சிவந்திருக்கும் மேலேகுளிர்ந்திருக்கும்.



| | | |
|---|---|---|
| * மருந்து—மஞ்சள் | பலம் | ௨ |
| சுக்கு | ,, | உ |
| காயம் | ,, | வ |
| திப்பிலி | ,, | ௨ |
| குரோசாணிஓமம் | ,, | க |
| கடுகு | ,, | க |
| மிளகாய்ப்பழம் | ,, | க |
| வெள்ளைபூடு | ,, | உ |
| எருக்கலம்பூ | பிடி | க |

இவைகளைபிடித்துச் சாராயம் விட்டுப்பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும், குடிக்கவெந்நீர்வைக்கவு.

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சூடுபோடவும்.




## ங இதவுமது

* செய்குணம்—தீவனந்தின்னாது புல்லரிக்கும் கண்ணில் பீளைசாடும் வயிறுவப்பும் பிழுக்கைப் போல்சாணிபொடும் இரத்தம் போல்நீர்விடும் பல்லைக்கடிக்கும்.

* மருந்து—மஞ்சட்குருந்தட்டிசமூலம், மருக்காரைத்தொலி இவ்விரண்டும் மாங்காயளவுசேகரித்துக் கொண்டு தனித்தனி யரைத்து இரண்டுபடி கா

டியிற்கலக்கிக் உள்ளுக்குக்கொடுத்தபிறகு, பிரண்டையைபிடித்துத் துவாலைபோடவும்.

முன்னங்காற்பட்டையிலிருந்து
பின்னங்காற்சதைவரையிற்
யிழுத்து சூடுபோடவும்



௪ இதுவுமது,

* செய்குணம்—கண்சிவந்திருக்கும் செவிதாழ்ந்திருக்கும்வாயில்நீர்வடியும் வயிறுவுப்பியிருக்கும் தீனிதின்னாது.

* மருந்து—மிளகு படி-வ, பறங்கிப்பட்டை பலம்-க வசம்பு பலம்-வ, வெள்ளைப்பூடு பலம்-உ, இவைகளையிடித்து இத்துடன் மருக்காரை தொலி அரைத்து மாங்காயளவு சேர்த்துஒருபடிகாடி பைசாற்றிற் இவையெல்லாம் கலக்கிக்கொடுக்கவும், குடிக்கவெந்நீர் காட்டவும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலும்
சூடுபோடவும்.




* செய்குணம்—புல்லைக்கள்தின்றதாலயிறாகும்:

* மருந்து—பறங்கிப்பட்டை பலம்-அரை, வசம்புபலம்-அரை, வெள்வெங்காயம் பலம்-க, இவையெல்லாம் ஒன்றாயரைத்துச் சிறுதும்பைச்சாற்றிற்



சேர்த்துக்கொடுக்கவும் கண்சிவந்தாலும் செவிதாழ்ந்தாலும் மூன்றுபொழுது கொடுக்கவும்.

இப்படிக்கி
விலாவிற்
சூடுபோடவும்,



வேறு.


பல்லைநெருக்கெனக் கடிக்கும் தீவனம் தின்னாது நிலைத்துநிற்கும வயிறாகும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| பிரண்டைத்தண்டு | பிடி | க |
| மதக்காரவேர்ப்பட்டை | ,, | க |

இவைகளை மயனமாயரைத்துக் காடியிற் கலக்கிப் புகட்டத்தீரும்

இந்தப்படி கழுத்திலிருந்து
வால்வரையில் இருபுறமும்
யிழுத்து சுடவும்



வேறு,

| | | |
|---|---|---|
| இலுப்பைப்பிண்ணாக்கு | பலம் | க |
| எருமைவெண்ணெய் | ,, | க |

இவைகளையரைத்துக் கழுநீரிற்கலக்கிப்புகட்டவும்

வேறு,

வயிறூதிக் குராவிற்கும்.

| | | |
|---|---|---|
| தேற்றாம்பழம் | பலம் | ௰ |
| கொல்லங்கோவைக்கிழங்கு | ,, | ௰ |

அல்லது

| | | |
|---|---|---|
| செய்க்கொட்டான்பழம் | பலம் | ௰ |
| ஷை கிழங்கு | ,, | ௰ |


ஷை மருந்துகளி லொருபாகத்தைக் காடியிலரைத்துக்கலக்கிப் புக்ட்டத்தீரும்.

## ❋ தபுயீரல்முட்டிநோய்

* செய்குணம்—நெஞ்சை இடிக்கிக்கொண்டு நெஞ்சாலே தள்ளிநடக்கும் தலையைக்குனிக்கும்குனி ஓங்காரிக்கும்,

* மருந்து—இலுப்பைப் பிண்ணாக்கு எலிமிச்சங்காயளவு பசுவின்வெண்ணை மாங்காயளவு சேர்த்துக்கொடுக்கவும், அவரியிலையுஞ் சிற்றவரியிலையும் சுக்குமரைத்து நெஞ்சாங் கொழுந்திற்பூசவும்,

முன்னங்காலுக்கு முன்னேசூடுபோடவும்



## கிராமுட்டியின் குணம்.

இளைத்திளைக்கும் வயிறூதும்
பேதி

மேற்படிமாட்டை கீழேவிழத்தள்ளி மல்லாத்திக்கொண்டு நெஞ்சுக்கொழுந்தில் ஆழாக்கு ஆவினெய்



யைக்காய்ச்சிவிட்டு அப்பால் இதனடியிற்கண்டிருக்கிற மருந்தைக் கொடுக்கத்தீரும்.

| | | |
|---|---|---|
| பாகலிலை | பிடி | ௪ |
| மிளகு | படி | ௩ |


இதையரைத்துக் காடியிற்கலக்கி புகட்டத்தீரும்.

வேறு,

| | | |
|---|---|---|
| ஓமம் | பலம் | ௫ |
| அதிமதுரம் | ,, | ௫ |
| இலவங்கப்பட்டை | ,, | ௨ |

இவைகளை யரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கிடது விலாவிற்சுடவும்



வயிறு ஊதினால்

| | | |
|---|---|---|
| சுத்தாழைவேர் | பலம் | ௫ |
| மூக்கரைச்சாரணைவேர் | ,, | ௫ |
| மிளகாயிலை | ,, | ௫ |

இவைகளை யரைத்து வெந்நீரில்கலக்கிப் புகட்டத்தீரும்.


## ❋ திரட்டியீரல்முட்டி நோய்

* செய்குணம்—முன்னங்கா லிரண்டையும் பாரிப்பாரித்துநிற்கும், காலையுந் தடுமாறவைக்கும் திரும்பியுரைவாய்க்கொண்டு சவைக்கும் தலையைத்தாழ்த்தி நிற்கும்,

* மருந்து—வெள்ளை பூடு பலம்-க, மிளகு பலம்-இ, குப்பைமேனி பிடி-க, கையாந்தகரை பிடி-க, இவைகளை ஒன்றாயரைத்து ஒருபடி காடியிற்கல க்கிக்கொடுக்கவும்.

இந்தப்படி
இருவிலா
விலிஞ்

சூடுபோடவும்



இந்தப்படி
முன்னகால்முன்
னே சுடவும்



## * கீழத்தி நோய்

* செய்குணம்—திளி அரைவாய்க்கொண்டு நின்றும் சாஞ்சிகடக்கும் நாட்சென்றாற் கண்தெரியா து அந்தக்கண்வாக்கிலே சுழத்தும்.

* மருந்து—அபின் பலம்-மாகாணி, கஞ்சாயிலை பல ம்-மாகாணி, மருள்ஊமத்து பலம்-மாகாணி, சடலாவரைவித்து பலம்-மாகாணி, சுழல்வண் டு-கூப. இவைகளெல்லாமொன்றாயரைத்து பன ங்கள்ளுப் படி-க, சாராயம் படி-உ, சேர்த்துக் கொடுக்கவும், சாயந்திரங்குடிக்க வெந்நீர்விடவு ம் சுழற்றுகிற புறத்தில் நீலைரம்பார்த்து யிர த்தங்குத்தியெடுக்கவும் பின்பு யிரண்டுகாதுகளி



லும் மடலிலுஞ் சூட்டுக்கோலாற் றலைத்துக் முகத்தைக்கட்டி நாலுகாலிலுஞ் சூடுபோடவும்.




உ-இதுவுமது,

* செய்குணம்—கொப்பூழைப்பற்றி வீங்கும் சுழன் று வலிக்கும்.

* மருந்து—கடுக்காய்-எ, திப்பிலி பலம்-வ, ஓமம் பலம்-இ, கெல்லிப்பருப்பு பலம்-க, இதுகளையி டித்து இரண்டுபடி பசுவின்பாலிலாவது ஒரு படி நெய்யிலாவது கொடுக்கலாம், குடிக்கவெந் நீர்விடுவது மல்லாமல், ஆலஞ்சருகைச்சுட்டு அ ரைத்து வீக்கத்திற்பூசவும், கலைமான் கொம்பை யும் உரைத்துப்பூசலாம்.

இந்தப்படி
முதுகிற்
சூடுபோட
வும்



ங - இதுவுமது

* செய்குணம்—சக்கடித்தாப்போலே சுற்றிச்சுற்றி வரும் செவிதாழமண்போலேசாணிபோடும்,


* மருந்து—சுழல்வண்டு பலம்-வ, வெளிச்சிப்பிசின் ப லம்-வ. நாய்கடுகு பலம்-க, நற்சீரகம் பலம்-க,

சுக்கு பலம்-வ. இவைகளை யரைத்து நொச்சி யிலைச்சாறு குளிதாமரையிலைச்சாறு மாவிலங்கு இலைச்சாறு தலைச்சுருளியிலைச்சாறு வள்ளிக் கொடிச்சாறு இவைகள் வகைக்குப் படி-வ, எல் லாமொன்றுச்சேர்த்து ஒருபடி காடியிற்கலக் கிக்கொடுக்கவேண்டும்,

* அல்லது—வேம்பம்பிசின் பலம்-வ, சுக்கு பலம்-உ நாய்கடுகு பலம்-வ, இமமூன்று தனித்தனி அ ரைத்துக்கொண்டு இத்துடன் யிலைக்கள்ளிச்சா று படி-வ, மாவிலங்கப்பட்டைச்சாறு படி-உ, ஒருபடி காடியிற் வொன்றாய்ச்சேர்த்துககலக்கிக் கொடுக்கலாம்,

* நசியம்—சுழன்று வருகிறபோது தோளங்கொடி யைவாட்டி இரண்டுகாதிலும் பிழிந்தபின்பு நா ஙபிடி ஒட்டுப்புல்லைக் கொண்டுவந்திடித்துக்கவ ளமாகக்கொடுக்கலாம் ஈரலைப்பற்றி வலதுவிலா விலுஞ் நாலுகால்களிலும் அடியிற்கண்டபடிசூ டுபோடவும் இதிற் றிராவிட்டால் வாயைத்திறந் துப்பார்த்தால் இரண்டுநரம்பு நீலநிறமாகயிரு க்கும் அதைச்சூரைமுள்ளினால் குத்தி இரத்தத் தைவாங்கிப்போட்டு உப்பு மிளகுஞ்சேர்த்துத் தேய்த்துவிடவும் இடஞ்சுத்தி வந்தால் வலது கொம்பில் இரண்டுவிரலுக்குமேல் சூட்டுக்கோ லாற்சுட்டு நல்லெண்ணெயைக் காச்சிவிடவும்.

வலதுவிலாவிற் சுடவும்





நாலுகால்களி லும்சுடவும்.



சு - இதுவுமது

* செய்குணம்—சுழலச்சுழலவரும் கண்சிவக்கும்வா யில் வென்னுரைதள்ளும்.

* மருந்து—வெள்ளாட்டுப்பிழுக்கை பலம்-வ, காயுரி வி பலம்-உ, அரைத்துப் பசுவின்மூத்திரம் படி க, பச்சைநெல்லுத்தவிடு படி-உ, வெள்ளாட்டு மூத்திரம் படி-க, சேர்த்துக்கொடுக்கவும்சிற்றித் தண்டையிடித்துக் கலக்கிக்கொடுத்து சூடு யும்போடலாம்,

வலதுவிலாவிற் சுடவும்

இடதுவிலாவிற் சுடவும்

ஸ்ரீ ||१९२३

ரு - இதுவுமது

* செய்குணம்—சுழன்றுகிடக்கும் கிடக்கும்போட்டநீ கண்ணிற்பீளைசாடும்.

* மருந்து—கொன்றையிலை பிடி-உ, வசம்பு பலம்-வ இரண்டுமரைத்து பச்சைமஞ்சள்சாறு படி-வ, ஒருபடி கஞ்சியிற் கலக்கிக் கொடுக்கவும்.

இப்படி இடதுவிலாவிற்சுடவும்



சா - இதுவுமது,

* செய்குணம்—சுழன்று சுழன்று கொண்டுவரும் வாயில்நீர்வடியும் காலைத்தப்புரவாகப் போ

டும் ஆஷலநினிறங் கொஞ்சம் வெள்ளையாக இருக்கும்,

* மருந்து—பேய்ப்பீர்க்கங்காய் காய்ந்தகூடு, கொல்லன்கோவைக்கிழங்கு, சிந்திக்கிழங்கு இம்மூன்றும்வகைக்கு பலம்-ரு, சேர்த்தரைத்து ஒருபடி வெந்நீரிற்கலக்கிக் கொடுக்கலாம், குடிக்க வெந்நீர்வைக்கவும்.

எ - இதுவுமது,

* செய்குணம்—சுழன்றுசுழன்று நிற்கும் மூக்குத்தண்டின்மேரிற் பருமனுசவிக்கும்,

கொம்பைச்சுத்தி சூடுபோடவும் |—}—

வேறு,

சக்கரம்போல் சுத்திக்கொண்டுவரும் விக்கலெடுக்கும் வாயில்வெண்ணுரைத் தள்ளும் கண்சிவக்கும் பீனாசடும் நடக்கமாட்டாது,

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| வெள்ளாட்டுநீர் | படி | க |
| பசுவின்நீர் | ,, | க |
| பச்சைநெல்தவிடு | ,, | உ |

இவைகளை யொன்றாய்க்கலக்கி புகட்டவும் இந்தப்படிமூன்றுநாள் கொடுக்கத்தீரும்,

இந்தப்படிக்கிடது விலாவிற்சுடவும் {O}



## ※ தவளை நோய்

* செய்குணம்—குளம்புநீளும் மொளிக்கு மொளிகட்டும் தவழும்பிள்ளையைப்போற்றவழும்.

* மருந்து—கழுதைமண்டை ஓட்டையிடித்துப் பொடிசெய்ததூள் பலம்-க, சுடலாவரையிலைச்சாறு படி-வ இரண்டுசெவ்வால் அரணையை கால்படி வேப்பெண்ணையை காச்சினபிறகு மேற்படி அரணையை எடுத்துப்போட்டு அந்தஎண்ணெயுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும்,

* அல்லது—சுடலாவரையிலை குப்பைமேனிவகைக் குமாங்காயளவு அரைத்து ஒருபடி காடியிற் கொடுக்கலாம் குடிக்கவெந்நீர்விடவும்,

இந்தப்படிவலதுவிலாவிலுஞ் 0000
நாலுகாலிலுஞ்சுடவும் 0000

* அல்லது—மாவிலங்கிலை பலம்-ய. தைவேளை பலம்-ய. குப்பைமேனி பலம்-ய, தும்பை பலம்-ய, மிளகு பலம்-க, வெள்ளைப்பூடு பலம்-க. இவைகளையரைத்துக் கவளமாகச்செய்துக்கொடுக்கவும்.

உ - இதுவுமது,

* செய்குணம்—எழுந்திருக்கமாட்டாது வயிறூதும் மயிர்சிலர்க்கும் தாழ்ந்துநிற்கும்நடக்கமாட்டாது.


* மருந்து—மிளகுசாறணைவேர் பலம்-ரு, அரைத்து ஒருபுட்டிசாராயத்திற் கொடுக்கவேண்டும் மறுநாள் மஞ்சள் பலம்-க, சுக்கு பலம்-க, வசம்பு

பலம்-௰, ஈருள்ளி பலம்-௧, மிளகு பலம்-௨, பூவரசயிலை வேலிப்பருத்தியிலைபிரண்டை இம்மூன்றுய்வகைக்குப் பிடி-௧. சேர்த்து எல்லாமொன்றுயரைத்து எலிமிச்சங்காயளவு உருண்டைசெய்துகொடுக்கவும்,

* அல்லது—சிறுகுருஞ்சாயிலைச்சாறுபடி-௨, உள்ளுக்குக் கொடுக்கவும் மேற்படிசாற்றைமேலே துவாலையும் போடலாம், குடிக்கவெந்நீர் விடவும்,

* நசியம்—ஈருள்ளி வசம்பு மிளகு சிறுதும்பை குப்பைமேனி தைவேளை இவைகளை வகைக்குக் கொஞ்சமிடித்துப்பிழிந்து வடிகட்டிக் கண்களிலுங் காதுகளிலுங் மூக்கிலும் நசியம்பண்ணத் தீரும் .

இடதுவிலாவிற் சுடவும்.



வேறு,

பிள்ளைகள் தவழ்தல்போலத்தவழும் நாலுகாலும் தள்ளும்பாறு எழுந்திருக்கமாட்டாது,

நிவாத்தி

| | | |
|---|---|---|
| சமூலாவரையிலை | பலம் | ௰ |
| குப்பைமேனியிலை | ,, | ௰ |


இவைகளைத்துவைத்துக் காடியில் கலக்கியாவது அல்லது அவைகளை யரைத்துக் கவளமாயாவது அல்

10529



லதுஷெடி இலைகளையிடித்து பிழிந்து தனிச்சாறுயத்திலாவதுங் கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிவலது விலாவிற் சுடவும்



வேறு,

| | | |
|---|---|---|
| தைவேளை | பலம் | ௰ |
| குப்பைமேனி | ,, | ௰ |
| தும்பை | ,, | ௰ |
| மிளகு | ,, | ௧ |
| வெள்ளைப்பூடு | ,, | ௧ |

ஷெ மருந்துகளை யரைத்துக்கவளமிடவும் இந்தப்படி மூன்றுநாட்கொடுக்கமேற்படிதவளநோய் தீரும்

வேறு,

குருஞ்சாயிலை

மேற்படி இலையைக் கொண்டுவந்து காடிவிட்டிடித்து வேளையொன்றுக்கு ஒருபடிசாறுவீதம்மூன்றுநாள்கொடுக்க மேற்படி தவளைநோய்தீரும்.


வேறு,

| | | |
|---|---|---|
| நொச்சியிலை | பலம் | ௮ |
| வாதமடக்கியிலை | ,, | ௮ |
| மாவிலிங்கிலை | ,, | ௮ |
| வன்னியிலை | ,, | ௮ |
| வெள்ளைப்பூடு | ,, | ௧ |
| மிளகு | ,, | ௧ |

வெளிச்சிப்பிசின் ,, ௨
கருஞ்சீரகம் ,, ௨

இவைகளையெல்லா மரைத்துக்கவளமிடவும் இந்தப்படி மூன்றுநாள்கொடுக்க மேற்படி தவளநோய் தீரும்.

இந்தப்படிகொம்பும்அரத்துச்செவியுமரத்துகண்ணுடிநரம்புப்பார்த்துநாலுகாலிலுமிரங்கசுடவும்



## ※ தேளொமுடத்தின் நோய்

※ செய்குணம்—ஒருகாலைநொண்டும் அந்தகால் சிறுகுளம்பு அடியில்சுடும் கொழுந்துவற்றிக் காலும் முகங்களைப்பாகவிருக்கும்,


※ மருந்து—வேலிப்பருத்தியிலை இலந்தையிலை - ௫க-பிடிக்கி லைந்திற் போட்டுஅதில் ஒன்பது இலையெடுத்து யெருக்கலம்பழுப்பில் ஒன்றுசேர்த்து மூன்றுங்கசக்கி மாட்டின் கால்கொழுந்திலிருந்து குளம்புவரைவாய்பேசாமற்றடவிப பின்னங்கால்தடத்திற் கால்மாறி பூமியிற்புதைக்கவும் விடத்தொலியை ஆதிவாரத்திற்பறித்து கால்மாறிப்புதைக்கலாம்.

※ அல்லது—கல்லெண்ணெயும் எருக்கலம்பாலுங்கலந்து சூரியவொதையத்துக்குமுன்னே அந்தமுடமானகாலில் முழங்காலுக்குமேலே குத்தவேண்டும் பிறகு சுக்கு பலம்-௧, மிளகு பலம்-௨,



திப்பிலி பலம்-௨, வசம்பு பலம்-௨, தைவேளைவேர் பலம்-௨, குப்பைமேனிவேர் பலம்-௨, இதுகளையரைத்து இரண்டுபொம்பரளையைப் பிடித்துக் குடலையெடுத்துப்போட்டு அரைப்படிவேப்பெண்ணெயைக்காச்சி அதில்அரளையை யெடுத்துவிட்டு இரண்டையும் வேகவைத்து அரளையுடன் யெண்ணெயையும் சேர்த்து உள்ளுக்குக் கொடுத்துக் குடிக்கவெந்நீர் விடவேண்டும்.

இந்தப்படிநாலுதடைளிலும் சுடவும்



## ※ கறளை நோய்,

※ செய்குணம்—வெயிலில்நில்லாது நீரிர்போய்படுக்கும் வலதுபுரஞ்சாய்த்துமேய்ச்சல்மேயும் இடதுசெவிதாழ்ந்து நிற்கும்.

※ மருந்து—அத்திப்பிஞ்சு பருத்திப்பிஞ்சுவகைக்குப் பிடி-௧, துறமீன்கழுவினதண்ணீர் படி-௧, சாளைமீன் மாங்காயளவுமரைத்துமூன்று-படி, பனங்கள்ளிற் கொடுக்கவேண்டும்.

※ அல்லது—ஓரிலைத்தாமரை, ஆனைவணங்கி, வகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி பசுவின் பாலிற் கொடுக்கவும்.

௨ - இவையமது

※ செய்குணம்—வெயிலில்நில்லாது நிழற்பார்த்துநிற்கும் அசைவாய்க்கொண்டுதீனி தின்னும்மெலி

விக்கிப்போகும் நெடுமயிர்வளரும் வெயிலிற்
போனல்யிளைக்கும் இது அசாத்தியவியாதி.


* மருந்து—ஆவரம்பட்டை பலம்-௧, பேய்க்குமட்டிக்காய் பலம்-௨, அரைத்து ஒருபடிகாடியிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

* அல்லது—மிளகு பலம்-௧, காயம் பலம்-௪, கண்டங்கத்திரி சிறுதும்பை இவ்விரண்டும் வகைக்குப் பிடி-௧, இவைகளை ஒன்றுசேர்த்தரைத்து வெந்நீரிற்கலக்கிக் கொடுக்கவேண்டும்.

* அல்லது—ஒருகுள்ளநரியின் ஈரலும் மேற்படி இரத்தமும் ஆற்று அசரைமீன் படி-௧, அல்லது படி-௨, பாலிற்சேர்த்துக் கொடுக்கலாம்.

* அல்லது—காக்கையைப் பிடித்துத் தீயிற்கருகவாட்டி ரோமம்போக்கி யிறகு கால் இவைகளையும் நீக்கி நன்றாயிடித்து நாய்க்கோட்டாம் வேர் பலம்-௫, சேர்த்தரைத்து இரண்டுபடி காடியிற் கலக்கிக்கொடுக்கவும் பிரகு குறையிலையை அரைத்துக் கலக்கித் துவாலைபோடவேண்டும் குடிக்கவெந்நீர்விடவும்.

இந்தப்படி இருவிலாவிலுஞ்
சூடுபோடவும்



109




## ❋ அங்கிநோய்

* செய்குணம்—கண்விழியிரண்டும்மயிலிரத்தம்போலிருக்கும்.

* மருந்து—அளசியிலைச்சாறு படி-௭. மோர் படி-௧, மாங்காயளவு புளியில்கரைத்துக் கொடுக்கவும்.

இந்தப்படி
தலையிற்சூடு
போடவும்



வேறு

கண்சிவக்கும் வாயில்நீர்வடியும் செவிதாழும்குரவளையைப்பற்றி வீங்கும்,

வேறு


கண்சிவப்பா யிருக்கும் வாயில் நீர்வடியும் செவிதாழும்.

இவைகட்கு நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| ஊமத்திலை | பிடி | ௧ |
| மருதாணிவேர்ப்பட்டை | ,, | ௧ |
| மிளகு | படி | ௰ |
| எருக்கிலைப்பழுப்பு | | ௭ |

இவைகளை மயனமாயரைத்துக் காடியிற் கலக்கிப் புகட்டவும் இந்தப்படிமூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்கிடது
விலாவிற்சுடவும்



## ❊ உலர்த்தி நோய்

* செய்குணம்—பார்க்கப் பார்க்கப் பாவைபோல் உலர்ந்துபோகும் தேறமாட்டாது.

* மருந்து—வேப்பம்பட்டையை ரூபா யிடையிருத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு வற்றச்செய்து அரைபடி யொருமிச்சமிருக்கச் செய்து அதில் அஞ்சு ரூபா யிடை உப்புச்சேர்த்துக் கொடுக்கவும்.

* அல்லது—அகத்தியிலைச்சாறு படி-உ, கொடுக்கவும்.

* அல்லது—வசப்பு பலம்-உ, இதை அரைத்தாயித்துடன் மணத்தக்காளி யிலைச்சாறு படி உ, மிதிபாகலிலைச் சாறு படி-இ, சேர்த்துக்கலக்கி கொடுக்கவும்.

* அல்லது—கஞ்சாங்கோரையிலைச் சாறுபடி அரை கொடுக்கவும்.

* அல்லது—பேய்க்குமட்டிக்காய்ச்சாறு படி-வ, விளக்கெண்ணை படி-வ, சேர்த்துக் கொடுக்கவும்,

இந்தப்படிக்
கிருவிலாவிலுஞ்சுடவும்



## ❊ ஈரவுலர்த்தி நோய்

* செய்குணம்—தினம் அடைச்சித்தின்றது தின்றதுஞ் செரியாது சாணி அதவல் குதவலாகப் போடும் காத்துக்கழியும்

* மருந்து—அதிமதுரம் பலம்-உ, ஏலம் பலம்-க, மிளகுச் செடியிலை அல்லது மிளகு வெள்ளறுகு



தைவேளை வகைக்கு அரைத்தது மாங்காயளவு வெண்ணெ மாங்காயளவு இவைகளை ஒரு படிபசுவின்பாலிற் கலக்கிக் கொடுக்க வேண்டும்.

இந்தப்படி இடது
விலாவிற்
சுடவும்




* அல்லது—வெத்திலை பலம்-ஙி, மிளகு பலம் உ, அரைத்து வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கலாம்,

## ❊ எருஉலர்த்தி நோய்

* செய்குணம்—வயிறாதும் தினிதின்றது செரிதாழும் மயிர்சிலிர்க்கும் எருஉலர்த்திருக்கும்,

* மருந்து—களிப்பாக்கு பலம்-க, சீனி பலம்-க, கடுக்காய்த்தோடு-கூடி, சற்றான்சோறு அரைபடி பழப்புளிமாங்காயளவு ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்
கிடக்விலாவிற்
சூடுபோடவும்



## ❊ வறட்சி நோய்.

* செய்குணம்—காலோய்ந்து எப்பிளைப்பாக மூச்சுச்செல்லும் சாணியுடன் சீதமும்விழும் கசவற்றலாகவற்றும் செருமும்.

* மருந்து—ஏலம் பலம்-வ. கிராம்பு பலம்-ஙி. அதிமதுரம் பலம்-க. இலவங்கப்பட்டை பலம்-க. அ

ணரத்து நீர்ப்பூலாத்திவேர் அரைத்து மாங்காயளவு ஒருபடிபாலிற் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிமுதுகில் சுடவும் 

## ✻ பெரு நோய்.

✻ செய்குணம்—மாடுகளுக்குண்டான எல்லாவியாதிகளைப் பார்க்கிலும் யிதுமுக்கியமானதாகவிருக்கிறது இன்னகுறிப்பிட்ட காலத்துக்குத்தான் உண்டாகத்தகுந்ததென்றில்லை எந்தருதுக்களிலும் உண்டாகும் இந்த வியாதிகண்டவுடனே மாட்டின்செவிகள் குளிர்ந்து தாழ்ந் திருக்கும் ரோமஞ்சிலிர்த்திருக்கும் தேகங்களைத்துச் சோம்பலாயிருக்கும் தீனிதின்னமாட்டாது சரியானபடி நீர்விடாமலற்ப சொற்பமாய் நீர்விடுகிறது சிவப்புநிறமாகவிருக்கும் அதினுடையபிரத்தம் ஓட்டந் துரிதமாக விருப்பதிற் சிலது மாடுகள் பலவீனமாயுஞ் சிலதுபலமாயும் ஓடிக்கொண்டிருக்கும் மூக்கினுலுங் கண்களினாலுந் நீர்வடிந்துகொண்டிருக்கும் சிலமாடுகளுக்குக் கண்பட்டைகள் வீங்கி அக்கினிப்பொறிபோலிருக்கும் கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் அதிகமாய்ச் செலைவடிந்து கொண்டிருக்கும் கண்கள் முதலிற்றெளிவாகச் செலம் ஊறிக்கொண்டு யிருந்திப்பால் மஞ்சள்நிறமாயும்போகும் கொஞ்சகாலம் மேற்படி மாட்டின் ஸ்திதி புகதி சுதிரமில்லா



லாமற் காட்டு மாடுகளுக்கொப்பாக ஓடித்திரிந்து சமீபத்திற் போகிறவர்களை முட்டுகிறதற்கும் ஆயுதப்படும் இப்படி நடந்தபின் மேற்படி மாடு கீழேவிழுந்து கொஞ்சநேரங் கறட்டுக் கறட்டென்றிழுத்துக் கொஞ்சந் தெளிவு கண்டபோதிலும் பிரத்தபோகும் சிலமாடுகள் செருமிக்கொண்டு அதிகமாக யிளைத்துக் கொண்டுமிருக்கும் சிலமாடுகளுக்குச் சாணியுடன் இரத்தமுஞ் சலமும் விழும்.

✻ மருந்து—மாட்டுக்கு மேற்படி வியாதிகண்டவுடனே அந்தமாட்டை யிருக்கிற மற்ற மாட்டுகளைப் பிறத்தியேகமாய் வைத்துப் போடவேணும் வியாதிகண்டவுடனே யெவ்வளவு துரிதத்தில் மருந்து செய்யப்படுகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் சவுக்கியமாகும் மயிலிறகும் புளிக்கறியும் உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி முதுகிற்சுடவும் | | |

இந்தப்படிவிலாவிற் சூடுபோடவும் ( {

✻ அல்லது—மேற்படிசிக்கின் செய்கையென்னஸ்திதியாக விருந்தபோதிலு முதலிற் செய்யவேண்டியது மேற்படி மாட்டின்கழுத்து நரம்பில் ஒருகூர்மையுளகத்தியினாலே ஒரு அங்குலநீளத்திற் குத்திச் சி

சேர்-கு, அல்லது-உ, படி அளவுக்கு § இரத்த மெடுத்து விடவேண்டும் பிறகு யிரத்தங்குத்தியெடுத்ததின்பேரில் அ-அவுன்ஸ் விளக்கெண்ணெ அல்லது-ய ரூபா, யிடை கரியபவளர்கைக் காற் படி தண்ணீரிற் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டியதுந் தவிர சாணியை செலக்கிற் கொழும்பாய்க் கரைத்து வாய்பரந்த சட்டியில் வார்த்துக் காச்சி மேற்படி மாட்டின் தேகமுழுதும் போட்டு மேற்படி மாட்டை நிழலில் வைத்திருக்கவேண்டும் மேற்குறித்த படி ஒருதரம் இரத்தம் குத்தியெடுப்பதிற் சவுக்கியப்படாவிட்டால் அப்படிச் செய்ததற்கு மூன்றுமணிநேரத்துக்கு பின்பு மறுபடியும் ஒருபடி யிரத்த மெடுக்கவேணும் வேணும் மேற்குறித்த படியே போட்டுக் கொண்டிருக்கவும் மேற்படிமாடு சாணி போடாதிருந்தால் அரைப் படி விளக்கெண்ணெயை இளஞ்சூடுள்ள சலம்-சஉ படியில் கலந்து பவனவாய்வழியாகவிடவும்.

இந்தப்படி மேற்கழுத்திற்கொம்புகளின்
அடிமுதற்சிமிழ்வரைமேற்படி நீளமுழு
மையிலிரண்டுவரையாகவிழுத்து
இருபுறமுஞ்சூடுபோடவும்



§ பீரங்கி வண்டிகளுக்கு உபயோகப் படுத்தி வருகிற மாடுகளுக் கொப்பான உயரமுங் காத்திரமுமுள்ள பாரிய மாட்டுக்கு இதிற் சொல்லியிருக்கிற அளவுப்படி இரத்தங் குத்தியெடுக்கலாம் அதற்குக் கீழ்த்தரமான மாடுகளுக்கு அந்தந்தத்தரத்துக்குத் தக்கபடி யிரத்தங் குத்தி யெடுக்கவேண்டியஅளவைக் குறைத்துக்கொள்ளவேண்டியது ஆனாலிது நன்றாய்க்கை தேர்ந்தவர்கள் தான்செய்யலாம்.



115 58

மேற்கண்டமருந்தினால் வியாதி அநேகமாய்க் குணத்துக்குவந்ததின் பேரில்லதனடிற்கண்டபடி மசாலாக்கொடுக்கவேண்டும்.

* அல்லது—மஞ்சள் பலம்-க, சதகுப்பை பலம்-க, சருள்ளி பலம்-உ, அரைத்துத் தயிர் படி-உ,ல் கலக்கி நாலுபாகஞ்செய்து அன்றாட மிரண்டு தரங் கொடுக்கவேண்டியது பிறகுகாய்ந்த புளிக்கறியைத் அதை தண்ணீர் விட்டு அரைத்துக்கலக்கி யிரண்டல்லது மூன்று நாட்காலமே கொடுக்கலாம்.

## பெருவெக்கை நோய்

மயிர்சிலிர்க்கும் வாயில் நீர்வடியும் இரைதின்னாது

நிவர்த்தி

எள்ளு படி . உ

இடித்து ஆவின்பாலில் கலக்கி மூன்று நாள்கொடுக்கவும்.

வேறு,

வாயில்நீர்வடியும் திகைத்துயிர்க்கும்கண்ணிற்பீளைசாடும் இரைதின்னாது.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| கரிஞ்சீரகம் | பலம் | க |
| அதிமதுரம் | ,, | க |

இவைகளையரைத்துக் காடியிற்கலக்கி மூன்றுநாட் கொடுக்கவும்.

இதைபோல்
இடகவிலாவிற்
சுடவும்.

எ | ய

வேறு,

பொன்னுங்கண்ணி
வல்லாரை
நீர்பூசாயிலை

இம்மூன்றுசினுசு இலைகளைக்கொண்டுவந்து சலம் விடாமலரைத்து உண்டைதிரட்டியெடுத்து நாழி பசுவின்பாலிற் கரைத்துக்கொடுக்க சொஸ்தமாகும்.

## ※ குன்னி நோய்

※ செய்குணம்—மயிர்சிலிர்த்துக்கொண்டு குன்னிநிற்கும்.

* மருந்து—ஓமம் பலம்-க, வசம்பு பலம்-வ, இவ்விரண்டையரைத்து யித்துடன் ஆவாரயிலையும்அரைத்து மாங்காயளவு சேர்த்து ஒரு படி வெந்நீரிற்கலக்கிக்கொடுக்கவேண்டும்.

* நசியம்—சுக்கு வசம்பு வெள்ளைப்பூடு நைவேளை குப்பைமேனி யிவைகளையரைத்துக் கொஞ்சம்சலம்விட்டுகலக்கி வடிக்கட்டி, கண்களிலும் மூக்குச் செவிகளிலும் நசியம்பண்ணத்திரும்.

உ.-இதுவுமது,

※ செய்குணம்—குன்னிநிற்கும் ; சிவனன் தின்னுது வானத்தைபார்த்தேநிற்கும் சொருக்கு மூத்திரம்விடும்.

| | | |
|---|---|---|
| * மருந்து—பெருங்காயம் | பலம் | ஙு |
| சுக்கு | ,, | க |
| மிளகு | ,, | க |



| | | |
|---|---|---|
| வசம்பு | பலம் | க |
| இலுப்பையின்ஞேர்கு | ,, | வ |
| வெள்ளை பூடு | ,, | க |
| தொச்சியிலை | பிடி | க |
| சிறுதும்பை | ,, | க |
| குப்பைமேனி | ,, | க |

எலிமிச்சம்பழச்சாறு படி-வ, விட்டு இவைகளை யொன்றுசேர்த்து இடித்தபிறகுசிறுநீர் படிகாதுஞ் சேர்த்துக் கொடுக்கத்திரும்.

* நசயம்—கொத்தமல்லியம் உப்பும் அரைத்துக்கலக்கி வடிகட்டிக் காது மூக்கு இவைகளில நசியம்பண்ணத்திரும்.

ங.- இதுவுமது

* செய்குணம்—காலுகாலு மெல்லடியாக வைக்கும் குன்றிக்கொண்டு நடக்கும்.

* மருந்து—சருள்ளி பலம் - ரு, இலவங்கப் பட்டை பலம் உ, முருங்கையிலை மூங்கிலிலை வகைக்கு மாங்காயளவு சேர்த்து வொன்று யரைத்தொரு படி காடியிற்கலக்கிக் கொடுக்கவேண்டும்

இந்தப்படி அடிவயிற்றிற் சூடுபோடவும்



இந்தப்படி காலுகாலி லாந்சூடுபோடவும் OOOOO


## * குரல் நோய்

* செய்குணம்—திவனந்தின்னாது வாலைச் சுருக்காக வீசும் தடுமாறும் வாயை மூடாமலிருக்கும் இன்னுசுடப்படும்.

* மருந்து—மிளகு பலம்-க, திப்பிலி பலம்-இ, வசம்பு பலம்-வ, பெருங்காயம் பலம்-அரிக்கால் வெள்ளைப்பூடு பலம்-ச, தைவேளை குப்பைமேனி வெள்ளறுகு வகைக்குப் பிடி-க, மருந்துடன் சேர்த்தரைத்துச் சாராயம்விட்டுப் பிசைந்து கவளமாகக் கொடுக்க வேண்டும்;

* அல்லது—வெள்ளைப்பூடு பலம்-க, செம்மகாதன் பெருங்காயம் பலம் அரைக்கால் இவைகளைப் பச்சாறு படி காலேயரைக்கால் முக்காற்படி வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும் குடிக்கவெந்நீர் விடவும்

இந்தப்படி இருவிலாவிற் சுடவும்



## * குரல்முட்டு நோய்.

* செய்குணம்—மூக்கிலிருந்தும் செவிதாழுங்கடைகளிலும் வாயாலே உதவிராயும்.

* மருந்து—முருக்கம்பூ பலம் ய, மாதளம்பூ பலம் ய, மேற்படி பிஞ்சு பலம் ௫, மாம்பூ பலம் உ, அரை



த்து அரைப்படி சாராயத்திற்கொடுக்கவேண்டும் குடிக்கவெந்நீர் விடவு

இந்தப்படிக் குதவளையிற் சூடுபோடவும்




## * குதவளைத்தாக்கன் நோய்.

* செய்குணம்—மேய்க்கிறபோது நிலைத்துக்கொண்டிருக்கும் கண்கள்வரையிட்டுக் குழியும் குதவளையிற்கட்டும் வாலைச் சுருக்காகவீசும்.

* மருந்து—வெள்ளைப்பூடு பலம்-உ, காருகோளசி பலம்-உ, இருப்பைபின்னாக்கு பலம்-வ, அரைத்துக் காற்படி வேப்பெண்ணெயிற் கலக்கிக் கொண்டைக்குள்ளே தூவாகக் கொடுக்கவேண்டும் குடிக்கவெந்நீர் விடவும்.

இந்தப்படி குதவளையிற் சூடுபோடவும்



## * குடல் நோய்.

* செய்குணம்—வயிறு வீங்கும் தீவனந்தின்னாது கண் குழியும் மயிர் சிலிர்த்திருக்கும் கிடைகொள்ளாது

* மருந்து—இஞ்சி பலம்-க, சருள்ளி பலம்-க, வசம்பு பலம்-வ, அமுக்கிராவேர் பலம்-வ, ஊமத்தம்


வேர் பலம்-வ, இவையெல்லாம் சேர்த்தரைத்து இரண்டுபடிகாடியிற்கலக்கிக்கொடுக்கவேண்டும்.

உ-இரவுமது,

* செய்குணம்—வயிறுவீங்கும் வாய்நீர்வடியும் விழுந்து விழுந்து எழுந்திருக்கும் நாளுக்குநாள் உலர்ந்துவரும்.

* மருந்து—வேலிப்பருத்தியிலைச் சாறு படி-வ, உப்பு படி-அரிக்கால், சேர்த்துக் கொடுக்கவும்,

இந்தப்படிக்
கிருவிலாவிலுஞ்
சூடுபோடவும்



## * குடல்வாத நோய்

* செய்குணம்—வயிறூதும் அருவருத்தமேயும் கெட்டபுல்லைப்பார்த்துதின்னும்வாயில்நீர்வடியும்.

* மருந்து—மிளகு பலம்-க, வசம்பு பலம்-வ, ஈருள்ளி பலம்-க. இவைகளையரைத்து யித்துடன் முட்டைகறுத்தான் பிடி க, கொத்தான்கொறுஞ்சிச் சாறு படி-உ. சேர்த்துக்கலக்கிக் கொடுக்கவும் காலை மாலை குடிக்கவெந்நீர் வைக்கவும்.

கிடந்துவிலாவிற்
சூடுபோடவும்



உ இரவுமது

* செய்குணம்—வயிறுவீங்கும் வயிறுமுழங்கும் கீழே விழும்,



* மருந்து—உத்தமதாளிச் சாறு படி- அரையிற்சாணிக்கயலி மீன் படி-க, களையப்போட்டு மறுநாள் இரண்டு படி பனங்கள்ளிற் கலக்கிக்கொடுக்கவேண்டும்.

இருவிலாவிலுஞ்
சுடவும்




## * குடற்பருவன் நோய்.

* செய்குணம்—குடலில் அழுக்கு ஒட்டியிருக்கும் அதனாற்புலனைத்தின்னாது தண்ணீருங்குடியாது.

* மருந்து—குறிஞ்சிண்டாப்பாலையிலை பிடி க. குப்பைமேனியிலைபிடி க. பேய்க்குமட்டியிலைபிடி க. வசம்புபலம்-வ. வெள்ளைப்பூடு பலம்-இ. இவைகளையரைத்துச் சிறுநீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்,

இந்தப்படி
தலையிற்சூடு
போடவும்




## * குடல்முறுக்கு நோய்.

* செய்குணம்—கிடக்குமிடத்திற் கிடந்து காலைச்சேதுக்கும் சாணிபோடும்

* மருந்து—நாய்ப்பாகலிலைச்சாறுபடி-இ. பசுவின் பால்படி-இ. நெய்படி-அரைக்கால். மூன்றையுங் கலந்து கொடுக்கவேண்டும். மறுநாள் அரி

ல்க்கட்டைபலம்-க, இவைத்து இடித்து காடியி லூறவைத்துக்கொடுக்க வேண்டியது.

இந்தப்படிகுருக்கே



சூடுபோடவும்

## ✻ குலைநோய்.

* செய்குணம்—துரிதமாய்மூச்சுவிடும் காதுசாய்ந்திருக்கும் தலைகுனிந்து நிற்கும் கொம்புகளின டிப்பக்கத்திற் சூடாயிருக்கும் நாசிகாய்ந்து சூடாயிருக்கும் தீவனந்தின்றது பூராவுஞ் சோம்பலாய் நிற்கும்.

* மருந்து—இதற்கு இரண்டுபடிமுதல் அஞ்சுபடிவரை இரத்தங்குத்தியெடுத்தவேணும் மாட்டின் தேகத்தில்சாணிவேதும்போட்டு§ (டாட்டர்மிட்டிக்) காலேமாகாணி ரூபாயிடை கேர்வாளவிதை அரையே அரைக்கால்ரூபாயிடை இவைகளைக் காற்படி வெந்நீரிற்கலக்கி யிரத்தங்குத்தியெடுத்த ஒருமணிக் கிப்பால் உள்ளுக்குக்கொடுக்கவேண்டியது மேற்படிமருந்து இரண்டையும்கொஞ்சந் தவிட்டிற்சேர்த்துக் கொடுத்துமேற்படி வெந்நீரைமேலே வொத்தடம் கொடுத்து குடுள்ளவேதும் மேலேபோடவேணும்.

§ டாட்டர் மிட்டிக் என்பது ஒருவிதஇங்கிலீஷ்மருந்து.




வேறு,

வயிறுவீங்கும் வாயில்நீரொழுகும் நாலுகாலும் நடுக்கங்கொடுக்கும்,

நிவர்த்தி

எருக்கிலைச்சாறு நல்லெண்ணை இவையிரண்டுங்கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும் சொஸ்தமாகும்

இந்தப்படிமேலே சூடுபோடவும்




## ✻ குலைப்பன் நோய்.

* செய்குணம்—செவிதாழ்ந்திருக்கும் கண்குழியும் உருண்டுவிழும்.

* மருந்து—முருங்கைப்பட்டை பலம்-க முருக்கம்பட்டை பலம்-க, பிராய்ப்பட்டை பலம்-க, இடித்து எட்டுப்படி தண்ணீரிற் போட்டுப் பச்சரிசிக்குறுணையுங் கூடப்போட்டு கூழாகக் காய்ச்சி ஒரு வேளைக்கு-கஉ படி வீதங் கொடுக்கவேண்டும் இந்தப்படிமூன்றுநாள் கொடுக்கவும்.

இப்படிக்கி இடதுவிலாவிற் சுடவும்



## குடைநோயின் குணம்.

வில்போலுடலைச் சருக்கியிழுத்துவலைக்கும் குழறிநிற்கும் வாயாலிரத்தம்விழும்.

வேறு

விழுந்துவிழுந் தெழுந்திருந் துலாவும்வாயிலுதி ரம்விழும.

இவைகட்கு நிவர்த்தி

| | | |
|---|---|---|
| குட்டித்தக்காளியிலைச்சாறு | படி | ௧ |
| வெள்ளுள்ளி | பலம் | ௪ |


இச்சாற்றில் வெள்ளுள்ளியை யரைத்துக் கலக்கிப் புகட்டி இலையையும் வெள்ளுள்ளியு மரைத்து உடம்பெங்கும்பூசி முறுக்கிவிடத் தீரும்.

வேறு

வேலிப்பருத்தியிலை ௦

இவ்விலையைக்கொண்டுவந்துமோர்விட்டிடித்து ஒருபடிசாறுபிழிந்து கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக் கிடைக்கழலாவிற் சுடவும்.



## * குட்ட நோய்.

* செய்குணம்—வின்னுக் சுருக்காச் சுருக்கிக்கொண்டு நிற்கும் மேலெல்லாம் வேர்வை யுண்டாகும் ஒருவேளை வாயிலிருந்து ரத்தம் விழும்.
* மருந்து—வெள்ளைப்பூடுபலம்-௨, அரைத்துகுட்டித்தக்காளியிலைச் சாறு அரைப்படியில்க்கலக்கிக் கொடுக்க வேண்டும், வெள்ளைப்பூடு அரைத்து



மேற்படி சாற்றில்கலக்கி துவாலையும்போடவும் பிறகு வேலிப்பருத்தி யிலையை கொண்டுவந்து மோர்விட்டிடித்துத் தொருபடி சாறு பிழிந்து கொடுக்கவேண்டும்.


## * குழவிகடி நோய்

* செய்குணம்—மேலெல்லாம் தடித்திருக்கும்.
* மருந்து—புவரசப்பட்டையை மேற்பறணி சீவிப் போட்டு அதில் பலம்-௧, எடுத்துத் தாளாகம் இடித்து ஒருபடி பசுவின் பாலிற் போட்டுக்காய்ச்சி யிறுத்துக்கொண்டு அதில் பேய்க்குமட்டிக் காய்சாறுபடி அரிக்கால் சேர்த்துக்கொடுக்கவும்,
* அல்லது—சுக்கு பலம்-௨, சுருள்ளி பலம்-௧, கடுக்காய்த்தோல் பலம்-௨, சீரகம் பலம்-௧, நொச்சியிலை பிடி-௨, இவைகளையொன்று சேர்த்தரைத்து ஒருபடி வெந்நீரிற்கலக்கிக் கொடுக்கவும்,

## * கோடு நோய்

* செய்குணம்ஆலைபாய்ந்து திரியும் படுக்கும் எழுந்திருக்கும் பரக்கப்பரக்கப்பார்க்கும் பயித்தியங் கொண்டதுபோலோடித்திரியும நிற்கும்கனைக்கும் கத்தும்.
* மருந்து—சிறுநெரிஞ்சிவேர் வில்வஇலை முன்னையிலை இவைகளை அரைத்து வகைக்கு மாங்காயளவுசேர்த்து ஒருபடி வெள்ளாட்டுநீரிலாவது அல்லது மோரிலாவது சுறுக்காக கொடுக்கவேண்டும்.

இந்தப்படி நெற்றியிற் சுடவும்




### ✻ கோல நோய்

✻ செய்குணம்—நாலுகாலுங் நடைதளரும் வயிறு முழக்கும் தலைதாழ்ந்து நிற்கும்.

✻ மருந்து—விஷ்ணுக் கிராந்தியும் ஆலம்விழுதும் வகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி பாலிலாவது காடியிலாவது கலக்கிக் கொடுக்கவும்.

இந்தப்படிக்
குறிவிலாவிலுஞ்
சுடவும்



### ✻ புலிநோய்

✻ செய்குணம்—கண்சிவந்திருக்கும் மனிதரைச்சினந்துபாய்க்கும் பாயவரும்.


✻ மருந்து—வாகையிலை துளசியிலை இவைகள் வகைக்குப் பிடி க, அரைத்து ஒருபடி காடி யல்லது பனங்கள்ளிற்கலக்கி உள்ளுக்குக்கொடுக்கவும்

உ-இருவுமது.

✻ செய்குணம்—காலை வெட்டிக்கொண்டு நிற்கும் இவனங் குணமாய்த் தின்னுது உடல்மெலியும் மனிதரைப்பாயவரும்.

✻ மருந்து—நாயுருவி யிலை,மேல்படி வேர்ப்பட்டை வெள்ளைப்பூடு, வசம்பு, கறியுப்பு, இவைகள் வகைக்குப் பலம்-ரு.வீதம்சேர்த்து அரைத்து இத்துடன் அரைப்படி விளக்கெண்ணெயிற்கலக்கிக்கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்
குறிவிலாவிலுஞ்
சுடவும்





### புலியன்நோய் குணம்

நாலுகாலும்மடங்கும் செவிகுளிர்ந்துதாழும்கண்ணினிமைதடிக்கும் சிறுத்துச் சிறுத்து நீர்விடும்.

வேறு.

நாலுகாலிலும் நரம்புபுடைக்கும் இமை தடிக்கும் செவிதாழும் நீர்சிறுத்திறங்கும்.

இவைகட்கு நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| திப்பிலி | பலம் | க |
| மிளகு | ,, | க |
| கச்சந்திராயச்சாறு | படி | ஹ |
| நொச்சிச்சாறு | ,, | வ |
| காணைச்சாறு | ,, | ஷெ |
| நல்லெண்ணெ | ,, | ஜ |

ஒசாறுவகைகளையும் எண்ணெய்யையும் ஒன்றுய்க்கலந்து அதில்மற்ற மூன்றுமருந்துகளையும்அரைத்துப்போட்டுக் கலக்கிக்கொடுக்கவும் இந்தப்படிமூன்று நாட்கொடுக்கத் தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| திப்பிலி | பலம் | க |
| மிளகு | ,, | க |
| கச்சந்திராயசமூலம் | பிடி | ௫ |

இவைகளையரைத்து நல்லெண்ணெய் விட்டுப்பிசைந்து கவளமிடவும் இந்தப்படி3-நாள்கொக்கத்தீரும்

இந்தப்படிக்கிடது
விலாவிற்சுடவும்.



வேறு

முன்னங்காலிரண்டும்பசரித்திருக்கும் தலைகவிழும் இரையை அரைவாயாயெடுத்துகொஞ்சங்கொஞ்சமாய்ச் சுவைக்கும்

வேறு.

| | | |
|---|---|---|
| குப்பைமேனியிலை | பிடி | ௬ |
| கரிப்பானிலை | ,, | ௬ |
| மிளகு | பலம் | ௧ |
| வெள்ளுள்ளி | ,, | ௧ |

இவைகளை யரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டவும் இந்தப்படி மூன்றுநாட் புகட்டத்தீரும்


வேறு.

முன்னங் காலைப் புரட்டிப் புரட்டிக்கொண்டு நிற்கும் கால்தடுமாறும் தலைகவிழும் தீவனத்தை அரைவாயெடுத்துச் சுவைக்கும்.

தீர்த்தி.

| | | |
|---|---|---|
| குப்பைமேனியிலை | பிடி | ௪ |
| மிளகு | பலம் | ௪ |
| வெள்ளுள்ளி | ,, | ௧ |

இவைகளையரைத்துக் கவளமிட்டும் இந்தப்படிமூன்று நாட்கொடுத்து மேற்படி மருந்துகளையெல்லாமொன்றாய்ச் சேர்த்தரைத்துக் காலிலும்பூசிவரவும்.

இந்தப்படிக்கிடது விலாவிற்சுடவும் 





## ✻ சிறுபுள்ளு நோய்.

* செய்குணம்—நடைதளரும்உடல்வற்றிவரும் பொய்மேச்சல் மேயும் தூங்கும்.


* மருந்து—வெள்வெங்காயம் தேங்காயளவு அரைத்துப்பசுவின்பாலிற்கொடுக்கவும்.

இந்தப்படிக்கி இருவிலாவிலுஞ் சுடவும். 

* செய்குணம்—முதுகைநெளிக்கும்மயிர்க்கால்செறியும் பின்னங்கால் மொளிகடுங்கும்.

* மருந்து—பெருமரத்துப்பட்டை வேப்பம்பட்டை வகைக்கு பலம்௨ நெல்லரிசிக் குறுணை படி-௮ எட்டுப்படிதண்ணீரிற்போட்டு இரண்டு படியாகக் கூழ்காய்ச்சிக் கொடுக்கவேண்டும்,

* அல்லது—சிறுதும்பைச்சாறு படி-௧ சிறுநீர் படி-௧ சேர்த்துக் கொடுக்கலாம்.


இந்தப்படி யிருவிலா விலுஞ்சுடவும் 

## ✻ நப்புரி நோய்.


* செய்குணம்—பரக்கப் பரக்கப்பார்க்கு தளர்ந்து சுழன்று நெளியும்.

* மருந்து—வண்ணான் அவரியிலைச்சாறுபடி-இ·செருப்படியிலைச் சாறுபடி இ: கொடுக்கவேண்டும்.

இதைப்போல்
நெத்தியிற்
சூடுபோடவும்



இதைப்போல் முதுகில்
இடதுபுறம் சுடவும்




## * கருங்காலி நோய்.

* செய்குணம்—முகங்சுறுத்திருக்கும் நாடியைப் பூமியிற்போட்டுக்கொண்டிருக்கும் உடம்புவீங்கும் அயர்ந்துநிற்கும் நீர்விடும்,

* மருந்து—மிளகுபலம்-க சுக்குபலம்-க வசம்புபலம் வ. வெள்ளைப்பூடு பலம்-க எருள்ளிபலம்-உ. சிறுகீரை குப்பைமேனி தைவேளை வகைக்குப்பிடி க. இவைகளையிடித்துக் கொடுக்கவேண்டும். கொமட்டியிலை கொளுஞ்சியிலை சிறுவாநெல்லியிலை இம்மூன்று மிடித்துத் துவாலை போடவும் குடிக்கவெந்நீர் விடவும்,

கொப்பூழைசுத் திமேலே
கிழித்தாபோல்
சூடுபோடவும்





## மகாவிருட்டிநோயின் குணம்.

வாயில்நீர்வடியும் மண்டைவீங்கும் மயிர்சிலிர்க்கும் வயிறூதிப் பொருமும் தொண்டைக்குள்பந்துபோல்நோய்திரண்டடைக்கும் நின்றநிலையாகநிற்கும்.

நிவர்த்தி,

தாழையின்காயைச்சிவியிடித்துப்பிழிந்த

| | | |
|---|---|---|
| சாறு | படி | வ |
| பேய்ப்பீர்க்கிலைச்சாறு | ,, | வ |
| வெள்ளுள்ளி | பலம் | க |
| சுக்கு | ,, | க |
| கொழிஞ்சியிலை | படி | க |
| எலிப்புழுக்கைசிரங்கை | ,, | க |

இவைகளில் ஷைசாறுகளை ஒன்றாய்க் கலந்ததில் மற்றமருந்துகளை யரைத்துப்போட்டுக் கொடுக்கத்தீரும்,

இந்தப்படிக்கிடது
விலாநற்சுடவும்



## * விருட்டி நோய்.

* செய்குணம்—கழுத்தைக்கட்டிவீங்கும் கிருட்டுக் கிருட்டென்று வலுவாய்நாசியடைத்துவாங்கும். மயிர்சிலிர்க்கும் உடம்புநடிக்கும்.

* மருந்து—இலுப்பைப்பிண்ணாக்கு பலம் இ. அரைத்து அரைப்படி குதிரைமூத்திரத்திற் கலக்கிப் பன்றிநெய் படிமாகாணி சேர்த்துக் கொடுக்கவேண்டும் குடிக்கவெந்நீர்விடவும்,


* நசியம்—பேய்ப்பீர்க்கிலைச் சாறு சிறுதும்பைச் சாறு இவைகளைப் பின்னுக்குங் பன்றிநெய்யுங்கொஞ்சஞ் சேர்த்துக் கலக்கி வடிகட்டி நசியம் பண்ணவும் பிறகு மாட்டின் முட்டெலும்பும் பன்றிவிட்டையும் பெருங்காயமுந் திம்பூரமுஞ் பாக்களவு சேர்த்துப் புகைகாட்டவும்,

௨ இதுவுமது

* செய்குணம்—நாடிவிக்கும் விருட்டு விருட்டிடன்னும் மயிர் சிலர்க்கும் முகத்தை மடித்துக்கொள்ளும் தீவனம் கொஞ்சமாகத் தின்னும்,

* மருந்து—நாயுருவிக்கதிர் பிடி-௧, அரைத்து செல்லுத்தவிடு படி-ஒன்று சேர்த்துப் பன்றியிரத்தமுங் குதிரைமூத்திரமும் விட்டுப்பிசைந்துகொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும்,

இதைப்போல் தொண்டையை சுத்திச்சூடுபோடவும்



௩ இதுவுமது,

* செய்குணம்—தொண்டையைக் கட்டி வீங்கும் வயிறூதும் வாயில் நீர்வடியும் செவிதாழும் கண் சிவந்திருக்கும்,


* மருந்து—மிளகு பலம்-௧, சுக்கு பலம்-௧, வசம்பு பலம்-ஒ, கருஞ்சீரகம் பலம்-ஒ, சுருள்ளிபலம் ௨



வெள்ளைப்பூடு பலம்-௧, எருக்கிலைப் பழுப்பு-டு, யித்தான் இசங்கு இலை பேய்ப்பீர்க்கிலை வேப்பிலை கருஞ்சூரைவேர்த்தொலி மருக்காரைத்தொலி வகைக்கு மாங்காயளவு சேர்த்து அரைத்து இரண்டுபடி காடியிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்,

* அல்லது—மிளகு பலம்-௩, சுக்கு பலம்-௧, திப்பிலி பலம்-௪, பெருங்காயம் பலம்-௪, வசம்புபலம்-௪, குப்பைமேனி தைவேளை வகைக்குப் பிடி-௧, இவைகளை யிடித்து பன்றி யிரத்தம் படி-௪, குதிரைமூத்திரம் படி-௧, சேர்த்துக் கொடுக்க வேண்டும் இந்தமருந்து விரட்டிநோய்க்கெல்லாங் கொடுக்கலாம் குடிக்கவெந்நீர் விடவும்,

இந்தப்படி இடதுவிலாவிலுந் தொண்டையிலுந் சூடுபோடவும்




## ※ பன்றிநோய்.

* செய்குணம்—தீவனந் தின்னாதுமயிர்சிலிர்க்கும் கண் வட்டங்குழியும் வாயைத்திறக்கும் வாயாலே நுரைதள்ளும் கெங்கோல் காண்டும் சுருக்கு மூத்திரம்விடும் கைகொடுத்தாக்கு ஓடிவிழும்.

* மருந்து—அரையளவுபள்ளத்திற்குழிவெட்டி அதினுள்ளே ஓலைப்பாயை விரித்து அதிலொரு சரி

நாயையும் ஒருநாய்க்கொடி விரிசன்பாம்பையும் போட்டு அதின்மேல் ௧-படி உப்பைத்தட்டி அந்த இரண்டு ஜெந்துக்களைக்களையும் பொதித்து மேலே ஓர் பாறையைக்கொண்டுமூடிமண்ணைத்தள்ளிவைத்திருந்து * ஒருமண்டலஞ் சென்று எடுத்து எலும்பைப்பொறுக்கிப்போடு மேற்படி உப்பை ஒருமண் புதுக்குடத்தில் வைத்துக்கொள்ளவும் அந்தஉப்பு பலம்-௫, வெள்ளைப்பூடு பலம்-௧. அரைத்து ஒருபடி தும்பைச்சாற்றிற் கொடுக்கவேண்டும்.

* அல்லது—சிறுதும்பைச்சாறுபடி-௩. வெள்ளாட்டு நீர்படி-௧. சேர்த்துக்கொடுக்கலாம், பன்றி நோவென்றதுக் கொல்லாம். சோதனைப்பலகையை மாட்டின்வாயிற்போட்டு அதின்வழியாகக் கையைவிட்டுப் பார்க்கிறபோது அதவியாதியிருள்ளிச் சுருகுபோலே கிடக்கும் அதை யெடுத்துப்போட்டு மருந்து கொடுகவேண்டு குடிக்கவெந்நீர்விடவும்,

இந்தப்படிக்கு 

இடதுவிலாவிற்சுடவும்

வேறு.

கழுத்தைக்கட்டிவிக்கும் நாசியடைத்துக் கிரட்டுக்கிரட்டென்று மூச்சுவிடும்,

* ஒருமண்டலமென்பது—௪௰ நாள்.



நிவர்த்தி.

இலுப்பைபிண்ணாக்கு பலம் ௨

இதையரைத்துக் குமரைமூத்திரத்திற்கலக்கிப்புகட்டி. இதனடியிற்கண்டிருக்கற நசியத்தைப் பிழிந்து புகையும்போடத்தீரும்.

நசியம்.

இலுப்பம்பிண்ணாக்கு
சிறுதும்பையிலே
பேய்ப்பீர்க்கிலே

இவகளை ஓர்நிறையாச் சிறுநீர்விட்டுத்தட்டி மூக்கிலுங் கண்ணிலும் காதிலும் நசியஞ்செய்யவும்,

வேறுநசியம்.

எருக்கிலைப்பழுப்பு
உப்பு

ஓர்நிறையாய்ச்சக்கிகண்செவி மூக்கில் நசியஞ்செய்யவும்,

புகை.

மாட்டின் மூட்டெலும்பு
பன்றிவிட்டை பெருங்காயம்

இதகளை யொன்றாய்ப்பொடித்துநெருப்பிலிட்டுப் புகைகாட்டவும்.

இந்தப்படி வீக்கத்திலும்
முகத்திலுஞ்சுடவும். 

வேறு.

தொண்டைகட்டும் நாசியடைக்கும் கிரட்டுக் கிரட்டென்று சுவாசமிடும் வாயில்வெண்ணுரை தள்ளும் இரை தின்னாது கண்சிவக்கும்.

நிவர்த்தி.

கருங்கொரட்டையிலை
பேய்ப்பீர்க்கிலை
சங்கிலை
வேப்பங்கொழுந்து


இவைகளைச் சமமாயிடித்துக்காடிக்தெளித்தொரு படிசாறு பிழிந்துகொடுக்கவு இந்தப்படிமூன்று நாட் கொடுக்கத் தீரும்,

## ❋ பன்றித்தாக்கன் நோய்.

* செய்குணம்—தீவனந்தின்னாது கண்வட்டங்குழிம் கண்சிவந்திருக்கும் கால் பாஞ்சுகிற்கும் தலையை யேறிட்டுப் பார்க்கும் அலறிவிழும் கொம்பைப் பிடிக்கவொட்டாது கட்டவொட்டாயுது.

* மருந்து—மேற்சொல்லியபடிசோதனைப் பலகையாத்சோதித்து பன்றி நோய்க்குச் சொல்லியிருக்கிற மருந்தைக் கொடுக்கவும் குடிக்கவெந்நீர்விடவும்.

இந்தப்படிக்கி
இருவிலாவிச்சுடவும்






## ❋ பன்றிகுருக்கைநோய்,


* செய்குணம்—தீவனந்தின்னாது கண்விழி வட்டங்குழியும் அரைக்கண் போட்டுவிழிக்கும் மயிர்சிலிர்த்திருக்கும் வயிறூதும் கண்சிவக்கும் செவிதாழும் கால்மடியாமல் விழும் விழுந்துகிடக்கும் இருபதுநாழிகைசென்றால் வாயாலேநுரைதள்ளும் பின்புதண்ணீர்வடியும்.

* மருந்து—சோதனைப் பலகைபோட்டுப் பார்த்துக்கொண்டு பன்றி நோய்க்குச் சொல்லியிருக்கிற மருந்தைக்கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படிக்கி
இருவிலாவினுஞ்
சுடவும்



இந்தப்படி
குதவளையிற்
சுடவும்




## ❋ பன்றிமுட்டி நோய்.

* செய்குணம்—தீவனம் தின்னாது. கண்விழி தெறிக்கப்பார்க்கும், வாயால் நுரைதள்ளும் பின்பு உதவித்தண்ணீர்போலவரும்இரைக்கும் குதவளையிற்கட்டும் ஜவ்வுபோற் சாணிபோடும்.


* மருந்து—வெள்ளைப்பூடு பலம்-௩, காருகோலரிசி பலம்-௨, கடுக்காய்த் தோடு-௩, கையான்தக

ரை குப்பைமேனி அறுகம்பு இவைகள் வகைக்கு பிடிக, மேற்படி மருந்துடன் சேர்த்திடித்து வேப்பிலைச்சாற்றிற் கொடுத்தபிறகு குடிக்க வெந்நீர் விடவும்.

இக்கப்படிக்கி இருவிலாவிலும் சுடவும்



இந்தப்படி குசவாயிற் சுடவும்.



## ❋ நன்குலைநோய்

* செய்குணம்—வாயைவாயைப் திறக்கும், வாயில் நீர்வடியும், நாக்கைநீட்டும், கண்கள் கலங்கிச் சிவந்திருக்கும்.

* மருந்து—பொன்னாங்காணியிலை அகத்தியிலை சித்திரப்பாலடையிலை கோவங்கிழங்கு இவைகள் வகைக்கு அரைத்து மாங்காயளவு பிஞ்சுங்காய் காய்ந்த கடுகு, அரைத்து அதனுடன் சேர்த்து ஒரு படி காடியிற் கலக்கி கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

## ❋ காய்ச்சல் நோய்.

* செய்குணம்—மேல்சுடும் தீவனந்தின்னாது அசதியாகயிருக்கும்.



* மருந்து—பேய்ச்சுரைக்காயிலைச்சாறு படி-வ. குளப்பாலையிலைச்சாறு படி-வ. ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும் மூக்கரைச்சாரணைவேரும் குப்பைமேனியிலையும் பிடித்து வெட்கொட்டான் பழச்சாறுஞ் சிறுநீருஞ்சேர்த்துக் கலக்கிவடிகட்டி நசியம்பண்ணவும் துவாலையும்போடவும் குடிக்கவெந்நீர்விடவும்.

வேறு.

எருக்கலைச் சாறுபோல கழியும் உடம்புயிளைத்துபோகும்.

நிவர்த்தி.

பிரண்டை உப்பு இவையிரண்டையும் பிடித்து உள்ளுக்குகொடுக்க சொஸ்தமாகும்.

## ❋ அவ்நீ சுரத்தின் நோய்.

* செய்குணம்—ரோமஞ்சிலிர்க்கும் செவிதாழும் அதிக காங்கையின் விடாக் கண்கள் காணும் கழுத்தையும் விலாவையுஞ்சேர்த்த நரம்புகளிழுப்புக்காணும் சுளுக்கும் உதட்டின் உட்புறமும் புண்ணாய்ப்போகும் ஆரம்பத்தில் மூன்றுநாலுநாள்வரைக்கும் பசிப்போழுதும் போலவேயிருக்கும் பின்பு பசி தீவனங்கெடும் வாயுவாகப்போகும் சளியைச் சேர்த்து சவ்வு நிறமாகும் கண்களிலிருந்து தண்ணீர் வடியும் மூக்கிலிருந்து சளிவடியும் எருக்கலுண்டாகி சீக்கிரத்தில் அதிகரிக்கும் தண்ணீர்

தண்ணீராய்க்கழியும் சாணி அழுகலோடுஞ் சீரணிக்காத இரையோடுஞ் சீதத்தோடுங் காணப்படும் பின்பு ரத்தமாயுங்காணப்படும் மலங் கொஞ்சங்கொஞ்சமா யிறங்கும் அப்படி யிறங்கும் போது அதிகவருத்தப்படும், நாடி துரிதமாயோடும் உடம்பின் மேற்புறமுங் காலின் முனைகளுங் குளிர்ந்து போவதுமன்றி கண்குழிந்து துரிதத்தில் முச்சுவிடும்.

* மருந்து—முதலாவது இந்தமாட்டை வேறேயிடத்தில் தனியேகட்ட வேண்டியது ஆரம்பத்தில் கழிச்சலில்லாவிட்டால் கர்ப்பூரம் ரூபா யிடை ௨, பொட்டிலுப்பு ரூபா யிடை-௨, கருவூமத்துவிதை ரூபா யிடை-வ, கிலவேப்புக்குச்ச ரூபா யிடை-௨, சாராயம் படி-௩, இதில் கர்ப்பூரத்தை சாராயத்திற் கரைத்து மற்றதைப்பொடியாக்கி ஒன்றாய்ச் சேர்த்து ஒரு படி கஞ்சியிற் கலக்கிப் புகட்டவேண்டும் மேற்படி யெருக்கலுண்டாவதை உடனே நிறுத்தக்கூடாது ஏனெனில் அக்கழிச்சலினாலே வியாதிகுறைவுபடும் கழிச்சல் அதிகரிக்கும்படி விடுவோமானால் பலவீனப்பட்டு கெதியுண்டாம். ஆதலால் நாளொன்றுக்குமேல் மேறப்படி கழிச்சலிருக்குமானால் மேற்சொல்லிய மருந்துடனே மாசிக்காய் அரையே அரிக்கால் ரூபா யிடை நிறுத்து கன்றாய்ப் பொடி செய்து சேர்த்துக்கொடுக்கவேண்டு



ம் மாட்டுக்கு சௌக்கிய முண்டாகிறதென்று காணப்பட்டால் மருந்தைக்குறைக்க வேண்டியது அல்லது மருந்தை நிறுத்திப் போடவேண்டியது உடம்புமெலிந்து போகதாபடிக்கு ஏற்ற ஆதாரவு செய்யது கஞ்சி காச்சி கொடுத்து பலத்தையுண்டாக்க வேண்டும் அதிகபலயீனமாயிருந்தால் கஞ்சியில் மாகாணிப்படி சாராயத்தைச்சேர்த்துங் கொடுக்கலாம், பசும் புல்லைப் போடவேண்டியது.

### ※ ஈரலைப்பற்றியகாய்ச்சல் நோய்.

* செய்குணம்—மூக்கு உலர்ந்திருக்கும் நாடி சுருக்காயோடும் கொம்புகளின் அடியிற் சூடாயிருக்கும் வாய் சூடாகவும் உலர்ந்துமிருக்கும் மலங்கட்டுப்படும் வலதுபக்கத்தைக் கையினாலே அழுத்தினால் நோவுண்டாகும்.

※ மருந்து—மலந் தாராளமா யிறங்கிறவரையில் ஒரு நாளைக்கி இருதடவை கரியபவளம் அரையே அரிக்கால் ரூபா யிடை முதல் ஒரு ரூபா யிடை வரையில் வெந்நீரிற் சேர்த்துக் கலக்கிக் கொடுவும் பின்பு காச்சலின் தன்மையைப் பார்த்து நாள் ஒன்றுகு இரண்டு தடவை அல்லது மூன்று தடவை கர்ப்பூரம் ரூபா யிடை-௨, பொட்டிலுப்பு ரூபா யிடை-௨, ¶ ஜென்சன்ரூட்டு ரூபா யிடை-௨, ஒன்றுசேர்த்துக் கொடுக்கவேண்டும்

¶ ஜென்சன் ரூட் என்பது ஓர்வித வேர்.

## ※ மந்தத்தைச்சார்ந்தகாச்சல் நோய்

※ செய்குணம்—இந்தவியாதி சாதாரணமாய் இராத்திரியிலே உண்டாகிற படியினாலே சீக்கிரத்திற் கண்டுகொள்வதரிது உதயத்தில் மாடு அசதியாய்க் காணப்படும், தீவனந்தின்னாது அதிகதாகமுண்டாகும், வாய் யுலர்ந்திருக்கும் அசைபோடாது, மூச்சுதுரிதமாய்விடும். முகம் விசாரமுள்ளதாகக் காணப்படும் நாடி படபடப்பாயோடும் நடக்கமாட்டாது நடக்கும்படி ஓட்டினால் அதிகமாய்நொண்டும் அப்படி நொண்டுகிற காலில் வீக்கம்காணப்படும், தோளிலாவது இடுப்புகளிலாவது முதுகுதுவக்கி பின்னங்கால்கள் வரைக்கும் அல்லது கால்களிலிருந்து குளம்புச்சு மயிர்த்திரள்வரைக்கும், இந்த வீக்கங்காணப்படும் அதைத்தொட்டுப் பார்த்தால்சூடாயிருக்கும் அதிகமாய் நோகும் நெற நெற என்கிற சத்தமுமுண்டாகும் வியாதி சீக்கிரத்தி லதிகரிப்பதினால் மாடு வருத்தப்படும், கால்களிலில் வீக்கங்கொண்ட யிடங்களுங் குளிர்ந்து நாடி சீக்கிரமாயோடி படிபடியாயிறக்கும் அதிகதீனியினால் இரதத புஷ்டி யதிகமா யதற்கேற்ற வேலையில்லாம லிருந்தாலும் மழைகாலத்தின் ஆரம்பத்திலுண்டாகிற பசும்புல்லைத் தின்கிறதினாலு மிந்த வியாதி யுண்டாகிறது.

※ மருந்து—வீக்கங்களைக் கத்தியினால் கீறி அவைகளிலிருந்து கொஞ்சம் இரத்தம் வரும்படி செ



ய்தால் நல்லது முதலாவது பேதியாகும்படி சித்தாமணக்கெண்ணெய் படி ௧, கொடுக்கவேண்டியது பின்பு சுக்கு பலம் ௩௦, பொட்டிலுப்பு ரூபாயிடை ௨௦ இரண்டும் பொடிசெய்து காற்படி கஞ்சியிற் போட்டுக் கலக்கி உள்ளுக்குக்கொடுக்கவேண்டும் பிறகு ஒருமணிநேரத்துக்கொருவிசைக் கொடுக்கவும் இந்தப்படி மூன்று நாட்கொடுக்கவும்.

## ※ சனிநோயல்லது காச்சல்நோய்.

※ செய்குணம்—ஆரம்பத்தில் பசி தீபனங்கெடும் கண்கள் பஞ்சடைந்தாற்போல மந்தமானபார்வையாகும் அடிக்கடி கொட்டாவிவிடும் அசைப்பிறைலே செய்வது போல பின்னங்காலைச்சிலவேளை நீட்ட முயற்சிக்கும் மயிர் சிலிர்த்துக்கொண்டிருக்கும் கொம்பு காது கால் இவைகள் குளிர்ச்சியாகயிருக்கும் உடம்பு முழுவதுமாவதுசில இடமாவது நடுங்கும். பின்பு நாடி படபடப்பாகும் கண்கள் மந்தம் நீங்கிப்பிரகாசமாகும் உட்சவ்வுத்தோல்கள் சிவந்திருக்கும் வாய்வரண்டு சூடாயிருக்கும். நாக்கு முள்ளுப்போலிருக்கும் தண்ணீர்த்தாகமுண்டாகும் துரிதமாய் மூச்சுவிடும் சரியானபடி சாணிபோடமாட்டாது நீர்விடுவது சிவந்தநிறமாயும் துர்வாசனையாயுமிருக்கும் கண்களிலிருந்து தண்ணீர்வடியும்.

145 22



* மருந்து—கரியபவளம்-௨ ௌ ரூபாயிடை. சுக்கு-௨ ௌ ரூபாயிடை இவைகளைப்பொடிசெய்து அரைப்படிவெந்நீரிற்கலக்கி பேதிக்குக் கொடுக்கவேண்டியதுந்தவிர சாணியைக்கரைத்துக் கொதிக்கவைத்து இரண்டுவிலாவிலும் வேதுபோடவேண்டும் பின்பு கர்ப்பூரம்-௨வ. ரூபாயிடைபொட்டிலுப்பு ரூபாயிடை-௨வ. கிலவேம்புக்குச்சி ரூபாயிடை-௨வ. இவைகளை யரைத்து உருண்டைசெய்து ஒருநாளைக்கு மூன்றுதடவை உள்ளுக்குக்கொடுக்கவேண்டியது குடிக்க வெந்நீர்விடவேண்டும்.

## ✳ சன்னி நோய்.

* செய்குணம்—கழுத்தைநீட்டாது மடக்கிக்கொண்டேயிருக்கும் நாலுகாலும் நடைகூடாது. குறுக்குநிமிர்ந்ததில்லாது. நெளிக்கும் குண்டியைத் தாழ்க்கும்.

* மருந்து—அரைப்படி வேப்பெண்ணெய் கொடுத்து எருக்கம்பால் ஒருசிரங்கை கொஞ்சம் வேப்பெண்ணெய் பன்றிநெய் சனிநாயறு வசம்பு சுக்கு வெள்ளைப்பூடு இவைகளையரைத்துக்கலக்கிகொதிக்கவைத்து இரண்டுநாள் துவாலைபோடவும் குடிக்க வெந்நீர்விடவும்.

### ௨. இதுவுமது

* செய்குணம்—கழுத்தை பொருபுறமாய்ச் சாய்த்துக்கொண்டு நிற்கும் புழுக்கைபோல. அல்லது



உலர்ந்த-சாணமாய்ப்போடும்-வானத்தைப்பார்த்துக்கொண்டு நாய்போலக் குந்தியிருக்கும். பின்னங் காலிரண்டும் தடுமாறும்-தீவனந் தின்னார் தண்ணீர் குடிக்கும் அசைப்போடும் உடலெரும்அல்லது-நடுங்கும்.

* மருந்து—எருக்கலம் பூவை யிடித்துத் துணியிற் பொதிந்து கொண்டு இரும்புச் சட்டியில் வேப்பெண்ணெய் விட்டுக் காய்ச்சி. அதில் முக்கி சரீரமெல்லாம் ஒத்தல் போடவேண்டும் மறுநாள் திருகள்ளியும்கொச்சியிலையுமிடித்துத் துணியிற் பொதிந்து கொண்டு மேற்கண்டபடி வேப்பெண்ணெயில் முக்கிஒத்தல் போடவேண்டியதுந்தவிர சுக்குபலம்-௧. மிளகுபலம்-௧. திப்பிலிபலம்-௧. வெள்ளைப்பூடு பலம்-௧, பெருங்காயம் பலம்-ற. இவைகளை யரைத்துப் போதுமான சிறுநீரிற் கலக்கிஉள்ளுக்குக்கொடுக்க வேண்டும்.


### ௩. இதுவுமது.

* செய்குணம்—மாடுமுதுகைவளைத்துக்கொண்டுநிற்கும் நடக்கமனமிராது அதைநடக்கச்செய்தால் திமிர்வாதங்கொண்டதுபோலத் தடுமாறும் வருத்தத்தோடே மூச்சுவிடும் அடிவயிறுநெருங்கும் வாரைச்சேர்ந்தபுறம்பானசவ்வு இரட்டிப்படும். நாடிமெலிந்து துரிதமாபோடும்முகங்களைப்பாயிருக்கும் நீர் இரத்தநிறமாயிருக்கும் சீக்கிரத்தில் ஸ்மரணைகெட்டு ஆறுமணி நேரத்


துக்குள்ளாக யிறந்துபோகும் உடம்பிலுள்ள இரத்தங்கெட்டுப்போவதுதானிந்த வியாதிக்குக்காரணம் இது அசாத்தியவியாதியாயிருந்தபோதிலும்.

* மருந்து—ஆரம்பத்தில் சிற்றாமணக்கெண்ணெ படிவலு கொடுக்கவேண்டியது. பின்பு பொட்டிலுப்பு ரூபாயிடை-கவ. சுக்கு ரூபாயிடை-கவ. பொடிசெய்து அரைக்கால்படி ச்சாராயத்திற்சேர்த்துக் கொடுக்கவேண்டியது இந்தப்படி ஒரு மணிநேரத்துக்கொருதரமாக் கொடுத்துவரவும்.

இந்தப்படி தலையிற்சுத்தி சூடுபோடவும்



இந்தப்படிநெத்தியிற்சுடவும்



இந்தப்படிவயித்திற்சுடவும்



## விருட்டிபெரு நோயின்குணம்

கவிழ்த்துநிர்க்கும்குறுகுறுக்கும் வாயில்நீர்வடியும் தொண்டைக்குள் பந்துபோலடைக்கும் இந்தப்பிணி கண்டநிமிஷமே அவுடதஞ்செய்யாவிட்டால் மூச்சடைத்துக் கொன்றுவிடும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | வ |
| வெள்ளுள்ளி | ,, | வ |



| | | |
|---|---|---|
| எலிப்புழுக்கை | பலம் | வ |
| வசம்பு | ,, | வ |
| மிளகு | ,, | வ |
| ஓமம் | ,, | வ |
| புகையூறல் | ,, | வ |
| கருஞ்சீரகம் | ,, | வ |
| பெருங்காயம். | ,, | வ |
| அரிதாரம் | ,, | வ |
| குப்பைமேனியிலை | பிடி | உ |
| தைவேளையிலை | ,, | உ |

இவைகளையெல்லாம் பேய்க்குமட்டிக்காய்ச் சாற்றிலரைத்துக் கலக்கிப்புகட்டவும் இந்தப்படி மூன்று நாட்கொடுக்கத்தீரும்.

இந்தப்படி கழுத்திற் சுடவும்



## * மூளையைப்பற்றியசன்னிநோய்.

* செய்குணம்—ஆரம்பத்தில் மாடு அசதியாய்த்தூக்கமயக்கமுள்ளதுபோலிருக்கும் தலையைநீட்டி அதைத்தாங்கிக் கொள்ளும்படி யொன்றையாவது நாடி-நிறைவுந்தாமதமுள்ளதாயிருக்கும் வாய் கண் இவைகளைச்சேர்ந்த சவ்வு சிவந்திருக்கும் அறிவுகெட்டு அதிகக் கலக்கமுள்ளதாகி கிட்ட வருகிற மனிதனையும் மாடுகளையு முட்டவரும் அடிக்கடி தரையி பூமியைக் கொம்புகளினாலும் முன்னங்கால்களினாலும் கிளறும் தலையின் மே

ல்ப்படுகிற அடியினுலாவது கொம்புகுடிக்குபோ வதினுலாவது அதிகவெயிலில் வெகுதூரம் ஓட்டுவதினுலாவது இந்தவியாதி யுண்டாகிறது.

* மருந்து—இருபது நெல்லிடை நேர்வாளப்பருப்பை யரைத்து காலேஅரைக்கால்படி சிற்றாமணக்கெண்ணெயிற் கலந்து கொடுக்க வேண்டியது பேதியாகும்.

## ✳ முகவாத சன்னி நோய்.

* செய்குணம்—நாக்கைச்சுருட்டி வலிக்கும். செவி தாழ்ந்திருக்கும். முகத்தையுமிழுக்கும்.


* மருந்து—† பொக்கணாந்தாக்கிப்பச்சிலைச்சாறுபடி -௨. கொடுக்கவேண்டியது.

* அல்லது—இலுப்பெண்ணெ சேப்பெண்ணெ புன்னைக்காயெண்ணெ நல்லெண்ணெ விளக்கெண்ணெ முடக்கற்றான் சாறு வகைக்குக் காற்படிவீதஞ் சேர்த்து அதிற் சுக்கு பலம்-௪. வெள்ளைப்பூடு பலம்-௪. தட்டிபோட்டுக் கொஞ்சம் மயிலிறகும் போட்டுக் காய்ச்சிப் போதைக்குக் காற்படிவீதங் கொடுக்க வேண்டும் மேலே துவாலையும் போடவும் குடிக்கவெந்நீர் விடவும்.

இப்படி
நெத்தியிற்சுடவும்



இந்தப்படிக்கி
முதுகிற்
சுடவும்



† பொக்கணாந்தாக்கி யென்பது முடக்கற்றான்.



## ✳ வலிப்பின் நோய்.

* செய்குணம்—நாலுகால்களும். வலித்திழுக்கும் உடல்குளிர்ந் திருக்குந்தலையைப்போட்டடித்துப் பறக்கும்.

* மருந்து—சுக்குபலம்-௨. வசம்புபலம்-வ. அரைத்து குருவிஞ்சி யிலைச்சாறு குப்பைமேனிச்சாறு வேப்பெண்ணெ வகைக்குப்படி வ, சேர்த்துக் கொடுக்க வேண்டும் குறிஞ்சாயிலைச்சாறு சித்திக்கொடியிலைச்சாறு கட்டித்துவாலை போடவும் குடிக்கவெந்நீர் விடவும்.

நாலுகாலிலுந்திராங்கச்சுடவும் 


### வேறு.

உடலைத்திரிகிறுக்கி வலிப்புண்டாகும் தடுமாறிநிற்கும்.

### நிவர்த்தி.

ஆனைநெத்தி
குதிரைநெத்தி
ஆனைநெரிஞ்சி

இவைகளைச் சமமாயிடித்து ஒருபடி சாறுபிழிந்து உள்ளுக்குப்புகட்டி உடம்பிலுந் துவாலையிடத்தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக் கிரு
விலாவிற்சுடவும். 

### நாய்புரிநோயின்குணம்.

முறுகி முறுகிமிருக்கும்வெயிலிற்போய்த்தூங்கிவிழும்.

நிவர்த்தி.

| | | |
|---|---|---|
| தலைசுருளிவேர் | பலம் | ௩ |
| வெற்றிலை | ,, | ௫ |
| *வசம்பு | ,, | ௨ |

இவைகளையரைத்துக் காடியிற்கலக்கிப்புகட்டவும் இந்தபடிமூன்றுநாள் கொடுக்கதீரும்.

இந்தப்படிக்கிடா
விலா விற்சுடம் ௵ ௨

### நாய்வலிப்புநோயின்குணம்.

முதுகைநெளிக்கும் முறுக்குங் கீழேவிழும்

நிவர்த்தி

கருத்தக்காக்கணத்திஇலை
நாய்ப்பாகலிலை
குன்றிமணியிலை

இவைகளைக் கொண்டுவந்திடித்துச் சாறுபிழிந்து டலாதிந்தமும்பூசி நாசியில் நசியமிடத்தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | படி | ௨ |
| வாகையிலைச்சாறு | ,, | ௨ |
| புங்கவேர்ச்சாறு | ,, | ௨ |
| வெள்ளுள்ளி | பலம் | ௧ |



| | | |
|---|---|---|
| வசம்பு | ,, | ௧ |

மேற்படி சாறுகளையும் வேப்பெண்ணெயையும் ஒன்றாய்க்கலந்ததில் மற்றிரண்டு மருந்துகளையு மரைத்துப் போட்டுக்காய்ச்சி முதுகிலுங் காதிலும்விட்டுடம்பிலுந் தவாலையிட்டுத்தீரும்.

இந்தப்படிபின்னங்கால்த்தொடை
இரண்டிலுஞ்சுடவும். | | |

இந்தப்படிக்கிடா விலா விற்சுடவும். —000—

### ※ நரம்புவலிப்பின் நோய்

※ செய்குணம்—முதலில் ஒருவிததிமிர் உண்டாகும் மறுநாள் அது அதிகப்படும் மூன்றுநாளில் உடம்பிலுள்ள தசைநரம்புளெல்லாமதிகமா யிழுப்புக்கொள்ளும் நரம்புகளிலதிக அழற்சியுண்டாயிருக்குந்தலையை யுயர்த்திக்கொண்டிருக்கும் மூக்குநீண்டிருக்கும் கண்ணின்எதிரில் ஓர்விததோல் யெழும்பியிருக்கும் வாலைத்தூக்கிக் கொண்டிருக்கும் வாய்திறக்கப்படாமல் பல்பூண்டு போகும் கிட்டயாராவது போனால் அதிககலக்கமும் பயமுமுள்ளதாய்க்காணப்படும் துரிதமாய் மூச்சு விடும் நாடி சுருக்காயோடும் சாணிபோடாது.

* மருந்து—முதலாவது பேதியாகும்படி நேர்வாளப்பருப்பு உ௰ நெல்லெடையரைத்து சிற்றாமணக்கெண்ணெ படி-காலே அரைக்காலிற் கலக்கிக் கொடுக்கவேண்டியது பின்பு நரம்பைச்சேர்ந்த

அழுர்சிக்கும்படி நாலுமணிநேரத்துக்கொரு தடவை அபின் ரூபாயிடை-ல. கருவூமத்துவி தைரூபாயிடை-அரைக்கால் சடம்புவிதை ரூபா யிடை-ல. இம்மூன்றுங் கொடுத்துவரவேண்டு ம்.

## ✳ கண்டவலிப்பின் நோய்

* செய்குணம்—விழுந்து கிடக்கும் கழுத்தைத்தெற் றிவலிக்கும்.


* மருந்து—மாவிலங்கிலையை அரைத்து மாங்காயள வு உண்டைசெய்து ஒருபடி வெள்ளாட்டுநீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும் பிறகு மாவிலங்கு வேரும் நீர்பூலாயிலையும் அரைத்து சதுரக்கள் ளிப்பால் விட்டுப்பிசைந்து மேலேபூசவும் குடிக் கவெந்நீர்விடவும்.

## ✳ கோடுவலிப்பின் நோய்

* செய்குணம்—வலிப்புத்தோன்றி திடுக்கிட்டு வலிக் கும் காலையிழுத்து வைக்கும் வாயில்நீர்வடியும்

* மறுந்து—குன்றியிலை கொன்றையிலை வகைக்கு மாங்காயளவு இடித்து ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

எரியிலிருந்து நெடுகஇழுத்து நாலுகாலு மிறங்கச் சூடும். இடதுவிலாவிலுஞ் சூடுபோடவும்.






## ✳ துலைகூனிவலிப்பின் நோய்

* செய்குணம்—கண்சிவந்திருக்கும், தீவனந்தின்று, திகைத்துக் கொண்டுநிற்கும் வலிப்புத்தோன்றி யிழுக்கும்.

* மறுந்து—சுக்கு பலம்-௧, அதிமதுரம்- பலம்௧, விழுதியிலை- விளாத்தியிலை-வகைக்குமாங்காயள வு அரைத்துக் கோமூத்திரம் படி ஒன்றிற்கலக் கி கொடுக்கவேண்டும் சாரணைவேரையரைத்து நல்லெண்ணெயிற் கலக்கிக் கொதிக்கவைத்துத் தலையிலே போடவும்.

இந்தப்படிக்கி இருவிலாவிலும் சுடவும்.




## ✳ திருக்குவலிப்பின் நோய்.

* செய்குணம்—திருகத்திருக வலித்திழுக்கும் நிற்க மாட்டாது, சுற்றிச்சுற்றிவரும், தடுமாறும்,

* மருந்து—ஆனைலத்தி குதிரைலத்தி ஆனைவணங்கி அல்லது ஆனைநெரிஞ்சி இவைகளை யிடித்துப்பி ழிந்து வகைக்குக் காற்படி சாறுகொடுக்க வே

ண்டியதுந்தவிர மேலே துவாலையும் போடவே
ண்டும்

நாலுகால்களிலும் மிறங்கச்சூடு போட்டு பிறகு இருவிரைவீ துஞ்சூடுபோடவும்




## ※ குதிரைவலிப்பின் நோய்

* செய்குணம்—நாலுகால்களும் வலித்திழுக்கும், மார்பில் வலிகாணும், அரைக்கண்போட்டு விழுக்கும்.

※ மருந்து—ஐவிரலிக்காய் வெள்ளருக்கலங் கொம்பு மேற்படி பூ இம்மூன்றுந்தனித்தனி அரைத்து வகைக்குச் சிறுமாங்காயளவு திரட்டிக் கள்ளிச்சாறு படி-வ, கோமூத்திரம் படி- யொன்றிற்இதுகளைச்சேர்த்துக் கலக்கி யொருவேளை கொடுக்கவேண்டியது மறுநாள்முதற் கருபூரவல்லி யிலையும் ஒருபிடி கூடச்சேர்த்துக் கொடுக்க வேண்டு.

* அல்லது—சுக்கு பலம்-க, மிளகு பலம்-க, திப்பிலி பலம்-ஒ, ஓமம் பலம்-ஒ, வசம்பு பலம்-வ, பெருங்காயம்பலம்-வ, வெள்ளைப்பூடுத்தயிலம் பலம் உ, வேப்பெண்ணை படி-இ, யுஞ் சேர்த்துக் கொடுக்கலாம் குடிக்கவெந்நீர் விடவும்.

தலைமுதல்வால்வரை! முதுகி லிருபுறமும் வரையாக இழுத்துச் சூடும் நாலுகால்களு மிறங்கச் சூடுபோடவும்.






## ௨ இதுவுமது

* செய்குணம்—புல்லைக்கல் அரைவாய் கொண்டு தின்னும் கண்ணையுருட்டிவிழிக்கும் தலையையே றவாங்கும் வாயிலேநுரைதள்ளும் நாலுகாலும் தள்ளும் கீழேவிழுந்து புரளும் கண்ணைசொருகிவாங்கும் பாரும்.

* மருந்து—சன்னிநாயிறு பலம்-க௰, அபின்- பலம் க௰, பனங்கள்ளு படி-க, குன்றிமிலைச்சாறு படி-க, சாராயம் படி-வ, இவையெல்லாம் ஒன்றுய்க்கலக்கிக் கொடுக்கவும் அதன்பிறகு கொம்பு

மறுத்துச் செவியுமறுத்து கண்ணுடிநரம்புதுடிப்புப் பார்த்து நாலுகாலிலு மிறங்கச்சுடவும்; விலாவிலுஞ் சூடுபோடவும்.



## வேறு.

நடுநடுங்கிக் கீழேவிழும் வாயில்வெண்ணுரை தள்ளுங் கண்குழிவிழும்.


## நிவர்த்தி.

கருங்கொட்டை செடிமூலிகைசமூலங் கொண்டுவந்திடித்து வெந்நீர்விட்டுச் சாறுபிழிந்து நாளொன்றுக்குஒருபடிவீதம்மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

வேறு

எருக்கம்பூ பிடி-௩, இதைப்பசுவின்னீரில்லரைத்து க்கலக்கிஇரண்டுநாள் கொடுக்கந்தீரும்.

இந்தப்படி இருபக்கத் திலுஞ்சுடவும்.




## ※ ஆனைவலிப்பன் நோய்

* செய்குணம்—தீவனந் தின்னாது, கண்ணையுருட்டி விழிக்கும், தலையையேறவாங்கும் வாயால்நுரை தள்ளும், நாலுகால்களுந் தள்ளம் விழும், இழு க்கும் கண்ணை ச்சொரிகிவாங்கும் படபடத்து விழும் பாயும்.
* மருந்து—சன்னிநாயறு பலம்-உ, சடலாவரையிலை சாணைக்கருவாடு வகைக்கு ஆளார்த்தது செல்லி க்காயளவு கருங்குன்றியிலைச் சாறு படி ஐ, பன ங்கள்ளு படி-௧, கழுதைமூத்திரம் படி-௧, சேர் த்துக்கொடுக்கவேண்டும்குடிக்கவெந்நீர்விடவும்

இதில்கண்டசூடுபோட்ட பிறகு மாட்டின்தலையிற் குளிர்ந்த சலம் நூறுகுடம் விடவேண்டியது.


இருவிலாவிலுஞ்

சூடுபோடவும்



இந்தப்படி

தலையிற் சூடுபோட வும்.





## சன்னிவலிப்பின் குணம்.

நாலுகாலுந் தெத்தி தெத்திநடக்கும்.

நிவர்த்தி.

பூண்டு
வசம்பு

இவையிரண்டையுமரைத்து காடியிற் கரைத்துக் கொடுக்கவும் பின்பு சூலம்போல சுடவும் உடனே குணங்கொடுக்கும்.

## ※ முசல்வலிப்பின் நோய்

* செய்குணம்—இன்னவேளையென் றில்லாமல் நிற் கும்போதும் நடக்கும்போதும் காசாவிற்கட்டி யிருக்கும்போதுந் திடீரென்று கீழேவிழுந்துவ லிப்புத் தோன்றியிழுக்கும்.
* மருந்து—காக்கையைக்கொன்று தீயிற்சுட்டுக்கால் தலை ரோமம் இறகு இவைகளைத் தள்ளிப்போ ட்டு வயிற்றைக்கிழிக் குடலை யெடுத்துப் போ ட்டு நின்றதையரைப்படி சாராயத்தில் வேகவை த்து முள்ளு எலும்புகளைப் பொறுக்கிப்போட் டுப்பிசைந்து உள்ளுக்குக்கொடுக்க வேண்டும்.
* அல்லது—கஸ்த்தூரி பலம்-ஐ, கோரோசனை பலம் வ. சாதிக்காய் பலம்-௧, இவைகளைப் பொடிசெய் து மலட்டுவெள்ளாட்டு னீரில் விரவிக்கொடுக்க வேண்டியது மேற்படி ஆட்டின் இரத்தத்தை சுசி ழும் பண்ணி மேலெல்லாவாயையும் போடவும் குடி க்கவெந்நீர்விடவும்.

## * வெதுப்பு நோய்.

* செய்குணம்—மயிர் சிலிர்த்திருக்கும், எருகும்.

* மருந்து—துத்தியிலை கருப்பூர வல்லியிலை மாதளை யிலை மாதளம்பிஞ்சு வகைக்குக்குத்து ஒன்று சேர்த்திடித்துக் கவளங்கொடுக்கவேண்டும்

* அல்லது—சுருள்ளி பலம் ௫. விடத்தலையிலை அரைத்து மாங்காயளவு எருமைமோர் அல்லது காடியிற் கலக்கிக்கொடுக்கலாம்.

* அல்லது—ஆத்து அலரியிலை பிடி-௩. சீரகம் பலம் -௧. சுருள்ளி பலம்-௫. இவைகளை யிடித்துக் கவளங்கொடுக்கலாம்.

* அல்லது—கொடிப்பையைச் சமூலத்துடன் வெந்தயிசைக் இறுத்துக்கொண்டு அதிற்சீரகம் படி அரைக்கால் சுருள்ளி பலம்-௨. அரைத்துக்கலக்கி யெருமைமோர்படி ஒன்றிற் சேர்த்துக்கொடுக்கலாம்.

* அல்லது—அயிரைமீன்-௧. இசங்கம்பட்டை மாங்காயளவு அரைத்து ஒருபடி மோரிற்கலக்கி யெல்லாவெதுப்புநோய்க்குங் கொடுக்கலாம்.

### ௨. இதுவுமது

* செய்குணம்—தண்ணீர்போலே கழியு முடம்பு உலர்ந்து அசதியாகும்

* மருந்து—கற்றாழையைக் குருக அறிந்து வெந்து தேங்காயளவு கல்லுப்புப் பலம்-௰. ஒருபடி மோரிற் கலக்கிக்கொடுக்கவேண்டும்,



### ௩. இதுவுமது

* செய்குணம்—அடிக்கடி எருகும் வைக்கோல்முதலிய உலர்ந்ததீனி தின்றுகொண்டேயிருந்து சடுதியிற் புல்முதலிய பசுந்தீனி தின்பதினாலும் உஷ்டணமாயிருந்து உடனே குளிர்ச்சி யுண்டாவதினாலும் இராக்காலத்தில் வெட்டவெளியி லிருப்பதினாலும் உண்டாகும்.

* மருந்து—பசுந்தீனியா லுண்டாயிருந்தால் அதை நிறுத்தவேண்டியது குளிர்ச்சியினாலும் ராத்திரியிலு முண்டாயிருந்தால் உடனே கூரைக்குட் கட்டி குடெழும்பத்தேய்த்து உஷ்டணமா யிருக்கும்படி கம்பளிமுதலானதைப் போர்க்கவேண்டியது. எருக்கல் நிற்காமல் பலத்துக்கொஞ்சஞ்சுரமுங்கண்டால் அபின் ரூபாயிடை-௧௦. சாராயம் படிஅரைக்கால்கஞ்சிபடி ௧. இம்மூன்றையுஞ் சேர்த்துக் கொடுக்கவேண்டும் நாலுமணிக்கொருதரங் கொடுக்கலாம்.


### ௪. இதுவுமது

* செய்குணம்—மூக்கிலிருந்து நீர்வடியும் செங்கல் மங்கலாக வெருகும்.

* மருந்து—தென்னம்பூ கிரியிற் காடிவிட்டிடித்துப் பிழிந்தசாறு ஒருபடிகொடுக்கவேண்டும்.

இப்படிக்கி

இடதுவிலாவிற் சுடவும்.



159 81



௫. இதுவுமது

* செய்குணம்—வாய்நீர் வடியும் மயிர்சிலிர்க்கும் தீவனம் அரைவாய்க்கொண்டு தின்னும் அடிக்கடி சிறுச்சிறுகயெருகும்.

* மருந்து—பெரியசிறுகிழுப்பைச் செடிசமூலங்கொண்டு வந்திடித்துப்பிழிந்தசாறு படி-கால் கொடுக்கவேண்டும்.

௬. இதுவுமது


* செய்குணம்—தின்றதீவனம் நன்றாய்ச் செமியாமலும் உடலிலொட்டாமலு மெருகிக்கொண்டிருக்கும் உடம்பு மெலியும்.

* மருந்து—சுருள்ளி பலம்-௰. சீரகம் பலம்-௫. இவ்வகளை யரைத்துபசுவுக்கு பெருமைமோரிலும் பெருமைக்குப்பசுவின் மோரிலுங் கலக்கிக் கொக்கவேண்டியது.

இந்தப்படிக்கி

இடதுவிலாவிற்

சூடுபோடவும்



௭. இதுவுமது


* செய்குணம்—கண்களிலிருந்தும் வாயிலிருந்தும் நீர்வடியும் சாணியாய்ப்பீச்சிக்கழியும் காறும்



* மருந்து—விளாயிலை பிடி-௧. இண்டங்கொழுந்து பிடி-௧. அரைத்து மூன்றுபடி தண்ணீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்

இடதுவிலாவிற்சுடவும்




## ✻ நீராதெருக்கல்.

* மருந்து—பங்கம்பாளை வேரும் இலையுமாக்காயளவு அரைத்து அரைப்படிபசுவின்பாலிற் கொடுக்கவேண்டும் எருக்கல் நின்றுபோவதுந்தவிர சாணியும் போடாது அதற்கு உப்பிலிவேர் பலம்-௪. அரைத்துஒருபடிதண்ணீரிற்கலக்கிகுடிக்கக்கொடுத்தாற் சரியான்படி சாணிபோடும் வேண்டியிருந்தால் மூன்றுநாட் கொடுக்கலாம்.

வேறு

கொடுப்பையைச்சமூலம் பிடுங்கிவந்து இரவுஅடுப்பிலே வேகவைத்துக்காலையில் தண்ணீரிறுத்துக்கொண்டு சீரகம் நெல்லிக்காயளவும் வெங்காயம் எலுமிச்சங்காயளவும் அரைத்து எருமை மாடானால்பசுவின் மோரிலும் பசுமாடானால்எருமைமோரிலும் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்
இடதுவிலாவிற்சுடவும்



## ❊ சீதளவெதுப்பு நோய்.

* செய்குணம்—உடம்பெல்லாங்குளிர்ந்திருக்கும்செ
விதாழ்ந்திருக்கும். கண்குழியும். சிலநாட்சென்
றபின் தண்ணீர்போலெருகும்.

* மருந்து—கடுக்காய்த்தோடு எ. கருஞ்சீரகம் பலம்
-வ. கடுகு பலம்-வ, ஓமம் பலம்-க, மஞ்சணத்தி
க்கொழுந்து பிடி-ங. வசம்பு பலம்-வ திருநாம
த்தாளியிலே சாரணத்தியிலே வகைக்கு அரைத்த
து மாங்காயளவு பழம்புளியிலே பலம்-ஊ. ஒருப
டிகாடியிற் கொடுக்கவேண்டும்.

## ❊ சில்வெதுப்பு நோய்

* செய்குணம்கண்களிற் பீளைசாடும். மயிர்சிலிர்க்கு
ம். சரீரஞ்சுடும். உடம்புசழிக்கும் குறுவிரிக்கு
ம் எருகும் அசையிடாது

* மருந்துஅதிமதூரம் பலம்-ஊ. ஏலம் பலம்-ஊ. கிரா
ம்பு பலம் ஊ. ஈருள்ளி பலம் க. சீரகம் பலம்
இ கொட்டம் பலம் ஊ சுக்கு பலம் ஊ இலவங்
ம் பலம் ஐ இலக்கையிலே பிடி க அத்திபிஞ்சு
படி வ அரைத்துப் பசுவின்பால் அல்லது கழு
நீர்படியொன்றிற்கலக்கிக் கொடுக்கவேண்டும்.

## ❊ பெருவெதுப்பு நோய்.

* செய்குணம்தீவனம் அரையாய்க்கொண்டுதின்னும்
வயிறுசிறுமந்தங் கொள்ளும் மயிர்ச்சிலிர்க்கும்
கண்கள்கலங்கிக் கண்பட்டைகள் வீங்கும் மே



லே கொதிக்கும் எருகும் மூன்றுநாளொருகிற
போது நுரைக்கும்


* மருந்து—ஏலம் பலம்-ஊ, இஞ்சி பலம்-க, சீரகம்
பலம்-க, வசம்பு பலம்-வ, மிளகு பலம்-வ, வெ
ற்றிலை பலம்-க, இவை ஒன்றுசேர்த்தரைத்துபரு
த்தி விதைப்பால் படி-க,ல் கலக்கிக் கொதிக்க
வைத்து இரண்டு பொழுது கொடுக்கவேண்டும்.

பின்பு சீரகம் பலம்-க, அதிமதூரம் பலம்-க, செங்
கழுநீர்க்கொட்டம் பலம்-க, இலவங்கம் பலம்-வ, ஈ
ருள்ளி பலம்-க, வெதுப்படக்கியிலை பிடி-க, கருவை
க்கொழுந்து பிடி-க, ஆவரம்பூ பிடி-க, பருத்திபூ பிடி
-க, பருத்திபிஞ்சு படி-வ, அத்திப்பிஞ்சு படி-வ,மாத
ளம் பிஞ்சு-ரு, கொடப்பை விதியிலை பிடி-க, திருநா
த்தாளி பிடி-க, உளுந்து படி-இ, இவ்வளவும் ஒன்று
ச்சேர்த்தரைத்து கவளஞ்செய்துக் கொடுக்கவும்.

* அல்லது—அத்திப்பட்டை பலம்.க, ஆவரம் பட்
டை பலம்-க மருதப்பட்டை பலம்.க,நெல்லிப்பட்
டை பலம்-க, குருந்தட்டிசமூலம் பலம்-க, உதலி
பலம்-ங, இவைகளைத்தரித்துப்போட்டுப் பத்துப்
படிதண்ணீர்விட்டுக் கொதிக்கவைத்துப்போதைக்
கு இரண்டுபடி தண்ணீர்காட்டவும்.

இந்தப்படிக்கி

இடதுவிலாவிற்சுடவும்.



## ❋ குடல்வெதுப்பு நோய்

* செய்குணம்—கண்சிவந்து கண்ணீர்வடியும் பீளை சாடும் வாயில்நீர்வடியும எருகும்.

* மருந்து—சருள்ளி பலம்-௨, சமுத்திராபழம் பலம்-௩, சதகுப்பை பலம்-௩, குருந்தட்டி வேர்த் தொலி பலம்-௭, விழுதி இலை பிடி-௧, தென்னம்பூ விரி இவை மருந்துடன்சேர்த்தரைத்து மாங்காய்ப்பிறமாணம் உண்டைத்திரட்டி எருமைமோர் படி-௨,ல் கலக்கிக் கொடுக்கவேண்டும்,

## ❋ ஒழுக்குவெதுப்பு நோய்.

* செய்குணம்—கெகிழ்மாகச்சாணிபோடும் அடிக்கடி சிறுகச்சிறுக எருகும் சவ்வுசவ்வாய்ப்பிச்சும் உடம் பெல்லாந்துடிக்கும்

* மறுந்துவிடத்தலையிலை விழுதியிலைவகைக்கு மாங்காயளவு அரைத்துப்பழமோர் அல்லது பழங்காடி படி-ஒன்றிற் கலக்கிக்கொடுக்கவேண்டும் கொப்பூழில்நின்று வயிற்றைக்கட்டி மேலேசூடிவாங்கிச்.

இநதப்படி

மேலே சுடவும்



## ❋ மூலவெதுப்பு நோய்

* செய்குணம்—நடைதளரும் உடம்புகொதிக்கும் தீவனந்தின்னாது நாக்குவழுவழுக்கும் மேர்சிவந்தி




ருக்கும் அயர்ந்துகிடக்கும் சிறுதுநேரஞ் சாணியிறுகலாகப் போடும் சிறிதுநேரம் எருகும் அதில் துர்நாற்றமுண்டாகும்,

* மருந்து—சீரகமும் கோவைத்தண்டிலையும் சேர்த்தரைத்து மாங்காயளவு உண்டை செய்தொருபடி பசுவின் பாலிற் கொடுக்கவேண்டும்.


* அல்லது—சீரகம் பலம்-௧, வெள்ளைபூடு பலம்-௧, எள்ளு பிண்ணாக்கு பலம்-௫, இவைகளை யிடித்து இத்துடன் முருக்கிலைச்சாறு படி காலும் புழுங்கலரிசி படி-அரையும் வெந்தசாதத்திற் சேர்த்துஉள்ளுக்குக்கொடுக்கவும்.

* அல்லது—கடுக்காய்த்தோடு-௭, நீர்க்கடம்புத்தோல் உலகுப்பக்கொட்டாணாகிய உரலியிலையும் மேற்படி வேரும் வகைக்கு இடித்த தூள் மாங்காயளவு எடுத்துக்கொண்டு இரண்டு படி தண்ணீரிற் போட்டுக் கொதிக்கவைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்,

இந்தப்படி
முதுகிற்
சுடவும்



இந்தப்படி
க்கிநெத்தியிர்சுடவும்



## ❋ மந்தவெதுப்பு நோய்

* செய்குணம்—மயிர்சிலிர்த்திருக்கும் வாயால் நீர்வடியும் தீவனந்தின்னாது தூங்கிவிழும்.


161-89



* மருந்து—அரைப்படி எள்ளையிடித்து மாங்காயளவு வெண்ணெயிற் குழப்பி அல்லது ஒருபடி பாலிற் கலக்கிக்கொடுக்கவேண்டும்.

* அல்லது—மிளகு பலம் க வெள்ளைப்பூடு பலம் உ அகத்திச்சாறு படி வ நெய் படி வ சேர்த்துக் கொடுக்கவேண்டும் குடிக்கவெந்நீர் விடவும்

இந்தப்படி விலாவிற் சுடவும்,



### ✳ அழல்வெதுப்பு நோய்.

* செய்குணம்—உடம்புகொதிக்கும் மேலெல்லாந் தடித்துச் சிரங்குபோலிருக்கும் எருகும்.

* மருந்து—சதகுப்பை பலம் ௭. அத்திப்பட்டை அகத்திப்பட்டை அதிமதுரம்தென்னம்பூவிரிவகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி காடியிற் கொடுக்கவேண்டும்.

உ. இதுவுமது

* செய்குணம்—கண்சிவந்திருக்கும் பீளைசாடும் கண்ணீர்வடியும் தலைகவிழ்ந்து நிற்கும் மேலெல்லாங் கொப்புளமாக விருக்கும் தலைநடுக்கும் சரீரம்பரப்பெடுக்கும் செருமும் நாக்கில்காசுபோற் றடிக்கும்.

* மருந்து—கருப்பூரவல்லியிலைச்சாறுபடி வ தாளியிலைச்சாறுபடி வ கற்றாழஞ்சோறுபடி வ குருந்தட்டியிலை குளிதாமரையிலை அரைத்தது வகைக்குமாங்காயளவு சீரகம் பலம் க அதிமதுரம் பலம் க ஓமம் பலம் க, ஏலம் பலம் க சுருள்ளி பலம் உ அரைத்துஇரண்டுபடி காடியிற்கொடுக்கவேண்டும்.



* அல்லது—புல்லுருவி அரைத்தது மாங்காயளவு வாழைப்பழம் உ௰ இளனீர்த்தண்ணீர் படியிரண்டிற் கொடுக்கலாம்,


௩. இதுவுமது

* செய்குணம்—மேல்கொதிக்கும் உடம் பெங்கும் பொத்திட்டுவாரிவிடும் முதுகையும் உடலையுஞ்சுழித்துச்சுத்து வாங்கும் நிலைநின்றுகிடந்தகிடையிற் கிடக்கும்.

* மருந்து—நவ்வற்பட்டை அத்திப்பட்டை மருதம் பட்டை குருந்தட்டிவேர் வகைக்குப் பலம் ௫ இடித்து காடியில் ஊறப்போட்டிடித்துக்கொடுக்கவேண்டும்,

* அல்லது—கட்டுக்கொடியிலைச்சாறு படி-வ, தாளியிலைச்சாறுபடிவ கரி முசுட்டையிலைச்சாறு படி வ பருத்திவிதைப்பால் படி-இ எருமைப்பால்படி க சேர்த்துகொடுக்கலாம்.


இந்தப்படிக்கு இடதுபக்கம் சூடுபோடவும்



## ✻ இரத்தவெதுப்பு நோய்.

* செய்குணம்—இரத்தமாகப் பீசும் ஆடை போலே அந்தஇரத்தத்துக் குள்ளே கலந்திருக்கும் மீன் செதிளாறும் வயது இரையும்,

* மருந்து—அதிமதூரம் பலம்-உ, இலவங்கப்பட்டை பலம்-உ, சீரகம் பலம் க, சருள்ளி பலம்-உ, ஏலம் பலம்-க, மாதளங்காய் உரு-ய, ஆவரங்கொழுந்து குளிதாமரையிலே இவ்விரண்டும் முந்தி அரைத்து மாங்காயளவு சேர்த்துபிறகுஎல்லா ஒன்றுபரைத்து கல்லெண்ணெ படி வ, கோழிமுட்டை உரு-உய, சேர்த்து இரண்படி காடியிற் கலக்கிகொடுக்கவும்.



இக்தப்படிக்கி முதகிற்கூடு போடவேண்டியது

உ இதுவுமது,

* செய்குணம்—இரத்தமாகப்பீசும்

* மருந்து—விளாம்பிஞ்சு உரு-ய, அத்திப்பட்டை பலம்-ரு, மயிர்மாணிக்கம் பலம்-வ, வட்டத்துத்தியிலே பிடி-ரு, உடங்கொடி அல்லது இண்டங்கொடி பிடி-ரு, இவைகளைபிடித்து ஒருபடிமோ



ரிற் கலக்கிகொடுக்க வேண்டும் அல்லது விழுதிலே பிடி-ச, கலைத்திப்பிஞ்சு பலம்-ய, இரண்டும்பிடித்து -க-படி காடியிற் கொடுக்கவும்,

## ✻ கடுவெதுப்பு நோய்.

* செய்குணம்—வாயில்நீர்வடியும் செவிதாழும் தீவனந்தின்னாது குன்னிநிற்கும் சருகும் அதில் இரத்தமுஞ்சலமுந் துண்டந்துண்டமாகவுஞ் சவ்வுசவ்வாகவும்விழும் அதில்துர்கந்தவாசனையுண்டாகும் தலைபப்பூமியிற்போட்டுக் கொண்டிருக்கும் நிற்கமாட்டாது,

* மருந்து—வெந்தயம் பலம்-ஒ, சீரகம் பலம்-ஒ, அதிமதூரம் பலம்-இ, இலவங்கப்பட்டை பலம் ஒ சருள்ளி படி-க ஒ, கொடிட்டை ஆறுக்கீரை தென்னம்பூவிரி வகைக்கு அரைத்துமாங்காயளவு கல்லெண்ணை படி-மூன்றுமாகாணி, சேர்த்து கொடுக்கவும்பிறகு அரிசிக்கூழ்காய்ச்சி மத்தியானவேளையில் பாலமாராமர் கொடுக்கவும்,

## ✻ சீதவெதுப்பு நோய்

* செய்குணம்—சாணியுடன் சலங்கலந்துவிழும்,

* மருந்து—வசம்பு பலம் அரைக்கால் எள்ளுபடி -ஒ இடிசது கனிழ்துமபைச் சாறுபடி காடிசேர்த்துக் கொடுக்கவேண்டும்.

வேறு

எச்சவாயி [illegible] மூஞ்சோறுபோல் வடித்துகொ[illegible] [illegible]கலகடுக்கும்.

நிவர்த்தி.

முருக்கி[illegible] படி க

| | | |
|---|---|---|
| காடி | ,, | ௮ |
| வெளிச்சிப்பட்டை | பலம் | ௨ |

மேற்படி பட்டையை அரைத்துக் காடியிலும் கலக்கிப்புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கிடாது விலாவிற் சுடவும் ௨௫

## ❊ பிரளிவெதுப்பு நோய்

❊ செய்குணம்—சாணியுடனே இரத்தங்கலந்துவிழும்

❊ மருந்து—தென்பூவிரியுங்குளிதாமரையிலையும் இவ்ரண்டும் மாங்காயளவு சேர்த்திடித்துக் கொடுக்கவும்.

❊ அல்லது—தேக்கம்பட்டைச்சாறு படி-௨, தேங்காய்ப்பால் படி-௨, பசுவின் மோர்படி-௪, இம்மூன்றுஞ்சேர்த்து ஊறவைத்திருந்து மறுநாட் கொடுக்கலாம்அல்லது நிலவேம்பு மாங்காயளவு அரைத்து ஒருபடி காடியிற் கொடுக்கலாம்.

## ❊ சிதகழிச்சல் நோய்

❊ செய்குணம்—இரத்தமுஞ் சலமும் சாணியுடன்விழும்.

❊ மருந்து—ஏலம் பலம்-௫, கிராம்பு பலம்-௫, அதிமதுரம் பலம்-௫, இலவங்கப்பட்டைபலம்-௨, பூலாத்திக்கோல் எலுமிச்சங்காயளவு மருந்துடன் சேர்த்தரைத்தது எருமைப்பால்-படி அரையிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

❊ அல்லது—சாதிக்காய் உரு-௨, சாதிபத்திரிபலம்-௫ கிராம்பு பலம்-௫, மாசிக்காய்பலம்-௫, இலவங்கப்பட்டை பலம்-௨, சீரகம் பலம் ௨, மிளகு பலம்



-௫, வெற்றிலை பலம்-௧, இவைகளையரைத்துமாங்காயளவு வெண்ணெயுஞ் சேர்த்துக் கொடுக்கலாம் அரைபலமோரு தட்டிப்போட்டு வெந்நீர் வைத்துக் குடிக்கவிடவும்.

### ௨ இதுவுமது

❊ செய்குணம்—இரத்தமுஞ் சலமும் சாணியுடன் விழும் கொம்பினடிப்பக்கங் கொஞ்சம்வீங்கியிருக்கும் இந்தவியாதிமழைக்காலம் ஆகையாலும், பனிக்காலமாரம்பத்திலும்வேனற்காலத்திலுமுண்டாகும்.

❊ மருந்து—மாட்டின்தேசமுழுமையுங்கன்றுய்வேது போடுவது உத்தமமாயிருப்பதுந்தவிர அரைக்காற்படிவிளக்கெண்ணெயுஞ்சுகபேதியாகக்கொடுக்கவேண்டும்அவசியமிருந்தா லடிக்கடி கொடுக்கலாம்.

### ௩ இதுவுமது

❊ செய்குணம்—சதைசதையாய்ப் பீச்சிக்கழியும்.

❊ மருந்து—ஒருபல மிளகை யரைத்து நல்லெண்ணெ படி-௲, தாழைவிழுதுச்சாறு படி-௧, சேர்த்துக் கலக்கிக்கொடுக்கவேண்டும்.

### ௪ இதுவுமது,

❊ செய்குணம்—சாணத்துடன் இரத்தம் விழும் சலம் விழும்சவ்விழும் முக்கும்,

❊ மருந்து—மிளகுப்பருமனுக இருக்கிறஅத்திப்பிஞ்சு படி-௧, ஆவாரம்பூபிடி-௨, பூலாத்திவேர்த்தொலிபிடி-௪, பச்சரிசிமாவு படி-௰, இவைகளைநன்று யரைத்துகழுநீரிற்கலக்கிக்கொடுக்கவேண்டும்.

## * இரத்தக்கழிச்சல் நோய்

* செய்குணம்—இந்தவியாதி யிருந்தாற்போலிருந்து உண்டாகும் சாதாரணமாய்க் கதகதப்புடனே நடுக்கங்காணும் செவிதாழும் ஆரம்பத்தில்வெருகுப்பிரகுச்சமும்இரத்தமுங்கலந்தகுழம்பாகத் துர்க்கந்தமாகக்கழியும் சிலசமையத்திற் சவ்வு போலவுங்கலந்திருக்கும் இரத்தமாகவும்பீச்சும் கழியும்போது மாடுகள்வெகுவருத்தப்படும்பிறகு கொஞ்சநேரவரையில் முக்கிக்கொண்டிருக்கும் அடிக்கடி அடிவயித்தில்கடுநோயுண்டாகித் தன்பக்கத்தை மாடுசுற்றுமுற்றும் பார்க்கும் பல்லைக் கடிக்குங் கூடபிடும் முதுகை வளைத்துக் கொண்டு நிற்கும்மூச்சசீக்கிரமாய்வரும் நாடிபடபடத்து அடிக்கும்.

* மருந்து—மலம் இளகியிருந்தபோதிலும் பேதி மருந்து கொடுப்பது உத்தமம் அதற்குசிற்றாமணக்கெண்ணெய் படி-வ, அபின் ரூபாயிடை-வ, சேர்த்துக்கொடுக்கவேண்டும்பின்பு வேண்டி யிருந்தால் மறுநாட்காலையிலும்இதைப்போலும்கொடுக்கலாம் இதுவுமல்லாமல்நாள் ஒன்றுக்கு மூன்று தரம் அபின் ரூபாயிடை-வ, வால்மிளகுத்தூள் ரூபா யிடை-உ௫, நெய் படி-வ, இம்மூன்றுஞ் சேர்த்துக்கொடுக்கவேண்டும் அடிவயிற்றில் சூடானஒத்தடம்போடவேண்டியது இளஞ்சூடாயிருக்குபடி - ௯ படி வெந்நீரை பீச்சாங்குழலினால் ஆசனத்துக்குள் அடிச்சால் அதிககுணமுண்டாகும் மகினிவெகுசாக்கிறதையாய்ப்பார்க்கவேணும் பிசைந்த விடும்பச்சரிசிக்கஞ்சியும்பசுமையானயிளம்புல் லுந்தான்கொடுக்கலாம்



* அல்லது—இந்தவியாதி கண்டவுடனே கற்படிநெய்யில் கால்ரூபாயிடை அபினைச்சேர்த்துக்கொடுக்கவேண்டியது பின்பு எட்டு மாதளம் பிஞ்சை இரண்டாக பிளந்து அதில் நாலுசாதிக்காயை இரண்டாகவெட்டி உள்வைத்துப் பொருத்தி முள்ளிலுற்றைத்து நெருப்பில் வேகவைத் தெடுத்து அதை மோர்விட்டுஅரைத்து அதில் காலேமாகாணிரூபாயிடை அபினியுஞ்சேர்த்து ஒருபடி மோரிற்கலக்கிக்கொடுக்கவேண்டும் இந்தப்படி காலை மாலைகொடுப்பதுந்தவிர சமையத்துக்குத் தக்கபடிநாள்ஒன்றில் மூன்றுபொழுதுங் கொடுக்கலாம்விலாவிலும் வயிற்றிலும் வெந்நீரொத்தடம் போட்டுபிறகு அரிசிக்கூழ்க்காச்சி ஆகாரங்கொடுக்க வேண்டும் குடியாவிட்டாற் புகட்டவேண்டியது இந்தவியாதிஆரம்பத்தில் பன்றிநெய் படி-வ, கொடுத்தால் அனேகமாய்க் குணங்கண்டிருக்கிறது.

கதலிவாழைப்பழமும் பசுவின்நெய்யுங்கொடுத்தும் அனேகமாய்க் குணங்கொண்டிருக்கும்.

## * கழிச்சல் நோய்.

இந்தவியாதி பெருநோயின் காரணத்தால்உண்டாகாமலிருக்கிறபட்சத்தில்முதல்பசைக்கிப்பாலுண்டாகிற இளம்புல்லில் மேய்கிறதினாலுண்டானது.

* மருந்து—நோகமுழுதும் வேதுபோட வேண்டியதுந்தவிர காசுக்கட்டி ரூபாயிடை அரைவேஅரிக்கால், கிராம்பு ரூபா யிடை காலேமாகாணி, மிளகு ரூபாயிடை காலேமுன்று மாகாணி மரைமாகாணி சுக்கு ரூபாயிடை காலேமாகாணி இவைகளைப் பொடிச்செய்துஅரைப்படி வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும். வியாதிஅனேக

கமாய்க் குணமானபின்பு காட்டுக் கொன்று இலை பலம்-ஈ, அதைத்து அஞ்சுபடி எலுமிச்சம் பழச்சாற்றிற் கலக்கி அன்றுடம் ஒருபடி வீதங் காலமே கொடுக்கவேண்டியது.

### கிராணிக்கழிச்சல் நோயின் குணம்

தீபனங் குறைப்பித்தலாகும்.

நிவர்த்தி.

பிரண்டைத்தண்டு ஒரு பிடி
உப்பு ஒரு பிடி

இவையிரண்டையுமிடித்து கவளம்போடச்சொஸ்தமாகும்

கழியிறமாட்டுக்கு,


லேஹ,

| | |
|---|---|
| வரப்பூலாவேர் | தென்னம்பாளை |
| கடப்பங்கொழுந்து | கருவேப்பிலை |
| உளுத்தமாவு | |

இவைகளையரைத்து நாழிபசுவின்பாலிற்கரைத்துக்கொடுக்கக்குணமாகும்.

இந்தப்படிக் கிடந்து

விளாவிற் சுடவும்,



### * துர்ப்பல வியாதிநோய்.

* செய்குணம்—தேகத்திற் கொப்புளங்களுண்டாகும் சிலசந்தர்ப்பத்தில் மேற்படி கொப்புளங்கள் ஆரம்பிப்பதும் பிரமாணக்கூடவிருக்கும் சிலவி



ஷயத்தில் மாட்டின்தோல்மட்டுஞ் சிவந்து ரோமமுஞ் சிலிர்த்திருக்கும் பலமான மழைகளில் நனைந்தாற் கழிச்சலுண்டாகும் தலையுங்காதுகளுஞ்சாய்ந்து இரையெடாமற் சோம்பலாயிருக்கும்.


* மருந்து—பத்துரூபாயிடை கரியபவளத்தைக் காற்படி வெந்நீரிற் கரைத்துக் கொடுக்க வேண்டியதுந் தவிர சாணியைத்தண்ணீரிற் கொழுக்கக் கரைத்துக் காய்ச்சித் தேகத்தில் வேதும் போடவேண்டியதுமறுநாள்முதல் * கியாலமல்நெல்லிடை 60 சப்நிட்ரெட் ஆப் அண்டிமோனி நெல்லிடை 40 சவுக்காரம் ரூபாயிடை கவ. இம்மூன்றையுஞ் சேர்த்து உண்டைசெய்து உள்ளுக்கு கொடுக்கவேண்டியது இந்தப்படி ஒன்றுவிட்டு மறுநாளாக இரண்டுவாரங் கொடுக்க வேண்டும் இதைகொஞ்சந் தின்கிறபட்சத்திற் பத்துரூபாயிடை வேப்பம்பட்டையை ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைப்படிதண்ணீராகும்படி வற்றச்செய்து அதில் ரு. ரூபாயிடை உப்பைச்சேர்த்துக் கொடுக்கவேண்டியது.

இந்தவியாதி அநேகமாய்க் குணமானபின்பு கொடுக்க வேண்டிய மசாலா கஸ்தூரிமஞ்சள் பலம்-கூ, ஈருள்ளி படி-கஇ, உப்பு படி-ரு. இவைகளையிடித்து இருபதுசீதாப்பழத்தைத் துண்டு துண்டாக நறுக்கிக் கூடச்சேர்த்து ஒருபெரிய பானையிற்போட்டுமூடி நாலுவாரம் பூமிக்குட் புதைத்திருந்து அப்பாலெடுத்துவைத்துக்கொண்டு வழுநாள் காலமே காலமேஒரு கைகொண்டமட்டு மெடுத்துக் கொடுத்துவரவும்.

* கியாலமல் என்பது ஒருவித இங்கிலீஷ் மருந்து

* மற்றொருவகைமசாலா—சோற்றுகற்றாழை மடல்-௪. மஞ்சள் பலம்-௩. வேப்பிலை படி-௨. இவைகளை யிடித்து உப்பு படி-௨. கூடசேர்த்து நாலுபாக ஞ்செய்து அன்றாடம் மிரண்டு சபா மூன்று அல்லது நாலுநாளைக்குக் கொடுக்கவேண்டியது.

இந்தப்படிக்கி மேலேசூடுபோடவும்



## * புள்ளிருந்தமாட்டின் குணம்.

கால்நடை யசந்துபோகும் மாடு உட்கார்ந்தாப் போலவிருக்கும்.


நிவர்த்தி.

சிறுங்கொத்தானிலை
நாயுருவி
தழுதாழையிலை
எருதுசாணம்

இவைகளை யொருமிக்க யிடித்து இரண்டு படி சலம் விட்டுக்காச்சி மேலே யடித்து பூச சொஸ்தமாகும்.

இந்தப்படி

இருபுறத்திலும் சுடவும்



மாட்டுவாகடம் முற்றிற்று.

மாட்டுவாகடத்தின் அட்டவணை.


| பெயர். | பக்கம். |
| --- | --- |
| தெய்வவணக்கம் | ௧௩ |
| மாடுகளின் இலக்ஷணம் | ௧௩ |
| மாடுகளுக்குரிய குற்றங்களும் அடையாளமும் | ௧௬ |
| எருதுப்புரை | ௨௪ |
| * மாட்டுக்குதினஞ் செய்யவேண்டியநியமம் | ௨௫ |
| தண்ணீர்குடிக்கச் செய்யத்தன்மை | ௨௬ |
| தீனி | ௨௭ |
| விசேஷதீவனம் | ௨௮ |
| எருதுகளுக்கு போடவேண்டிய தீனியின் அளவு | ௩0 |
| குளிப்பாட்டல் | ௩௧ |
| வெள்ளைப்பூண்டுமசாலா | ௩௨ |
| இஞ்சிமசாலா. ஆட்டுதலைமசாலா | ௩௩ |
| பெரும்பூசினிக்காய்மசாலா | ௩௫ |
| உடும்புமசாலா. வெள்ளுச்சிமசாலா | ௩௬ |
| சிரணமசாலா | ௩௭ |
| உட்னசாந்திமசாலா | ௩௮ |
| நல்லபாம்புமசாலா. குமட்டிக்காயுருகாய் | ௩௯ |
| எருதுகளுக்குகொடுக்கும் லேகியம் | ௪0 |
| அலரிவேர்லேகியம். சவாரிலேகியம் நிஜாம்முறை | ௪௨ |
| அதிகலாகிரியானுல் முரிப்புவகை | ௪௩ |
| லேப்பு | ௪௪ |
| அப்படிக்குளிப்பாட்டின மறுநாள் அல்லது இரண்டாநாள் கொடுக்கும் மசாலா | ௪௪ |
| கண்டங்கத்திரிக்காய்லேபு | ௪௫ |
| வாய்கழுவுதல் | ௪௬ |
| புல்லுந்தண்ணீரும்ஒதிகொடுக்கசக்கரம் | ௪௮ |
| தண்ணீர்ஒதிகொடுக்கமந்திரம் | ௪௮ |
| அடைப்பன்நோய் | ௪௯ |
| முட்டடைப்பன்நோய் | ௫௪ |
| முன்னடைப்பன்நோய் | ௫௫ |
| முன்னடைப்பன்பின்னடைப்பன் | ௫௮ |
| பின்னடைப்பன்நோய் | ௫௯ |

| பெயர். | பக்கம். |
|---|---|
| ஊதடைப்பன்நோய் | ௬௨ |
| கொட்டடைப்பன்குணம். செஞ்சடைப்பன்நோய் | ௬௭ |
| உள்ளடைப்பன்நோய் | ௭௦ |
| நொளியடைப்பன்நோய். சங்கடைப்பன்நோய் | ௭௧ |
| சதையடைப்பன்நோய் | ௭௨ |
| சந்தடைப்பன்நோய் | ௭௩ |
| செருக்கடைப்பன்நோய் | ௭௪ |
| மூக்கடைப்பன்நோய். வரட்டடைப்பன்நோய் | ௭௫ |
| விரட்டடைப்பன்நோய் | ௭௬ |
| சரட்டடைப்பன்நோய். திரட்டடைப்பன்நோய் | ௭௭ |
| காத்தடைப்பன்நோய் | ௭௮ |
| குர்ட்டடைப்பன்நோய் | ௭௮ |
| தாக்கடைப்பன்நோய் | ௭௯ |
| நாக்கடைப்பன்நோய் | ௮௦ |
| கதவடைப்பன்நோய் | ௮௧ |
| மந்தடைப்பன்நோய் | ௮௩ |
| நீரடைப்பன்நோய் | ௮௩ |
| கல்லடைப்பன்நோய் | ௮௪ |
| ஈளைமூக்கடைப்பன்குணம் | ௮௫ |
| மூக்கடைப்பன்நோய் | ௮௬ |
| தவளைமூக்கடைப்பன்குணம் | ௯௦ |
| மூக்குதண்டடைப்பன் | ௯௦ |
| சகலஅடைப்பனுக்குமருந்து | ௯௧ |
| ஈரல்முட்டியின்நோய் | ௯௨ |
| தடிஈரல்முட்டிநோய் | ௯௪ |
| கிராமுட்டியின்குணம் | ௯௬ |
| திரட்டியீரல்முட்டிநோய் | ௯௭ |
| சுழத்திநோய் | ௯௮ |
| தவளைநோய் | ௱௩ |
| தேளைறமுட்த்தின்நோய் | ௱௪ |
| கறளைநோய் | ௱௭ |
| அங்கிரிநோய் | ௱௯ |
| உலர்த்திநோய் | ௱௧௦ |
| ஈரலுலர்த்திநோய் | ௱௪௦ |



179




| பெயர். | பக்கம். |
|---|---|
| எருஉலர்த்திநோய் | ௱௧௧ |
| வறட்சிநோய் | ௱௧௧ |
| பெருநோய் | ௱௧௨ |
| பெருவெக்கைநோய் | ௱௧௫ |
| குன்னிநோய் | ௱௧௬ |
| குரல்நோய் | ௱௧௮ |
| குரல்முட்டிநோய் | ௱௧௮ |
| குதல்வளைதாக்கன்நோய் | ௱௧௯ |
| குடல்நோய் | ௱௧௯ |
| குடல்வாதநோய் | ௱௨௦ |
| குடற்பருவன்நோய் | ௱௨௧ |
| குடல்முருக்குநோய் | ௱௨௧ |
| குலைநோய் | ௱௨௨ |
| குலைப்பன்நோய் | ௱௨௩ |
| குடைநோயின்குணம் | ௱௨௩ |
| குட்டநோய் | ௱௨௪ |
| குழவிகடிநோய் | ௱௨௫ |
| கொடுநோய் | ௱௨௫ |
| கொலநோய். புலிநோய் | ௱௨௬ |
| புலியன்நோய்குணம் | ௱௨௭ |
| சிறுபுன்றுநோய் | ௱௨௯ |
| சம்புரிநோய் | ௱௨௯ |
| கருங்காலிநோய் | ௱௩௦ |
| மகாவிருட்டிநோயின்குணம் | ௱௩௧ |
| விருட்டிநோய் | ௱௩௧ |
| விருட்டிபெருநோயின்குணம் | ௱௩௪ |
| பன்றிநோய் | ௱௩௩ |
| பன்றித்தாக்கன்நோய் | ௱௩௬ |
| பன்றிகுருக்கைநோய். பன்றிமுட்டிநோய் | ௱௩௭ |
| நன்குலைநோய் | ௱௩௮ |
| காய்ச்சர்நோய் | ௱௩௮ |
| அஸ்திசுரத்தின்நோய் | ௱௩௯ |
| ஈரலைப்பற்றியகாய்ச்சல்நோய் | ௱௪௩ |

# மாட்டுவாகடத்தின் அட்டவணை.


| பெயர். | பக்கம். |
|---|---|
| மந்தத்தைச்சார்ந்தகாய்ச்சல்நோய் | ௱௪௨ |
| சன்னிநோயல்லதுகாய்ச்சல்நோய் | ௱௪௩ |
| சன்னிநோய் | ௱௪௪ |
| மூளையைப்பற்றியசன்னிநோய் | ௱௪௭ |
| முகவாதசன்னிநோய் | ௱௪௮ |
| வலிப்பின்நோய் | ௱௪௯ |
| காய்புரிநோயின்குணம் | ௱௫௦ |
| நாய்வலிப்புநோயின்குணம் | ௱௫௦ |
| நரம்புவலிப்புநோய் | ௱௫௧ |
| கண்டவலிப்பின்நோய். கொடிவலிப்பின்நோய் | ௱௫௨ |
| குலைகுடனிவலிப்பின்நோய் | ௱௫௩ |
| திருக்குவலிப்பின்நோய் | ௱௫௩ |
| குதிரைவலிப்பின்நோய் | ௱௫௪ |
| ஆனைவலிப்பின்நோய் | ௱௫௫ |
| சன்னிவலிப்பின்குணம். முசல்வலிப்பின்நோய் | ௱௫௭ |
| வெதுப்புநோய் | ௱௫௮ |
| தீராதஎருக்கல் | ௱௬௧ |
| சீதளவெதுப்புநோய் | ௱௬௨ |
| சில்வெதுப்புநோய். பெருவெதுப்புநோய் | ௱௬௨ |
| குடல்வெதுப்புநோய் | ௱௬௪ |
| ஒழுக்குவெதுப்புநோய் | ௱௬௪ |
| மூலவெதுப்புநோய் | ௱௬௪ |
| அழல்வெதுப்புநோய் | ௱௬௫ |
| இரத்தவெதுப்புநோய் | ௱௬௮ |
| கபவெதுப்புநோய் | ௱௬௯ |
| சீதவெதுப்புநோய் | ௱௬௯ |
| பிராணிவெதுப்புநோய் | ௱௭௦ |
| சீதக்கழிச்சல்நோய் | ௱௭௦ |
| இரத்தக்கழிச்சல்நோய் | ௱௭௨ |
| கழிச்சல்நோய் | ௱௭௩ |
| கிராணிக்கழிச்சல் நோய் | ௱௭௪ |
| துர்ப்பலவியாதிநோய் | ௱௭௪ |
| புள்ளிருந்தமாட்டின்குணம் | ௱௭௬ |



| மாதம். | பற்களால் ஆயுளறியும் மீ டாப்பு. | வருடம் | வியஞ்சனம். |
|---|---|---|---|
| | | ௧ | ,, |
| ௧ | முதற்கீட்பல்லிரண்டு முளைக்கத்துவக்கும் | | |
| | | ௨ | ,, |
| ௨ | மேற்படிபற்கள் பூரணமாகும் | | |
| ௩ | நடுப்பல்லிரண்டுமுளைக்கத்துவக்கும் | ௩ | ,, |
| ௪ | மேற்படிபல்லிரண்டும்பூரணமாகும் | ௪ | ,, |
| ௫ | பாரிபட்சமென்கிறகடைப்பல்முளைக்கும் | ௫ | ,, |
| ௬ | மேற்படிபல்பூரணமாகும் | ௬ | கிருட்டிணம். |
| ௭ | நடுக்கீட்பல்லிரண்டும்வெண்மையாகும் | ௭ | ,, |
| ௮ | மேற்படிபற்களுக்குமேற் பல்லிரண்டும் வெண்மையா [கும். | ௮ | ,, |
| | | ௯ | அருணம். |
| | | ௰ | ,, |
| ௯ | நடுக்கீட்பல்லிரண்டும் வெண்மையாகும் | | |
| ௰ | நடுமேற்பல்லிரண்டும்வெண்மையாகும் | ௧௧ | ,, |
| ௰௧ | பாரிபட்சமென்கிறகடைகீட்பல்லிரண்டும் வெண்மை [யாகும். | ௧௨ | சுக்கிலம். |
| | | ௧௩ | ,, |
| ௰௨ | மேற்படி கடைமேற்பலலிரண்டும் வெண்மையாகும். | ௧௪ | ,, |
| | | ௧௫ | காசம். |
| | மாதடாப்பு முற்றிற்று, | ௧௬ | ,, |
| | | ௧௭ | ,, |

## பற்களால் ஆயுளறியும் ஊ டாப்பு.

கீழ்மேற்பன்னிரண்டுபற்களும்வெண்மையாகும்
மேற்படிபற்கள்பனிரண்டுங் காவிவர்ணமாகும்

முதற்கீட்பல் லிரண்டும,
நடுகீட்பல் லிரண்டும், } விழுந்துமுளைக்கும்.

பாரிபட்சமென்கிறகடைப்
பல் லிரண்டும். }

முதற்பல் லிரண்டிலும்,
நடுப்பல் லிரண்டிலும்,
கடைப்பல் லிரண்டிலும், } கறுப்புநிறமாய் நீண்ட கோடாக விருக்கும்,

முதற்பல் லிரண்டிலு,
நடுப்பல் லிரண்டிலும்,
கடைப்பல் லிரண்டிலும், } மஞ்சள் நிறமாய்த்தோன்றும்.

முதற்பல் லிரண் டிலும்,
நடுபல் லிரண்டிலும்,
கடைப்பல் லிரண்டிலும், } விபுதிநிறத்தில் முக்கோணமாய்க்காணும்.

முதற்பல் லிரண்டிலும்,
நடுப்பல் லிரண்டிலும்,
கடைப்பல் லிரண்டிலும் } பச்சைநிறத்திலறுகோணமாய்க் காணும்.

| வருடம். | வியஞ்சனம். |
|---|---|
| கஅ | மட்சிகம். |
| ககூ | ,, |
| உ௰ | ,, |
| உக | சங்கம். |
| உஉ | ,, |
| உ௩ | ,, |
| உச | உலூகம். |
| உரு | ,, |
| உசு | ,, |
| உஎ | கம்பம். |
| உஅ | ,, |
| உகூ | ,, |
| ௩௰ | பதனம். |
| ௩க | ,, |
| ௩உ | ,, |

## பற்களால் ஆயுளறியும் ஊப டாப்பு.

முதற்பல் லிரண்டிலும்,
நடுப்பல் லிரண்டிலும்,
கடைப்பல் லிரண்டிலும், } மூலவர்ணமாகப் புள்ளி விழும்.

முதல்
நடுப்பல் லிரண்டிலும்,
கடை. } சங்குதுண்டுபோற் சவுக்கமாயிருக்கும்.

முதல்
நடுப்பல் லிரண்டிலும்,
கடை } பல்விலகிக் குழிவிழும்.

முதல்
நடுப்பல் லிரண்டிலும்,
கடை } அசைவுகொடுக்கும்.

முதல்
நடுப்பல் லிரண்டிலும்,
கடை } விழஆரம்பிக்கும்.

வருடடாப்பு-முற்றிற்று

உ

கடவுள் துணை

# அசுவசாஸ்திரம்.

## தேயங்களின் பயன்.

1 வது, இருகுதேயத்தில் இருகு அறபென்றும், இருகு அஜமென்றும், இரண்டுபிரிவுண்டு. அதில் இருகு அறபெனும்பிரிவில், காஷ்கரெனும் பட்டணத்தைச்சேர்ந்த நசுதெனுமூரிற் சனிக்கும் குதிரைகளானது சகலதேசத்துக் குதிரைகளிலுமிகுந்தபிரபல்மானதாயும், யோக்கியமான குதிரைகளுக்கு வேண்டிய சகல நற்குணங்களோடும் இந்திரியக்கட்டுள்ளதாயும், நல்ல நடத்தையை உடையதாயும், குற்றமற்ற நடையை உடையதாயும். காந்தியை உடையதாயும், தயிரியமுள்ளதாயும், விவேகமுள்ளதாயும், உயித்தியங்களிலெதிர்த்தோடுஞ் சத்தியை உடையதாயும், நன்றியறிதாயும், தன்னெசமானைக்காப்பாற்றுங் குணத்தையுடையதாயும், சவாரிசெய்பவன் சவாரிக்கு தகுந்த நடையை உடையதாயும, இன்னமிதைப்போலொத்த அனேக நற்குணங்களைப்பொதிந்ததாயு மிருக்குமென்றும், ஆகையாலிந்தக்குதிரைக்கொப்பான குதிரைகளில்லையென்றும், இன்னுமிந்தக் குதிரைகளுக்கு வயது ஐம்பது அல்லது அறுபதுவரையி லிருக்குமென்றும், இதன்விலையை இவ்வளவென்று மதிக்கக்கூடாதென்றும் சாஸ்திரிகள் சாஸ்திரங்களிற்சொல்லியிருக்கின்றார்கள்.

2-வது, இருகு அஜமெனும் பிரிவில் குளசானென்கிறதேசத்துக்குட்பட்ட சீஸ்தானென்னு பூரில்சனிக்குங்குதிரைகளும், மேற்சொன்னசகலசற்குணங்களையும்பொதிந்ததாயிருந்துமிதை இரண்டாந்தரமென்று சொல்லப்படும்.

3-வது, அறபுதேசத்துக் குட்பட்ட அதனென்னு மூரிற்சனிக்குங் குதிரைகளும், குறசானென்கிறதேசத்தைச்சேர்ந்த குதிரைகளும் அதிக பராக்கிரமத்தையுந்தயிரியத்தையு முடையதாயிருக்கும்.

4-வது, காபுல் கந்தாரென்னுந் தேசத்துக்குதிரைகளானது, அதிக சுருசுருப்புள்ளதாயும், வேகத்தையுடையதாயுமிருக்கும். ஆயினும், முல்த்தானென்னுந் தேசத்துக்குதிரைகளானது உருவஞ்சிறியதாகத்தோன்றினும அதிகபலத்தையுடையதாயிருக்கும்.

5-வது காபூலைச்சேர்ந்த காடுகளில் இலக்கிசேசங்கலென்றொருகாடுண்டு, அந்தக்காட்டில் சஞ்சரிக்கும் குதிரைகளானது மிருதுசிலாக்கியமும் புகழ்ச்சியுமுடையதாகவிருக்கும்.

6-வது, இந்துஸ்தான் தேசத்தைச்சேர்ந்த மான்தேசு கான்தேசு என்னுமூரில் சனிக்குங்குதிரைகளும் அப்படியேயிருக்கும்.

7-வது, கெங்கா ஜம்நா வென்னும் நதியோரத்தில் கெங்காத்திரி மியமாத்திரி என்னுமூரில் சனிக்குங்குதிரைகள் மிருந்த கிலாக்கிக்கப்பட்டதாகவிருக்கும்.



8-வது, கச்சிதேசந்துக் குதிரைகளானது அழகிலும், பலத்திலும, ஓட்டத்திலும் அதிக பிரபலமானது. இதை அறபிராச்சியத்துக் குதிரைகளுக்குச் சமானமென்று சொல்லுவார்கள்.

9-வது, காட்டேவாரிற்சனிக்குங்குதிரைகளும்மேற்சொன்னபடியேயிருக்கும்,

10-வது, கோலாரென்னு பூரிற் சனிக்குங் குதிரைகளும், கேப்பு குதிரைகளும் உதவமாட்டாது

11-வது, மட்டங்களில் பைகோமட்டமுதற்றரமாயும், அச்சுமட்ட மிரண்டாந்தரமாயும், பழனிமட்டமூன்றாந்தரமாயுஞ் சொல்லுவார்கள்.

12 வது, தட்டுவாணிகளில் மராட்டியதேசத்துத் தட்டுவாணிகளை முதற்றரமென்றுசொல்லப்படும்

## குதிரை சனிக்கும் வேளைப்பயன்.

குதிரை இரவில் முதற்சாமத்தில் சனித்தால் அதனால் எஜமானுக்கு சம்பத்துண்டாய் நாளுக்கு நாள குதிரைலாயங்களில் குதிரைகள் நிறைந்து அதிகபாக்கியத்தைக்கொடுக்கும். 2-ம் சாமத்தில்சனித்தால் அதினால் எஜமானுக்கு நல்லயோகத்தையுடையகுமாரன்பிறப்பான். 3-ம் சாமத்தில் சனித்தால் அதினால் எஜமானுக்கு நாளுக்குநாள் அதிகபாக்கியமுண்டாய் செலவுக்கதிகமான வரும்படிகள்வந்து திரவியம் சேர்ந்து சவுக்கியமுண்டாகும். 4-ம் சாமத்தில்சனித்தால அதனால் எஜமானுக்கு மகா சௌந்தரியமுடையகுமாரத்திப்பிறந்து பாக்கியமுண்டாய் யோக்கியமான மரு

மகன்வங்குமணம்புரிவான். இப்பயன்கள் சித்திரைமாதமன்றி மற்ற பதினொருமாதத்துக்குமாகும்.

இதற்கு விரோதமாய் குதிரைபகல் 1-ம் சாமத்தில்சனித்தால் அதனால் எஜமான் நாளுக்குநாள் தரித்திரியவானாய் வரவுக்கதிக செலவுக்ளேறி வியாகூலத்தையடைவான். 2-ம் சாமத்தில் சனித்தால் அதனால் எஜமான் அதிக வியாதியையாவது, மரணத்தையாவது, மிகுந்த சலிப்பையும், தரித்திரத்தையுமாவது அடைவான், அல்லது தன்பிள்ளைகளுக்குத்தான்கருமஞ்செய்யத் தக்கவனாகவாவதாவான். 3-ம் சாமத்தில் சனித்தால் அதனால் எஜமான் அதிக கஸ்தியடைந்து தீராத வியாகுல முள்ளவனாய் தன்பிள்ளைக்குந் தான் கருமஞ்செய்யத்தக்கவனாவான். 4-ம் சாமத்தில்சனித்தால் அதனால் எஜமான் தாரமிழந்து அதிகவியாகூலத்தையடைவான். இப்பயன்களுக்கு மேற்சொன்னசித்திரைமாதமொன்றுதவிர மற்றபதினொருமாதத்துக்காகும். சித்திரைமாதத்தில் குதிரை சனித்தால் அதனால் எஜமானுக்கு வயதுகுன்றி பாக்கியங்குறைந்து தரித்திரமேலிட்டுப் பலபல வியாகூலத்தைக் கொடுக்கும். இந்ததோஷம் நீங்கும்பொருட்டாய் தானந்தருமஞ்செய்து குதிரைக்குட்டியின் காதையறுத்து மூளி செய்யவேண்டும். அல்லது, குட்டியைப் பரதேசிகளுக்குக் கொடுத்துவிடவேண்டும். இப்படி செய்யாமல் குட்டியைவீட்டில் வைத்திருந்தால் அதனால் அதிகஷ்டத்தைக் கொடுக்கும்.



## குதிரையின் ஆயுள் பற்களாலறியும் வகை.

குதிரைகளுக்குவயது கண்டிப்பாய் முப்பதென்றுஞ் சிலதேசத்துக்குதிரைகள்மாத்திரம் ஐம்பது அல்லது அறுபதுவரையிலிருக்குமென்றும் அப்படியிருந்தாலுஞ் சவாரிமுதலிய வேலைகளுக் குதவமாட்டாதென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். குதிரையின் பற்களில் ஐந்துவருடமுதல் வருணபேத முண்டாகுமென்றும், அதில் ஒவ்வொருவருணம் மூன்றுவருடமிருக்குமென்றும், இந்தவருணபேதங்களால் குதிரைகளின்வயதை இவ்வளவென்று குறித்துக்கொள்ளலாமென்றுஞ் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, குதிரைபற்களினது சுவாபநிறமாறி வேற்று நிறங்கள் ஆரம்பித்தவுடனே ஐந்துவயதென்றும், அதற்குமேல்தோன்றும்நிறமொன்றுக்கு மூன்றுவருடமென்கிற கணக்கின்படி குறித்துக்கொள்ளவேண்டும், இந்தப்படி குதிரைக்கு முப்பத்திரண்டு வயது வரையில் காலிகா - அறளிகா-குளிகா-காஜா-மாக்கா-சிங்கா-ஊலிகா-லங்கிணி-பெஸ்தினை ஒன்பதுவித நிறங்களுண்டு.

### அவையாவன.

1-வது, குதிரையினுடைய பற்களின்சுவாபநிறமாறி கஸ்தூரி அல்லது புகைநிறங்கொள்ளில் அந்த நிறத்துக்குப்பெயர் காலிகாவென்று சொல்லப்படும். அப்போது குதிரையின்வயது ஏழு அல்லது எட்டென்று குறிக்கப்படும்.

2-வது பொன், அல்லது மான்நிறங் கொள்ளில் அந்த நிறத்துக்குப்பெயர் அறளிகாவென்று சொல்லப்படும். அப்போதுகுதிரையின்வயதுபதது அல்லது பதினொன்றென்று குறிக்கப்படும்.

3-வது, சிவந்த பவளத்தை அல்லது சிவந்தகாரரிசிநிறங்கொள்ளில் அந்தநிறத்துக்குப் பெயர் குளிகாவென்று சொல்லப்படும். அப்போது குதிரையின்வயது பதின்மூன்று அல்லது பதினான்கென்று குறிக்கப்படும்.

4-வது, தாம்பூலத்துடன்சேர்த்து மென்ற சுத்தக்காம்பு நிறங்கொள்ளில் அந்த நிறத்துக்குப்பெயர் காஜாவென்று சொல்லப்படும். அப்போது குதிரையின்வயது பதினாறு அல்லது பதினேழென்று குறிக்கப்படும்.

5-வது, ஈநிறங்கொள்ளில் அந்தநிறத்துக்குபெயர் மாக்காவென்று சொல்லப்படும். அப்போது குதிரையின்வயது பத்தொம்பது அல்லது இருபதென்று குறிக்கப்படும்.

6-வது, முத்துச்சிப்பியின் நிறங்கொள்ளில் அந்தநிறத்துக்குப் பெயர் சிங்காவென்று சொல்லப்படும் அப்போது குதிரையின்வயது இருபத்திரண்டு அல்லது இருபத்திமூன்றென்று குறிக்கப்படும்.

7-வது, பற்களில் துவாரங்கள் விழுந்து பக்கத்துமாமிசம் வெட்டுப்போனால் அந்த அடையாளத்துக்குப்பெயர் ஊலிகாவென்று சொல்லப்படும். அப்



போது குதிரையின்வயது இருபத்தைந்து அல்லது, இருபத்தாறென்று குறிக்கப்படும்.

8-வது, பற்கள் அசைவுண்டாகில் அந்த அடையாளத்துக்குப்பெயர்லங்குளியென்றுசொல்லப்படும் அப்போது குதிரையின்வயது இருபத்தெட்டு அல்லது இருபத்தொன்பதென்று குறிக்கப்படும்.

9-வது, பற்கள்விழ ஆரம்பித்தால் அந்தவடையாளத்துக்குப்பெயர் பெண்டியென்று சொல்லப்படும்.

அப்போது குதிரையின் வயது முப்பத்தொன்று அல்லது முப்பத்திரண்டென்று குறிக்கப்படும்.

10-வது, பற்கள் விழாமல் மேற்சொன்னநிறங்கள் முழுதும்மாறிப்பஞ்சுபோலவெளுத்து கடைவாய்ப்பற்கள் கண்டிருக்குமானால் அப்போதுகுதிரையின் வயது நாற்பதென்று குறிக்கப்படும்.

இவைகளின் விபரம் இதனடியிற்கண்டிருக்கும் டாப்பினாலறிந்துக்கொள்ளலாம்.

## குதிரைவிலைக்குவாங்கும்போது பார்க்க வேண்டிய சகுனங்கள்.

1-வது, குதிரைவிலைக்குவாங்கப் பார்வையிடும்போது குதிரைசற்செபலாவது அல்லதுவாங்குகிறவர்களைக்கண்டாவது அனுமானித்தாலுங் கூத்தாடினாலும் உடையவன்சொன்ன விலைகொடுத்து வாங்கினால் அதிக சம்பத்தைக்கொடுக்கும்.

2-வது, குதிரைவாங்குகிறவர்களைப்பார்த்து வலது முன்னங்காலைநீட்டி முக்குமாகில் மேற்சொன்னபடியே வாங்கினால் அதிகபிரயோசனமும் நாளுக்குநாள் குதிரைகளால் நிறைந்தலாயமும் அதிக சம்பத்தும் உண்டாகும்.

3-வது, குதிரைவாங்குகிறவன் முன்பாக நிலத்திற்போடுமாகில் அதிகசம்பத்தும்திரவியமும் சுபகரமாகிய கலியாணமும் புத்திரபாக்கியமும் தீர்க்காயுசும் உண்டாகும்.

4-வது, குதிரை வாங்குகிறவனைக்கண்டு உடம்பைச்சுளுக்கினாலும் தலையையசைத்தாலும் தின்னும் புல்லை கக்கினாலும் தும்பினாலும் ஏப்பம் விட்டாலும் தரையிற்படுத்துப் புரண்டாலுஞ் சிறுநீர்விட்டாலும் இவைமுதலிய குறிகள்காண்கில் ஆகாதென்றெண்ணிக் குதிரையைவாங்கக்கூடாது வாங்கினால் அதிக துன்பத்தையுந் தரித்திரத்தையும் வியர்குலத்தையும் உண்டாக்கும்.

## சாதியறியும் வகை.

குதிரைகளின் பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரளென நான்குவகைப்படும். அவைகளைச்சலத்தில் நீந்தவிட்டு சோதிக்கவேண்டும்.

(பிர்மசாதி) தண்ணீரைக் கண்டவுடனே அதிக சந்தோஷத்தையடைந்து கண்வரையின்முழ்கி தண்ணீர்குடிக்கும். அல்லாமலும்தண்ணீரிலிறங்கஎவ்வளவேனும் அஞ்சமாட்டாது. இதின்குணமானது இர்



திரியக்சட்டுள்ளதாயும், நல்லநடத்தை யுள்ளதாயும், குற்றமற்றநடையையுடையதாயும்,புத்தியுள்ளதாயும் சகலகுதிரைகளிடத்திலும் நல்லமனதையுடையதாயுமிருக்கும். அந்தகுதிரையானது மங்கலகாரியங்களுக்கும், இராஜாக்களைபோய் தரிசிப்பதற்கும், சுவாதீனப்படும். ஆயினுஞ் சத்துருக்களோ டெதிர்த்துப் போர்செய்வதற்குப் பின்வாங்கும், எஜமான் எதிரிகளோடு போர்செய்து வெற்றியுடைய எவ்வளவு விரும்பினாலும் ஓடியாவது முன்வையாமல் தன்னெஜமானை எதிரிகளிடத்தில் அகப்படவொட்டாமற்பாதுகாத்து விரைவில்வீட்டிற்கொண்டுபோய்ச்சேர்க்கும்.

(க்ஷத்திரியசாதி) தண்ணீரிலிரண்டு தட்டையும் மூக்குவரையில்விட்டு தண்ணீர்குடிக்கும். இதின்குணமானது பராக்கிரமமும், கோபமும், தேகபலமுள்ளதாயும், சத்துருக்களின்பூமியை செயிக்கத்தக்கதாயும்; பெருந்தொனியுள்ளதாயும், பெரியதேகத்தையுடையதாயுமிருக்கும். இந்தக்குதிரைகளானது, சத்துருக்களுடன்போர்செய்வதற்கும், அவர்களைதோல்வுபடுத்தி எஜமானைவெற்றியடைவிப்பதற்குதவும், இதுகள் யெஜமான் மனதின்படிச் சத்துருக்களின் படையேறி எஜமானைச் சத்துருக்களிடத்தில் அகப்படவொட்டாமல் போர்செய்து எஜமான்கையில் சத்துருக்கள் அகப்படும்படிக்குத் தனதுகால்களினுலடித்தும், பற்களாற்கடித்தும், சத்துருக்களின் தேகத்தை துண்டுதுண்டாகச்செய்து எஜமான் எவ்வகையிலும் வெற்றியடையும்படியாய்ச்செய்விக்கும். அதை

யாலிந்த சாதிக்குதிரைகளை உயித்தங்களுக்கு உதவும்படித்தனியாய்க் கட்டிவைத்து பாதுகாத்துவரவேண்டும்.

(வைசியசாதி) ஜலத்தைக்கண்டால் அஞ்சியஞ்சி நடக்கத்தக்கதுமாய் தண்ணீரில் உதடுபட்டும்படாததுமாய்மேலிட்டாப்போலமிகவுமெதுவாய்த்தண்ணீர்குடிக்கும். இதின் குணமானது வெய்யில் - கானல் காற்று - மழை முதலியவைகளைச் சகிக்கத்தக்கதாயும், ஓய்வில்லாததாயும், சுமைகளைச்சுமப்பதற்கும், வண்டிகளிழுப்பதற்கும் இன்னமுமிதைப்போலொத்த முரட்டுவேலைக் குதவுமேயல்லாது சவாரிக்குதவவும், எஜமானுக்குக் கீழ்படிந்து நடக்கவுமாட்டாது.

(சூத்திரசாதி) சவுக்கடிப்படாதொழியத் தண்ணீரிற்கால்வைக்கமாட்டாது இதின்குணமானது சகலவபோக்கியத்தையும், அசுத்தத்தையும் உடையதாகவிருக்கும், இதுசவாரிக்குதவமாட்டாது. சிலவேளைகளில் எஜமானைக்கீழேதள்ளி உதைத்து, வாயினாற்கடித்து மனதில்பகைவைத்துக்கொண்டுகொன்றுபோடும். ஆகையாலிந்தமாதிரிக்குதிரைகளை ஒருபோதும் வாங்கலாகாது வாங்கினால் அதிக கஷ்டத்தைக் கொடுக்கும்

## குதிரையின் ராசியறியும் வகை.

குதிரை நடுத்தரமாயும், அதிகமாய்ப் பருத்திராமலும் அதிகமாயிளைத்திராமலும், கால்களதிக உரத்தையுடையதாயும், கோபத்திலும், பசியிலு மதிகப்பட்டதாயும், தன்னருகிலிருக்குங்குதிரைகளோடு சண்



டைசெய்யுங்குணத்தையுடையதாயும், அதிகவேகமும் துஷ்டகுணமும் வாய்க்கடிசும் கெட்டநடத்தையுமுடையகுதிரையை காத்தி இராசி எனப்படும்.

குதிரைமிகமெலிந்தும், இளைத்தும், அதிகசாக்ஷாயும், சந்தோஷமாயும், எஜமான்சொற்படி நடப்பதாயும், இடக்குகள்செய்யாததாயும், அதிகநித்திரையில்லாததாயும், நெய் - சருக்கரை முதலிய வினியபதார்த்தங்களை யுகந்ததாயுமிராநின்றகுதிரைகளை பத்தவிராசி எனப்படும்.

குதிரையதிகபுஷ்டியாயும், சோம்பேரித்தனமாயும், தன்னருகிலிருக்குங்குதிரைகளோடு அதிசபிரியத்தையுடையதாயும், சுறுசுறுப்பில்லாததாயும் படுக்கையில் கால்களை நீட்டிக் கொள்ளுகிறதாயுமிராநின்ற குதிரைகளை கிரிராசி எனப்படும்.

## சுழியிலிலக்கணம்.

குதிரையின் தேகத்திலுள்ள உரோமங்களில் பலவிதமான சுழிகளுண்டு. அவைகளின் வடிவும் அளவும்இடமும்பயனுமிப்போதெடுத்துக்காட்டுவோம்

## நன்மையைத்தருஞ்சுழிகள்.

1. குதிரைக்கழுத்தின்கீழ் பேஷ்பந்துக்குமேல் நாலு அல்லது, மூன்று அல்லது, இரண்டு அல்லது, ஓரங்குலவளத்தில் சுழியிருந்தால், தெய்வமணி என்றுபெயர், இந்தச்சுழிக்குமுன் மற்ற எந்தச்சுழிகளின் பொல்லாப்பும் ஒன்றுஞ்செய்யமாட்டாது. இதனால் எஜமானுக்கு நாளுக்குநாள் அதிகசம்பத்தும், தீர்கா

யுசும், புத்திரபாக்கியமும், தேகசவுக்கியமும் கீர்த்தியுமுண்டாகும்.

2. குளம்புக்குமேல் இரண்டு அல்லது ஓரங்குலநீளத்தில் மயிர்வளர்ந்திருந்தால் சிந்தாமணி என்னும்பெயர். இதனாலிந்தக்குதிரையின் எஜமானுக்கு அதிகபாக்கியத்தையும், சவுக்கியத்தையுங்கொடுக்கும். அந்தக்குதிரையிருக்கிறவரையில் வேறுகுதிரைவாங்குவது நன்மையல்ல, இன்னுமிதையதிகவிலைகொடுத்து வாங்கவேண்டியது.

3. குதிரை முதுகின் வலதுபக்கத்திற் சுழியிருந்தால் மேகலை என்றுபெயர். இதனாலிந்தக் குதிரையின் எஜமானுக்குக்கீர்த்தியையும், ஐசுவரியத்தையுங் கொடுக்கும்.

4. தொண்டையின்கீழ் இடபத்தின் கழுத்தைப்போலே மயிர்குனுக்காய் வளர்ந்திருக்குமாகில், கண்டாபரன் என்றுபெயர். இதனாலிந்தக்குதிரையின் எஜமான் எப்போதும்வெள்ளி-பொன்-நவரத்தினங்களில்முழ்கியதிகசம்பத்தை யுடையவனாகவிருப்பான்.

5 குதிரையின் தலை-நெற்றி-மார்பு-பிடரி-பிசத்தினருகு இவ்வைந்திடங்களிலுஞ் சுழியிருந்தால், ஜெயமங்களம் என்றுபெயர். இதுசகலகுதிரைகளிலும் மிகுந்த ஜெயத்தையுடையதாயும், தன்னெசமானுக்குக் கீர்த்தியையும் வெற்றியையும், ஆதாயத்தையும் கொடுக்கும். இக்குறிப்புள்ளகுதிரையின்பேரிலேறும்போது அதின்காலுக்கு முத்தமிட்டுகண்ணை தடை-



உதவும்படித் தனியாய்க் கட்டிவைத்து பாதுகாத்து வரவேண்டும்.

(வைசியசாதி.) ஜலத்தைக்கண்டால் அஞ்சிபஞ்சிநடக்கத்தக்கதுமாய் தண்ணீரில் உதடுமட்டும் படாததுமாய் யேலிட்டாப்போல மிகவு மெதுவாய்த்தண்ணீர்குடிக்கும். இதின் குணமானது வெய்யில் கானல்-காற்று-மழை முதலியவைகளைச் சகிக்கத்தக்கதாயும், ஓய்வில்லாததாயும், சுமைகளைச் சுமப்பதற்கும், வண்டிகளிழுப்பதற்கும், இன்னுமிதைப்போலொத்த முரட்டுவேலைக்குதவுமேயல்லாது சவாரிக்குதவவும் எஜமானுக்குக் கீழ்படிந்து நடக்கவுமாட்டாது.

(சூத்திரசாதி) சவுக்கடிப் படாதொழியத் தண்ணீரிற் கால்வைக்கமாட்டாது. இதின் குணமானது சகலவயோக்கியத்தையும், அசுத்தத்தையும் உடையதாகவிருக்கும், இது சவாரிக்குதவமாட்டாது. சிலவேளைகளில் எஜமானைக்கீழேதள்ளி உதைத்து,வாயினாற்கடித்து மனதில் பகைவைத்துக்கொண்டு கொன்றுபோடும். ஆகையாலிந்தமாதிக் குதிரைகளை ஒருபோதும் வாங்கலாகாது. வாங்கினால் அதிக நஷ்டத்தைக்கொடுக்கும்.

## குதிரையின் ராசியறியும்வகை.

குதிரை நடுத்தரமாயும், அதிகமாய்ப் பருத்திராமலும், அதிகமாயிளைத்திராமலும், கால்களதிக உரத்தையுடையதாயும், கோபத்திலும் பசியிலு மதிகப்பட்டதாயும், தன்னருகிலிருக்குங் குதிரைகளோடு

சண்டைசெய்யுங் குணத்தையுடையதாயும், அதிகவேகமும் துஷ்டகுணமும் வாய்க்கடிசும் கெட்ட நடத்தையுமுடைய குதிரையை சாத்தி இராசி எனப்படும்.

குதிரை மிகமெலிந்தும், இளைத்தும், அதிகதாகக்காயும், சந்தோஷமாயும், எஜமான்சொற்படி நடப்பதாயும், இடக்குகள் செய்யாததாயும், அதிகநித்திரையில்லாததாயும், நெய் - சருக்கரை முதலிய இனியபதார்த்தங்களை யுகந்ததாயு மிராநின்ற குதிரைகளை பத்தவிராசி எனப்படும்.

குதிரை யதிகபுஷ்டியாயும், சோம்பேரித்தனமாயும, தன்னருகிலிருக்குங் குதிரைகளோடு அதிகபிரியத்தையுடையதாயும், சுறுசுறுப்பில்லாததாயும் படுக்கையில் கால்களை நீட்டிக் கொள்ளுகிறதாயு மிராநின்ற குதிரைகளை கிரிராசி எனப்படும்.

## சுழியிலக்கணம்.

குதிரையின் தேகத்திலுள்ள உரோமங்களில்பலவிதமான சுழிகளுண்டு. அவைகளின் வடிவும் அளவும் இடமும்பயனுமிப்போ தெடுத்துக்காட்டுவோம்.

## நன்மையைத்தருஞ் சுழிகள்.

1. குதிரைக் கழுத்தின்கீழ் பெக்ஷபத்துக்கு மேல் நாலு அல்லது, மூன்று அல்லது, இரண்டு அல்லது, ஓரங்குலநீளத்தில் சுழியிருந்தால், தெய்வமணி என்று பெயர், இந்தச்சுழிக்குமுன் மற்ற எந்தச்சுழிகளின் பொல்லாப்பும் ஒன்றுஞ் செய்யமாட்டாது.



இதனால்எஜமானுக்குநாளுக்குநாள் அதிகசம்பத்தும் தீர்க்காயுசும், புத்திரபாக்கியமும், தேகசவுக்கியமும், கீர்த்தியுமுண்டாகும்.

2. குளம்புக்குமேல் இரண்டுஅல்லது ஓரங்குலநீளத்தில் மயிர்வளர்ந்திருந்தால் சிந்தாமணி என்று பெயர். இதனாலிந்தக் குதிரையின் எஜமானுக்கு அதிக பாக்கியத்தையும், சவுக்கியத்தையுங் கொடுக்கும். அந்தக்குதிரை யிருக்கிறவரையில் வேறு குதிரை வாங்குவது நன்மையல்ல, இன்னமுமிதை யதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியது.

3. குதிரை முதுகின் வலதுபக்கத்திற் சுழியிருந்தால் மேகலை என்று பெயர். இதனாலிந்தக் குதிரையின் எஜமானுக்குக் கீர்த்தியையும், ஐசுவரியத்தையுங்கொடுக்கும்.

4. தொண்டையின்கீழ் இடபத்தின் கழுத்தைப்போலே மயிர் குறுக்காய் வளர்ந்திருக்குமாகில், சண்டாபரன் என்றுபெயர். இதனாலிந்தக் குதிரையின் எஜமான் எப்போதும் வெள்ளி - பொன் - நவரத்தினங்களில்மூழ்கி யதிக சம்பத்தை யுடையவனாக விருப்பான்.

5. குதிரையின் தலை-நெற்றி மார்பு-பிடரி-பீசத்தினருகு இவ் வைந்திடங்களிலுஞ் சுழியிருந்தால், ஜெயமங்களம் என்றுபெயர். இது சகலகுதிரைகளிலும் மிகுந்த ஜெயத்தையுடையதாயும், தன்னெசமானுக்குக் கீர்த்தியையும் வெற்றியையும, ஆதாயத்தை

யுங்கொடுக்கும். இக்குறிப்புள்ள குதிரையின்பேரிலேறும்போது அதின்காதுக்கு முத்தமிட்டு கண்ணைத்துடைத்து தட்டிக்கொடுத்துச் சவாரிசெய்யவேண்டும். இன்னுமிந்தக் குறிப்புள்ளகுதிரைகள் எவ்வளவுவிலையிருந்தாலும் வாங்கவேண்டும். இன்ன மிந்தகுறியுள்ள குதிரை கைவசப்படுவதும் ஒருபாக்கியமென்றெண்ணவேண்டும்.

6. குதிரையின் தேகநிறமொன்றாயிருந்து தலை மார்பு ஒருகால் பீசம் வால் இவ்வைந்திடங்களிலும் வெளுத்த நிறமுண்டாயிருந்தால் சஷ்டமங்கலம் என்றுபெயர். தெய்வசகாயத்தினால் இந்தக்குறியுள்ள குதிரை வசப்படுமாகில் இந்த நன்றிக்காக கடவுளுக்கு வந்தனஞ்செய்து சவாரிசெய்யவேண்டும். இன்னுமிந்தக் குதிரையை மகாபத்திரமாய் குளிசங்களைப் போலே பாதுகாத்து தன்னையல்லாமல் மற்றொருவரையுஞ் சவாரிசெய்யவொட்டாமல் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இதினன்மையினால் நாளுக்கு நாளதிக சம்பத்துண்டாய் குதிரைலாயமானது எப்போதுங் குதிரைகளால் நிறைந்து பரிபூரணமாகவிருக்கும்.

7. குதிரையின் முதுகிலிரண்டு புறத்திலு மிரண்டு சுழியிருந்து நெற்றியில் தாமரை மொட்டைப் போலொரு சுழியிருந்தால் சுமங்கலம் என்றுபெயர். இது அதிக நன்மையுடைய குதிரையாம். இத்தன்மையால் எஜமானுக்கு அஷ்டஐசுவரியமும் அளவிறந்த சவுக்கியமும் நாளுக்குநாளதிகப்பட்டுவரும்.



மேற்சொல்லிய விந்த எழுவகைக் குறிகளுக்குஞ் சகலகுறிகளுக்குந் தலைமையான குறிகளாகும். ஆகையால் இக்குறிகளுள்ள குதிரைகள் சகலகுதிரைகளுக்குந் தலைமையானதாயும் இடைப்பரிதாயுமிருந்தால் சிலவேளை தெய்விகத்தினாலும் புண்ணியவசத்தினாலும் கண்ணிலகப்பட்டால் குதி[illegible]ருப்பவர்களுக்கு வெகுமதி முதல[illegible]சந்தோ[illegible]டையச்செய்து கேட்டவிலைகொ[illegible] போல்வைத்துப் பாதுகாத்[illegible]ந்தால் அதிநன்மையுண்டாகும்.

## இரண்டாங் குறிப்பு.

குதிரை தீர்க்காயுசு[illegible]மாய் எஜமானுக்கு அதிக பிரயோசனத்தைக் [illegible]தாயு மிருப்பதற்கு பத்திடங்களிற் சுழிகளி[illegible]டும். இந்த பத்துசுழிகளுக்கும் தசாதரு எ[illegible]பெயர். அவையாவன குதிரையின்மஸ்தகத்திலொ[illegible]மார்பிலிருபுறத்திலுமிரண்டும் கக்கத்திலிரண்டும் வயிற்றின் கீழிரண்டும் மேலுதட்டின் மேலொன்றும் நெற்றியிலொன்று மிருக்கவேண்டும்,

குதிரையினாலே எஜமானுக்கு அதிக பாக்கியமுண்டாவதற்கு எட்டுசுழிகளுமுண்டு. அவையாவன மார்பிலிரண்டும் நெற்றியிலிரண்டும் மேலுதட்டிலிரண்டும் விலாப்புறமிரண்டிலு மிரண்டும் இருக்கவேண்டும்.

## சுபாவிர்தபலன்.

1. சுழிகள் பிரகாசமாயிருப்பதும் சுத்தி ரூபமாயிருப்பதும் எஜமானுக்கு ஜெயத்தைக் கொடுக்கும்.

2. தலையிற் பிரதட்சணமாயிரண்டு சுழிகளிருந்தால் மங்கலம் என்றுபெயர். அது எஜமானுக்கதிக பாக்கியத்தைக் கொடுக்கும்.

3. நெத்தியிற் பிரதட்சணமா யிரண்டு சுழிகளிருந்தால் சுரஜூநு என்றுபெயர். அது எஜமானுக்கு அதிக லாபத்தைக்கொடுக்கும்.

4. நெற்றியி லிரண்டு நீண்ட சுழிகளிருந்தால் சூத்திரி என்று பெயர். அது எஜமானுக்கு அதிக பாக்கியத்தைக் கொடுக்கும்.

5. நெத்தியிற் பிரதட்சணமாய் மூன்றுசுழிகளிருந்தால் திரோதாக்கினி என்றுபெயர். அது எஜமானுக்கு ஜெயத்தைக்கொடுக்கும்.

6. நெற்றியில் மூன்று சுழிகள் நீண்டிருந்தால் சூத்திர பத்தி என்றுபெயர். அது எஜமானுக்கு அதிக கீர்த்தியைக் கொடுக்கும்.

7. நெற்றியி லொன்றின்மே லொன்றாய் மூன்று சுழிகள் வரிசையாய் மேலேறியிருந்தால், கிரேணி என்றுபெயர். அது எஜமானுக்கு ஜெயத்தைக் கொடுக்கும்.

8. நெற்றியிற் பிரதட்சணமாய் நான்குசுழிகள் சதுரமாயிருந்தால் சதுராங்கம் என்றுபெயர். அது எஜமானுக்கு ஜெயத்தைக்கொடுக்கும்.

9. கடைக்கண்களி லிருக்குஞ் சுழிகள் குளாகாரமாக விருந்தால் அது எஜமானுக்கு ஜெயத்தைக் கொடுக்கும்.



223 — 103

10. காதுகளி லிருக்குஞ் சுழிகளுக்கு இடம்புஞ்கன் என்றுபெயர். அது எஜமானுக்கு ஜெயத்தையும் திரவியத்தையுங் கொடுக்கும்.

11. கன்னத்தி லிரண்டுபுறத்திலு மிரண்டுசுழிகளிருந்தால் சுஜூநு என்றுபெயர். அது எஜமானுக்கு அதிக ஜயத்தைக்கொடுக்கும்.

12. கழுத்தில் தேவமணிக்குங்கீழே பேஷபந்துக்கு மேலே ஒருசுழி யிருக்குமாகில் ரோசமாஎன்றுபெயர். அது எஜமானுக்கு அதிகபாக்கியத்தைக் கொடுக்கும்.

13. கழுத்திலிரண்டு புறத்திலு மிரண்டு சுழிகளிருந்தால் கண்டாபரன் என்றுபெயர். அது எஜமானுக்கு அதிகபொருளைக்கொடுக்கும்.

14. மார்பிலிரண்டுசுழி சோடாயிருந்தால் அஜுநு என்றுபெயர். அது எஜமானுக்கு அதிகபிரயோசனத்தைக் கொடுக்கும்.

15. மார்பில் சுக்திரியாகாரமான மூன்று சுழிகள் ஊர்த்துவ முகமாகவிருந்தால் அந்தக்குதிரையினால் எஜமான் சத்துருக்களைச் செயிப்பான்.

16. மார்பில் சவுக்கமாய் நான்கு சுழிகளிருந்தால் சத்துருக்கன் என்றுபெயர். அது சத்துருக்களையுங் கொல்லும் சம்பத்தையுங் கொடுக்கும்.

17. விலாவிலிரண்டு புறத்திலுமிரண்டு சுழிகளிருந்தால் கோலத்தலன் என்றுபெயர். அது எஜமானுக்கு அதிக ஆபரணங்களைக்கொடுக்கும்.

18. கண்டத்தினடியி லிரண்டுசுழிகள் விருத்தமாயிருந்தால் சக்காக்கி என்றுபெயர். அது எஜமான் சத்துருக்களை நாசம்செய்யும்.

19. முன்னங்கால்களிற் சுழிகளிருந்தால் அது எஜமானுக்கு தேகாபரணங்களைக் கொடுக்கும்.

20. வயருந்திக்கு நேராக மேலே சுழிகளிருந்தால் மேகலை என்றுபெயர். அது எஜமானுக்கு தனதானியங்களை யதிகப்படுத்தும்.

21. வாயில் இரண்டுபுறத்திலு மிரண்டு சுழிகளிருந்தால் காசாம்போத்ரா என்றுபெயர். அது எஜமானுக்கு அதிகலாபத்தைக் கொடுக்கும்.

இதுவரையிற் பேசிவந்த சுபாவிர்த்த பலனையு மேற்கண்ட தலங்களிற் சுழிகள் மேற்சொன்னபடி பிரதட்சணமாய் சோடுசோடாயிருக்குமாகில் மேற்குறித்தபடியே பலனுண்டாகும். இதற்கு விரோதமாயிருக்குமாகில் அதன்பலனு மப்படியே விரோதப்படும். அவைகளைப் பின்னாற்பேசும் அசுபாவிர்த்த பலனில் விவரித்துப்பேசுவோம்.

குதிரையினுடைய மார்பி னுரோமங்கள் நீண்டு மார்பை மறைத்தாலும் கால்களி னுரோமங்கள்நீண்டு கண்களை மறைத்தாலும் பிடரியி னுரோமங்கள் நீண்டு பூமியில் விழுந்தாலும் இந்நான்கு குறியுள்ள குதிரைகளையெல்லாம் புண்ணியக் குதிரைகளென்று சொல்லப்படும்.

## அசுபாவிர்த்தபலன்.

1. குதிரை நடுமார்பில் ஒருசுழியிருக்குமாகில் அறத்தாவல என்றுபெயர். அது எஜமானுடையபா



க்கியத்தை நாளுக்குநாள் போக்கியும் புத்தியை மழுங்கச்செய்தும் நிர்பாக்கியத்தைக் கொடுத்துவரும்.

2. விலாவி லொரு சுழியிருந்தால் அங்கவா என்றும், சித்திரியா என்றும் பெயர். அது எஜமானுடைய சிறிய சகோதரனைக் கொல்லும்.

3. அண்டத்தின்மேலொரு சுழியிருந்தால் சூலவர்த் என்றுபெயர். அது எஜமானை பட்டுணுக்கும்.

4. தொப்பிளின்கீழொரு சுழியிருந்தால் நாபாவர்த் என்றுபெயர். அது எஜமானுக்கு திடீரென்று வொரு வலியுண்டாகும்.

5. கீழ்வயிற்றில் ஒருசுழியிருந்தால் போத்தாவர்த் என்றுபெயர். அது எஜமானைப் பசித்திருக்கும்படிசெய்து புத்தியையும் போகத்தையும் போக்கிவைக்கும்.

6. வலதுகால் அல்லது இடதுகாலில் ஒருசுழியிருந்தால் சாக்காவர்த் என்றுபெயர். அது எசமானைத் தாரமிழக்கச்செய்யும், அல்லது வியாதியஸ்தனாக்கும்.

7. புருவத்தில் இரண்டுபுறத்திலும் ஒருசுழியிருந்தால் வக்தாவர்த் என்றுபெயர். அது எசமானை ஸ்திரீசுகமும் சிந்தியடையச் செய்யுமேயல்லாது ஒருபோதுஞ் சந்தோஷமடையச் செய்யமாட்டாது.

8. மூக்கில்வலதுபக்கத்தில் ஒருசுழியிருந்தால் சத்மவர்த் என்றுபெயர். இடதுபக்கத்தி லொரு சுழியிருந்தால் சாவர்த் என்றுபெயர். இவையிரண்டும் எஜமானுக்கு அதிக நஷ்டத்தைக்கொடுக்கும்.

9. கண்ணுக்குமே லொரு சுழியிருந்தால் நத்தாவர்த் என்றுபெயர். அது எஜமானை என்னேரமும் அழச்செய்யும்.

10. கண்ணின் இமைரோமத்திற் சுழியிருந்தால்; இதுவும் எசமானுக்கு மேற்சொன்ன பலனையே கொடுக்கும்.

11 காதிலொரு சுழியிருந்தால் கர்ணமுல் என்றுபெயர். அது எசமானுக்கு காதுநோயுண்டாக்கும்

12. முன்னங்கால் அல்லது பின்னங்கால்களிலொரு சுழியிருந்தால் அது எசமானுடைய வேலைகளையெல்லாந் தடங்கல்செய்யும்.

13. வயிற்றின்கீழிருக்குஞ் சுழிகளானது ஒன்றோடொன்று கூடி இரண்டுசாண்வரையில் நீண்டிருக்குமாகில் பூரான் என்றுபெயர். அது எஜமானுக்கு அதிக கஷ்டத்தைக்கொடுக்கும். அல்லாமலும் எசமானை யவன்பெண்சாதியோடு கயிலாசம் புகச்செய்யும்.

14. கழுத்திற்பூரானிருக்குமாகில் அது எசமான்வீட்டில் என்னென்றுஞ் சண்டைச்சச்சரவுகளுண்டாகி எசமானுக்குத் தீராநோய்களும் வந்து சம்பவிக்கும்.

15. வலதுகால் அல்லது இடதுகாலிற் பூரானிருக்குமாகில் அது எசமானுடைய சகோதரனைக் கொல்லும்.

### எச்சரிக்கையுடன் கவனிக்கவேண்டிய சுழிகள்.

பூரானென்கிற சுழியானது குதிரையின் தேகத்தில் எந்தவிடத்திலாவது இருந்தால் அது எஜமானுக்கு கஷ்டத்தைக்கொடுக்குமேயல்லாது நயத்தை யொருபோதுங் கொடுக்கமாட்டாது குதிரை பரிட்



சையில் தேர்ந்தவர் குதிரையின் பின்புறங்களிலும் பிரதட்சணமாய்த் தோன்றாத விடங்களிலு மிரா நின்ற பூரான்சுழிகளானது யாதொரு பொல்லாங்கையுங்கொடாதென்று சொல்லுவார்கள். அது முற்றும் அபத்தமாயிருக்கும். ஆகையால் அவர்களுடைய சொல்லின்பேரில் மயங்காமல் பூரான்சுழியுள்ள குதிரைகளை வாங்காமலிருப்பீர்களாக. இதற்கு விரோதித்தால் அநிக இடுக்கங்களுக்குள்ளாவீர்கள்.

### பிரதானமாயறியவேண்டிய சுழிகளின் பெயர்.

1. குதிரையின் வயிற்றின்கீழ் அல்லது தேகத்தில் எந்தவிடத்திலாவது ஒருசாண் நீளத்திற் சுழியிருந்தால் அதற்குப் பாசியா என்றுபெயர்.

2. வயிற்றின்கீழ் ஐந்து அல்லது ஆறங்குல நீளத்திற் சுழியிருந்தால் அதற்குக்கஸ்னியா என்றுபெயர்.

3. வயிற்றிலிருக்குஞ் சுழிகள் மற்ற சுழிகளோடு சேர்ந்து வயிற்றின்கீழ் மூன்றங்குல நீளத்திற் சுழியிருந்தால் அதற்கு சிப்ளா என்றுபெயர்.

4. முதுகில் சேணம்வைக்கு மிடத்தைவிட்டு மற்றெந்த விடத்திலாவது தனித்தொரு சுழியிருந்தால் அதற்கு ஆசான்கஸ்வு என்றுபெயர்.

5. சேணத்தின்கீ ழொரு சுழியிருந்தால் அதற்கு [illegible] என்றுபெயர்.

6. பிடரியிலெந்தப் புறத்திலாவது தனித்தொரு சுழியிருந்தா லதற்கு சஸ்அன்-கஸ்வு என்றுபெயர்.

7. நெற்றியில் சுழிகளில்லாம லிருப்ப தற்கு மஸ்தக்கேசன் என்றுபெயர்.

இவ்வேழுகுறிகளும் உதவாதென்றறிக.

சகலகுதிரைகளுக்கு நெற்றியிற் சுழிகளிருக்கும். அப்படியில்லாதிருப்பது அதிக அபூருபம். அப்படியில்லாவிட்டால் அந்தகுதிரை ஐந்துவருடத்திற்குமேற் பிழைத்திராது. சிலவேளை ஐந்துவருடத்திற்குமேல் ஆறுமாதம் அல்லது ஒருவருடம் பிழைத்திருந்தால் தனக்குப்பதிலாய் தன்எசமான் சகோதரனைக்கொல்லும்.

இன்னமிப்படியேகுதிரையின் கீழுதட்டிலும், மூக்கின் துளைமேலும், கண்ணீர்விழுமிடத்திலும், பிடரியிலும், கொண்டையிலும், புயத்திலும், இடையிலும், முழங்கால்களிலும், கணைக்கால்களிலும், வாயிலும், மயிருக்குள்ளிலும், சினைத்திலும், அதைச்சேர்ந்த விடங்களிலுமிராநின்ற சுழிகளுங் கெடுதியென்றறியவும்.

இன்னமுமிப்படியே நெற்றியின் குறுக்கே யிரண்டு சுழியிருக்குமாகில், கத்தி என்றுபெயர். முக்கோணமாய் மூன்றுசுழியிருந்தால் சூலா என்று பெயர். இவையிரண்டுங் கெடுதியென்றறிக.

இன்னமும் நெற்றியிலொரு வெள்ளைப்புள்ளியிருந்து அந்தப்புள்ளி பெருகிறதுக்குள் மறைந்துபோகுமாகில் அருநப்பு என்றுபெயர்,



இன்னமும் நெற்றியி லிருக்குஞ் சுழியானது கண்ணின்கீழ்புறத்தில் வந்திருந்தால் ஆன்சுடா என்றுபெயர், யிவையிரண்டும் உதவாதென்றறிக.

இன்னமும் யிரண்டு கண்களிலும் ஒருமணிப்பிரமாணம் வெளுத்திருக்குமாகில் அது அதிகஜெயத்தைக்கொடுக்கும். ஒற்றைக்கண்ணின் மாத்திர மிருந்தால் எக்குமண்டலியா என்றுபெயர். அது உதவாதென்றறிக.

குதிரையின் தேகத்திற் சிலவடுக்களுண்டு அவைகளுக்கு அஞ்சனமென்றுபெயர். இப்போது அவைகளின் இடமும், வடிவும், பயனும், இனிமேல் எடுத்துக்காட்டுவோம்.

1. தேகமெல்லா மொருநிறமாயிருந்து விலாவில்மாத்திரம் ஒரு வடுவு நீலநிறமாயிருந்தால் கிஷ்ணாஞ்சனம் என்றுபெயர். அது எஜமானைக் கொஞ்சகாலில் தரித்திரவானாக்கி பிச்சையெடுத்திரக்குமணச் செய்யும்.

2. தேகநிறத்துக்கு விரோதமாய் மார்பில் கருநாரி நிறத்திலாவது, புகைநிறத்திலாவது, ஒருவடுவிருந்தால் அது காலஞ்சனம் என்றுபெயர். அது எஜமானை அதிகவிரைவிற் கொல்லும்.

3. தேகமெல்லாமொரு நிறமாயிருந்து முன்னங்காலில் மாத்திரம் ஒருவடுவு காகிதநிறமாய் வெளுத்திருந்தால் சேபஞ்சனம் என்றுபெயர். அது எசமான் குமாரத்தியைக்கொல்லும்.

4. தேகமெல்லா மொருநிறமாயிருந்து வாயில் மாத்திரம் சிவந்தமஞ்சள் அல்லது குங்குமப்பூ அல்லது மான்நிறத்திலொருவடுவிருந்தால் அது எஜமான் குமாரனைக்கொல்லும்.

இந்த நான்குவித வடுக்களும் மேற்சொல்லிய நிறத்திலிருந்தாலும் அல்லது வேறுநிறங்களி லிருந்தாலும் நகாதுஎன்றறிக.

ஆகையாலிப்பேர்ப்பட்ட குதிரைகள் இனுமாய்க்கொடுக்கிறதாயிருந்தாலும் வாங்கலாகாது. இவைகளை தெரியாமையாய் வாங்கியிருந்தால் காலையவிழ்த்துக் காட்டில் விட்டுவிடவேண்டியது. அல்லது ப்ரதேசிகளுக்காவது தத்தஞ்செய்துப் போடவேண்டியது.

குதிரைகளுக்கு-சுழிகள்-வடுக்கள்.-அல்லாது இன்னஞ் சிலகுறிகளுண்டு. அவைகளும் ஆகாதென்றறிக. இப்போது அவைகளின் வடிவும், இடமும், பயனுஞ் சொல்லிக்காட்டுவோம்.

1 இடபத்தின் கழுத்தைப்போல தோல்துணுக்காகத் தொங்குமானால் கோசங்கன் என்றுபெயர். அது எஜமான் மனைவியைக்கொல்லும்.

2. ஒருபல்லுக் கொருபல் லதிகப்பட்டிருந்தால் அதிகதந்தா என்றுபெயர். அது எசமானைக் கொஞ்சகாலையிற்கொல்லும்.

3. ஒருபல்லுக்கொருபல் குறைந்திருக்குமாகில் ஹீனதந்தம் என்றுபெயர் அது எசமான் வீட்டிலிருக்குந் தன்னினங்களை நாசஞ்செய்யும்.



4. முகம்பாய்ப்பினதுபடம்போலிருந்தால் அஹிமுகலி என்றுபெயர். அது எசமான் பெண்சாதி பந்துவர்க்கங்களிற் சண்டைச் சச்சரவுகளை யுண்டாக்கிவைக்கும்.

5. கண்கள் பூனைக்கண்களைப்போ லிருந்தால் சாகர் என்றுபெயர். இந்தக்குறிப்புள்ள குதிரைகளை வீட்டைவிட்டு நீக்கிப்போட பதிசபிரயாசைப்படவேண்டும்.

6. தேகம் புலிநிறம்போலிருந்தால் காலமோசா என்றுபெயர். அது எசமானுக்குண்டாகிய சகல சந்தோஷத்தையும் வியாகுலத்தில்மாற்றிவைக்கும்.

7. கழுத்தினுரோம மிரண்டுபிரிவாய்ப் பிரிந்து வலதுபுறத்திலும், ஒன்று இடதுபுறத்திலுமாய் விழுந்திருந்தால் பாலலோசனு என்றுபெயர், அது எசமானை யாத்திரைபோகச்செய்யும்.

8. முகத்தில் நீண்ட ஒருவெள்ளைக்கோடொன்றிருந்து அஃதிரண்டு மூன்று பிரிவாய்ப் பிரிந்திருக்குமாகில் நயின்மேகா என்றுபெயர், அது போரில் எஜமானைப்பயப்படுத்துவது மல்லாமல் ஒருபோதும் தன் எஜமான் போர்க்களத்திலிருந்து சவுக்கியமாய் வீடுவந்து சேரச்செய்யாது. அன்றியும், இந்தக்குதிரையின்பொல்லாப்பினால் தன் எசமானுடைய படை முறிந்துப்போகும்.

9. முதுகிலொரு நீண்ட வெளுத்தக்கோடிருக்குமாகில் அறஜுக் என்றுபெயர். இஃததிக துன்பத்தையுடையதாக விருக்கும். ஆகையாலிதின்முகத்தில் விழிக்கவுங் கூடாது. இதை ஒருபோதும் வீட்டில்

வைத்திருக்கவுங்கூடாது. மேலுமிந்தக் குறியுள்ளக் குதிரையை வீட்டில்வைத்திருப்பதைவிட சத்துருக்களை வைத்திருப்பது நன்மையாகவிருக்கும்.

10. மூக்கின்மேல் ருவடுவெளுத்திருக்குமாகில் ஷாரபோசன் என்றுபெயர். இதுயிருந்த பொல்லாங்கைத்தருவதுமல்லாமல் ஒருபோதும் எசமான் வயிறு நிறம்பச் சாப்பிடத்தக்க நிருவாகமில்லாத் தரித்திரவானாகவே யிருக்கச்செய்யும்.

இக்குறிப்படியே இரண்டுகண்ணுக்கிடையில் கொம்புபோல் நீண்டிருந்தாலும், முக்கோணமாயிருந்தாலும், மார்பு இருபிளப்பாய் பிரிந்துகாணினும், ஸ்தனங்களிருந்தாலும், பற்களுக்கிடையில் சிறியபற்கள்முளைத்திருந்தாலும், முன்னம்பற்களில் வளர்ந்த பற்களிருந்தாலும், கீழ்ப்பற்களால் மேற்பற்களைக்கடித்துக்கொண்டிருந்தாலும், ஒருகால் வெளுத்திருந்தாலும். ஓரண்டமுண்டபதாயிருந்தாலும், அண்டத்தின்மேல் மயிர்முளைத்திருந்தாலும், தாடையினுட்புறங்களில் சுழித்திருந்தாலும், இரட்டைக்குளம்புகளிருந்தாலும், உச்சியிற்கறுப்புப்புள்ளியிருந்தாலும் மார்பிலேக்குதிகோடு தோன்றினாலும், சவாரிசெய்யும்போது முன்னங்காலைத் தூக்கினாலும், மூக்கினதுவாரத்துக்குள் ஒருவெள்ளைப்புள்ளி யிருந்தாலும், கண்களுக்குமேல் அவாரம் பருப்புபோல உண்டைகள் கட்டியிருந்தாலும், முகத்தினது ரோமங்கள் மூன்றுபிரிவாய்ப்பிரிந்திருந்தாலும் கெடுதியென்றறிக.



## குதிரைக் கமையவேண்டிய மங்களக் குறிப்பு.

உதடுகள் நாற்புறமுஞ் சிவந்தும், மடிப்பில்லாமலு மிருதுவாயு மிருக்கவேண்டும், நாவுசிவந்தும், மெல்லியதாயு மிருக்கவேண்டும்.

பற்கள் நெருங்கியும் மழமழப்பாயும், பிருவாயும் சமனுயுமிருக்கவேண்டும். தாடைகள் மிகநீண்டிராமலும், பருத்திராமலு மிருக்கவேண்டும்.

கண்கள் ஒளியுள்ளதாயுமிருக்கவேண்டும். அல்லாமலும், மான்-யானை-கிரவுஞ்சபட்சி - டிட்டிப் பென்னும் பட்சி-ஓட்டை-மயில் இவைகளின்கண்களைப் போலவு மிருக்கவேண்டும்.

இமைமயிர்கள் மிருதுவாயும் விசாலமாயும், தெளிவாயுமிருக்கவேண்டும். நெற்றி தலைசுழியோடு அமைந்திருக்கவேண்டும்.

சிறசுசமனுயும், விருத்தமாயும், இரண்டு சுழிகளுள்ளதாயு மிருக்கவேண்டும்.

செவிகள் குறுகியும், கூர்மையாயும், மெல்லியதாயுமிருக்கவேண்டும்.

கழுத்து திடனுயும், வளைந்தும், நீண்டுமிருக்கவேண்டும். பிடரிமயிர் நீண்டிருக்கவேண்டும். மார்பு நீண்டும், அகண்டுமிருக்கவேண்டும். தொடைகள் விருத்தயுமாம், சமனுயு மிருக்கவேண்டும்.

முன்னங்கால்கள் மறைந்திருக்கிற முழந்தாள்களையுடையதாயிருக்கவேண்டும்.

கணைக்கால்கள் விருத்தமாயும், மாமிச மில்லாததாயு மிருக்கவேண்டும்.

குளம்புகள் திடமான மண்டேத்தையொத்ததாயும்மழமழப்பாயும், விருத்தமாயும், பருத்துமிருக்கவேண்டும்.

பக்கங்கள், மிகவுயர்ந்தும், நீண்டும் திடமாயும் சமனாயுமிருக்கவேண்டும். அடிவயறு தாழ்ந்தும், விருத்தமாயுமிருக்கவேண்டும். நடைவிருத்தமாயும், பின்புறம்பருத்துமிருக்கவேண்டும்.

வால் மிருதுவாயும், மழமழப்பாயும், நீண்டுமிருக்கவேண்டும்.

பீசங்கள் கூவிளங்கனி யவ்வளவு பிரமாணமுள்ளதாயும், சமனாயும், விருத்தமாயும், மயிரில்லாததாயுமிருக்கவேண்டும். ஆண்குறி கருத்திராமலும், குட்டையாயுமிருக்கவேண்டும். தொடைகள் முன்புற மொழுங்காயும், விருத்தமாயும், கொஞ்சம்வளைந்து மிருக்கவேண்டும்.

பெண்குதிரைகளுக்கு மிதீவிசேஷம். ஆயினும் பெண்குறியும் உதடும் அசைவற்றதாயும், நீண்டதாயும். நன்றாயமைந்திருப்பதாயும், ஒழுங்காயும் பரந்தாயுமிருக்கவேண்டும்.

இவ்விலக்கணங்கள் குறைந்த தேகத்தினையுடைய குதிரைகள் சுபகரமன்று.

## அளவு இலக்கம்.

மூன்று நெல்லளவுகொண்டது ஓரங்குலம், அப்படி இருபத்துநாலங்குலங்கொண்டது ஒருமுழம்.

உத்தம குதிரையினுடைய முகம் முப்பத்திரண்டங்குல நீளமிருக்கவேண்டும்.

மத்திம குதிரையினுடைய முகம் முப்பதங்குல நீளமிருக்கவேண்டும்.



அதமகுதிரையினுடைய முகம் இருபத்தெட்டங்குல நீளமிருக்கவேண்டும்.

இப்படியே கழுத்து ஐம்பத்தாறங்குல நீளமிருப்பது உத்தமமென்றும், நாற்பத்தாறங்குலநீள மிருப்பது மத்திமமென்றும், முப்பத்தாறங்குல நீளமிருப்பது அதமமென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள்.

மார்பு - இடை இவ்விரண்டும் முகத்தின் அளவையொத்திருக்கவேண்டும். செவிகள் ஏழங்குலநீளமிருக்கவேண்டும். தாடைகளினுட்புறம் ஆறங்குல நீளமிருக்கவேண்டும்.

கணைக்கால்கள் இருபத்திரண்டங்குல நீளமிருப்பது உத்தமம். பதினெட்டங்குல நீளமிருப்பது மத்திமம். பதினாறங்குல நீளமிருப்பது அதமம்

குளம்புகள் ஏழங்குல நீளமிருப்பது உத்தமமாம். ஆறங்குல நீளமிருப்பது மத்திமம். ஐந்தங்குல நீளமிருப்பது அதமம்.

உயரம் நாலுமுழமிருப்பது உத்தமம். மூன்றரைமுழமிருப்பது மத்திமம். இரண்டரைமுழ மிருப்பது அதமம். நீளம் ஐந்துமுழ மிருப்பது உத்தமம். நான்குமுழமிருப்பது மத்திமம். மூன்றரைமுழமிருப்பது அதமமென்றறிக.

## வருணபேதம்.

குதிரைகளுக்கு பரிசுத்தநிறமும் கலப்புநிறமுமாக வனேகநிறங்களுண்டு.

இவைகளில் சம்மன்-குமைத்து-மிஷ்கி-கள்ளியா இந்நான்கு நிறமாத்திரம் பரிசுத்தமாம் வெண்

மை-கருமை-செம்மை-மஞ்சள் ‡ இந்நான்கு நிறங்களோடு மற்ற கலப்புநிறங்கள்யாவும் பரிசுத்தமானதல்ல.

மேற்சொன்ன இந்நான்கு நிறமுள்ள குதிரைமாத்திரம் பாராக்கிரமத்தோடு எவ்வளவுதூரம் நடந்தாலும் தயிரியத்தைவிடாமல் சகலபிரயாசைகளையும் சகித்துவரும். மற்றநிறமுள்ளகுதிரைகளியாவும் கொஞ்சப்பிரயாசைக்கு இளைத்து வாடித்துவண்டுபோகும். இப்போது இவைகளிற் சிலவிரங்களை யெடுத்துக் காட்டுவோம்.

குதிரையின் தேகத்துக்கு மயிர்களும்-உளையும் * வாலும்-தோலும் † குளம்புவெளுத்து சங்குபோலிருப்பதற்கு போசலா என்றுபெயர்.

இன்னமிப்படியே எல்லாம் வெளுத்து தோல்மாத்திரங்கருத்திருப்பது மக்குலிலாஎன்றுபெயர்

மேற்சொன்ன அவயவங்களெல்லாங் கறுத்திருப்பது மிஷகி என்றுபெயர்.

இவ்வாறே சிவந்திருப்பது சுரங் என்றுபெயர்.

உளை-வால்-தேகத்தின்மயிர் இவைகள் பொன்னிறமாயிருக்குமாகில் ஜர்தா என்றுபெயர்.

கறுத்துஞ் சிவந்துமிருக்கிற மயிர்கள் இரட்டையான உருப்புகளிருந்து கால் - முகம்-வால்-உளை இவைகள் சிவந்திருக்குமாகில் மகாசுரங் என்றுபெயர்

* உளை யென்பது - பிடரிமயிர்.

† மூன்றுகாற் குளம்புகள்வெளுத்து ஒருகால் குளம்பு சிவந்திருந்தால் அக்குதிரையைத் திரும்பிப் பார்க்கவேண்டாம்.



வெளுத்துங் கறுத்தும் அல்லது வெளுத்துஞ் சிவந்துமிருக்குமாகில் அபுல்கு என்றுபெயர்.

உளை-வால் இவைகள் பொன்னிறமாயுந் தேகஞ்சிவந்த அத்திப்பழத்தின் காந்திபோலுமிருக்குமாகில் குமுங் என்றுபெயர். அல்லது சுங்கோரிசுரங்கு என்றும்பெயர்.

தலை-மயிர்-உளை-பிருஷ்டம் முழங்கானுக்குக் கீழ்ப்புறம் இவைகள் கறுத்திருந்து தேகமெல்லாம் பொன்னிறமா யிருக்குமாகில் சியாஜூர்தா என்றுபெயர்,

தேகமெல்லாம் வெளுத்து ஒரு காதுமாத்திரம் கறுத்திருக்குமாகில் சியாகீஸ் என்றுபெயர்.

நாலுகால்களிலும் நெற்றியிலும் ஒருபட்டைகளமாய் வெளுத்திருக்குமாகில் பஞ்சகல்யாணி என்றுபெயர்.

கால்-முகம்-தலைமயிர்-வால்-மார்பு இவைகள் வெளுத்து மற்றதேசமுழுதும் எந்நிறத்திலிருந்தாலும் அஷ்டகல்யாணி என்று பெயர்.

நாலுகாலும் வெளுத்து நெற்றியில் ஒருவெள்ளைபிறையைப்போ லிருக்குமாகில் சந்திரமுக்குக்கலியா என்றுபெயர்.

நாலுகால் அல்லது இரண்டுகால மாத்திரம் வெளுத்து நெற்றியில் நீண்ட வெளுப்புண்டாயிருக்குமாகில் தாதுபாது என்றுபெயர்.

பக்கங்களில் வெள்ளைப்புள்ளிகளால் சித்திரம் போலிருந்து தேகம்மற்ற எந்நிறத்தையுடையதாயினும் குல்தார் என்றுபெயர்.

வெள்ளைக்குதிரையின் தேகத்தில் சிறிய கறுப்புப் புள்ளியாவது அல்லது, மற்ற எந்நிறத்திலாவது சிறியபுள்ளிகள் நாற்புறங்களிலுமிருந்தால் சீனி என்றுபெயர்.

இவ்வாறே பருத்தக் கறுப்புப்புள்ளிகளிருந்தால் அபுரிஷேன் என்றுபெயர்.

தேகமுழுதும் சந்தன நிறமாயிருக்குமாகில் சம்மன் என்றுபெயர்.

கால்கள்மாத்திரங் கறுத்து தேகமுழுதுஞ் சிவந்திருக்குமாகில் குமைத் என்றுபெயர்.

தேகமெல்லாஞ் சந்தனநிறமாயிருந்து தலைதொடங்கி வால்வரையில் கறுத்தக்கோடொன்று வந்திருக்குமாகில் குல்லா என்றுபெயர்.

கோதும்பை யுமியின் காந்தியிலாவது சிவந்த சந்தனநிறத்திலாவது தேகமுழுதும நிறைந்திருக்குமாகில் கிங் என்றுபெயர்.

தேகம் கோதுமை நெய்யின் காந்தியாயிருந்து தோல் சிவந்திருக்குமாகில் தாமுஷ் என்றுபெயர்.

தேகமுழுதும் வெளுத்திருந்தால் நீலா என்றுபெயர்.

தேகமுழுதும் சந்தன நிறமாயிருந்து கால்கள் மாத்திரங் கறுத்திருக்குமாகில் சம்மன்சியா ஜானு என்றுபெயர்.

தேகத்தினுரோமங்களானது கருமையும் செம்மையுங் கலந்திருந்து கால்கள்மாத்திரங் கறுத்திருக்குமாகில் தேலியாகுமைத் என்றுபெயர்.



உளையும்-வாலும் வெளுத்து தேகமுழுதும் சந்தனநிறமாயிருக்குமாகில் ஷாகா என்றுபெயர்.

தேகம் பசுமைபோன்ற வெள்ளைநிறமாகில் சஞ்சா என்றுபெயர்.

இவ்வாறே பசுமைபோன்ற வெளுப்பில் சித்திரம்போல் புள்ளிகள் பாந்திருக்குமாகில் சப்ஜா என்றுபெயர்.

தேகமுழுதும் வெளுத்த சந்தன நிறமாயிருந்து முகமாத்திரம் வெளித்திருக்குமாகில் நுகறு என்றுபெயர்.

இவ்வண்ணமாய் குதிரைக்கனேக நிறங்களுண்டு ஆயினும் மொத்தமாய் எத்தனை நிறங்கள் புறாக்களுக்குண்டோ அத்தனைவகை நிறமுங் குதிரைகளுக்குண்டென்றறிக.

## அவசியமறியும் பலன்.

குதிரைகளில் தேகமுழுதும் வெளுத்து அல்லது தேகமுழுதும் சிவந்து முன்கால் பின்னங்கால் முகம் இவை வெளுத்திராநின்ற குதிரைகளைக் கொண்டாடத்தக்கதென்றறியவும்.

அல்லாமலும் தேகமுழுதும் பொன்னிறமாயும் மழமழப்பாயுமிராநின்ற குதிரைகளுக்கு மிறுவேவிதி.

அசுவங் கொள்பவர்கண்மனதிற்கு ஓர்விதசமதானம் தேகம் ஒரே நிறமாயிருந்தாலும் அல்லது பலநிறமாயிருந்தாலும் மெருகோடுங்கூடி மழமழப்பாயிருக்குமாகில் நிறத்தினல்வரும் எல்லாக்குற்றங்களையும நிவர்த்திசெய்கின்றது. ஏனெனில் மெருகானது சகல நிறங்களினு முயர்ந்திருக்கின்றது.

சாம்பல்நிறத்தையும் கோணலாயிராநின்றவாலையும் ஈபோன்ற நிறத்தையுடைய குதிரைகள் தள்ளப்பட்டிருக்கின்றன கொள்ளாமலிருப்பது நன்மை.

## நாடியறிந்து அதினால்வியாதியை பகுத்தறியும் வகை.

மனிதர்களுடைய தேகத்திலுண்டாகுஞ் சகல நோய்களையும் நாடியினாலுங் குறியினாலுங்கண்டுகொள்வதுபோல் குதிரையின் வியாதிகளையும் அதின் செவியினாலும் கண்ணினாலும் வாயினாலும் அக்குளினாலும் கண்டுகொள்ளலாம்.

செவி. குதிரையின் செவி நாடி பார்க்கிறவனுக்கு வேண்டியதாவது தன்கைப் பெருவிரல் தவிர மற்ற நாலுவிரல்களையும் வரிசையா யொன்றாய்ச்சேர்த்து குதிரைச்செவியை மெதுவாய் கைப்பிடிக்குட் பிடித்து பார்க்கவேண்டும். சூடுதோன்றுமாகில் சுரமென்னும் குளிமைதோன்றுமாகில் சீதளமென்றும் சூடுங் குளிமையுங்கலந்து தோன்றுமாகில் அப்படியே நோயுங்கலந்திருக்குமென்று எண்ணி அதுக்கேற்ற பக்குவங்கள் செய்யவேண்டும்.

கண். கண்களை நீக்கிப் பார்க்கும்போது கண்ணின் இரத்தம்வெளுத்து தண்ணீர் ததும்பிக்கொண்டிருக்குமாகில் குதிரைக்கு வெட்டையதிகரித்துச் சூடேறியிருக்குதென்றும் இரத்தமஞ்சளித்தாவது வானநிறத்திலாவது கலந்து தோன்றுமாகில் பித்தசுரமென்றும் கண்களிற் பச்சை இரத்தம் புள்ளியாய்



விழுந்திருக்குமாகில் சன்னிப்பிறந்துத் தோஷித்திருக்குதென்றும் கண்களில் இரத்தமதிகமாய்ச் சிவந்திருக்குமாகில் வாய்வு அதிகரித்திருக்குதென்றும் கண்கள்சிவந்தும் கீழ்வயிறும் அண்டமும் வீங்கியிருக்குமாகில் ஜகர்பாத் துண்டாயிருக்குதென் றெண்ணி அதுக்குத் தகுந்தபக்குவங்கள் செய்யவேண்டும்.

வாய். உதடுவெளுத்து பச்சைநரம்புகள் விம்மி கால்களில் யாதோராசைவுமில்லாமல்நீண்டு கண்களினால் நீரோடிவருமாகில் ஜவுரீ பிறந்திருக்குதென்றும் வயிறுவீங்கி மலசலங் கட்டுப்பட்டுப் படுக்கிறதும் எழுந்திருக்கிறதுமாக விருக்குமாகில் பர்ரீ பிறந்திருக்குதென்றும் தாகமதிகரித்துக் கொள்ளும் புல்லுங் கொஞ்சமாகத் தின்று மூச்செறியுமாகில் ஆப்ரீ பிறந்திருக்குதென்றும்தேகமுழுதுஞ்சூடேறி மார்புகனத்து புல்தின்னாமல் கண்ணில் நீர்ததும்பிக்கொண்டு தலையைக்கீழேபோட்டுவிடுமாகில் குளிமைபிறந்திருக்கிறதென் றெண்ணி அதனுக்குத் தகுந்த பக்குவஞ்செய்யவேண்டும்.

அக்குள். அக்குளினுடைய துடிப்பானது மெதுவாய் மெலிந்து துடிக்குமாகில் குளிர்மையென்றும் அதிகமும் மரத்தோடுந்துடித்து சூடெழும்பியிருக்குமாகில் தக்டக்காவென்றுபெயர். இது சொஸ்தமாகமாட்டாது. குதிரையைச் சேதப்படுத்தும் இரண்டுபுறத்திலு மதிகபலமாய்த் துடிக்குமாகில் அதிக சூடுண்டாயிருக்குதென்றும் இப்படியே இருபுறத்தி

துவெலிந்து துடிக்குமாகில் குளிர்மையென்றெண்ணி அதனுக்கேற்ற பக்குவங்கள் செய்யவேண்டும்.

## குதிரைகளுக்கு வியாதியின் குணம்.

### பகுத்தறியும் வகை.

சாஸ்திரப்படி எழுபத்திரண்டுவித வியாதிகளுண்டு அவைகளில் பன்னிரண்டுவியாதிகள் உள்வியாதி என்றும் அறுபதுவியாதிகள் வெளிவியாதி என்றும் பிரித்துக்காட்டப்படும்.

### உள்வியாதி.

பன்னிரண்டு வியாதிகளுங் குதிரையைத்திருத்துகிறவர்களையல்லாமல் மற்றொருவருக்குந் தெரியாது ஆனதால் குதிரைவாங்குகிறவர்கள் ஒருவாரம் அல்லது இரண்டுவாரம்வரையில் குதிரையைவீட்டில் கட்டிவைத்திருந்து இந்த வியாதிகளை யறியவேண்டும்.

1. குதிரையின் தேகத்திலும் முதுகிலும் ஒருவிதவலியுண்டாகியதினால் வாயிலிருந்து ஒருவிதவொலியொன்று சப்திக்கும். செவிகொடுத்துக் கவனமாயறியவேண்டியது.

2. இருந்தாப்போலிருந்து குதிரையின் தேகத்தில் ஒருதுகபோலப்படர்ந்து மறுபடியு மறைந்துபோகும் இப்படியே தோன்றுவதும் மறைவதுமாகவேயிருக்கும் அதை குதிரைகழுவும்போது கண்டுணரவேண்டும்.

3. அப்படியேதேகத்தில் வீக்கந்தோன்றுவதும் மறைவதுமாகவேயிருக்கும் மாலீசுபண்ணும்போது தெரியவரும்.



4. குதிரை சவாரிசெய்து திரும்பி வந்தவுடனே இரத்தநீர்விடும் மறுபடி ஒருநாட்சென்று சுபாபநீர்விடும்.

5. குதிரை பசியில்லாமல் கொள்ளும் புல்லுங் கொஞ்சமாகத் தின்னும் கட்டுத்தறியில் மிரண்டுக்கொண்டே யிருக்கும்.

6 குதிரைக்குத் தலைநோயுண்டாகி வாயினால் மஞ்சள் நீரோடிக்கொண்டிருக்கும் மறுபடியும் அமர்ந்துக்காட்டும்.

7. குதிரைக்கண்களில் நீரோடி வருவதும் நின்றுபோவது மாகவிருக்கும் மருபடி இமைகளைமூடி மூடித்திறக்கும்.

8. குதிரைக் கிரண்டுகாலைக்கொருதரம் இராத்திரிகாலங்களில் வயிற்றில்நோயுண்டாய் அதினாலதிகவுபத்திரவத்தைக் கொடுத்து பகற்காலங்களில் சொஸ்தப்பட்டுப்போகும் இப்படியே அடிக்கடித்தொடர்ந்திருக்கும்.

9. குதிரை இராத்திரிமுழுது முன்னங்கால்களை நீட்டிக்கொண்டே படுத்திருக்கும் தலையை யசைத்துக்கொண்டிருக்கும்.

10. குதிரைக்கிரவில்முழுதும் பெருமூச்செறிந்து சூரியனுதயத்துக்கு மாறிப்போகும்.

11. குதிரைக்கு * குளிர்மையினால் இரவுமுழுதும் இருமலுண்டாகி பொழுதுவிடிந்தவுடனே நின்றுபோகும்,

* குதிரைக்கு சவாரியிலிருந்து அவிழ்த்தவுடனே குளிர்ந்தசலங் காட்டுவதினால் இரவில் இருமலுண்டாவதற்குக் காரணம்.

12. குதிரைக்கொருவித வாய்வுண்டாகி யிரண்டொரு நாளைக்கொருதரம் கொண்டும் வியாதி இன்னதென்றறியாமல் பலவித அவிழ்தப் பிரயோகத்தால் குதிரையை வருத்தப்படுத்தி உபயோகத்துக்கு வராமற்செய்துவிடுவார்கள்.

## குதிரைகளுக்கு பேதிக்குக்கொடுக்கும் விபரம்.

### பெரியகுதிரைக்குப் பக்குவம்.

| | | |
|---|---|---|
| கரியபோளம் | பலம் | முக்கால் |
| சுக்கு | ,, | ௧ |
| சவுக்காரம் | ,, | ௧ |

இம்மூன்று தினுசுகளையும் அரைத்துதேன்வார்த்து உண்டைசெய்து அதிகாலையில் உள்ளுக்குப்போடவும் சொருசாய்பேதியாகும் தாகமுண்டானால் வெந்நீர் ஆறவைத்து நாலுதரங்காட்டவும் பேதி அதிகப்பட்டால் காலுபலாஞ் சுக்குகொண்டுவந்து சூரணஞ்செய்து ஒருவிராகனிடை அபினிசேர்த்து கொஞ்சந் தண்ணீருட்டுக்கலந்து அனலில்வைத்து லேகியமாகக் கிண்டி ஒரு உண்டைசெய்துக்கொடுக்கவும் பேதிநிற்கும்.

### பேதியாகாத பெரியகுதிரைகளுக்கு பக்குவம்.

| | | |
|---|---|---|
| கரியபோளம் | துலாம் | ௫ |
| சுலாபாமிழக்கு | ,, | ௧ |
| கொடிமுந்திரியுப்பு | ,, | ௧ |
| ருபார்பு | விராகனிடை | ௧ |
| சுக்கு | ,, | ௧ |



இவைகளை தேன்விட்டரைத்து முந்திபதனமாய் வைத்துக் கொண்டு பேதிக்குகொடுக்கு முதல்நாள் வழக்கமாய் காட்டுங்கொள்ளைநிறுத்திமறுநாள்காலை சரியாய் நாலுமணிக்கு மேற்படி யவுழ்த்தைஉள்ளுக்குக்கொடுத்துவிடவேண்டும். மறுபடிகாலை அ-மணி துவக்கி சாயரட்சைவரையில் வேண்டுமளவும் வெந்நீர்காட்டவும் தீபத்துக்குமுந்தி பேதிதுவக்கி மறுநாள் ய-மணிவரையில் நன்றாய்பேதியாகும் அன்றய தினம் நாலுதரம் வெந்நீர்காட்டவேண்டும் மறுபடி பேதியாகும். பின்புபேதிநிறுத்துவதற்கு காலுதுலாஞ் சுக்குகொண்டுவந்து சூரணஞ்செய்து அதோடு ஒருவிராகனிடை அபினிசேர்த்து கொஞ்சந் தண்ணீர்விட்டுக்கலந்து அடுப்பில்வைத்து இலேகியம்போற் கிண்டி யுண்டைசெய்துகொடுக்க பேதிகட்டுப்படும். அடுத்து மூன்றுநாள்வரையில் காலைமாலை வழக்கக் கொள்ளுக்கு கொஞ்சங் குறைத்துக் காட்டிவரவேண்டும். மத்தங்காப்புல் சேரவொட்டாமல் பார்த்து வரவும்.

### மட்டகுதிரைகளுக்கு பேதிமருந்து.

| | | |
|---|---|---|
| கரியபோளம் | பலம் | ௧ |
| சுக்கு | ,, | முக்கால் |
| சவுக்காரம் | ,, | ,, |

மற்ற பிரயோகம் மேற்கண்டபடி சரியாய் நடத்தவும்.

### நாடடித்தட்டுக்கு பேதிமருந்து.

| | | |
|---|---|---|
| கரியபோளம் | பலம் | ௧ |
| சுக்கு | ,, | ௧ |
| சவுக்காரம் | ,, | ௧ |

மேற்கண்ட பக்குவஞ்செய்துக்கொள்ளவும்.

பேதிக்குக் கொடுக்கும்படி மேற்கண்ட அளவுப்பிரமாணம் பிரயோகஞ்செய்யும்பொருட்டு குதிரைகளுக்குத் தக்கப்படி ஸ்பிரங்கண்டிருக்கின்றது.

நாலுசாதி குதிரைகளுக்குங் கொடுக்கு மோர்வித பேதிமருந்து.

கரியபோளம் பலம்-க, நன்றாய்ப்பொடிசெய்து நல்லவெல்லத்தில்வைத்து மேய்க்கவும். ஒருநாளிரண்டுநாள் மூன்றுநாள் பேதியாகும் அப்பால்தினம் இரண்டுவேளையும் வெந்நீர்காட்டவும் கொள்ளுகாட்டக்கூடாது.

அதிகபேதியானால்.

| | | |
|---|---|---|
| வாய்விளங்கம் | ௦ சேர் | ல |
| மிளகு | ,, | ல |
| சுக்கு | விராகனிடை | க |

இம்மூன்றும் நன்றாயிடித்து உள்ளுக்குப்போடவும் உடனே பேதிநிற்கும பேதிநின்றவுடனே மஞ்சள்சேர்-க, சுக்கு விராகனிடை-ரு பொடிபண்ணி அந்தப்பொடியில் குக்கிலம் விராகனிடை-ரு பொடிசெய்துப்போட்டு வெள்ளாட்டுக்கோமியத்திற் குழப்பிக்கொடுக்கவும் காசுகொடுத்து உடம்பை நன்றாய்ப்பிடிக்கவும் இப்படி மூன்றுநாளைக்கு இரண்டுவேளையும் மேய்த்து அப்பால் நாலுநாளைக்கு ஒருவேளை மேய்த்து கொள்ளு காட்டவும் ஒருவேளை குளுந்தஜலங் காட்டவும்.



வெளிவியாதி அறுபதையும்பிரிவாய்ப்பிரித்து காட்டுவோம்.

சூலைகள்பதினெட்டு.

1. குதிரை ஜ்மேலிழுத்து மூச்செறிந்துயிரண்டு விலாவும் ஒன்றோடொன்று சொருகிக்கொண்டிருக்குமாகில் சருவர்த்தசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| பூவரசங்கொட்டை | விராகனிடை | கூ |
| சோரி | ,, | சா |
| அஜவான் | ,, | சா |
| மாவலிங்கப்பட்டை | ,, | சா |
| காயம் | ,, | ரு |
| நெய் | பலம் | அ |

இவைகளில் நெய்தவிர மற்றவைகளை வஸ்திரகாயஞ்செய்து நெய்யிற்கலந்து மூன்றுதுட்டிடை யுண்டைசெய்து ஏழுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை மூன்றுநாளைக்கு நீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேணும். மேற்படி வெந்நீர் குளிர்ந்த சலம்போல ஆறியிருக்கவேண்டும்.

வேறு-பக்குவம்.

| | | |
|---|---|---|
| ஓமம் | விராகனிடை | கூ |
| சுக்கு | ,, | கூ |
| திப்பிலி | ,, | கூ |
| அமுக்கறாக்கிழங்கு | ,, | கூ |

| | | |
|---|---|---|
| காயம் | ,, | கூ |
| குல்கந்து | ,, | கூ |
| நெய் | சேர் | க |

இவைகளை வஸ்திரகாயஞ்செய்து நெய்யிற்கலந்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் உண்டைசெய்து கூ-நாளைக்குக்கொடுக்க சொஸ்தமாகும். பத்தியம் முன் சொன்னதுபோல நடத்திவரவும்.

2. குதிரை யடிக்கடி விலத்தை முகர்ந்துக்கொண்டும் விலாவிரண்டிபுறமு மிழுத்துக்கொண்டு மிருக்குமாகில மத்துறுவர்த்தகுலே என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| திப்பிலியரிசி | விராகனிடை | கூ |
| கஜபேல் | ,, | கூ |

இவைகளை பொடிசெய்து கொடித்தண்ணீரில் கலந்துகொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

3. குதிரை கீழேவிழுந்து அடிக்கடி வாயினால் ஒருவிதச் சத்தமாகச் சத்திக்குமாகில் சூதாவர்தசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| சுருசிராங்கண்ணிவேர் | விராகனிடை | கூ |
| பூவரசங்கொட்டை | ,, | கூ |
| தட்டைப்புங்கங்கொட்டை | ,, | கூ |
| இந்துப்பு | ,, | கூ |
| ஆமணக்கெண்ணை | சேர் | க |

இவைகளில் எண்ணை தவிர மற்றவைகளைப் பொடிசெய்து எண்ணையிற்கலந்து கொடுக்கும்போது கால்



22/1/16

சேர் பசுமாட்டின்தயிர் அதோடு சேர்த்துக்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளை கொடுக்க வேண்டும் சொஸதமானபின்பு கொள்ளுங் குளிர்ந்த ஜலமுஞ் சேர்த்துக்கொள்ளலாம்.

4. குதிரை யடிக்கடி உட்காருகிறதும் படுக்கிறதுமாகவிருந்து வாலை வயிற்றிற் சொருகிக்கொள்ளுமாகில் வாதசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வசம்பு | விராகனிடை | கூ |
| கோஷ்டம் | ,, | கூ |
| பாஷாணா | ,, | கூ |
| இந்துப்புவெல்லம் | ,, | கூ |

இவைகளை கொண்டுவந்து பொடிசெய்து ஒருசேர் கஞ்சிக்காடியில் கலந்துக்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

5. குதிரை மூக்கிலிருந்து நீர் இரத்தம்போற் சிவந்து நிற்காமல ஓடிவந்து கீழேவிழுந்து போகுமாகில் இரத்தப்பிரமியசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வாழைக்கிழங்கின்சாறு | சேர் | க |
| பசுவின்பால் | ,, | வ |

இவையிரண்டுங் கலந்து உள்ளுக்குக்கொடுத்துமுக்கிலுங் குத்திவரவேண்டும. பின்பு முள்ளிஇலை பிடி-ட. கத்தரிக்காய்-உ. இவையிரண்டுஞ் சேர்த்துத் து

வைத்து மூன்றுவேளைக்குக் கொடுக்க சௌஸ்தமாகும் பத்தியமில்லை.

6. குதிரையின் நாபியிழுத்துக்கொண்டு கீழே விழுந்து கால்களுதறிக்கொள்ளுமாகில் கன்மகுலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வசம்பு | விராகனிடை | சு |
| கோஷ்டம் | ,, | கூ |
| பூவரசங்கொட்டை | ,, | கூ |
| ஓமம் | ,, | கூ |
| காயம் | ,, | உ |
| புழுப்புட்டி | ,, | க |

இவைகளில் வெல்லந்தவிர மற்றவைகளைப் பொடி செய்து வெல்லத்திற்கலந்து மூன்றுண்டை செய்து மூன்றுவேளைக்கொடுக்கச் சௌஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர்மாத்திரங் கொடுக்கவேண்டும்.

7. குதிரை கீழேவிழுந்தும் கால்களை உயர்த்திக்கொண்டும் வயிற்றை மூனர்ந்துக்கொண்டு மிருக்குமாகில் நாசாவர்த்தகுலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| காயம் | விராகனிடை | ச |
| இந்துப்பு | ,, | கூ |
| பனைவெல்லந் | சேர் | க |



| | | |
|---|---|---|
| தயிர் | ,, | க |
| பசுவின்பால் | விராகனிடை | கரு |

இவைகளில் மேற்சொன்ன காயமுதலியவைகளைப்பொடிசெய்து வெல்லம் தயிர் பால் இவைகளோடு கலந்து மூன்றுநாளைக்குக் கொடுக்க சௌஸ்தமாகும்.

பத்தியம்.

குதிரைப் பருத்திருந்தால் கொள்ளைநீக்கவேண்டும் இளைத்திருந்தால் வழக்கத்திற்பாதிகொள்கொடுக்கவேண்டும்.

8. குதிரை யடிக்கடி உட்காருகிறதும் எழுந்திருக்கிறதுமாகவிருந்து மூச்செறிந்து அடிக்கடி வலயிடம்பார்த்துக்கொண்டும் புல்தின்னுமலு மிருக்குமாகில் பாதாவர்த்தகுலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| காயம் | விராகனிடை | சர |
| வாய்விளங்கம் | ,, | கூ |
| வசம்பு | ,, | கூ |
| பசுவின்சாணம் | | கொஞ்சம் |

எருமைமயிரில் நெய்தகப்பளஞ் சுட்டசாம்பல்பிடி-க

இவைகளையெல்லா மொன்றாய்ச் சேர்த்துக்கொடுக்க சௌஸதமாகும் பத்தியமில்லை.

9. குதிரை கொள்ளும் புல்லுஞ் செவ்வையாய்த்தின்னுமலிளைத்துப்போய் எந்நேரமும் நோயுள்ளதாயிருக்குமாகில் சர்தபாமகுலை என்றுபெயர்.

பக்குவம்.

நல்லெண்ணெயும் நெய்யும் சரிபாகமாய்ச் சேர்த்து நன்றாய்க்கலந்து தேகமுழுதும் சூடேறும்படித்தேய்த்து வெய்யலில் கட்டிவைக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| பின்பு பனைவெல்லஞ் | சேர் | ௧ |
| மஞ்சள் | விராகனிடை | ௮ |
| சுக்கு | ,, | ௯ |
| கடுக்காய் | ,, | ௯ |
| நெய் | சேர் | ௧ |

இவைகளில் நெய்தவிர மற்றவைகளைப் பொடிசெய்து நெய்யிற் கலந்துக்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**10.** குதிரை வாயினு லெக்நேரமும் மஞ்சள்நீரொடிக்கொண்டு குதிரைக்கதிகமாக வேர்த்து வேர்வையில் முழுகிப்போகுமாகில் தசின்சூலையென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| பேகே | விராகனிடை | ௪ |
| அல்வக்து | ,, | ௪ |
| சுக்கு | ,, | ௪ |
| திப்பிலி | ,, | ௪ |
| சஜ் | ,, | ௪ |
| பசுவின்பால் | சேர் | ௫ |

இவைகளிற் பால்தவிர மற்றவைகளைப் பொடிசெய்து பாலிற்கலந்து மூன்று நாளைக்குக் கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.



**11.** குதிரை யடிக்கடி இலத்திப்போட்டுக்கொண்டு மலதுவாரத்தை யடிக்கடி கடித்துக்கொண்டிருக்குமாகில் ஆத்திசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| இலுப்பைப்புண்ணாக்கு | துலாம் | ௮ |
| சாட்டரணைவேர் | ,, | ௮ |
| விளக்கெண்ணெ | ,, | ௮ |

இவைகளில் எண்ணெதவிர மற்றவைகளை வேறுயரைத்து எண்ணெயிற் கலந்துக்கொடுத்துபின்பு மலத்துவாரத்திலொருசூடுபோட சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**12.** குதிரை வாலை அடிக்கடி முறுக்கிக்கொண்டிருக்குமாகில் குஷ்குசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| திப்பிலி | விராகனிடை | ௯ |
| மிளகு | ,, | ௯ |
| காயம் | துலாம் | ௰ |
| நெய் | சேர் | ௧ |

இவைகளை நெய்யிற்கலந்து மூன்றுநாளைக் கிடைவிடாமற் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

**13.** குதிரை வலமிட மனிதர்களை விழித்து விழித்துப் பார்த்துக்கொண்டும் அடிக்கடி உட்கார்ந்து

க்கொண்டும் வயிரதிகமாக விரைத்துக் கொண்டும் புகா பயதோடும் அச்சத்தோடும் நிற்குமாகில் அநு கரசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மிளகு | விராகனிடை | ௪ |
| திப்பிலி | ,, | ௪ |
| சுக்கு | ,, | ௪ |
| கல்யாணமுருங்கிலை | ,, | ௧ |

இவை நான்கும் ஒன்றாயரைத்து * சாராயத்திற் கலந்துக்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**14.** நான்குகாற்களிலும் வயிற்றின்கீழும் வீக்கங்கண்டு தேகமுழுதுங் காச்சலுண்டா யிருக்குமாகில் ஆகாயசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வாழைத்தண்டின்றண்டு | | ௧ |
| இஞ்சி | சேர் | ௧ |
| வெங்காயம் | ,, | ௧ |
| ஏலரிசி | பலம் | ௧ |
| சீரகம் | ,, | ௧ |
| வெந்தியம் | ,, | ௧ |
| செவ்விக்காய் | ,, | ௪ |
| பிரண்டை | பிடி | ௧ |
| பனைவெல்லம் | பலம் | ௪௰ |
| தயிர் | சேர் | ௧ |

* அருக்குபட்டை இவை நீக்கி பிருந்திசேர்த்தால் வியாதிக்கு யதிகபலன்.



| | | |
|---|---|---|
| முருங்கப்பட்டை | பிடி | ௧ |
| எலுமிச்சம்பழம் | | ௨௰ |

இவைகளில் தயிர்தவிர மற்றவைகளையிடித்து தயிரில்கலந்து அடுப்பில்வைத்து தேங்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து மூன்றுநாளைக்குக்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**15.** குதிரைக் கால்களில் பிடிப்புண்டாகி நரம்புகளெல்லாஞ் சுருட்டிக்கொண்டு காலெடுக்கமாட்டாமல் அப்படியே எடுக்குமாகில் கால்களிலதிகநோயுண்டாகி நடக்கும்போது கால்களில் சிட்டுசிட்டென்று சத்தமுண்டாகுமானல் கட்டுசூலைஎன்றுபெயர்

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௫ |
| வசம்பு | ,, | ௫ |
| பூண்டு | ,, | ௫ |
| குண்டுமணி | ,, | ௧ |
| படிகாரம் | ,, | ௧ |
| * முருங்கப்பட்டை | ,, | ௪ |
| காயம் | ,, | ௧ |
| கடுகு | ,, | ௬ |
| குருசானியோமம் | ,, | ௧ |

இவைகளை ஒன்றாயிடித்து அதிற் கொஞ்சஞ் சேவலினெச்சம் சேர்த்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து எழுநாளைக்கு இரண்டுவேளையும் கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

* பட்டை செதுக்கும் முருங்கமரம் உ௰-வருஷத்துக்கு மேற்பட்டதா யிருக்கவேண்டும்.

**16.** குதிரைக்கு திடீரென்று இரத்தநீர் காணுமாகில் நகத்துசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| நற்சீரகம் | துலாம் | ௨ |
| பெருஞ்சீரகம் | ,, | ௨ |
| கொத்தமல்லி | ,, | ௨ |
| நெல்லிமுள்ளி | ,, | ௫ |
| ரோசாப்பூ | ,, | ௨ |
| பொட்டலுப்பு | ,, | ௧ |

இவைகளைப் பொடிசெய்து தேன்கலந்து மூன்றுண்டைசெய்து இடைவிடாமல் மூன்று நாளைக்குக் கொடுக்க சொஸ்தமாகும்

பத்தியம்.

கொள்ளை நீக்கிவைக்கவேண்டும்.

**17.** குதிரைக்கதிக பேதிகண்டு யெழுந்திருக்கத்தள்ளாமல் விழுந்து விழுந்து போனாலும படுத்தபடுக்கையோடு கழிந்துக்கொண்டாலும் இரக்கட்டசூலை என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ௨ |
| சீரகம் | ,, | ௨ |
| கடுகு | ,, | ௨ |
| சுக்கு | ,, | ௨ |
| கடுக்காய் | ,, | ௨ |
| சாதிக்காய் | ,, | ௧ |
| பனைவெல்லம் | ,, | ௨0 |
| எலுமிச்சம்பழம் | ,, | ௨0 |
| தயிர் | சேர் | ௧ |



இவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்தரைத்து மூன்று நாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**18.** குதிரைக்கு இருந்தாப்போலிருந்து வயிறு வீக்கங்கொடுத்து இசவுகண்டு கொள்-புல்-ஒன்றுந்தின்னாமல் இலத்திமூத்திரங் கட்டுப்பட்டு மிகுந்த உபத்திரவத்தோடும உட்காருகிறதும் எழுந்திருக்கிறதுமாக விருக்குமாகில் வாதவர்தசூலைஎன்றுபெயர்

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகுரோகணி | சேர் | வ |
| திப்பிலிமூலம் | ,, | காலிக்கா |
| அபினி | துலாம் | அரை |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்து சாராயத்திற்கலந்து மூன்று வேளைக் கொடுக்க சொஸ்தமாகும் பேதியாகும் வியாதிவிரவிற்குணமாகும் அப்படிக்கு சொஸ்தமாகாவிட்டால்.

வேறு-பக்குவம்.

| | | |
|---|---|---|
| பசுவின்பால் | சேர் | வ |
| விளக்கெண்ணை | ,, | அரிக்கால் |

இவையிரண்டுஞ் சேர்த்துக்கொடுக்க உடனே பேதியாகும் பேதியாகாவிட்டால் குதிரைச்சேதப்படும்.

மேற்சொன்ன பதினெட்டு சூலைவியாதிகளெல்லாங்குதிரைக்கு அண்டாமல் மூன்றுமாதம் அல்லது ஆறுமாதத்துக்கு ஒருவிசை கொடுத்துவரு மசாலா

| | | |
|---|---|---|
| மாவிலிங்கப்பட்டை | விராகனிடை | ௬ |
| ஓமம் | ,, | ௬ |

| | | |
|---|---|---|
| மகஜேசாக்கர்கொட்டை | ,, | நாலரை |
| இந்துப்பு | ,, | ௧ |
| முள்ளி | ,, | ௪ |
| பனைவெல்லம் | ,, | ௧௰ |

இவைகளில் வெல்லந்தவிர மற்றவைகளைப் பொடிசெய்து வெல்லத்திற்கலந்து பெரிய எலுமிச்சங்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து மூன்றுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சகலசூலையுஞ் சொஸ்தமாகும். அதிகப்பசியுண்டாகும் கொள்ளும் புல்லும் அதிகமாய்த்தின்று புஷ்டியாகும் இத்தகைப் பிரயோசனமுள்ள அமிழ்தமாகவிருக்கும்.

## வெளிவியாதி.

கண்கள் விழிக்கமாட்டாமல் தண்ணீரோடிக்கொண்டேயிருக்கும் அதை கவனமாய்ப் பாராவிட்டால் சதைவளர்ந்து மூடிக்கொள்ளும்.

## உள்ளுக்குமருந்து.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௨ |
| சவுக்காரம் | ,, | ௨ |
| வெல்லம் | ,, | ௨ |
| அபினி | ,, | ௧ |

இவையெல்லாங் கலந்தரைத்து ஒன்றரைத்துட்டிடை யுண்டைசெய்துஉள்ளுக்குக்கொடுத்து பின்பு கால்சேர் பழயின்பால்கொண்டுவந்து அதோடு கால்சேர் தண்ணீர் விட்டுக்கலந்து காச்சும்போது ஒருவிராகனிடை படிகாரம் பொடிசெய்துப்போட்டு நன்றாய்க் காய்ச்சிபின்பு வெள்ளைச்சீலையில் துவைத்துத்



துவைத்து கண்களுக்கு மூன்றுநாளைக்கு ஒத்திட சொஸ்தமாகும்.

## பத்தியம்,

2. புதுப்பல்லாவில் இரண்டுபலம் நாமக்கட்டி வாங்கி சுத்தசலத்திற்போட்டு நன்றாய்க் கரைத்துத் தெளியவைத்து மூன்றுபலம் பொட்டலுப்பை கல்வத்தில் நேகவரைத்து ஷை தண்ணீரிற்போட்டு கால்மணிநேரங் கையால் நன்றாய்ச்சிலுப்பி அந்தத்தண்ணீரில் வெள்ளைசவுக்கத்துவாலையைநனைத்து குதிரைக்கண்களின்பேரில் கட்டிவிட்டு காயகாய மேற்படி தண்ணீரைவிட்டுக் கொண்டே வரவேண்டியது இப்படி நாளொன்றுக்கு பதினாலுதரஞ் செய்துவர சொஸ்தமாகும்.

## மக்குவம்,

3. பூதற்தெ கோலாற் ( poudred golard ) இந்தமருந்தை நன்றாயரைத்து தண்ணீரிற்போட்டு கலக்கித் துணியை துவைத்துத் துவைத்து கண்ணின்பேரில் போட்டுக்கொண்டுவரவும் சொஸ்தமாகும் இந்த மூன்றுமுறையுங் குதிரைக்கு அதிகசூடுண்டாகி வெப்பத்தினால் காணும் வியாதியென்றறிக.

## கண்களில் வெள்ளையாய் முளைகாணுமாகில்,

## பக்குவம்.

| | | |
|---|---|---|
| சுக்கு | துலாங் | ௪ |
| வசம்பு | ,, | ௪ |
| பூண்டு | ,, | ௪ |
| இந்துப்பு | ,, | ௧ |

| | | |
|---|---|---|
| கடுகுரோகணி | ,, | ௧ |
| தாமரைக்கிழங்கு | சேர் | வ |

இவைகளைத் தேனிலரைத்து இரண்டுநாட்டிடை யுண்டைசெய்து பதினெருநாளைக்கு இரண்டுவேளை யுமுள்ளுக்குக்கொடுக்க,

| | | |
|---|---|---|
| பின்பு பொரித்தபடிகாரம் | துலாம் | ௧ |
| பனங்கற்கண்டு | ,, | ௨ |

இவையிரண்டையும் பொடிசெய்து வேளைக்கொரு சிட்டிக்கி கண்களிற்போட சொஸ்தமாகும்.

கண்களதிகமாய்ச் சிவந்துப் அதின்மாமிசம்வெ ந்துயிருக்குமாகில்,

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகுரோகணி | துலாம் | ௧ |
| கோஷ்டம் | ,, | ௧ |
| யானைத்திப்பிலி | ,, | ௧ |
| ஓமம் | ,, | ௧ |
| பூண்டு | ,, | ௧ |
| விஷ்ணுகாந்தியிலை | ,, | ௧ |
| தூதுவளையிலை | ,, | ௧ |
| பொன்னாங்கண்ணியிலை | ,, | ௧ |

இத்தினுசுகளை தேன்விட்டரைத்து இரண்டு நாட் டிடை யுண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவே ண்டும்.



| | | |
|---|---|---|
| பின்பு மயில்துத்தம் | விராகனிடை | ௧ |
| பாஷாணம் | அரிசிபிரமாணம் | |
| பொரித்தபடிகாரம் | துலாம் | ௧ |

இவைகளில் முதல்துத்தம் பாஷாணம் இரண்டை யும்பொரித்தும் பொடிசெய்துபடிகாரஞ்சேர்த்துவே ளைக்கொருசிட்டிக்கிகண்களிற்போடசொஸ்தமாகும்.

கண்களில் மாமிசம் வளர்ந்துவருமாகில் மூஞ் சா என்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கோஷ்டம் | துலாம் | ௪ |
| கடுகுரோகணி | ,, | ௪ |
| சுக்கு | ,, | ௪ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௪ |
| இந்துப்பு | ,, | ௪ |
| காட்டுசீரகம் | ,, | ௪ |
| வெல்லம் | ,, | ௬ |
| மலைவேப்பின்கொழுந்து | பிடி | ௧ |

இவைகளை வெல்லஞ்சேர்த்தரைத்து இரண்டுநாட் டிடை யுண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்க வும்,

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைகாட்டவும்.

அல்லாமலும் கண்களில் வளர்ந்திருக்கு மாமிச த்தை மெதுவாய்க் கத்தியினால் சத்திரமிடவேண்டும் கூடாமையாயிருந்தால் தீர்தப்பக்குவஞ் செய்யவே ண்டும் அதாவது பூவரசங்கொட்டை வெள்ளைக்குன்

டுமணிவேர் இவையிரண்டையும் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து பதினொரு நாளைக்கு இடைவிடாமல் ஒரு விராகனிடைச்சாந்து கண்ணிலிட மூஞ்சா சாகும்.

இரண்டாவது.

| | | |
|---|---|---|
| பொரித்தபடிகாரம் | துலாம் | க |
| கடுகண்டு | ,, | க |
| கோழிமுட்டையின்மேலோடு | ,, | க |
| பிங்கான் வளையலோடு | | |
| பொடி | பணவிடை | உ |

இவையெல்லாம் ஒன்றாயரைத்து மேனாழ்சொரு பணவிடை தேனிற்கலந்து கண்ணிற்போட வளர்ந்திருக்கு மூஞ்சா நீங்கி சொஸ்தமாகும்.

## குதிரைகளுக்குகண்ணிற்புழுவிருக்குமாகில்

பக்குவம்.

சேராங்கொட்டையை கத்தியிற் குத்திக்கொண்டு விளக்கில்காச்ச தயிலமிறங்கும் அந்த தயிலத்தை பசுவின் வெண்ணெயிற் குழப்பி சிமிழிலடைத்துக் கொள்ளவும் புழுவாடுகிறகண்ணிலே ஒருநாளைக்கு மேற்படி மையைப்போடவும் மறுநாள் செந்தூரத்தை ஈயச்செப்பில் போட்டுக்கொண்டு மேற்படி சேராங்கொட்டை மையைகண்ணிலேபோட்டு உடனே சிறயுளியங்கொட்டை பிரமாணம் செந்தூரமையைப் போடவும் அப்பால் ஒருநாளைக்கொருதரம் ஈயச்செந்தூரமாத்திரம் போட்டுவரவுஞ் சொஸ்தமாகும்.



## குதிரைகளுக்கு எழுவகைச்சுரங்களுண்டு.

**1.** குதிரையின் தேகமெல்லாந் தழும்புந் தழும்பாயிருந்து மூச்சொரிந்து கொள்ளும புல்லுங் கொஞ்சமாகத் தின்னுமாகில் பித்தசுரமென்றுபெயர்.

பக்குவம்.

முதல் குதிரைகழுத்தில் நரம்புகுத்தி ஒரு சேர் இரத்தம் வெளிப்படுத்தியபின்பு,

| | | |
|---|---|---|
| மிளகு | சேர் | வ |
| சுக்கு | ,, | காலரிக்கா |

இவையிரண்டையும்நெய்யில் அரைவறுப்பாகவறுத்துக்கொண்டு மூன்றுபிடி நிலாவிளாவிலையோடுகலந்தரைத்து மூன்றுண்டைசெய்து மூன்றுநாளைக்குக் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி புல்லுந்தண்ணீரும் வழக்கம் போற் கொடுக்கவேண்டும்,

**2.** குதிரை தேகமெங்குஞ் சூடெழும்பி மூச்செறிந்து கட்டியிருக்குமிடத்தி லதிகசோம்பலாக நின்று கொள்ளும் புல்லுங் கொஞ்சமாகத் தின்னுமாகில் சூட்டைப்பற்றிய சுரமென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| குறசாணியோமம் | துலாம் | ௩ |
| திப்பிலி | ,, | ௩ |
| நற்சீரகம் | ,, | க |
| பெருஞ்சீரகம் | ,, | க |

இவைகளில் நற்சீரகம பெருஞ்சீரகம்இவையிரண்டையுமாத்திரம் அரைவருப்பாக வறுத்துக்கொண்டு மற்ற சரக்குகளோடு மூன்றுபிடி துளசியிலை சேர்த்தரைத்து மூன்றுண்டைசெய்து மூன்றுவேளைக்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.

3. குதிரைக்கு நாசியினும் நீரோடிக்கொண்டு மூச்செறிந்து தண்ணீர் குடியாமலும் கொள்ளுதின்னமலுமிருக்குமாகில் வாதசுரமென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | துலாம் | உ |
| கோஷ்டம் | ,, | உ |
| கடுகுரோகணி | ,, | உ |
| சுக்கு | ,, | உ |
| மிளகு | ,, | க |
| வாய்விளங்கம் | ,, | க |
| யாளிவிரை | ,, | க |
| மைசாட்சி | ,, | க |
| பொரித்தவெங்காரம் | ,, | க |
| பொரித்தபடிகாரம் | ,, | க |
| காயம் | விராகனிடை | க |

இவைகளை முருங்கப்பட்டை சாற்றிலரைத்து மூவுண்டைசெய்து மூன்றுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.



பத்தியம்.

கொள்ளை நீக்கி வெந்நீர் ஒருவேளை காட்டவேண்டும்.

4. குதிரைக்கு திடீரென்று தேகமெல்லாம் நடுக்கமுண்டாகி புல்தின்னாமல் அசந்திருக்குமாகில் வாதசுரம் என்றுபெயர்.

பக்குவம்.

முதல் குதிரைமுகத்திற் குத்தி மூக்கால் சேர் இரத்தம்வாங்கி பின்பு.

| | | |
|---|---|---|
| மிளகு | துலாம் | ச |
| மைசாட்சி | ,, | ச |
| திப்பிலிமூலம் | ,, | அரை |
| திப்பிலியரிசி | ,, | க |
| மஞ்சள் | ,, | அ |
| வெங்காரம் | ,, | க |
| காயம் | ,, | அரை |

இவைகளை சிறுநீரிலரைத்து பதினெருண்டை செய்து ஆறுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

5 குதிரை அக்குளிலதிக துடிப்புண்டாய் பக்கம் விலா இளைகளிழுத்துக்கொண்டு மூச்சொரிந்து கட்டுத்தறியிலதிக படபடப்பாய் சுழன்று சுழன்று வந்தால் தடக்காசுரம் என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மிளகு | துலாம் | ௫ |
| சுக்கு | ,, | ௫ |
| பெருஞ்சீரகம் | ,, | இரண்டரை |
| நற்சீரகம் | ,, | இரண்டரை |
| பூவரசங்கொட்டை | ,, | உ |

இதுகளை பரைவறுப்பாகவறுத்துக்கொண்டு மூன்றுநாளைக்கு இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி வெந்நீர் ஒருவேளைகாட்டவும்.

6. குதிரை கொள்ளும் புல்லுந் செவ்வையாய்த்தின்னுமலுந் தண்ணீர்செவ்வையாய்க்குடியாமலும் வாயினால் நீரோடிக்கொண்டிருக்குமாகில் க்லேவரசுரம் என்று பெயர்.

பக்குவம்.

முதல் குதிரை அதிகபுஷ்டியாயிருந்தால் இரண்டுசேர் வரையிலும் இளைத்திருந்தால் அரைசேர் வரையிலும இரத்தம்குத்தி வாங்கிபபின்பு,

| | | |
|---|---|---|
| வெட்பாலையரிசி | துலாம் | க |
| குருசாணியோமம் | ,, | க |
| மிளகு | ,, | க |
| ஸ்ரீ-ஸ்ரீபதி | ,, | உ |
| சாயித்தா | ,, | உ |
| காட்டுச்சீரகம் | ,, | உ |
| கடுகுரோகணி | ,, | உ |
| சதகுப்பை | ,, | க |



இவைகளை மூன்றுபிடி கழற்கொட்டியிலையோ டரைத்து ஏழுண்டைசெய்து மூன்றுநாளைக்கு இரண்டுவேளையு மிடைவிடாமற்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

7. குதிரையின் வயிற்றிலதிக விரைச்சலுண்டாகி யடிக்கடி சிறுநீர்விட்டுக்கொண்டு வேர்வையினால் மூழ்கிக் கொள்ளும் புல்லும் பிரியமாய்த்தின்னாமல் அதிக வறக்கமாயிருக்குமாகில் ஜகர்பாதசுரம் என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வாய்விளங்கம் | துலாம் | க |
| பூவரசங்கொட்டை | ,, | க |
| சுக்கு | ,, | ஒன்றரை |
| மிளகு | ,, | ஒன்றரை |
| கருஞ்சீரகம் | ,, | ஒன்றரை |
| கடுகுரோகணி | ,, | ௪ |
| காட்டுச்சீரகம் | ,, | ௪ |
| மூளகாய் | ,, | க |
| புகையிலை | ,, | க |
| இந்துப்பு | ,, | க |
| காயம் | ,, | அரை |

இவைகளை மூன்றுபிடி துளசியிலையோ டரைத்து ௧௪-உண்டைசெய்து எ-நாளைக் கிரண்டுவேளையு மிடைவிடாமற் கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

முன்கண்ட எழுவகைசுரந்துக்குமுண்டாகு
மடையாளங்கள்.

குதிரையின் வாயில் நாற்றமுண்டாகி யிரண்டு காதின்மத்தியில் அதிகசூடாகி தேகமெல்லாந் தழும்புதழும்பாயு மிருக்குமாகில் இதினதாபுஜர் என்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வாழைக்கிழங்கு | துலாம் | க அ |
| தாழைவிழுது | ,, | க அ |
| கற்றாழைத்தோல் | ,, | க அ |
| நாவற்பட்டை | ,, | க அ |
| நெல்லிக்காய் | ,, | க அ |
| கொத்துமல்லி. | ,, | க அ |

இவைகளை நாலுசேர் மாஜ்ஜிவேர்சாற்றில் வேகவைத்து இரண்டுசேர் சாறுசுண்டினபிறகு சுண்டின இரண்டுசேர் சாற்றைவடித்து மூன்றுவேளைக்குக்கொடுக்க சகலசுரமுந்தீரும்.

வேறு-பக்குவம்.

| | | |
|---|---|---|
| சீந்திற்கொடி | துலாம் | க |
| கொத்தமல்லி | ,, | க |
| சாயித்தா | ,, | க |
| சுக்கு | ,, | க |
| ஏலம் | ,, | க |
| பேரிச்சங்காய். | ,, | க |
| கையாந்தகரை. | ,, | க |
| காய்ந்தவேப்பீர்க்கு | ,, | க |



இவைகளின் மூன்றுசேர் சலத்தில்விட்டு ஒருசேராகும்படியாய்க் காய்ச்சிக் வடிகட்டி இரண்டுவேளைக்கொடுக்க சகலசுரமுந்தீரும்.

குதிரைகளுக்குச்சம்பந்தப்பட்ட
வாய்வுகளின் விபரம்.

1. குதிரை யிருந்தாப்போலிருந்து வயிற்றில் வலியுண்டாகி படுக்கும் புரளும் எழுந்திருக்கும் பின்னெருண்டு காட்டும்.

பக்குவம்.

ஒருசேர் [illegible]
கல்லுப்பு பிடி உ

இவைகளிரண்டையும் இடித்து மேய்ப்பிக்கவும் வயிற்றுவலிதீரும்.

பத்தியம்.

ஒருவேளை கொள்ளை நீக்கி புல்லுதண்ணீருக் கொடுக்கவும்.

2. குதிரை யிருந்தாப்போலிருந்து வாய்வுனாலும் அல்லது பாரிசவாய்வுனாலும் காலுகாலுகளை பாயமிருந்தாலும் அல்லது ஒருகாலைசாயமிருந்தாலும் தலையை சாய்த்துக்கொண்டிருந்தாலும் இப்போர்ப்பட்ட வாய்வுக்கெல்லாம் கண்டமுறை.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | இரண்டரை |
| குக்கிலம் | பலம் | இரண்டரை |
| சாராயம் | [illegible] | அ |

மஞ்சளைப்பொடிசெய்து குக்கிலேகூட்டப்போட்டிடித்து சாராயம்விட்டுப் பிசிறி பதிறூவுடண்டைசெய்து எ-நாளைக்கு காலே மாலே இரண்டுவேளையுங் கொடுக்க குணங்காட்டும்.

பத்தியம்.

தண்ணீரைக் கொதிக்கவைத்து பின்பு ஆரவைத்து ஒருசாமங்காட்டவும் மறுபடியு முதல்நாள் ஒரு மூச்சுத்தண்ணீர் இரண்டாநாளிரண்டு மூச்சுத்தண்ணீர் மூன்றுநாள் குடிக்கிறமட்டுங் காட்டவேண்டியது கொள்ளு நீங்கலாகா புல்மாத்திரம் புஷ்டியாய் போட்டுவரவேண்டியது. காலேயிலு மாலேயிலுமுட்டச்சாம்பலே பொடிசெய்துவைத்துக்கொண்டு தேகமெலலாம் பரவப்பூசி யிரண்டாள்விட்டு நன்றாய்ப் பிடிக்கவும் மறுபடி முதல்நாள் இரவும் பகலும் குதிரையைப் படுக்கவொட்டாமல் ஆள்வைத்துபார்த்துக்கொண்டு இரண்டாம்நாள் மருந்துகுடுத்தபின் காலேயிலும் மாலேயிலும் குதிரையைமயில்துாரமுலாத்திலாயத்தில் கட்டவும் வாய்வு பரந்தோடிப்போம்.

3. குதிரை தேகத்திலிருந்தாப்போலிருந்து நடுக்கமுண்டாய் தோல்முறப்பேறி கெட்டியாயிருக்குமாகில் வாதமென்றறிக.

பக்குவம்.

முதல் இரத்தங்குத்திவாங்கி பின்பு

| | | |
|---|---|---|
| மிளகு | தலாம் | கூ |
| கடுகு | ,, | ஙு |



| | | |
|---|---|---|
| பூண்டு | ,, | கூ |
| பொரித்தஅரிசி | ,, | வ |
| காயம் | ,, | வ |

இவையெல்லாஞ் சாராயத்தி லரைத்து மூன்றுண்டைசெய்து கூ-வேளைகொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.

4. குதிரைக்கு பந்தவாய்விறல் மூச்செரிந்துக்கொண்டு கொள் புல் இன்னுமனுமிருந்தால்,

பக்குவம்.

ம-சேர் மஞ்சளை நன்றாய்ப்பொடிசெய்து ம-சேர் நெய்யைக் காயவைத்து கொதிக்கிறபோது மஞ்சட்பொடியை போட்டுக்கிளறி ஒருபானையில்வைத்துக்கொண்டு காலேயிலு மாலேயிலும் ஒருவிளாங்கா பிரமாணம் கொடுத்துவரவும் சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீங்கலாக ஒருவேளைக்குமாத்திரம்வெந்நீர்காட்டவும் இப்படி பத்துநாளைக்குக்காட்டி அப்பால் குளிர்ந்த சலங்காட்டவும் மருந்துமுடிந்தவுடனே வெந்நீர்விட்டுக் குளிப்பாட்டவும்.

5. குதிரையின் வயிற்றிலிரைச்சலுண்டாகி இலத்தி மட்டுச்சாணம்போலுண்டாகி அதிக ஜலத்தை விரும்புமாகில் கோட்டாவாதமென்று பெயர்.

பக்குவம்.

முதலகத்திய மிரத்தங்குத்தி வாங்கிபின்பு,

| | | |
|---|---|---|
| சுக்கு | துலாம் | ௫ |
| மிளகு | ,, | ௫ |
| கடுகுரோகணி | ,, | ௫ |
| திப்பிலிமூலம் | ,, | ௫ |
| பூண்டு | ,, | ௫ |
| காயம் | ,, | ௫ |

இவைகளை முருங்கப்பட்டை சாற்றிலரைத்து உண்டைசெய்து ௩-நாளைக்கு கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

ஒருசேர் கொள்ளு மொருவேளை வெந்நீருங் கொடுக்கவேண்டும்.

6. குதிரைக்கு வயிறிழுத்துக்கொண்டு அசைவில்லாமலும் புல்தின்னாமலும் தலையைக் கீழேபோட்டுவிடுமாகில் அற்னவாத மென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | சேர் | ௰ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | ௰ |
| மைசாட்சி | ,, | ௰ |
| வாய்விளங்கம் | ,, | ௰ |
| கோஷ்டம் | ,, | ௰ |
| கடுகுரோகணி | ,, | ௰ |
| பொரித்தபடிகாரம் | துலாம் | ௨ |
| பொரித்தவெங்காரம் | ,, | ௨ |



| | | |
|---|---|---|
| காயம் | ,, | ௧ |
| சாராயஞ் | சேர் | ௧ |

இவைகளில் சாராயந்தவிர மற்றவைகளை வஸ்திரகாயஞ்செய்து அரைச்சேர் சாராயத்தில்மூன்றுதுட்டிடை பொடிபோட்டுக்கலந்து முதல்நாள்கொடுத்து மற்றபம்பொடியை மற்ற அரைசேர் சாராயத்திற்கலந்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து மூன்றுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.

7. குதிரை தன்பற்களால் தன்தேகத்தை யடிக்கடி கடித்துக்கொள்ளுமாகில் சினக்குவாதம் என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௮ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | ௮ |
| மைசாட்சி | ,, | ௮ |
| வாய்விளங்கம் | ,, | ௮ |
| மிளகு | ,, | ௮ |
| கோஷ்டம் | ,, | ௮ |
| கடுகுரோகணி | ,, | ௮ |
| வாலுளுவையரிசி | ,, | ௮ |
| பூவரசங்கொட்டை | ,, | ௯ |
| பொரித்தவெங்காரம் | ,, | ௨ |
| பொரித்தபடிகாரம் | ,, | ௨ |
| இந்துப்பு | ,, | ௬ |
| காயம் | ,, | ஒன்றரை |

இவைகளை சங்கேசரிக்சாற்றிலரைத்து மூன்று நாட்டிடை உண்டைசெய்து எழுநாளைக்கு இரண்டு வேளையுங்கொடுக்க சொஸதமாகும்.

பத்தியம்.

வழக்கத்திற்பாதி கொள்ளும் வெந்நீருங்கொடுக்கவேண்டும்.

௯. குதிரையின் தேகத்தி னுரோமங்களெல்லாஞ் சிலிர்த்துக்கொண்டும் நீர் மஞ்சளித்தும் கொள் தின்னாமலும் புல்லின்பேரிற் பிரியமில்லாமலும் அதிகசோம்பலா யிருக்குமாகில் வாய்வுசேர்ந்த கடிவாதம் என்றுபெயர்.

பக்குவம்.

முதலிரத்தங் குத்திவாங்கின பின்பு,

| | | |
|---|---|---|
| கடுகு | துலாம் | ௬ |
| மைசாட்சி | ,, | ௬ |
| கடுகுரோகணி | ,, | ௬ |
| கருஞ்சீர் | ,, | ௧ |
| பரங்கிப்பட்டை | ,, | ௩ |
| காயம் | வராகனிடை | ௩ |

இவைகளை பேய்ப்பீர்க்கிலைச்சாற்றிலரைத்து இரண்டு நட்டிடை உண்டைசெய்து ஒருவேளைக்கொடுக்கவேண்டும் வியாதிபலமாயிருந்தால் இரண்டுவேளை கொடுக்க சொஸதமாகும் பத்தியமில்லை.

௬. குதிரைக் கண்களில் வெள்ளையாய்ப் பிளைசாடிக்கொண்டு கொள்ளுதின்னாமல் நரச்செறிந்து அதிகசோம்பலா யிருக்குமாகில் வாதசீதளம் என்றுபெயர்.



பக்குவம்,

முதலில் இரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௧ |
| மிளகு | ,, | ௧ |
| ஓமம் | ,, | ௧ |
| வாய்விளங்கம் | ,, | ௧ |
| பூண்டு | ,, | ௧ |
| கடுகுரோகணி | ,, | ௧ |
| இந்துப்பு | ,, | ௧ |

இவைகளைச் சாராயத்திலரைத்து சிறிய எலுமிச்சங்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து இருபத்திரண்டு வேளை கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

10. குதிரை முன்னங்காலிரண்டுந் தாங்கிநடந்தாலும் உடலேயாலும் ஆறுமாதம் ஒருவருடம் அல்லது இரண்டு வருடம் நீமத்திருந்தாலும் சால்வாய்வு எனறுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகு | சேர் | ௫ |

கடுகைமாவாயரைத்துக்கொண்டு சரிபாகமாய்உப்பை நுணுக்கிக்கொண்டு இரண்டையுங் கலந்து சேதமில்லாமல் மேய்க்கவும் இப்படி ஒருநாள் சூரிய உதயத்திலிருந்து நாழிகைக்கு ஒருதரம் அஸ்தமிக்கிறவரைக்கும் வெந்நீர்காட்டவும் மூன்றுநாளைக்கு கொள்ளுநிறுத்தவும் மறுநாள்,

| | | |
|---|---|---|
| மிளகு | சேர் | வ |
| பூண்டு | ,, | வ |
| சுக்கு | ,, | வ |

இவை மூன்றையுஞ் சூரணமாக்கிக்கொண்டு தண்ணீர்விட்டு பிசைந்து உதயத்துக்கு மேய்க்கவும் மறுநாளுதயத்தில் குளிர்ந்த ஜலங்காட்டவும் வாய்வுநீங்கி சுகங்கொடுக்கும் பத்தியமில்லை.

**11.** குதிரையினிரண்டு கண்களுஞ் சிவந்தும் மஞ்சளித்தும் பூளையான்து சிவந்தநிறமாயும் மஞ்சள்நிறமாயுமோடி காச்சலுண்டாய் கொள்ளின்பேரிலும் புல்லின்பேரிலும் இச்சையில்லாம லிருக்குமாகில் வாய்வைச்சேர்ந்த ஜுசர்பா என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகு | துலாம் | ௫ |
| காட்டுச்சீரகம் | ,, | ௫ |
| மைசாட்சி | ,, | ௫ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | ௫ |
| பரங்கிப்பட்டை | ,, | இரண்டரை |
| சுக்கு | ,, | இரண்டரை |
| ஓமம | ,, | இரண்டரை |
| பூவரசங்கொட்டை | ,, | இரண்டரை |
| கருஞ்சீரகம் | ,, | இரண்டரை |
| சிற்றரத்தை | ,, | இரண்டரை |
| சேராங்கொட்டை | ,, | இரண்டரை |
| வாய்விளங்கம் | ,, | இரண்டரை |
| கடுகுரோகணி | ,, | கவ |
| கரியபோளம் | ,, | கவ |
| வெட்பாலையரிசி | ,, | கவ |
| திப்பிலியரிசி | ,, | கவ |
| சவுக்காரம் | ,, | கவ |
| வெங்காரம் | ,, | கவ |



| | | |
|---|---|---|
| பார்ப்பாரமுள்ளி | சேர் | வ |
| கட்டசாம்பல் | ,, | வ |

இவைகளை கொட்டக்கரந்தை யிலைச்சாற்றிலரைத்து மூன்றுதட்டிடை யுண்டைசெய்து வழுநாளைக்கு இரண்டுவேளையு மிடைவிடாமற் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும். குதிரையதிகமாக யிளைத்திருக்குமாகில் வழக்கத்திற் பாதிகொள் கொடுக்கவேண்டும்.

**12.** குதிரையினிடுப்பில் நோயுண்டாகி யதினால் வருத்தப்பட்டு பின்காலால் நடந்தாலும் கொள்ளும் புல்லுந்தின்று வந்தும் அதிகபலவீனமாக விருந்தாலும் குலாவங்கு வென்றுபெயர்.

பக்குவம்.

முதலிரத்தங்குத்தி வாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | வ |
| ஓமம் | ,, | வ |
| சுக்கு | ,, | வ |
| சேராங்கொட்டை | ,, | வ |
| யாளிவிரை | ,, | வ |
| மைசாட்சி | ,, | வ |
| வசம்பு | ,, | அரிக்கால் |
| மேந்தாலக்குடி | ,, | அரிக்கால் |

| | | |
|---|---|---|
| பூண்டு | ,, | முக்கால் |
| வெல்லம் | ,, | முக்கால் |

நாலுமாதக் கோழிக்குஞ்சையறுத்து மயிர் குடல் எலும்பு முதலியவைகளை நீக்கி அரைசேர் நல்லெண்ணெயிற் பொரித்துக்கொண்டு மேற்சொன்ன சரக்குகளை வஸ்திரகாயஞ்செய்து இரண்டுதுலாம் இஞ்சியை அரைத்துக்கொண்டு பொரித்தமாமிசத்தோடு சேர்த்துப்பிசைந்து பெரிய எலிமிச்சங்காய்ப்பிரமாணம உண்டைசெய்து நாற்பதுநாளைக்கு முதலிருபதுநாளைக் கிரண்டுவேளையாய்க் கொடுத்தபின்பு இருபது நாளைக்கு ஒருவேளையாய்க்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியப்.

துவக்கத்தில் மூன்றுநாள் வரையில் கொள்ளை நீக்கி வெந்நீர் கொடுக்கவேண்டும்.

**13** குதிரையினுடைய கண்ணின்கீழும் மூக்கின்மேலும் வீக்கங்கண்டு கொள்ளும் புல்லும் வழக்கப்படி தின்றுவந்தாலும் அசாத்தியகுணந் தோன்றுமாகில் கெஜவாய் என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | துலாய் | ந |
| மைசாட்சி | ,, | ந |
| ஆளிவிரை | ,, | ந |
| மிளகு | ,, | ந |
| நல்லவெல்லம் | ,, | ந |



| | | |
|---|---|---|
| பேரிச்சங்காய் | ,, | [illegible] |
| வெங்தியம் | ,, | [illegible] |
| கடுகுரோகணி | ,, | [illegible] |
| வெட்பாலையரிசி | ,, | [illegible] |
| பூண்டு | ,, | [illegible] |
| பெருஞ்சீரகம் | ,, | ய |
| கொத்தமல்லி | ,, | க |
| ரோசாப்பூ | ,, | க |
| சீரகம் | ,, | அரை |
| காயம் | ,, | அரை |

இவைகளை முடக்குத்தீர்த்தானிலைச் சாற்றிலரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து மூன்று நாளைக்கு இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**14.** குதிரை நாளுக்கு நாளிளைத்து நீர் மஞ்சளாக கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு கொள்ளும்புல்லு மதிகமாகத்தின்றும் அதிகப்பலயீனமாக விருக்குமாகில் இரத்த முறைந்தவாதமென்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மிளகு | துலாம் | எ |
| கடுகுரோகணி | ,, | எ |
| காட்டுச்சீரகம் | ,, | எ |
| திப்பிலியரிசி | ,, | எ |
| பூண்டு | ,, | அ |
| திப்பிலிமூலம் | ,, | ஐ |

| | | |
|---|---|---|
| வாய்விளங்கம் | ,, | ச |
| கருஞ்சீரகம | ,, | ச |
| சித்திரமூலம் | ,, | ச |
| வெட்பாலையரிசி | ,, | ச |
| கோஷ்டம் | ,, | க |
| மைசாட்சி | ,, | க |
| படிகாரம் | ,, | க |
| வெங்காரம் | ,, | க |
| கழைக்கோட்டிக்காய்ப்பருப்பு | ,, | க |
| அமுக்கனகிழங்கு | ,, | உ |
| மஞ்சள் | ,, | அ |
| நாய்வேளைவிரை | ,, | ச |
| சுக்கு | ,, | ச |
| வசம்பு | ,, | ச |
| கடுகு | ,, | ச |
| ஓமம் | ,, | ச |
| கந்தபீர் | ,, | கக |

இவைகளைச் சாராயத்திலரைத்து மூன்று தட்டிடை யுண்டைசெய்து எ - நாளைக்கு இறண்டுவேளை கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

**15**. குதிரை யண்டத்தி லொன்று பருத்தும் மீண்டும் பரனொன்று சிறுத்தும் விலாவிருபுறத்தி லுமிழுத்துக்கொண்டு அடிக்கடி பூமியிறபுரண்டு அதிக உபத்திரவப்படுமாகில் அண்டவாய்வென்று பெயர்.



பக்குவம்.

முதல் குதிரைக்கண்டவாய்வு இடப்புறமிருந்தால் வலப்புறமும், வலப்புறமிருந்தால் இடப்புறமுமிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| மைசாட்சி | துலாம் | ரு |
| பறங்கிப்பட்டை | ,, | ரு |
| ஓமம் | ,, | ரு |
| சாராயித்தா | ,, | ரு |
| சித்திரமூலம் | ,, | ரு |
| கடுகுரோகணி | ,, | ரு |
| வெள்ளெருக்கன்வேர்ப்பட்டை | ,, | ரு |
| காயம் | ,, | ரு |

இவையெல்லா மரைத்து உண்டைசெய்து மூன்று நாளைக்கு இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்,

பத்தியம்.

கொள்ளை நீக்கிவெந்நீர் ஒருவேளை காட்டவேண்டும்.

**16**. குதிரையின் தேகத்து நரம்புகளெல்லாம் பிருவாயிழுத்துக்கொண்டு மேலெழும்பி குதிரைவில்லைப்போல் வளைத்துக்கொண்டு கொள்புல் தின்னவும் தண்ணீர்குடிக்கவும் சக்தியில்லாமல் உபத்திரவப்படுமாகில் அற்தங்கவாதம் என்றுபெயர்.

பக்குவம்.

முதல் குதிரையின் மார்பி லிருபுறமு மிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | வ |
| சுக்கு | ,, | வ |
| கோஷ்டம் | ,, | வ |
| கடுகுரோகணி | ,, | வ |
| மைசாட்சி | ,, | வ |
| திப்பிலிமூலம் | ,, | வ |
| வாய்விளங்கம் | ,, | வ |
| கடுகு | ,, | வ |
| கந்தபிர் | ,, | வ |
| பேரீச்சங்காய் | ,, | வ |
| பூண்டு | ,, | ரு |
| இந்துப்பு | ,, | ரு |
| பொரித்தவெங்காரம் | ,, | ரு |
| காயம் | ,, | க |

இவைகளைச் சாராயத்திலரைத்து மூன்றுதுட்டிடை யுண்டைசெய்து பதினேழுநாளைக்கு இரண்டுவேளையுங் கொடுக்க நரம்புகள்தளர்ந்து சொஸ்தமாகும்.

பத்தியம்.

மூன்றுநாள்வரையில் கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைகாட்டி குதிரையை காற்றுப்படாத விடத்திற் கட்டிவைக்க வேண்டும்.

17. குதிரையின் தேகத்திலதிக நோயுண்டாய் தேகமெல்லாம் நடுங்கித் துடிப்புண்டாகி அதிகபசியுண்டாயிருக்கினும் பலவீனத்தால் கொள்ளும் புல்



லுந் தின்னாமலும் கைகா லசைவில்லாமலும் மிக சோம்பலாயிருக்குமாகில் ஜமாவாய் என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | அரை |
| மைசாட்சி | ,, | அரை |
| மேதாலக்குடி | ,, | அரை |
| சேராங்கொட்டை | ,, | அரை |
| கடுகு | ,, | வ |
| கடுகுரோகணி | ,, | வ |
| திப்பிலிமூலம் | ,, | வ |
| கரியபோளம் | ,, | வ |
| பனைவெல்லம் | ,, | முக்கால் |
| வெண்காரம் | பலம் | க |
| கிராம்பு | ,, | க |

இவைகளைத் துளசிச்சாற்றிலரைத்து இரண்டு துட்டிடை உண்டைசெய்து ஏழுநாளைக்கு இரண்டு வேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்,

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

18. குதிரைக்கு வயிறு வலிகண்டிருந்தாலும் நீர்விடாதிருந்தாலும் இலத்தி போடாதிருந்தாலும் இன்னவிதவாய்வென்று கண்டுபிடிக்காதிருந்தாலும் இப்பேர்ப்பட்ட வியாதிக்கெல்லாங் கைகண்டமுறை

பக்குவம்.

| | | |
|---|---|---|
| சுக்கு | விராகனிடை | கூ |
| மிளகு | ,, | கூ |
| ஓமம் | ,, | கூ |
| பூண்டு | ,, | கூ |

இவையெல்லா மொன்றாயிடித்து மேய்த்து உடனே வண்ணான் வெள்ளாவிவைத்த உவர்த்தண்ணீரில் ஒருபடி தண்ணீருள்ளுக்குக்கொடுக்கவும் குணமாம்.

பத்தியம்.

இரண்டுநாளைக்கு கொள்ளைநீக்கிவைக்கவும்.

## ௯ கண்டவியாதிக்கு வேறொரு

பக்குவம்.

பிரண்டையைபிடித்து ஒரு விளாங்காய்ப் பிரமாணம் யெடுத்துக்கொண்டு அதில் வ-ஆழாக்கு உப்புகூடச்சேர்த்து இரண்டையுங் கலந்து நேகஅரைத்து உள்ளுக்குகொடுக்க குணமாகும் இதுவுங்கைகண்டமுறை.

வேறு-பக்குவம்.

தும்பயிலையைப் பிடுங்கிவந்து கால்அரிக்கா ஆழாக்கு உப்புபோட்டுத்துவைத்து தேங்காயளவு பிரமாணங் கொடுக்கவுங் குணமாகும்.

வேறு-பக்குவம்.

அவரையிலையைத் துவைத்து அரை ஆழாக்கு உப்புசேர்த்து தேங்காயளவு பிரமாணங் கொடுக்க சொஸ்தமாகும்.



## பாசிநூவின் விபரம்.

பாசிநூவென்பது ஒருவித வீக்கத்துக்குப் பெயர். அந்தவீக்கமானது அதிகமாய்க் குதிரையின் கால்களில்தோன்றும்.

1. குதிரையின் வலதுகாலிலாவது இடது காலிலாவது குளம்பருகில் வீக்கந்தோன்றும் அதனுடைய வருத்தத்தால் காலைப் பூமியிலூன்றாமல் மூன்று காலால் நிற்குமாகில் இதுதபாசிநூ என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| பாஷாணம் | துலாம் | ௨ |
| மிளகு | ,, | ௨ |
| கோஷ்டம் | ,, | ௧ |
| நீர்முள்ளிவிரை | ,, | ௧ |
| வெள்ளரிவிரை | ,, | ௧ |
| வெண்காயவிரை | ,, | ௧ |
| ஸ்ரீ ஸ்ரீபதிவேர் | ,, | அரை |
| அமுக்கிறாங்கிழங்கு | ,, | அரை |
| கடல்நுரை | ,, | ௫ |
| பனவெல்லம் | சேர் | வ |

இவைகளைப் பொடிசெய்து வெல்லத்திற்கலந்து உண்டைசெய்து ஐந்துவேளைகொடுக்கசொஸ்தமாகும் பத்தியமில்லை.

## இந்தவீக்கத்துக்கு ஒத்தடங்கொடுக்கும் விபரம்.

கோதும்பை யுமிகொண்டுவந்து நித்மதிற் காற்சேர் உமியை சிறுபிள்ளை சிறுநீரில்நன்றாய்வேகித்து

வீக்கத்தின்மேலொத்திட்டு பின்பு ஷ உமியை வீக்கத்தின்மே லிடைவிடாமல் மூன்றுநாளைக்கு வைத்துக்கட்ட சொஸ்தமாகும்.

2. குதிரைக் குளம்புக்குள்ளே ரிணமாகி அதிஞல் தண்ணீரோடி யதிக துற்கந்தமுண்டாகி அந்த வுபத்திரவத்தால் பூமியில் நிற்கக்கூடாம லிருக்குமாகில் பாசிஞு என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| அபார்பு | துலாம் | ௨ |
| பாப்பாரமுள்ளிவிரை | ,, | ௨ |
| பேய்க்குமட்டிவிரை | ,, | ௨ |
| வெள்ளறுகுவேர் | ,, | ௩ |
| கருவேப்பிலை | ,, | ௩ |
| இஞ்சி | ,, | ௨ |
| வருத்தங்கிப்பட்டை | ,, | ௨ |
| பசுவின்நெய் | ,, | ௮ |

இவைகளைப் பொடிசெய்து நெய்யிற்கலந்து ஆறுண்டைசெய்து மூன்றுநாளைக்குக் கொடுத்துப் பின்பு மயில்துத்தம் துலாம்-௮ கொண்டுவந்து எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து ஒருவாரம்வரைக்குங் காயத்துக்குட்போட சொஸ்தமாகும் பத்தியமில்லை.

3. குதிரைக்குளம்பின் உள் மூளையழுகிப்போய் அங்குள்ள மாமிசமெல்லாங்கெட்டு அதிஞலதிக துற்கந்தமுண்டாகி அந்த உபத்திரவத்தால் காலை பூமியில்வைக்காம லிருக்குமாகில் பூதரோகம் என்றுபெயர்.



பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகு | துலாம் | ௨ |
| ஓமம் | ,, | ௨ |
| காட்டுச்சீரகம் | ,, | ௨ |
| வாய்விளங்கம் | ,, | ௩ |
| மிளகு | ,, | ௩ |
| மூளகாய் | ,, | ஒன்னறை |
| மைசாட்சி | ,, | ஒன்னறை |
| கடுகுரோசணி | ,, | ஒன்னறை |
| கழைக்கோட்டிக்காய்ப்பருப்பு | ,, | ஒன்னறை |
| கரியபோளம் | ,, | ஒன்னறை |
| பறங்கிப்பட்டை | ,, | ஒன்னறை |
| புகையிலை | ,, | ஒன்னறை |
| திருக்கள்ளி கனுவு | ,, | ௧௰ |

இவைகளில் முதற் கள்ளியை வைக்கோலிற்சுத்தி வதக்கிக்கொண்டு மற்றசரக்குகளோடு சேர்த்தரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுத்துப் பின்பு,

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | துலாம் | ௮ |
| பொரித்தபடிகாரம் | ,, | ௮ |

இவையிரண்டையும் பொடிசெய்து குளம்பின் காயத்துக்குள்ளிலிருக்கிறவரையில்மருந்தைப்போட்டடைக்கச் சொஸ்தமாகும் பத்தியமில்லை.

4. குதிரைக் குளம்புக்குள்ளிருக்கு மாமிசமெல்லாம் பச்சையிறச்சியைப்போலாகி எதாகிலுங்கொ

ஞ்சமசைவுண்டால் இரத்தமோடிவரும் அதிநெலதிக உபத்திரவப்பட்டு இரவும் பகலு மொருகாலேத் தூக்கிக்கொண்டு மூன்றுகாலால் நிற்குமாகில் சுமத்குறு வென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| காட்டாமணக்கின்விரை | சேர் | வ |
| பூவரசன்விரை | ,, | வ |
| சோரங்கொட்டை | ,, | வ |
| கடுரோகணி | ,, | வ |
| மூக்கிரல்விரை | ,, | வ |
| பேய்க்குமட்டிவிரை | ,, | வ |
| இஞ்சி | ,, | அரிக்கால் |
| பொரித்தவெண்காரம் | துலாம் | க |
| பச்சரிசிமாவு | சேர் | அரை |
| கோதும்பைமாவு | ,, | அரை |

இவைகளைச் சிறுபிள்ளைகள் சிறுநீரிலரைத்து இரண்டுதட்டிடை உண்டைசெய்து நாற்பதுநாளைக்கு இரண்டுவேளையுங் கொடுத்து பின்பு,

| | | |
|---|---|---|
| பாஷாணம் | துலாம் | ஒன்னரை |
| மயில்துத்தம் | ,, | ஒன்னரை |
| கற்பூரம் | ,, | ஒன்னரை |
| படிகாரம் | ,, | ஒன்னரை |
| அப்பளாகாரம் | ,, | ஒன்னரை |
| கந்தகாம்பு | ,, | உ |
| வங்காளக்கடுக்காய் | ,, | க |



| | |
|---|---|
| சோரங்கொட்டை | எ |
| அவர்பாக்கு | எ. |

இவைகளைச் சுட்டுச் சாம்பல்செய்து நிதமொரு துலாந்தூள் காயத்திற்போட்டு சிலைகட்ட சொஸ்தமாகும்.

பத்தியம்.

குதிரை இளைத்துப்போகாம லிருக்கும்படியாய் வழக்கத்திற்பாதிகொள் கொடுக்கவேண்டும்.

ஐகர்பாது.

1. குதிரை படுக்கடி உட்கார்ந்து கொள்ளும் புல்லுந் தின்னுமலதிக வேசாராயிருக்குமாகில் ஈரலைப்பற்றிய ஐகர்பா என்றுபெயர். இத்தவியாதி மிகவுங் கடினமாயிருக்கும்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வாலுளுவையரிசி | துலாம் | கூ |
| அக்கிராகாரம் | ,, | கூ |
| கோஷ்டம் | ,, | கூ |
| தக்ககாரம் | ,, | கூ |
| கரியபோளம் | ,, | கூ |
| அப்பளாகாரம் | சேர் | வ |
| படிகாரம் | ,, | அரிக்கால் |
| பனைவெல்லம் | ,, | வ |
| பொரித்தவெண்காரம் | துலாம் | எ |
| காயம் | ,, | கூ |
| அபினி | ,, | ௪ |

இவைகளைச் சாராயத்திலரைத்து மூன்றுநாட்டிடை உண்டைசெய்து ஏழுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளேநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

2. வலதுகாலைப் பூமியிலடிக்கடி யடித்துக்கொண்டும் இரண்டுபுறத்து அக்குளை யடிக்கடி பார்த்துக்கொண்டும் கொள் புல் தின்னுமலும் மெதுவாய் மூச்சுவிடுமாகில் குடல்பற்றிய ஜர்ப்ப வென்றுபெயர்,

இந்தவியாதிக் குருபதுநாள் கண்டம் வைக்கப்படும் உடனே பரிகாரஞ்செய்யவும்.

பக்குவம்.

முதல் பிடரியிலைத்திய பிரத்தக்குத்தி வாங்கி விரைவிற் பின்றெற்போசாம் பக்குவங்களைச் செய்யவேண்டு மில்லாவிட்டால் குதிரையைச் சேதப்படுத்தும்.

| | | |
|---|---|---|
| துமம் | சேர் | வ |
| காட்டுச்சீரகம் | ,, | வ |
| கடுகு | ,, | வ |
| திப்பிலிமூலம் | ,, | வ |
| மிளகு | தலாம் | அ |
| சாதிக்கா | ,, | அ |
| கழுக்கோட்டிக்காய் பருப்பு | ,, | அ |
| பொரித்தவெண்காரம் | ,, | கூ |
| கழுக்கோட்டியிலை | பிடி | கூ |



இவைகளை மேற்படி யிலையோடரைத்து மூன்றுநாட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளேநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவும்.

3. கழுத்துவீங்கி மூச்சடைபட்டு வாயிறுவெருவிக சத்தமுண்டாகி அதிக உபத்திரவத்தால் குதிரை காலுதைப்படுமாகில் கழுத்தைப்பற்றிய ஜர்ப்பதென்றும், பருவவென்றும்பெயர். இந்தவியாதி குதிரையை மூன்றுசாமத்திற்கொல்லும். அதற்குமேலிருக்குமாகில் அச்சமில்லை. ஆயினும்பரிகாரம் விரைவிற்செய்யவேண்டும். இது மேற்சொன்ன இரண்டுவியாதியிலுங் கடினமானதா [illegible] குஞ் சிலது சொஸ்தமாகும்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | வ |
| அப்பளகாரம் | ,, | வ |
| சவுக்காரம் | ,, | வ |
| மைசாட்சி | ,, | வ |
| பொரித்தபடிகாரம் | துலாம் | ௫ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௫ |
| யாளிவிரை | ,, | உவ |
| அபினி | ,, | உவ |
| பனைவெல்லம் | பலம் | ௬ |
| எருக்கிலை | | ௫ |

இவையெல்லா மொன்றாய்ச் சேர்த்தரைத்து மூன்று துட்டிடை உண்டைசெய்து முதலுள் ஒரு உண்டையை வெந்நீரிற் கரைத்துக் கொடுக்கவேண்டும் குதிரைக்கு ஆயிசிருக்குமாகில் அவிழ்தம் வயிற்றுக் குட் செல்லும்.

வீக்கம்.

1. காற்கள் வீங்கி கண்கள் மஞ்சளித்து கொள்ளின்பேரிலும் புல்லின்பேரிலு மதிகப் பிரியமில்லாமலிருக்குமாகில், கடுவாவென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | வ |
| காட்டுச்சீரகம் | ,, | வ |
| [illegible] | ,, | வ |
| கழற்கோட்டிக்காய்பருப்பு | ,, | வ |
| கடுகுரோகணி | ,, | வ |
| பூவரசங்கொட்டை | ,, | வ |
| கடுகு | ,, | வ |
| பேய்ச்சுரக்காய் | ,, | வ |
| பேய்ப்பீர்க்கங்காய் | ,, | வ |
| கறியுப்பு | ,, | வ |
| கழற்கோட்டியிலை | பிடி | ௧௧ |

இவைகளை யொன்றாய்ச் சேர்த்தரைத்து மூன்று துட்டிடை உண்டைசெய்து இரண்டு வேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.



2. அடிவயிற்றிலு மண்டத்திலும் நாலுகாற்களிலும் சொற்பமாய் வீக்கங்கண்டு வாய்மஞ்சளித்து கொள்ளும் புல்லுங் கொஞ்சமாகத் தின்னுமாகில், கருவா என்றுபெயர்.

பக்குவம்.

முதல் இரத்தங்குத்திவாங்கி பின்பு

| | | |
|---|---|---|
| மைசாட்சி | துலாம் | ௰௨ |
| சேராங்கொட்டை | ,, | ௰௨ |
| பறங்கிப்பட்டை | ,, | ௰௨ |
| பேய்க்கும்மட்டிக்காய் | ,, | ௰௨ |

இவைகளை சாராயத்திலரைத்து இரண்டு துட்டிடை உண்டைசெய்து ௭-நாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி வெந்நீர்கொடுத்து நிதஞ்சாயந்திரங் குதிரையை உலாத்திக் கட்டவேண்டும்.

3. அடிவயிற்றிலதிக வீக்கங்கண்டு நீர் சிவந்து மஞ்சள் நிறமாயிறங்கி கொள் புல் தின்னுமலு மிரவு பகலதிக சோம்பலாயிருக்குமாகில், தகாரா என்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ௬ |
| ஓமம் | ,, | ௬ |
| கடுகு | ,, | ௬ |
| வசம்பு | ,, | ௬ |
| காட்டுச்சீரகம் | ,, | ௬ |

| | | |
|---|---|---|
| மூளகாய் | ,, | ௫ |
| புகையிலை | ,, | ௫ |
| இந்துப்பு | ,, | ௫ |
| முருங்கப்பட்டை | ,, | ௫ |
| தபசுமுருங்கையிலை | துலாம் | ௮ |
| கத்தரிவேர்ப்பட்டை | ,, | ௮ |
| காட்டுவாழைப்பட்டை | ,, | ௮ |
| விடத்தேரின்பட்டை | ,, | ௮ |
| பூவரசன்பட்டை | ,, | ௮ |
| அழிஞ்சிப்பட்டை | ,, | ௮ |
| எருக்கன்பட்டை | ,, | ௮ |
| சித்திரமூலத்தின்மேற்பாளை | ,, | ௮ |
| வெள்ளெருக்கிலை | பலம் | ௫ |
| ஆடுதின்னாப்பாளை | ,, | ௫ |
| மலைவேம்பு | ,, | ௫ |
| மூங்கிலிலை | ,, | ௫ |

இவைகளையெல்லா மொன்றுபவரைத்து வேளைக்கு பத்துகட்டிடை மருந்தெடுத்து ஆட்டுப்பித்திலுண்டைசெய்து இரண்டு வேளையும் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி காய்ந்தபுல்லுடன் வெந்நீரொரு வேளை காட்டவேண்டும்.

தலைநோய்.

1. மூக்கில்நீரோடி யடிக்கடி உட்கார்ந்துகொண்டு மூச்செரிந்து முதுகுபாரிசங் கொஞ்சமிழுப்



பாய் கொள் தின்னாமலும், புல்லின்பேரிலதிகப் பிரியமில்லாமலும் சோம்பலாயிருக்குமாகில் வாதசீதளமென்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | துலாம் | ௪ |
| கோஷ்டம் | ,, | ௪ |
| கடுகுரோகணி | ,, | ௩ |
| மைசாட்சி | ,, | ௩ |
| வாய்விளங்கம் | ,, | ௫ |
| யாளிவிரை | ,, | ௨ |
| வெண்காரம் | ,, | ௧ |
| படிகாரம் | ,, | ௧ |
| காயம் | ,, | ௧ |

இவைகளை முருங்கப்பட்டை சாற்றிலரைத்து மூன்றுகட்டிடை உண்டைசெய்து மூன்று நாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.

2. மூக்கினால் நீரிருந்த பிசுபிசலாய் தண்ணீர்போலோடிவந்து யடிக்கடி இருமிக்கொண்டு கொள்தின்னாமல் புல்லின்பேரிலதிகப்பிரியமாயிருந்து குதிரையதிகசோம்பலாய் மூக்கினால் நீரோடுகிறதினால் அதிகக்கந்தியடையும் இந்தவியாதியானது குதிரை பலவிடங்களில் தண்ணீர்குடிப்பதினாலுண்டாகின்றது.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகுரோகணி | துலாம் | ௫ |
| திப்பிலிமூலம் | ,, | ௫ |
| காட்டுச்சீரகம் | ,, | ௫ |
| மிளகு | ,, | ௫ |
| பூவரசங்கொட்டை | ,, | ௫ |
| திப்பிலி | ,, | ௫ |
| பூண்டு | ,, | ௬ |
| வேளையிலை | பிடி | ௫ |

இவையெல்லா மொன்றுயரைத்து தேனிற்கலந்து மூன்றுதுட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

3. மூக்கில் சளியுரைத்து கெட்டியாய் வெளுத்தோடிவந்து மூக்கிலதிக துற்கந்தமுண்டாய் கொள்பரிசசேதங் தின்னுமலிருக்குமாகில், சேம்பா என்றுபெயர.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௪ |
| வங்காளமஞ்சள் | ,, | ௪ |
| ஓமத்தின்மேலுமி | ,, | ௪ |
| கோஷ்டம் | ,, | ௪ |
| திப்பிலிமூலம் | ,, | ௪ |
| பொரித்தபடிகாரம் | ,, | ௧ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௧ |
| பூண்டு | ,, | ௮ |
| நொச்சியிலை | பிடி | ௫ |



இவையெல்லா மொன்றுய்ச் சேர்த்தரைத்து தேன்விட்டுப் பிசைந்து மூன்றுதுட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

4. மூக்கிறைல் நீர்கெட்டியாயு மஞ்சளாயுந் துற்கந்தமாயு மோடிவந்து அதினல் குதிரையின் தேகமெல்லாம் அசங்கியமாயு மிருக்குமாகில், சங்காடானென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௪ |
| ஓமம் | ,, | ௪ |
| கடுகு | ,, | ௪ |
| பூவரசங்கொட்டை | ,, | ௪ |
| ஸ்ரீமிளகு | ,, | ௪ |
| வசம்பு | ,, | ௪ |
| கசமுக்கொட்டிக்காய்பருப்பு | ,, | ௪ |
| வெட்பாலையரிசி | ,, | ௨ |
| மைசாட்சி | ,, | ௨ |
| பரங்கி | ,, | ௨ |
| கோஷ்டம் | ,, | ௨ |
| திப்பிலிமூலம் | ,, | ௨ |
| கடுகுரோகணி | ,, | ௨ |
| அபார்பு | ,, | ௨ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௨ |
| காயம் | ,, | ௧ |
| பூண்டு | சேர் காலேயரிக்கா | |
| கழற்சிவெளிகண்டு | | கா௰ |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்தரைத்து எலு மிச்சங்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து இரண்டு வேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.

5. மூக்கில் நீரதிக குழம்பாயும் சிவப்பாயும் துற்கந்தமாயும் வெளிப்பட்டு அதினால் குதிரை மிகவு மிளைத்து கொள் புல் முதலியவைகள்பேரில் பிரியமில்லாம லிருக்குமாகில் கவீர் என்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வேப்பங்கொழுந்து | சேர் | ௰ |
| கடுகுரோகணி | ,, | வ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | வ |
| கடுக்காய்ப்பூ | ,, | வ |
| ஓமம் | துலாம் | ரு |
| பார்ப்பாமுள்ளிவிரை | ,, | ரு |
| பூண்டு | ,, | சா |

இவைகளுக் கெல்லாஞ் சரியிடையாய் பச்சைவெற்றிலை சேர்த்தொன்றாயரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணமுண்டைசெய்து இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்.



விரைவாதம்.

1. குதிரைக்கு குடைகொண்டு அதிகப்படுமாகில் விரைகள் மினுமினுப்பாயிருக்கும்.

பக்குவம்.

துரிசிச்சாறு
கரிசிறுங்கண்ணிச்சாறு

இவைகளைச் சன்றாய்ப்புச்சேர்த்து மத்தித்து மேலேதடவ சொஸதமாகும் பத்தியமில்லை.

2, குதிரைக்கு குளிர்ச்சியினால் விரையில் சொறிபடர்ந்திருக்கும் உடனே கவனிக்கவேண்டும்,

பக்குவம்.

மஞ்சள்
பெருங்காயம்

கலந்தரைத்துத்தடவ சொஸ்தமாகும்.

3. குதிரையி னண்டம்வீங்கி யுபத்திரப்படுமாகில் செய்யவேண்டியது.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| சுக்கு | விராகனிடை | ௧ |
| பார்ப்பாமுள்ளி | ,, | ௧ |
| ஆமணக்கின்வேர்ப்பட்டை | ,, | ௧ |
| முருக்கப்பட்டை | ,, | ௧ |
| நிலவிளாம்பட்டை | ,, | ௧ |
| அத்திப்பட்டை | ,, | ௧ |
| மிளகு | ,, | ௧ |
| வசம்பு | ,, | ௧ |
| நெய் | சேர் | ௧ |

இவைகளைச் சேர்த்திடித்து குதிரைக்குக் கொடுத்துபின்பு நெய் நெல்லெண்ணை இவைகளால் குதிரையின் பீசத்திற்றேய்த்து பின்பு அழிஞ்சிலையைவேகித்து பீசத்திலொத்திட்டு மேலேவைத்துக்கட்ட பதிமூன்றுவித வாய்வுஞ் சொஸதமாகும்.

4. சுவாபமாய் குதிரையண்டம் வீங்கி யிருந்தால்,

பக்குவம்,

காவிக்கல்லை சீர்மைகாடியிலரைத்து அண்டத்தின்மேற்பூச வீக்கம்வாங்கி சொஸ்தமாகும்.

### சகலவிதகாயத்தின்மேற்பூசுஞ்சேர்வை.

பக்குவம்,

| | | |
|---|---|---|
| குங்கிலியக் | துட்டிடை | க |
| கத்தக்காம்பு | விராகனிடை | உ |
| செந்தூரம் | ,, | உ |
| தாளிக்காத கற்சுண்ணும்பு | ,, | உ |
| நல்லெண்ணை | படி | வ |

இவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த் தரைத்துக்கொண்டு சகலகாயங்களினுஞ் சிறங்குகளினும் பூசிவர சொஸதமாகுங் கொள்ளுகட்டும்போது வேளைக்கு வ - படி பச்சைப்பயறு வேகித்து கூடகலந்து கட்டவும்.

5. குதிரைக்கு அண்டத்திலாகிலும் கோசத்திலாகிலும் புண்ணாகி நீர்விடுகிறபோது அந்தப்புண்ணிலே நீரிறங்கினால்.



பக்குவம்,

முளகு சேர் ஒன்றரையே அரிக்கா

இதை எழுதிரமரைத்து எழுதிரம் வஸ்திரகாயஞ்செய்துக்கொண்டு இரண்டெலுமிச்சம்பழம் கொண்டுவந்து ஒருபழத்தை யிரண்டாயறுத்து அந்தப்புண்ணிலே தேய்த்து மற்றொருபழத்தின் சாற்றிலேகொஞ்சமிளகு பொடிசேர்த்துக் குழப்பித்தடவவும் இந்தப்படி ஒருநாளைக்கு மூன்றுதிரம் விழுக்காடு எட்டு நாளைக்குத் தடவினால் சொஸதமாகும்.

6. குதிரைக்கு நீரடைப்புகண்டால் கைகண்ட

பக்குவம்,

கால்சேர் நெய்யில் நாலு துட்டிடை மிளகைநறுக்கிப்போட்டு காச்சி குதிரையின் நாசியிற்றடவ நீர்விடும் சொஸ்தமாகும்,

7. குதிரையி னண்டத்திற் குடலிறங்குமாகில்

பக்குவம்,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | துட்டிடை | க |
| கோதுமைநொய் | ,, | உ |

இவையிரண்டையுஞ் சேர்த்தரைத்து குதிரைக்கு நிதம் அர்தாவாவுடன் சேர்த்துக்கொடுக்க சொஸ்தமாகும்.

8. குதிரைக்கு மூத்திர நோய்க்கு,

பக்குவம்,

முருக்குகள்ளி
உப்பு

இவையிரண்டையும் நெகவரைத்து கோசமண்டபிரண்டின்மேலு மூன்றுவேளை தடவி, குளிர்ந்த ஜலத்தில் குளுப்பாட்டவும் குணமாகும்.

## குதிரைக்கு விரையடிக்கும் விபரம்.

விரையடிக்கு மூன்றுநாளைக்கு முன்னே கொள் கொடாமல் நிறுத்திவைக்கவேண்டும். பின்புஇரண்டு கட்டு வைக்கோலும் இரண்டுதுலாம் மஞ்சட்பொடியில் எட்டுதுலாம் வெண்ணெய்போட்டு நன்றாய்க்கலந்து தயார்செய்துவைக்கவேண்டும். பின்பு நாலுகால்களையும் நன்றாய்க்கட்டி பூமியில் மல்லாத்திப் படுக்கவைத்து குதிரை யசையாம லிருக்கும்படி இரண்டு பக்கத்திலு மேற்சொல்லிய வைக்கோற்கட்டை யண்டைகொடுத்து பலப்படுத்தி பின்பு கூருள்ளமான கம்பியினால் மீஜத்தடியிற்சுருக்கி யிழுத்துக்கட்டி பீசங்கள் தொங்கும்படியாய்ச்செய்து மேற்சொன்ன மஞ்சள்கலந்த வெண்ணெயை பீசத்தின்மேற்பூசி இரண்டு நாழிகைவரையி ல்நன்றாய்ப்பிசைந்து கூழாய்ப்போனதின் பின்பு ஒருசீலையால் நன்றாயிறுகக்கட்டி கழுத்தையும் கைகால்களையும் அவிழ்த்துவிட்டுக் குதிரையை நிறுத்தி பீசத்தின்பேரிற்றண்ணீரடிக்கவேண்டும். குதிரை நீர்விட்டதானால் குதிரையைக்கொண்டுபோய் லாயத்திற்கட்டி மூன்றுநாள்வரையில் பீசத்திற்கட்டியிருக்குஞ் சீலையையவிழ்த்துப்போட்டு இருபதுநாள்வரையில் கொள்கொடாமல் வெந்நீர்பாத்திரம் ஒருவேளைகொடுக்கவேண்டும். அல்லாமலும் விரையடித்த நாலைந்துநாளைக்குள் பீசம் வீக்கிப்போ



கும் அதிலுள்ள கல்மிஷமெல்லாம் நன்றாய்வெளிப்படும்பொருட்டு பீசத்தைக் கோணியூசியினால் நன்றாய்க்குத்திவிட்டு வெளிப்படுத்திய பின்பு பின்னாற்சொல்லும் எண்ணெயைப் பூசிவரவேண்டும்.

அதாவது,

| | | |
|---|---|---|
| திக்குமாலி | துலாம் | ௪ |
| கற்பூரம் | ,, | ௪ |
| காப்பிரிக்கடுக்காய் | ,, | ௬ |
| முருதாரசிங்கு | ,, | ஒன்னரை |
| கத்தக்காம்பு | ,, | ஒன்னரை |
| வேப்பெண்ணெ | சேர் | ௧ |
| நல்லெண்ணெ | ,, | ௧ |

இவைகளில் மேற்சொன்ன சரக்குகளைப் பொடிசெய்து எண்ணெயிற்கலந்துவைத்துக்கொண்டு பின்பு

| | | |
|---|---|---|
| புளியிலை | பிடி | ௨ |
| அத்தியிலை | ,, | ௨ |
| வேப்பிலை | ,, | ௨ |

இவைகளை கொதிக்கவைத்து பீசத்தின்பேலொத்திட்டு மேற்சொன்ன எண்ணெயை கோழியிறகினால் பூசிவரவேண்டும், அல்லாமலும் ஈக்கள் பீசத்தின் மேல் மொய்க்காமலும் காப்பாற்றி வரவேண்டும் பின்பு.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | சேர் | ௧ |
| கடுகுரோகணி | ,, | ௧ |
| காட்டுச்சீரகம் | ,, | அரை |
| கடுகு | ,, | அரை |

| | | |
|---|---|---|
| ஓமம் | ,, | அரை |
| இந்துப்பு | ,, | அரை |
| அபினி | துலாம் | ௩. |

இவைகளை கையாந்தகரைச் சாற்றிலரைத்து யிரண்டுதுட்டிடை உண்டைசெய்து நாற்பதுநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

### சொரிசிரங்கு.

1. அதிகருட்டினால் தேகமெல்லாம் வட்டை வட்டையாய் சிரங்குண்டானால்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௩ |
| வங்காளமஞ்சள் | ,, | ௩ |
| சீரகம் | ,, | ௩ |
| ஓமம் | ,, | ௩ |
| ஏலம் | ,, | ௩ |
| சல்லாதுவிரை | ,, | ௩ |
| பெருஞ்சீரகம் | ,, | ௩ |
| வெடியுப்பு | ,, | அ |
| குலேபன்புஷ | ,, | ௩ |

இவைகளைத் தேனிலரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து உள்ளுக்கு கொடுக்கவேண்டும்.

பத்தியம்.

கொள்ளுக்குப்பதிலாய் வேளை ௧-க்கு மூன்று சேர் பச்சரிசிசாதத்தோடு பசுவின்தயிர் சேர்-வ வெங்காயம் சேர்-வ சேர்த்துக்கொடுக்கவேண்டும்.



அல்லாமலும்,

நந்தியாவர்த்தனிலை
எருக்கிலை
வாழையிலை

இம்மூன்றையும் நன்றாய்க்காயவைத்து சுட்டு சாம்பலாக்கி வேப்பெண்ணெயிற்கலந்து சிறங்குமேற்பூச காய்ந்து சொஸ்தமாகும்.

2. கழுத்து மயிரிலாவது வாயிலாவது வயிற்றிலாவது காற்களிலாவது தேகமுழுதிலுமாவது சிறங்கு அல்லது வட்டை வட்டையாயுண்டாயிருந்து அதினுலிரத்த மோடிக்கொண்டு துன்பப்படுமாகில் அதின்பா லென்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| பெருஞ்சீரகம் | துலாம் | ௨ |
| மிளகு | ,, | ௨ |
| கொத்துமல்லி | ,, | ௨ |
| அதிமதுரம் | ,, | ௨ |
| நெல்லிமுள்ளி | ,, | ௨ |
| வெந்தியம் | ,, | ௨ |
| பொட்டலுப்பு | ,, | ௬ |

இவைகளை வெங்காயச்சாற்றிலரைத்து மூன்றுநாளைக்கு உள்ளுக்குக்கொடுக்கவேண்டும்.

அல்லாமலும்.

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெ | சேர் | ௧ |
| சேராங்கொட்டை | துலாம் | ௧ |

| | | |
|---|---|---|
| வங்காளக்கடுக்காய் | ,, | ௧ |
| திக்குமாலை | ,, | ௧ |
| முருதாற்சிங்கு | ,, | அரை |
| கற்பூரம் | ,, | ௧ |
| வாழைச்சருகு சுட்டசாம்பல் | ,, | ௧ |
| நந்தியாவர்த்தஞ்சருகு சுட்டசாம்பல் | ,, | ௧ |

இவையெல்லாம் எண்ணெயிற்சேர்த்துக் காய்ச்சி சிறமூன்று துலாம் எண்ணெ தேகத்திற் சிரங்கின் மேற்பூச சொஸ்தமாகும்.

பத்தியம்,

கொள்ளேசிக்கி பிதங்காலையில் ஒருசேர் சாதத்தி ல் ஒட்டுதலாம் நெய் சேர்த்துக்கொடுத்து வெந்நீர் ஒருவேளை காட்டவேண்டும்.

3, குதிரையின் தேகமெல்லாந் மரிக்கிறதினுல் தேய்த்துக்கொள்ளும் அப்பாலைத்தின வென்று பெயர்.

பக்குவம்.

கோவைச்சாறு
உப்பு

இவ்விரண்டுஞ் சமனும் புடம்வைத்துத் தேகமெல் லாம்பூசி நன்றுபுரைர்ந்தபின் தண்ணீர்விட்டுக் குளு ப்பாட்ட சொஸ்தமாகும்.

ஆ டா.

அதாவது குதிரையின் காற்களில் கட்டியைப் போலுண்டாகும் அதினுல் குதிரை நொண்டும் இக் கொண்டுபிதமுண்டு ஆக்கில்.



1. காற்களிற் கட்டியைப்போல் தோன்றி குதி ரை நடக்காமல் நொண்டுமாகில்.

பக்குவம்,

| | | |
|---|---|---|
| பேய்க்கும்மட்டிவேர் | துலாம் | ௨ |
| வெள்ளைச்சாட்டரணைவேர் | ,, | ௨ |
| பார்ப்பாரமுள்ளிவேர் | ,, | ௨ |
| வெள்ளறுகின்வேர் | ,, | ௨ |
| பேய்ச்சுரக்காய் | ,, | ௫ |
| ஓமம் | ,, | ௮ |
| கடுகு | ,, | ௮ |
| காட்டுச்சீரகம் | ,, | ௮ |
| மிளகு | ,, | ௮ |
| வசம்பு | ,, | ௮ |
| புகையிலை | ,, | ௮ |
| கழுக்கோட்டிக்காய்ப்பருப்பு | ,, | ௩ |
| சறுபித்தா | ,, | ௩ |
| பூண்டு | ,, | ௮ |
| தயிர் | சேர் | அரை |

இவைகளை தயிரிற்சேர்த்தரைத்து மூன்றுகட்டி டை உண்டைசெய்து குதிரைக்குகொடுக்கவேண்டும் அல்லாமலும் கட்டிகளின்பேரில் பதிலொருகுடுபோட வேண்டும். அல்லது இந்தசெயலினைச்செய்து கட் டியின்மேற்பூச கட்டி கரைந்துபோகும்.

அதாவது.

| | | |
|---|---|---|
| கந்தன்றுப்பு | விராகனிடை | ௩ |
| வைக்கோற்சுட்டசாம்பல் | ,, | ௩ |

| | |
|---|---|
| பாஷாணம் குன்டுமணியிடை | ௧ |

இம்மூன்றையும் எருக்கின்பாலிலரைத்து கட்டியின்மேற்பூசி சீலையாற்கட்ட கட்டிவெந்து புண்ணாகி கரைந்துபோம் பின்பு,

| | | |
|---|---|---|
| வெள்ளைக்குங்கிலியம் | துலாம் | ௧ |
| திக்குமாலி | ,, | ௧ |
| முறுதார்சிங்கு | ,, | ௧ |
| மெழுகு | ,, | ௧ |
| சாரபூரம் | ,, | ௧ |
| வேப்பெண்ணை | ,, | ௬ |

இவையெல்லாம் எண்ணையிற்சேர்த்துக் கொதிக்க வைத்து தண்ணீரிற்சாய்க்கவேண்டும். பின்பு தண்ணீரிலிருந்தெடுத்து இதஞ் சிறங்கின்மேற்பூச சொஸ்தமாகும் புத்தியமில்லை.

2. இடதுகாலின் துடையருகே வீக்கங்கண்டு அதன் உபத்திரவத்தால் குதிரைநொண்டுமாகில்,

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௬ |
| மைசாட்சி | ,, | ௬ |
| சாதிக்காய் | ,, | ௬ |
| சவுக்காரம் | ,, | ௬ |
| ஆளிவிரை | ,, | ௫ |
| பொரித்தபடிகாரம் | ,, | ௫ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௫ |



| | | |
|---|---|---|
| அபினி | ,, | ஒன்னரை |
| எருக்கிலை | ,, | ௫ |

இவைகளைச் சிறுபிள்ளைகள் சிறுநீரிலரைத்து இரண்டுதட்டிடை உண்டைசெய்து ஏழுநாளைக்குக்கொடுக்கவேண்டும்.

அல்லாமலும்,

| | | |
|---|---|---|
| கரியபோளம் | துலாம் | ௨ |
| மஞ்சள் | ,, | ௨ |
| அதிமதுரம் | ,, | ௨ |
| ஆளிவிரை | ,, | ௨ |
| கற்பூரம் | ,, | ௧ |

இவைகளை கள்ளிச்சாற்றிலரைத்து அதோடு கொஞ்சங் களிமண்ணும் வெள்ளாட்டின் புழுக்கையுஞ் சேர்த்துக் கொதிக்கவைத்து ஏழுநாளைக்கு வீக்கத்தின்மேற்பூச சொஸ்தமாகும்.

பாதேகைசர்

குதிரையின் கண்கள் மூ மேலுமாய்த் தோன்றி தேகத்தின் மயிர்களெல்லாஞ் சிலிர்த்துக்கொண்டு குதிரை அடிக்கடி மருண்டு மருண்டு கட்டுத்தறியிற் அதிக வேசாரலாயிருந்து கொள்ளும் புல்லுந்தின்றாமல் அடிக்கடி கீழேயுட்கார்ந்துப் போகுமானால் பாதேகைசர் என்றும் சாந்தினி என்றும்பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| காடைக்கண்ணிமாவு | சேர் | ௫ |
| மிளகு | ,, | ௫ |

| | | |
|---|---|---|
| தெரிப்புள்ளாபூண்டு | ,, | க |
| வாய்விளங்கம் | சேர் | வ |
| காட்டுச்சீரகம் | ,, | வ |
| திப்பிலி | ,, | வ |
| ஓமம் | ,, | வ |
| வசம்பு | ,, | வ |
| திப்பிலிமூலம் | ,, | வ |
| மஞ்சள் | ,, | வ |
| இந்துப்பு | துலாம் | அ |
| மைசாட்சி | ,, | அ |
| கடுகுரோகணி | ,, | அ |
| பூவாசங்கொட்டை | ,, | ௪ |
| குருசாணிஓமம் | ,, | ௪ |
| கடுக்காய் | ,, | ௪ |
| காயம் | ,, | ௪ |
| அபினி | ,, | உ |
| இஞ்சி | பலம் | ௪ |
| சாராயஞ் | சேர் | ௯ |
| கருங்கோழி | | க |

இவைகளில் முதல் கோழியையறுத்து அதின்வயிற்றிலிருக்குங் குடல்முதலியவைகளை நீக்கி அதோடு மற்ற சரக்குகளையுஞ் சாராயத்திலரைத்து மூன்றுதுட்டிடை உண்டைசெய்து நாற்பதுநாளைக்கு இரண்டு வேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

முதலிருபத்தொருநாள் வரைக்கும் கொள்ளை நீக்கி வெந்நீர் ஒருவேளை காட்டவேண்டும்.



### மோத்திரு.

குதிரை முழங்காற்கணுவில் வீக்கங்கண்டு அதினுடைத்திரவத்தால் நொண்டுமாகில் மோத்திரு என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கடுகு | துலாம் | ௪ |
| கடுகுரோகணி | ,, | ௪ |
| கோஷ்டம் | ,, | ௪ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௪ |
| காயம் | ,, | உ |
| முருக்கப்பட்டை | சேர் | ௩ |

இவைகளையரைத்து ஒன்றரை துட்டிடை உண்டைசெய்து கொடுக்கவேண்டும் அல்லாமலும் வீக்கத்தின்மேலிருக்கு முரோமங்களை க்ஷவரஞ்செய்து ஏழுநாளைக்கு அட்டைவிட சொஸ்தமாகும் பத்தியமில்லை.

### முசலி.

குதிரையினுடைய கணைக்காற் குளச்சியில் வீக்கங்கண்டு அதினுல் குதிரை நொண்டுமாகில் முசலி என்றுபெயர்.

இந்தவியாதிக்கு துவக்கத்திற்றனே அதிக விரைவாய் பக்குவஞ்செய்யவேண்டும். இல்லாவிட்டால் குதிரைக் கதிக தொந்திரவு கொடுத்துக் கொன்றுபோடும்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| ஓமம் | துலாம் | ௪ |
| காட்டுச்சீரகம் | ,, | ௪ |
| கருஞ்சீரகம் | ,, | ௪ |
| கரியபோளம் | ,, | ௮ |
| சேராங்கொட்டை | ,, | ௧௨ |
| பனைவெல்லம் | சேர் | ௧ |
| பொரித்தவெண்காரம் | துலாம் | ௩ |
| காயம் | ,, | ௨ |

இவைகளையெல்லாம் சேர்த்தரைத்து மூன்று துட்டிடை உண்டைசெய்து ஏழுநாளைக்குக் கொடுக்கவேண்டும். அல்லாமலும் வீக்கத்தின்மேலிருக்கு முரோமங்களை க்ஷவரஞ்செய்து பதினோரட்டை விடவேண்டும். இதில்செளக்யப்படாவிட்டால் மேற்சொல்லியசெயநீரைச்செய்து வீக்கத்தின்மேற்பூசி சீலையாற் கட்டினால் வீக்கம்வெந்து ரணமாகிச் சரிப்பட்டுபோகும் பின்பு மேற்சொன்ன பிளாஸ்திரிசெய்து இரணத்திற்பூசி யாற்றிக்கொள்ளவேண்டும்.

வேறு-பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | சேர் | வ |
| ஓமம் | ,, | வ |
| பூண்டு | ,, | வ |
| சேராங்கொட்டை | ,, | வ |

௦ ௱௨-வது பக்கத்தில் ஆடாவியாதில் விபரங் கண்டிருக்கிறது.



| | | |
|---|---|---|
| காட்டுச்சீரகம் | ,, | அரிக்கால் |
| கடுகுரோகணி | ,, | அரிக்கால் |
| கருஞ்சீரகம் | ,, | அரிக்கால் |
| ஸ்ரீ-ஸ்ரீபதி | ,, | அரிக்கால் |
| வசம்பு | ,, | அரிக்கால் |
| ஆவாரம்விரை | ,, | முக்கால் |
| ஊமத்தன்விரை | ,, | முக்கால் |
| வெண்காரம் | துலாம் | அரை |
| காயம் | விராகனிடை | ௧ |

இவைகளைச் சிறுநீரில் அல்லது சாராயத்திலரைத்து மூன்றுதுட்டிடை உண்டைசெய்துகொடுக்கசௌஸ்தமாகும் பத்தியமில்லை.

சக்கரேயவ்வல்.

அதாவது குதிரைக் கணைக்காலிற் காணும் வீக்கத்துக்குப்பெயர். இத்திற பலவிதங்களுண்டு அவையாவன,

1. கணைக்காலில் வீக்கங்கண்டு அதினால் குதிரை நொண்டுமாகில்,

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மிளகு | துலாம் | ௮ |
| காட்டுச்சீரகம் | ,, | ௮ |
| கடுகுரோகணி | ,, | ௮ |
| கோஷ்டம் | ,, | ௮ |
| வாய்விளங்கம் | ,, | ௮ |
| சித்திரமூலம் | ,, | ௮ |

| | | |
|---|---|---|
| கருஞ்சீரகம் | ,, | ௪ |
| திப்பிலிமூலம் | ,, | ௪ |
| வெட்பாலையரிசி | ,, | ௪ |
| மைசாட்சி | ,, | ௪ |
| கறிமஞ்சள் | ,, | ௪ |
| கழைக்கோட்டிக்காய்ப்பருப்பு | ,, | ௪ |
| அமுக்கிறாக்கிழங்கு | ,, | ௪ |
| பொரித்தபடிகாரம் | ,, | ௪ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௪ |
| காயம் | ,, | ௧ |

இவைகளைச் சாராயத்திலரைத்து மூன்றுதுட்டிடை உண்டைசெய்து பத்துநாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்கவேண்டும் அல்லாமலும் வீக்கத்தின்மேலிருக்கு முரோமங்களை நன்றாய் க்ஷவரஞ்செய்து அதின்மேல்,

| | | |
|---|---|---|
| மைசாட்சி | துலாம் | ௨ |
| சவுக்காரம் | ,, | ௨ |
| சேராங்கொட்டை | ,, | ௨ |
| எண்ணை | ,, | ௨ |
| திருகுகள்ளிப்பால் | ,, | ௮ |
| நீர்வாளப்பருப்பு | ,, | ௫ |
| வெள்ளைப்பாஷாணம்குண்டுமணியிடை-௧ | | |

இவைகளை மேற்சொன்ன பாலிலரைத்து மேற்சொன்ன எண்ணெயிற்சேர்த்து நன்றாயரைத்து வீக்கத்தின்மேற்பூசி சீலையாற்கட்ட நாலைந்துநாளையில் வெந்து ரிணமாகி சீழோடி சரிப்பட்டுப்போகும் பின்பு மேலெழுதிய பிளாஸ்திரியைப்போட்டால் சொஸ்தமாகும்.



பத்தியம்.

ஏழுநாளைக்கு கொள்ளைநீக்கி வெந்நீர் ஒருவேளை காட்டவேண்டும்.

2. அக்குளினருகில் வீங்கியிருக்குமாகில் பகலி என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௧௧ |
| கடுகு | ,, | ௧௧ |
| மிளகு | ,, | ௧௧ |
| பூண்டு | சேர் | வ |
| அபினி | துலாம் | ௧ |

இவைகளைத் தேனிலரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து கொடுத்து வீக்கத்தின்மேல் முன்சொன்ன பக்குவஞ்செய்ய சொஸ்தமாகும்.

3. முழங்காலுக்குமேல் வீக்கங்கண்டால் குருக்கி என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | ௬ |
| மிளகு | ,, | ௬ |
| காட்டுச்சீரகம் | ,, | ௬ |
| புகையிலை | ,, | ௬ |
| சாயித்தா | ,, | ௩ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௨ |
| காயம் | விராகனிடை | ௧ |

இவைகளைக் கையாந்தகரைச்சாற்றிலரைத்து இரண்டு துட்டிடை யுண்டைசெய்து கொடுக்கவேண்டும்

அல்லாமலும்,

| | | |
|---|---|---|
| புளியிலை | பிடி | க |
| வேப்பிலை | ,, | க |
| நொச்சியிலை | ,, | க |
| அமிஞ்சியிலை | ,, | க |
| பிரமிப்பூண்டு | ,, | க |

இவைகளை கொதிக்கவைத்து ஒத்திடசொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளைக் குறைத்துக்கட்டவும்.

4. முன்னங்காற்களிற் கழைக்கோட்டிக்காய்ப்பிரமாணம் உண்டைகட்டுமாகில் அட்டி என்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | துலாம் | ச |
| வசம்பு | ,, | உ |
| சேராங்கொட்டை | ,, | உ |
| வெண்காரம் | ,, | க |
| காயம் | ,, | அரை |

இவைகளை உத்தாமணிச்சாற்றிலரைத்து இரண்டு துட்டிடை உண்டைசெய்து கொடுக்கவும். அல்லாமலும் கற்றாழைச்சோறெடுத்து அதோடு ஒரு துலாம் படிகாரம்சேர்த்து விக்கத்தின்மேல் வைத்துக்கட்டவும் பின்பு மூன்றுநாள்தரித்துக் கட்டையவிழ்த்து மறுபடியும் புதிதாய்க்கட்டவும் இப்படி ஏழுகட்டுக் கட்ட சொஸ்தமாகும்.



5. முன்னங்காற் கணுவில்வீங்கினால் சக்கரேயவ்வலென்றுபெயர்.

மேற்சொல்லிய சக்கரேயவ்வலுக்குச் சொன்ன பக்குவமே இதற்குஞ்செய்ய சொஸ்தமாகும்.

6. நான்கு கணைக்கால்களிலும் கொப்பளங் கண்டிருக்குமாகில் முருகுபயிஜா என்றுபெயர், அத்திரண்டுவகைப்படும் அவையில் முதலாவது தண்ணீரைப்பற்றியது. இரண்டாவது இரத்தைப்பற்றியது.

இவைகளில் தண்ணீரைப்பற்றியதுக்கு யாதோர் பக்குவஞ் செய்யவேண்டியதில்லை.

இரத்தத்தைப் பற்றியதாயிருந்தால் அதிக சாக்கிரதையாய் உடனே பக்குவஞ்செய்யவேண்டும்.

மருந்து.

| | | |
|---|---|---|
| வங்காளமஞ்சள் | துலாம் | ௩ |
| மைசாட்சி | ,, | க |
| பொரித்தவெண்காரம் | ,, | உ |
| காயம் | ,, | க |
| கடுகுரோகணி | ,, | ௫ |
| மிளகு | ,, | ௫ |
| சவுக்காரம் | ,, | ௫ |
| கோஷ்டம் | ,, | ௫ |

இவைகளைச் சாராயத்திலரைத்து இரண்டு துட்டிடையுண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்கவேண்டும். அல்லாமலும் கொப்பளத்தின்மேலிருக்கும் ரோமங்களை க்ஷவரஞ்செய்து அதின்மேல் நித

மோரட்டை எழுநாளைக்குவிட சொஸ்தமாகும் பத்தியமில்லை.

உஷார்.

குதிரை சவாரிபோய் வந்தவுடனே திடீரென ஒருவித வயிற்றுவலியுண்டாகும் அத்தருணஞ் செய்யவேண்டியது.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | அ |
| மிளகு | ,, | க |

இவையிரண்டையும் பொடிசெய்து மூன்றுபலம் நெய்யுடனே வெந்நீர்வார்த்து ஷீ பொடியைப்போட்டு குழப்பிக்கொடுக்க சொஸ்தமாகும்.

2. சாந்தி பெருக்குத்தாய் மூன்றுபிடி தும்பையிலையும் செறங்காய் உப்புஞ்சேர்த்து துவைத்து சேதமில்லாமல் உள்ளுக்குமேய்க்கவிடும்.

3. சாந்தி.

| | | |
|---|---|---|
| மிளகு | சேர் | வ |
| இஞ்சி | ,, | அரிக்கால் |
| சுக்கு | ,, | அரிக்கால் |
| புகையிலை | ,, | அரிக்கால் |

இந்த நாலுவகையும் ஒருமிக்கசேர்த்திடித்து உள்ளுக்குக்கொடுக்க சொஸ்தமாகும்.

4. கைகண்டமுறை. கடுகுரோகணி பலம் முக்கால் பாதிவறுத்துக்கொண்டும் பாதி பச்சையாயெடுத்துக்கொண்டும்.



| | | |
|---|---|---|
| கருப்புட்டிவெல்லம் | பலம் | உ |
| வெண்காரம் | விராகனிடை | க. |

கொண்டுவந்து பொரித்துக்கொண்டு இவைகளையொன்றாயிடித்து இரண்டுண்டைசெய்து ஒரு உண்டையை உள்ளுக்குக்கொடுத்து நாலுநாழிகைபொறுத்தபின்பு மற்றோருண்டையை மேய்க்கவும் சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளை நீக்கிவைக்கவும்.

சேம்பா.

மூக்கிலிருந்து தண்ணீர்வடிந்தால் சேம்பா என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பூண்டுதோல் | பலம் | வ |
| குளிமஞ்சள் | ,, | வ |
| ஓமம் | ,, | ம் |
| பெருங்காயம் | விராகனிடை | கக |

இவைகளை யரைத்து மிருதுவானகோணியிற்றடவி காயவைத்து திரிசெய்து நெருப்பிற்கொளுத்திக்கொள்ள புகைவரும் அந்தப்புகையை ஒருகுழாவழியாய் காலை இரண்டுவேளை மாலைமூன்றுவேளை மூக்கிற்கொடுக்க பெரும்பாலும் நீர்வெளிப்படும் மறுபடியுமுடனே அரைப்பலம் பெருங்காயங் கொண்டுவந்து கல்வத்திற்போட்டு நன்றாயரைத்து எடுத்துக்கொண்டு மூன்று பெரியவுருண்டைகளை தண்ணீர்

விட்டு வேகவைத்து தோலை உரித்து எறிந்துவிட்டு நன்றாய்ப் பிசைந்து மேற்படி அரைத்தபெருங்காயத்தைச்சேர்த்து பிசைந்து உண்டைசெய்து உள்ளுக்கு கொடுக்கவும் சொஸதமாகும் இப்படி யிடைவிடாமல் மூன்றுநாள் சாயந்திரம் குடுத்துவரவும் சேம்பாசின்றுபோய்விடும்,

## குதிரைக்கு மார்பிடிப்புக்கு மருந்து.

| | |
|---|---|
| வெல்லம் ரூபாயிடை | உ௫ |
| மிளகாய் துக்காணியிடை | ௫ |
| கேழ்வரவுமாவு துக்காணியிடை | ௮ |

மிளகாயை தூள்செய்துக்கொண்டு மேற்படி தூளை இரண்டு தினுசினுங் கொஞ்சம் ஜலம்விட்டுப்பிசைந்து கொடுக்கவும் சொஸ்தமாகும் பத்தியமில்லை.

## குதிரைக்கு அடிக்கும் பலவிதலேப்பு.

1. மனிதர் மூத்திரம் புத்துமண் புளியிலை உப்பு இவைகளை ஒருமிடாவிற் பேரிட்டுக் காச்சிக்கொண்டு சூடுபெற அடிக்கவும்.

### 2-வது முறை.

| | |
|---|---|
| உறைமண் பட்டணம்படி | ௧ |
| பச்சரிசி பட்டணம்படி | ௧ |
| உப்பு பட்டணம்படி | ௧ |

ஒரு மிடாவில் ௬ படி ஜலம்விட்டு மேற்படி தினுசுகளைப்போட்டு நன்றாய்க்காச்சி யடிக்கவும்.

### 3-வது முறை.

கேழ்வரகுமாவு
புத்துமண்



வேகிந்தகொள்ளுத்தண்ணீர் *
ஊட்டைத்தண்ணீர்
வெள்ளாட்டின்சாணி
வேப்பிலை
புளியிலை
வல்லாரியிலை
சேம்பையிலை
உப்பு
கரியபோளம்
மைந்தாலக்கடி

இவைகளை பெரியபானையிற் போட்டுக்காச்சி அடிக்கவும்.

4-வது முறை. சித்தாமணக்குக் கொட்டை பருப்பு படி ஒன்றரை ௫-படி தயிரிற்போட்டுக் காச்சி சூடாய் அடிக்கவும். மேற் குறித்த லேப்புகளில் ஏதாவது ஒருலேப்பு அடித்தமறுநாள் குதிரையை உப்புத்தண்ணீரிற் கொண்டுபோய் நன்றாய் தேய்த்து வீட்டுக்குகொண்டுவந்தவுடனே மூன்றுதிற அதுக்கு சாராயங்கொடுத்தபின் கொள்ளுகட்டவும்.

## பேல்

அதாவது குதிரைக்கால் நரம்புகள் கனத்துக்கொண்டு வீக்கமுண்டாகி பலவிதமான உண்டைகள் கட்டுவதற்குப்பெயர்.

1. [illegible]திரையின் வலதுமுன்னங்கால் அல்லது இடது[illegible]ங்கால் பெருநரம்பான துவீங்கி இரண்டு

மூன்றுநாளைக்குள் மேற்படி நரம்பிற் கழைக்கோட்டிக்காய்ப்பிரமாணம் அல்லது மணிப்புங்கங்கொட்டைப்பிரமாணம் உண்டை கட்டுமானல் நர்பேலென்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | சேர் | வ |
| ஓமம் | ,, | வ |
| சேராங்கொட்டை | ,, | வ |
| பூண்டு | ,, | வ |
| பனைவெல்லம் | ,, | க |

இவையெல்லாமொன்றாய்ச்சேர்த்தரைத்து மூன்று தட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர், ஒருவேளைக்காட்டவேண்டும்.

2. குதிரையி னிட்டதுபின்னங்கால் நரம்புவீங்கி அதிற் புங்கங்கொட்டைப் பிரமாண முண்டைகட்டுமாகில் மாதர்வேலென்று பெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| எள்ளு | சேர் | வ |
| காட்டுச்சீரகம் | ,, | வ |
| ஓமம் | ,, | வ |
| பச்சைக்கடலை | | வ |
| சேராங்கொட்டை | ,, | வ |



| | | |
|---|---|---|
| கச்சைசக்கருவாடு | ,, | வ |
| தேங்காய் | ,, | வ |
| பூண்டு | ,, | வ |
| பனைவெல்லம் | ,, | வ |
| தட்டைப்புங்கம்பட்டை | ,, | வ |
| வேப்பெண்ணை | ,, | வ |
| கெந்தகம் | துலாம் | க |

இவைகளில் முதல் கெந்தகத்தை இளநீரில் நன்றாயரைத்து மற்ற சரக்குகளோடு தேங்காய் வேப்பெண்ணை கெந்தகம் முதலியவைகளைச் சேர்த்தரைத்து இரண்டு தட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவும்.

3. குதிரையின் தேகத்திற் கழைக்கோட்டிக்காய்ப் பிரமாணம் உண்டைகட்டுமானல், பூட்டுபேலென்று பெயர்.

பக்குவம்.

முதலிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | துலாம் | உ |
| வெள்ளைப்பாஷாணம் | ,, | உ |
| தாமரை | ,, | உ |
| திப்பலிச்சாரம் | ,, | ச |
| இலுப்பைமட்டுவேர் | ,, | ச |
| மனிதன்கொண்டையோடு | ,, | ச |
| தாளகம் | ,, | வ |

இவைகளை இஞ்சிசாற்றில் பனிரெண்டு சாமமரைத்து கடலைப்பிரமாணம் உண்டைசெய்து இரண்டு வேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

4. குதிரையின் மேற்றோலில் குண்டுமணிப் பிரமாணம் உண்டைகட்டுமானல் சம்பர்பேலென்று பெயர்.

பக்குவம்.

முதல் கழுத்து நரம்பி லிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| எள்ளு | சேர் | ௧ |
| சேராங்கொட்டை | ,, | ௧ |
| பனைவெல்லம் | ,, | ௧ |
| எருக்கிலை | ,, | ௧ |

இவைகளையரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து எழுநாளைக்கு இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

5. குதிரையின் காலெலும்பில் நா[illegible]ஞ்சிப்பழப்பிரமாணம் உண்டைகட்டுமானல் [illegible]டுபேலென்று பெயர்.



பக்குவம்.

முதலிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| கெந்தகம் | துலாம் | ௧௨ |
| நவாச்சாரம் | ,, | ௧ |
| தாளகம் | ,, | ௧ |
| லிங்கம் | ,, | ௧ |
| சாஜிக்கார் | ,, | ௧ |
| படிகாரம் | ,, | ௧ |
| காவிக்கல் | ,, | ௧ |
| வெண்காரம் | ,, | ௧ |
| பூவரசங்கொட்டை | ,, | ௧ |
| மெழுகு | ,, | ௧ |

இவையெல்லா மரைத்து எலுமிச்சம்பழச்சாற்றில் குழப்பி கொதிக்கவைத்து தண்ணீருக்குள்வைத்து மெல்லிசாய்ப் பொடிசெய்து வைத்துக்கொண்டு காணொன்றுக்கு மேற்படிபொடியில் இரண்டு விராகனிடை யெடுத்து நாலுதுட்டிடை கப்புமாவிற்கலந்து இரண்டுண்டையாகச்செய்து காலையிலொன்று மாலையிலொன்றுமாகக் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

6. கண்களோரத்தில் கடலைப்பிரமாணம் உண்டைகட்டுமானல் சஷம்பேலென்று பெயர்.

பக்குவம்.

…தலிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| சேராங்கொட்டை | சேர் | வ |
| எள்ளு | ,, | வ |

| | | |
|---|---|---|
| ஓமம் | ,, | வ |
| பூண்டு | ,, | வ |
| எருகிலை | ,, | வ |
| குண்டுமணிவேர் | துலாம் | ௩ |
| கோவைவேர் | ,, | ௩ |
| தட்டைப்புக்கன்வேர் | ,, | ௩ |
| பேய்சும்மட்டிவேர் | ,, | ௩ |
| பனைவெல்லம் | சேர் | அரை |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்தரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்க சொஸ்தமாகும்.

பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக் காட்டவேண்டும்.

7. குதிரையின் வலதுமுன்னங்காலிலாவது இடது பின்னங்காலிலாவது முழங்காலுக்குக் கீழே தழும்புகளுண்டாய் காலுக்குநோ வதிகப்படுமாகில் அத்துபேலென்று பெயர்.

பக்குவம்.

முதலிரத்தங்குத்திவாங்கி பின்பு,

| | | |
|---|---|---|
| பச்சரிசி | சேர் | வ |
| சோங்கொட்டை | ,, | வ |
| வெண்காரம் | ,, | வ |

கொண்டுவந்து இரவும் பகலுந் தண்ணீரிலூறவைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும்.



பத்தியம்.

கொள்ளுநீக்கி வெந்நீர் ஒருவேளைக்காட்டவேண்டும்,

முதுகுபுண்.

குதிரையின் முதுகுவீங்கி உபத்திரவப்படுமாகில்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| புளியிலை | பிடி | க |
| வேப்பிலை | ,, | க |
| நொச்சியிலை | ,, | க |
| உத்தாமணியிலை | ,, | க |
| தூத்தியிலை | ,, | க |

இவைகளை கொதிக்கவைத்து வீக்கத்தின்மேலொத்திடவேண்டும் இதிற் சொஸ்தப்படாவிட்டால் வீக்கத்தின்மேற் கொஞ்சங்கீறிவிட்டு மயில்துத்தம் பொடிசெய்து அதின்மேல் மூன்றுநாளைக்குத்தூவ வீக்கம்புண்ணாகி இரத்தமுஞ் சீழும்வடியும் அதிலுள்ள நஞ்சுமிஷமெல்லாம் நன்றாய்வடிந்தபின்பு வெந்நீரால் செவ்வையாய்க் கழுவிப்போட்டு முன்சொன்ன ० பிளாஸ்திரியைப்போட சொஸ்தமாகும்.

பம்மணி.

அதாவது-குதிரையின் அயால்ரோமங்களிலாவது, வாலிலாவது, கணைக்கோட்டிக்காய்ப் பிரமாணம் உண்டைகட்டிக்கொண்டு அதினாலிந்த விரண்டிடங்களிலுமிராநின்ற உரோமங்களுதிர்ந்துபோகுதல்.

० ௱௪-வதுபக்கம் ௨-வதுபக்குவத்திற்கண்டுகொள்க.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| பறங்கிப்பட்டை | சேர் | அரை |
| செந்தசம் | தோலம் | ௮ |
| சுருமா | ,, | ௨ |
| இரசம் | ,, | ௨ |
| மயில்துத்தம் | ,, | அரை |
| சோளமாவு | ,, | ௮ |
| முருக்கப்பட்டை | ,, | ௮ |
| தேன் | ,, | ௪ |

இவைகளை தேனுட்பட பிள்ளைகள் சிறுநீரிலரைத்து இரண்டுதுட்டிடை உண்டைசெய்து கொடுக்க வேண்டும். இதில் சொஸ்தப்படாவிட்டால்.

| | | |
|---|---|---|
| அழிஞ்சில்வேர் | சேர் | ௨ |
| சோரக்கொட்டை | ,, | ௧ |
| மாவஞ்சியான் | ,, | அரை |

இவைகளை யொன்றிரண்டாயிடித்து குழித்தயில மிறக்கிபூச சொஸ்தமாகும்.

பலமுறைகள்.

குதிரைக் கண்ணின்கீழேயாவது காற்குளம்பின்மேலேயாவது குண்டுமணிப்பிரமாணம் உண்டை கட்டித் தினவுண்டாகி நாளுக்குநாள் மேற்படி உண்டையானது பருத்து வளருமாகில் பாராத்து என்று பெயர். இந்தவியாதி குதிரைகளுக்கதிகமாய் மாரி காலங்களிலுண்டாகும்.



பக்குவம்.

| | | |
|---|---|---|
| காட்டுச்சீரகம் | சேர் | ௧ |
| மிளகு | ,, | அரை |
| அரக்கு | ,, | ௧ |
| பூண்டு | | ௰ |
| வல்லாரையிலை | பிடி | ௧ |
| பஞ்சியிலை | ,, | ௧ |

இவைகளைச் சிறுபிள்ளைகள் சிறுநீரில் ஒருநாளுற வைத் தரைத்து மூன்றுதுட்டிடை உண்டைசெய்து கொடுக்கவேண்டும்.

அல்லாமலும்,

| | | |
|---|---|---|
| ஆட்டின்கொழுப்பு | தோலம் | ௮ |
| கற்கண்டு | | |
| கல்நார் | | |
| மூறாகார்சிங்கு | | |
| மயில்துத்தம் | | |

இவைகளை மேற்சொன்ன கொழுப்பைச்சேர்த்துருக்கி வைத்துக்கொண்டு வியாதியின்மேற்பூச சொஸ்தமாகும்.

குதிரையக்குளில் மார்புக்கடுத்தாப்போல் கொட்டைப்பாக்குப் பிரமாணம் உண்டைகட்டி நாளுக்குநாளதிகப்படுமாகில் கெட்டாகமாசி என்றுபெயர்.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| வாலுளுவையரிசி | தோலம் | ௧௧ |
| கரியபோளம் | ,, | ௧௧ |
| கறிமஞ்சள் | ,, | ௧௧ |

| | | |
|---|---|---|
| கோஷ்டம் | ,, | ௧௧ |
| ஆளிவிரை | ,, | ௧௧ |
| அமுக்கிறாக்கிழங்கு | ,, | ௬ |
| அக்கிறாகாரம் | ,, | ௬ |
| திப்பிலிமூலம் | ,, | ௬ |
| திப்பிலி | ,, | ௭ |
| பூவரசங்கொட்டை | ,, | ௭ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௭ |
| காயம் | ,, | ௫ |
| அபினி | ,, | ௨ |

இவைகளை சாராயத்திலரைத்து இரண்டு துட்டிடை உண்டைசெய்துகொடுக்க ஏழுநாளைக்குள் கட்டி பழுத்துடைந்து கல்மிஷங்கள் வெளிப்பட்டுவரும் அவைகளை வெந்நீரால் நன்றாய்க்கழுவிப்போட்டு ஒருபிடி வேப்பங்கொழுந்தில் ஒருதுண்டுமஞ்சல் சேர்த்து நன்றாயரைத்துப் புண்ணின்மேற் பூசவேண்டும், இப்படி நாற்பத்தைந்துநாளைக்கு பூச சொஸ்தமாகும்.

குதிரையின் முதுகுபாரிசங் கொஞ்சமிழுத்தாப்போல் நடக்குமாகில் நீம்கமரி என்றுபெயர்

பக்குவம்.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | ௨ |
| மைசாட்சி | ,, | ௨ |
| வெந்தியம் | ,, | ஒன்னறை |
| ஆளிவிரை | பலம் | ௪ |
| அதிமதுரம் | ,, | ௪ |
| பூண்டு | ,, | ௪ |



| | | |
|---|---|---|
| வெண்காரம் | துலாம் | ௨ |
| காயம் | ,, | ௨ |
| கத்தரிக்காய் | சேர் | ஒன்னறை |
| பனைவெல்லம் | ,, | ஒன்னறை |
| உடும்பு | ,, | ௧ |
| நெய் | ,, | ஒன்னறை |
| உளுத்தமாவு | ,, | ௨ |

இவைகளில் முதலுடும்பையறுத்து அதின்வயிற்றிலிருக்குங் கல்மிஷங்களைப்போக்கி நெய்யிலரைவேகலாக பொரித்துக்கொண்டுபின்புமற்றசரக்குகளோடு பொரித்தநெய்யும் உடும்பையும் ஒன்றாய்ச்சேர்த்து நன்றாய்ப்பிசைந்து நாலுதுட்டிடை உண்டைசெய்து முதலிருபதுநாளைக்கு இரண்டுவேளையுங் கொடுத்து பின்பு இருபதுநாளைக் கொருவேளையாக கொடுக்க சொஸ்தமாகும்.

குதிரைக் கதிகமா யிடுப்புபிடித்துக் கொண்டு நொண்டுமாகில்,

பக்குவம்.

இடுப்பில் நாற்கோணமாய்ச் சூடுபோட்டு முன் நீம்கமரிக்குச்சொன்ன அவிழ்தத்தை முன்சொன்னதுபோலவேகொடுக்க சொஸ்தமாகும்.

## குதிரையினைத தப்போறலதுக்கு

மசாலா.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | வராகனிடை | ௯ |
| ஓமம் | ,, | க் |

| | | |
|---|---|---|
| சவுக்காரம் | ,, | க |
| பனைவெல்லம் | ,, | க |
| அபினி | ,, | க |

இவையெல்லா மொன்றாய்ச் சேர்த்தரைத்து உண்டைசெய்து கொடுத்துவரவேண்டும். அவிழ்தங்கொடுத்தபின் குதிரையை உலாத்தியும் மாலீசு நன்றாய்க் கொடுத்துவரவேண்டும். அல்லாமலும் கொள்ளும் புல்லும் வழக்கப்படியே கொடுத்துவந்தால் இளைப்புதீர்ந்து குதிரை புஷ்டியாகும்.

## குதிரை நாளுக்கு நாள் இளைத்துப்போனால்

### கொடுக்கு மசாலா.

| | | |
|---|---|---|
| மைசாட்டி | சேர் | அரை |
| கறிமஞ்சள் | ,, | அரை |
| குரசானிஓமம் | ,, | வ |
| மூளகாய் | ,, | வ |
| ஓமம் | ,, | வ |
| காட்டுச்சீரகம் | ,, | வ |
| கடுகுரோகணி | ,, | வ |
| கோஷடம் | ,, | வ |
| ஆளிவிரை | ,, | வ |
| வாய்விளங்கம் | ,, | வ |
| தெரிப்புள்ளபூண்டு | ,, | அரை |
| சவுக்காரம் | ,, | வ |
| பொரித்தவெண்காரம் | துலாம் | அ |

இவைகளைப் பசுவின்பால் விட்டரைத்து மூன்று தட்டிடை உண்டைசெய்து இருபத்தோர்நாளைக்குக் கொடுக்க குதிரை புஷ்டியாகும்.



☞ குதிரை நாளுக்குநா ளிளைத்து கொள்ளும் புல்லும் நன்றாய்த்தின்னுமலுந் தண்ணீர் செவ்வைவாய்க்குடியாமலு மிருக்குமாகில்,

### பக்குவப்.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | உ |
| கடுகுரோகணி | ,, | உ |
| கோஷ்டம் | ,, | உ |
| சுக்கு | ,, | உ |
| திப்பிலி | ,, | உ |
| திப்பிலிமூலம் | ,, | உ |
| காட்டுச்சீரகம் | ,, | உ |
| வாய்விளங்கம் | ,, | உ |
| காயம் | ,, | அரை |

இவைகளை காடியில்லரைத் திரண்டுதட்டிடை யுண்டைசெய்துகொடுக்க குதிரை நாளுக்குநாள் தணிவுகொடுத்துப் பசியுண்டாகி புஷ்டியாகும்.

### பத்திசாமசாலா.

| | | |
|---|---|---|
| கறிமஞ்சள் | துலாம் | உ |
| கடுகு | ,, | உ |
| ஓமம் | ,, | உ |
| காட்டுச்சீரகம் | ,, | உ |
| பூண்டு | ,, | உ |
| கருஞ்சீரகம் | ,, | உ |
| சீக்காய் | ,, | உ |
| மூளகாய் | ,, | உ |
| கடுக்காய் | ,, | உ |

| | | |
|---|---|---|
| தான்றிக்காய் | ,, | ௨ |
| வெட்பாலையரிசி | ,, | ஒன்னறை |
| பூவரசங்கொட்டை | ,, | ஒன்னறை |
| வலம்புரிக்காய் | ,, | ஒன்னறை |
| கடுக்காய்ப்பிஞ்சி | ,, | ஒன்னறை |
| சாயித்தா | ,, | ௪ |
| ஸ்ரீ ஸ்ரீபதிவெள்ளருகு | ,, | ௪ |
| கழைக்கோட்டிக்காய்ப்பருப்பு | ,, | ௪ |
| வசம்பு | ,, | ௪ |
| கரியபோளம் | ,, | ௧ |
| கடுகுரோகணி | ,, | ௧ |
| திப்பிலி | ,, | ௧ |
| திப்பிலிமூலம் | ,, | ௧ |
| பேய்ச்சுரையின்விரை | ,, | ௧ |
| பேய்பீர்க்கங்காய்விரை | ,, | ௧ |
| பொரித்தவெண்காரம் | ,, | ௧ |
| சுறியுப்பு | ,, | ௬ |
| புகையிலை | ,, | ௪ |
| கர்ப்பூர் | ,, | ௪ |
| சுக்கு | ,, | ௪ |
| மிளகு | ,, | ௪ |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த் திடித்துக்கொண்டு வேண்டியபோது நாலுதட்டிடை சூரணமெடுத்து சாராயத்திற்கலந்து உண்டைசெய்துக்கொடுத்து இரண்டுமூன்று நாளைக்குப்பின் முருங்கப்பட்டைச் சாற்றிலாவது காடியிலாவது சிறுபிள்ளை சிறுநீரிலாவது சேர்த்துக்கொடுக்கவும்.



கொள்-புல் தின்னும்போதாவது தண்ணீர்குடிக்கும்போதாவது இருப்புமாகிற கொடுக்குமசாலா,

| | | |
|---|---|---|
| சுக்கு | துலாம் | ௪ |
| திப்பிலி | ,, | ௪ |
| திப்பிலிமூலம் | ,, | ௪ |
| காட்டுச்சீரகம் | ,, | ௪ |
| ஆளிவிரை | ,, | ௨ |
| மிளகு | ,, | ௨ |
| ஓமம் | ,, | ௩ |
| மைசாட்சி | ,, | ௩ |
| கருஞ்சீரகம் | ,, | ௬ |

இவைகளை யறுவறுப்பாகக்கொண்டு தேன்விட்டரைத்து மூன்று தட்டிடையுண்டைசெய்து மூன்று நாளைக்கு இரண்டுவேளையுங்கொடுக்க சொஸ்தமாகும். இல்லாவிட்டால் இந்த உண்டையோடு ஒருபிடி மூங்கிலிலைசேர்த்துக்கொடுக்க சொஸ்தமாகும்.

## வெய்யகாலத்திற் கொடுக்கும்

### குளிர்ச்சி மசாலா.

| | | |
|---|---|---|
| கோஷ்டம் | துலாம் | ௬ |
| மிளகு | ,, | ௬ |
| சுக்கு | ,, | ௪ |
| இந்துப்பு | ,, | ௪ |
| பூண்டு | ,, | ௩ |

இவைகளைத் தண்ணீர்விட்டரைத்து இரண்டுதட்டிடை உண்டைசெய்து மூன்றுநாளைக்குக் கொடுக்க

வேண்டும். இப்படி செய்துவந்தால் குதிரைக்குச் சூடில்லாமல் எப்போதுங் குளிர்மையாகவே யிருக்கும் பத்தியமில்லை,

குதிரை மதத்தினு லடிக்கடி கனைத்துக்கொண்டு மடிக்கடி இந்திரியத்தை வெளிப்படுத்திக்கொண்டு மிருந்து வுதிருவினை த்துப்போகுமாகில்,

பச்குவம்.

| | | |
|---|---|---|
| வாழைக்கிழங்கு | சேர் | ௧ |
| வெள்ளைமிச்சம்விரை | ,, | முக்கால் |
| கத்தக்காம்பு | ,, | அரை |
| வெள்ளெருக்கன்பூ | ,, | வ |

இவைகளை யரைத்து விளாங்காய்ப்பிரமாணம்உண்டைசெய்து ஏழுநாளைக்குக் கொடுக்கவேண்டும். அல்லாமலும் சிஸனத்துக்கும் பீசத்துக்கு மிடையிலிருக்கும் நரம்பிற் சூடுபோடவேண்டும். இதில் சொஸ்தப்படாவிட்டால் (பங்குடிகீறு) கொண்டுவந்து புகைகாட்ட மதமெடுபட்டுப்போகும்.

குதிரை மாதவனைக்கண்டால்

இச்சிக்க மசாலா.

| | | |
|---|---|---|
| மிளகு | துலாம் | உ |
| மஞ்சள் | ,, | உ |
| கோஷ்டம் | ,, | உ |
| பேரிச்சங்காய் | ,, | ௧ |
| மைசாட்சி | ,, | ௧ |
| வெல்லம் | ,, | ௧ |



| | | |
|---|---|---|
| காயம் | விராகனிடை | ௧ |
| கோழிமுட்டை | | ௧ |

இவைகளை யரைத்துப் பொடிசெய்து முட்டையிற்கலந்து மூன்றுண்டைசெய்து மூன்றுவேளைகொடுக்க இச்சையுண்டாகும்.

மாதவான் குதிரையைக்கண்டால்

இச்சிக்கு மசாலா.

| | | |
|---|---|---|
| கடுகுரோகணி | துலாம் | ௩ |
| மஞ்சள் | ,, | உ |
| மைசாட்சி | ,, | ௧ |
| காயம் | ,, | ௧ |
| கத்தரிக்காய் | சேர் | அரை |

இவைகளில் கத்தரிக்காய் தவிர மற்றவைகளைப் பொடிசெய்து கத்தரிக்காய்க்குள் வைத்து நெருப்பில்வேவித்து மூன்றுநாளைக்குக்கொடுக்க பெண் குதிரை தற்செயலாய் மோகித்து மேல்விழும்.

குதிரைக்கு கைகால்களிற் கட்டியைப்போ லெழும்பி யதினுல் நொண்டுமாகில்,

பக்குவம்.

முதலந்தக் கட்டிகளிற் பொத்தல்செய்து அதுக்குள்ளிருக்குஞ் சீழ் இரத்த முதலியவைகளைப்போக்கிப் பின்பு சவுக்கார்-சாஜீக்கார் இவையிரண்டையும் புளியிற்கரைத்து கட்டிமேற் பூசவேண்டும். அல்லாமலும்.

| | | |
|---|---|---|
| இந்துப்பு | விராகனிடை | கூ |
| பூண்டு | ,, | கூ |
| சுக்கு | ,, | கூ |
| வாய்விளங்கம் | ,, | கூ |
| ஓமம் | ,, | ௧அ |
| வெல்லம் | சேர் | ௧ |

இவையெல்லா மொன்றாய்ச் சேர்த்துக் கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

குதிரையின் குளம்புக்குள்ளிருக்கு மாமிசமெல்லா மழுகிச் சேதப்பட்டு அதினால் சீழோடிவருமாகில்,

பக்குவம்.

| | | |
|---|---|---|
| அரப்பொடி | விராகனிடை | கூ |
| கடுக்காய் | ,, | கூ |

இவை நல்லெண்ணெயில் நன்றாயரைத்து பற்று போட்டு அதின்மே லாமணக் கிலையைக்கட்டி பின்பு செங்கல்லை எருமுட்டை நெருப்பிற்சுட்டு நோயுள்ள விடங்களி லொத்திடவேண்டும்,

அல்லாமலும்,

| | | |
|---|---|---|
| பூண்டி | விராகனிடை | கூ |
| நற்கரண்டி | ,, | கூ |
| இந்துப்பு | ,, | கூ |
| ஓமம் | ,, | ௧அ |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த் தரைத்துக்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

ஷை வியாதிக்கு வேறு பக்குவம்.

முத்துச்சிப்பி சுண்ணாம்பையும், பழுத்துக் கீழே விழுந்துபோன கள்ளிக்கொமபு சுட்ட சாம்பலையும்



பசுவுநெய்யிற்கலந்து புண்மேற்பூச சொஸ்தமாகும். இந்தயவுழ்தம் சக்கரே யவ்வலென்னும்) வியாதியை யுங் கண்டிருக்குங்.

குதிரையின் கால்கள்வீங்கி நடக்கும்போது சிட்டுசிட்டென்று சத்தம்வருமாகில்,

பக்குவம்.

முதல் குதிரையின் காற் பெருநரம்புக்குப் பக்கத்திலிருக்கும் சிறுநரம்புகளிற்குத்தி இரத்தம்வாங்கிப்பின்பு,

| | | |
|---|---|---|
| வேப்பிலை | விராகனிடை | கூ |
| பால் | ,, | கூ |
| கடுக்காய் | ,, | கூ |
| ஆவாரம்பட்டை | ,, | கூ |
| நெய் | சேர் | ௧ |

இவையெல்லா மொன்றாய்ச் சேர்த்தரைத்து கொடுக்கவும். அல்லாமலும் இப்படியே ஏழுநாள்வரையில் நரம்புகளிலிரத்தம் வடிந்தபின்பு ஒரு சீலையிற் சாம்பற்போட்டு நரம்பின்மேற் வைத்துக்கட்ட சொஸ்தமாகும்.

குதிரையின் தேகமெங்கும் கட்டிகளெழும்பி அதனாலிரத்தம் வடியுமாகில்,

பக்குவம்.

அடுப்பங்கரையி லதிகமாய்ப் புகையடைந்திருக்கு மொட்டடை கொண்டுவந்து எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து சிறங்கின்மேற்பூசி பின்பு,

| | | |
|---|---|---|
| இந்துப்பு | விராகனிடை | ௧ |
| கடுக்காய் | ,, | ௧ |
| பூண்டு | ,, | ௧ |
| வாய்விளங்கம் | ,, | ௧ |
| ஓமம் | ,, | ௧௮ |
| நெய் | சேர் அரிக்கால். | |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்துமூன்றுநாளை க்குகொடுக்க சொஸ்தமாகும்.

தாசாமசாலா.

குதிரை யிளைத்தும் பலவீனமுள்ளதாயு மிருந்தா லப்படிப்பட்ட குதிரைக்கு தாசவாகும்பொருட்டு செய்யு மசாலா விபரம்.

1-வது பக்குவம்.

| | | |
|---|---|---|
| விரையில்லாத கத்தரிக்காய் | பலம் | ௧௪ |
| மஞ்சள் | ,, | ௧௪ |
| வெல்லம் | ,, | ௧௪ |
| நெய் | ,, | ௧௪ |

இவைகளை நன்றாயிடித்து நெய்யை விட்டுப் பிசைந்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து காலையில் மாத்திரங் கொடுத்துவரவும் இப்படி இருபதுநாளைக்குக்கொடுக்க குதிரை தணியும். பத்தியமில்லை.

2-வது பக்குவம். சிறுகீரையவித்து புண்ணாக்கில் கலந்து கொடுக்கவும்.

3-வது பக்குவம். திருவிளதேங்காய்ப்பூ நல்லவெல்லம் இவை யிரண்டையும் பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கவும்.



4-வது பக்குவம். வேவித்த பச்சைப்பயரும் வெல்லமும் பிசைந்து கொடிக்கவும்.

5-வது பக்குவம். அவலைப் பசும்பாலி லூரவைத்து ஊரினபின் னுள்ளுக்குக் கொடுக்கவும்.

6-வது பக்குவம். சிறுதரைக்கீரையை யவித்துக், கொடுக்கவும். இவ்வாறுவிதங்களில் எதாவ தொருமுறை மேற்கண்டதவணை அரைமண்டலம்வரையில் காலை மாலை கொடுத்துவந்தால் கீடியவைதாசென்ற யிளைத்தகுதிரையுங் குட்டிகுதிரையாகிவிடும்.

இறைப்புகண்ட குதிரைக்கு
பக்குவம்.

| | | |
|---|---|---|
| செருப்படியிலை | பிடி | ௧ |
| மிளகு | தூலாம் | ௩ |
| வெள்ளைப்பூண்டு | ,, | ௩ |

இவை மூன்றையுந் துவைத்து உள்ளுக்குகொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை.

காற்குளம்புக்கு ஒத்தடம்
பக்குவம்.

மண்வெட்டியைக் காயவைத்து மஞ்சள் சுண்ணம்பு இவை இரண்டையுந் தண்ணீரிற் கரைத்துக்கொண்டு குதிரையின் குளம்பை காயவைத்த மண்வெட்டியின்பேரில் வைத்து மேற்படி தண்ணீரை தெளித்துவர சொஸதமாகும்.

குதிரைக்கு காலிலே இரத்தமிரங்கினதற்கும், இடுப்பிலே வலியுண்டாயிருப்பதற்கு மருந்து.

| | | |
|---|---|---|
| குங்கிலம் | சேர் | இறண்டரை |
| நல்லெவல்லம் | ,, | இரண்டறை |

பாதிபொரித்துக்கொண்டு பாதிபச்சையாகச் சேர்த்துக்கொண்டு இம்மூன்றுவகையு நன்றா இடித்துக்கொண்டு முப்பது உண்டைபண்ணி காலையுமாலையு மொவ்வொரு உண்டைகொடுத்துக்கொண்டு வரவுஞ் சொஸ்தமாகும் பத்தியமில்லை.

ஆனல் மூன்றுமாதம்வரையில் குளிர்ந்த சலத்தில் குதிரையைக் கழுவக்கூடாது.

குதிரை தண்ணீர்குடித்தவுடனே திடீரென்றுவிழுகிறது மெழுந்திருக்கிறதுமாகவிருந்தாலும் அட்டை வயிற்றுக்குட் புகுந்திருந்தாலும்,

பக்குவம்.

இரண்டு புகையிலையும் ஒருவிளாங்காய்ப் பிரமாணம் புளியும்வைத்துக்கொண்டு மூக்கி புகையிலையைமெய்த்து பின்பு புளியைக்கொடுக்க வியாதி நீங்கும்.

குதிரைக்கு எந்தகவாளம் போட்டாலு மூலர்ந்துபோற குதிரைக்கு,

பக்குவம்.

சித்தாமணக்கொட்டையை வேகவைத்து உலர்த்திக்கொண்டு எண்ணையூத்தி ஓர் சுத்தமான பாண்டத்தில் வைத்துக்கொண்டு அந்த எண்ணெயை கொள்ளில் கால்சேர் பிரமாணமத்தித்து கக-நாளைக்கும் அரைசேர்பிரமாணம் சய-நாளைக்கும், ஒருசேர் பிரமாணம் அ-நாளைக்கு மேய்த்தாவரவும் குதிரை நன்றாய்த்தேறிவரும். கொள்ளுகட்டுகிறதற்குமுந்திசாம் கோரங்தேய்த்தா தாசாகொடுத்து பிறகுகட்டவும்.



{ அருமிபண்ணுகிற குதிரைக்கு கடிவாளத்திலே பூசுகிறதற்கு ஓர்வித=கைகண்ட முறை. }

நொருங்கிவளையலை கொண்டுவந்து பொடிசெய்து எலுமிச்சம்பழச்சாற்றிலே குழப்பி கடிவாளத்திலே கனமாகத்தடவி அதை தலையிரிலே சந்தினலங்தைக்கட்டை கரிபண்ணி அந்தக்கரிநெருப்பில் கடிவாளத்தைநன்றாய்க்காய்ச்சி எலுமிச்சம்பழச்சாற்றிலேபோட்டு கடிவாளத்தைதேய்த்து அருமிக்குதிரைக்குப்போடவுஞ் சாதுவாகும்.

குதிரை மழையிலேநனைந்து வயிறூதிக்கொண்டு கால்கள் கொறுக்கை வலித்துக்கொண்டு மிதிக்கிறதற்கு.

பக்குவம்.

| | | |
|---|---|---|
| புகையிலை | பலம் | க |
| சுக்கு | விராகனிடை | கூ |
| மூளகு | பலம் | உ |

இவைமூன்றையு மொன்றாகபொடிசெய்துகுதிரைக்குமேய்த்து தாசாகுடித்துவைக்கவும். இந்தமருந்தைகுடித்தவுடனே நடுக்கலுண்டாகும் அந்தக்குறிகண்டவுடனே சொஸ்தமானதென் றறியவேண்டியது.

குதிரைக்கு சற்பாதிரோகம்வந்தா லடிவயிறுவீக்கும் நாலுகாலும் முகமும் வீங்கிக்காணும்.

முந்திபேதிக்குகொடுத்து இரண்டுநாட்பொருத்து மஞ்சள்-சேர்-கவ, பொடிபண்ணி குக்கிலம் விராகனிடை-கூ, கூடப்போட்டு வெள்ளாட்டுக்கோமியம்விட்டுப்பிசைந்து காலையிலு மாலையிலும் எ-நாள் - தச பொழுதுகொடுக்கவும். ஒருநேரம்வெந்நீர்காட்டவும் வியாதிதீரும் கொள்ளுநிறுத்திவைத்தா லுத்தமம்.

குதிரையின்முகம்வீங்கி உபத்திரவப்படுமாகில்.

பக்குவம்.

கடுகு
மஞ்சள்
இந்துப்பு
சவுக்காரம்

இவைகளைப்புளிசேர்த்தரைத்துகுதிரையின்முகத்திற்பூசி ஒருமெல்லிய சீலையாற்கட்டசொஸ்தமாகும்.

குதிரையின் தேகமெல்லா முடிக்குமுடிச்சாய்க் கட்டிகளெழும்பி அதனல் சீழ்வெளிப்படுமாகில்,

பக்குவம்.

முதல் தேகமெல்லாம் நெய்யும் நெல்லெண்ணையுங் கலந்து நன்ருய்ப்பூசித் தேய்த்து பின்பு நொச்சியிலையைப் பானையில்வேவித்து அதின்மேற் றேய்த்துப் பின்பு,

| | | |
|---|---|---|
| சுக்கு | விராகனிடை | கூ |
| வாய்விளங்கம் | ,, | கூ |
| சூதா | ,, | கூ |
| வசம்பு | ,, | கூ |
| பூண்டு | ,, | கூ |
| ஓமம் | ,, | க அ |
| நெய் | சேர் | க |

இவையெல்லா மொன்ருய்ச்சேர்த்துமூன் றுநாளைக்குக்கொடுக்க சொஸ்தமாகும் பத்தியமில்லை,



குதிரையின் காற்களில் எலும்புபோற்புறப்படுமாகில் (ஆடா) என்று சொல்லவேணும். முன்னடிகண்டிருக்கும் (ஆடா) என்னும் வியாதியிற்சேர்க்கலாம்.

பக்குவம்.

வேப்பிர்க்கைகற்றையாகக் கட்டிக் கொண்டு சட்டிடை அடுப்பில்வைத்து சட்டிநன்ருய்சூடேறினபின்பு மேற்படி கற்றையைச் சட்டியில் நன்ருய்த்தேய்த்து சூடேறினபின்பு காலெலும்பில் நன்ருய்ச் சுடும்படியாய் ஒத்திட்டு பின்பு மேற்படியிடத்தை கத்தியினற் பிளந்து இரத்தமெடுத்துபின்பு,

நேர்வாளக்கொட்டை
நவாச்சாரம்
இந்துப்பு

இம்மூன்றையுஞ் சரியிடையாகச்சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து மேற்படியிடத்திற்பூசி ஒரு சீலையால் எ-நாளைக்குக்கட்ட சொஸ்தமாகும்.

2-வது, பக்குவம்.

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாஷாணம் | விராகனிடை | கூ |
| சாதிலிங்கம் | ,, | கூ |
| வெங்காரம் | ,, | க உ |
| கத்தக்காம்பு | ,, | க உ |

இவைகளை இஞ்சிசாற்றில் நன்ருயரைத்து இருபத்தோருண்டைசெய்து நிதமோருண்டை பனைவெல்லத்திற் சேர்த்துக்கொடுக்க மோத்திரு (ஆடா) முதலியவியாதிகளெல்லாஞ் சொஸ்தமாகும்.

இந்த அவுழ்தங் குதிரைக்கடிக்கடி கொடுத்துவந்தால் ஒருவியாதியு மணுகாது.

குதிரையின் வால்மயிரும் அயால் மயிருமுதிர்ந்துபோய் வாராமலிருக்குமாகில்,

பக்குவம்.

காய்ந்த தவளைச் சுட்ட சாம்பலையும் விளக்கின் மஷ்டையும் சரிபிடையா யெடுத்துக்கொண்டு விளக்கெண்ணெயிற்குழப்பி எ நாளைக்குபூச மயிர்வளரும்.

குதிரையோடும்போது மூலம்வெளிப்படுமாகில்

பக்குவம்.

| | | |
|---|---|---|
| பொரித்தவெண்காரம் | துட்டிடை | அரை |
| கஞ்சா | ,, | உ |

இவைகளில் முதல் கஞ்சாவை செத்தைகுப்பையில்லாமற்பொறுக்கி வறுத்துக்கொண்டு வெண்காரத்துடன்சேர்த்துப் பொடிசெய்து மூலம்வெளிப்படும்போது அதின்மேற் பொடியைத்தேய்க்க மூலம் உள்ளடங்கிப்போகும்.

பாசாந்திக் கவிழ்தம்.

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெ | சேர் | ரு |
| தயிர் | ,, | க |
| வேப்பிலைச்சாறு | ,, | வ |
| உளுந்து | ,, | க |

இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்தரைத்து ஆடுப் பிண்கிழே எ-நாளைக்குப் புதைத்துவைத்து பின்பு இ



ரண்டுகொண்டிப் பிரமாணமெடுத்து கோதும்பைமாவிற்கலந்து அதிகாலையில் கச - நாளைக்குக்கொடுக்க சொஸ்தமாகும்.

சாசினி.

பசியில்லாமல் மெதுவாய் தீனிதின்பதற்கு மருந்து.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | சேர் | க |
| மைசாட்சி | ,, | வ |
| மிளகு | ,, | வ |
| குறுசாணியோமம் | துலாம் | அ |
| ஓமம் | ,, | ச |
| அளிவிரை | ,, | ச |
| கோஷ்டம் | ,, | ச |
| வெட்பாலையரிசி | ,, | ச |
| பூண்டு | ,, | ச |
| வாய்விளங்கம் | ,, | ச |
| கருஞ்சிரகம் | ,, | ச |
| இந்துப்பு | ,, | அ |
| வெண்காரம் | ,, | அ |
| காயம் | ,, | உ |
| நெய் | சேர் | வ |
| கோதும்பைமாவு | ,, | வ |

இவையெல்லாமொன்றாய்ச் சேர்த்தரைத்து மூன்று துட்டிடை உண்டைசெய்து இரண்டுவேளையுங் கொடுக்க பசியதிகரித்து நாளுக்குநாள் குதிரையதிக புஷ்டியாகும் இதிலதிக சுகங்காணாவிட்டால்,

2-வது முறை.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | துலாம் | ரு |
| முளகாய் | ,, | ரு |
| மிளகு | ,, | ரு |
| கடுகு | ,, | ரு |
| வாய்விளங்கம் | ,, | ரு |
| மைசாட்சி | ,, | ரு |
| திப்பிலிமூலம் | ,, | ரு |
| சஜுயித்தா | ,, | ரு |
| கருஞ்சீரகம் | ,, | சா |
| கடுகுரோகணி | ,, | சா |
| களைக்கோட்டிக்காய்ப்பருப்பு | ,, | ௩ |
| புகையிலை | ,, | ௩ |
| பொரித்தவெண்காரம் | ,, | உ |
| அபினி | ,, | க |

இவைகளை சாராயம்விட்டரைத்து மூன்று துட்டிடை உண்டைசெய்து ககூ-நாளைக்கு கொடுக்க குதிரை புஷ்டியாகும் கைகண்டமுறை.

குதிரைபுஷ்டியாகி யதிகபலனுண்டாக்க் கொடுக்கும்

ஹிவாலா.

| | | |
|---|---|---|
| உருமஸ்தகி | துலாம் | உ |
| சாலன்மிசிரி | ,, | உ |
| சாதிக்காய் | ,, | உ |
| சாபத்ரி | ,, | உ |
| அதிமதுரம் | ,, | உ |



| | | |
|---|---|---|
| வாலுளுவையரிசி | ,, | உ |
| கிராம்பு | ,, | உ |
| சிற்றரத்தை | ,, | உ |
| கருவாப்பட்டை | ,, | உ |
| பேரீச்சங்காய் | ,, | எ |
| திராட்சிப்பழம் | ,, | எ |
| கஸகஸா | ,, | எ |
| வெள்ளரிவிரை | ,, | எ |
| சிறுகாஞ்சிவிரை | ,, | எ |
| முள்ளங்கிவிரை | ,, | எ |
| ஓமம் | ,, | எ |
| நாய்கடுகு | ,, | எ |
| குறாசானியோமம் | ,, | எ |
| பூவரசன்பிசினி | ,, | ரு |
| நெரிஞ்சிக்காய் | ,, | ரு |
| விளாம்பிசினி | ,, | ரு |
| தேங்காய் | ,, | அ |
| சீரகம் | ,, | உ |
| வாதுமைக்கொட்டை | பலம் | கo |
| வால்மிளகு | துலாம் | ச |
| ஏலம் | ,, | ச |
| மகிழம்விரை | ,, | ரு |
| தத்திவிரை | ,, | ரு |
| பாதாம்பிசினி | ,, | ரு |
| சருக்கரை | சேர் | மூணரை |
| நெய் | ,, | உ |

தேன் ,, ௧
கோதுமைமாவு ,, ௨

இவைகளை வஸதிரகாயஞ் செய்து சருக்கரைப்பாகுகாச்சி பதத்தில் வஸ்திரகாயத்தைப்போட்டு இலேகியமாய்க்கிண்டி வைத்துக்கொண்டு நிதம் ஆறு[illegible]டை உண்டைசெய்து நாற்பதுநாளைக்குக்கொடுக்க குதிரை நன்றாய்ப்புஷ்டியாகி [illegible] புண்டாகி தேவேந்திரன் அயிராவதத்தைக் கொல்லெனவிருக்கும்.

குதிரைகளெப்போதும் புஷ்டியூர யொருவித நோயண்டாமல் அதிக சுறுசுறுப்பாயும் நல்ல நடத்தையாயுமிருப்பதற்கு.

குதிரைகளைவைத்திருக்கு
மொழுங்குகள்.

1. இலாயம் அல்லது கட்டுத்தறி அதிக சுத்தமாயும் இலத்திமுதலிய துற்கந்தங்களில்லாமல் அடிக்கடி சுத்தஞ்செய்யவேண்டும்.

2, கொள் புல் தண்ணீர் வேளைதப்பாமல்பக்குவமாய்க் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

3. குதிரையின் கைகால் முதலியவை யெல்லாம் நன்றாய்ச்சொரிந்துவிட்டு தேகத்திலுள்ள உரோமங்கள் நன்றாயுதிரும்படி அந்திசந்தி இரண்டுவேளையும் வேளை யொன்றுக்கிரண்டு மணிநேரத்துக்கு குறையாமல் மாலீசு கொடுக்கவேண்டும்.



4. குதிரையின் தேகத்தில் மழைச்சாரல் பனி குளிர்ந்தகாற்று முதலியவைகள்படாமல் எப்போதும் புறுக்காவினால் மூடிவைக்கவேண்டும்.

5. குதிரையை பதினைந்து நாளைக் கொருவிசை கடலிலாவது உப்பளத்திலாவது நீந்தவிட்டு வெந்நீராற் குளுப்பாட்டி வரவேண்டும்.

6. குதிரை வயிற்றில் கட்டுசேராமலடிக்கடி பேதிக்குக்கொடுத்து காலத்துக்குத் தகுந்தபடி மசாலா கொடுத்துவரவேண்டும்.

7. குதிரையின் படுக்கை மேடுபள்ள மில்லாமல் காய்ந்த வைக்கோலை கற்கட்டிகளில்லாமற் பொதுக்கிப்போட்டு உதறிவைக்கவேண்டும்.

குதிரை கட்டுமிட மசுத்தமாயிருப்பதாலும், குளிர்ந்தநீரிற் குளுப்பாட்டுவதினாலும், கொள் கொடுத்தவுடனே சவாரிசெய்வதினாலும், சவாரிசெய்த வியர்வை காயுமுன் தண்ணீர்காட்டுவதினாலும், அதிக சவாரிசெய்வதினாலும், வெய்யல்-அனல்-குளிர்ந்தகாற்று-மழைச்சாரல்-பனிச்சாரல் முதலியவைகளி லடிபடுவதினாலும், சவாரிசெய்து காலாறுமுன் கட்டிவைப்பதினாலும், துஷ்ட குதிரைகளோடு சேர்த்துக் கட்டிவைப்பதினாலும், குற்றமில்லாமல் தண்டிப்பதி

றுஞ்சும், கையறியாதவன் சவாரிசெய்வதினாலும் குதிரைமனதைக் கைவசப்படுத்தாததினாலும், இன்னமினைதப்போலொத்த காரியங்களாற் குணபேதப்பட்டு வியாதியண்டி கொஞ்சநாளையிற் கெட்டுப்போகும்.

ஆகையால், பெண்களின் சுபாவமெப்படியோ அப்படியே குதிரைகளின்சுவாபமென்றெண்ணி பெண்களை வசியப்படுத்தி தனக்குள் ளடக்கியாள்வதற்கெப்படி இலகு பிகுவுபாயபட்சம் நகைப்பு நட்பு முதலியவைகளைச் செய்யவேண்டியதோ அப்படியே குதிரைகளுக்குஞ் செய்து வசியப்படுத்தி தனக்குள் ளடக்கி ஆண்டுவரவேண்டும் சுபம்.

## கவனிப்பு.

சுழியிலக்கணத்திலுஞ் சுபாவிர்த்தபலன் அசுபாவிர்த்தபலன் இப்மூன்று பாகங்களிலுங் குதிரைபார்க்கவேண்டிய சுழி சுத்தம் முதலியவைகளை விபரமாயெடுத்துரைத்திருந்தாலுமிதனடியிற் கண்டிருக்கு மிலட்சணங்களையுங் கவனமாய்ப்பார்த்து குதிரை விலைக்குக்கொள்ளவேண்டிய தவசரமாதலால் இக்குறிகளையுங் கண்ணோட்டத்துக்குக் கொண்டுவருவீர்களாக.

## துன்பத்தைத்தருகின்ற சுழிகள்.

சந்திரச் சுழிகளும் அண்டாவர்த்தமென்னுந் தண்டையடியிலிருக்கிற சுழிகளும், உடலிலொருபக்கத்தி



லிருக்கின்ற சுழியாகிய கௌவகமும் காவர்த்தமும் மேன்மையாக விளங்கிய முன்வளைச்சுழியும், பரவிய செழுமையில்லா கேதாரிச்சுழியும், காலிலிருக்கின்ற பிரயோசனமில்லாத கொடியசுழியாகிய கேசாவர்த்தமும், பொசிவோடுக்கூடிய கச்சைசிலையிற்பட்டாடையாகச் சொல்லப்பட்ட சுழியும் ஆகிய இவ்வெட்டுச் சுழிகளுமுடைய குதிரைகளை வாங்கும் பிரபுக்களுக்கு பலவாறுந் துன்பத்தையே தருமாதலாலிச்சுழிகள் பொருந்தாதென்றறிக.

## நன்மையைத்தருஞ் சுழிகள்.

1. நீண்டு அல்லது முறுக்கியதாதும், மூன்று கால் வெளுத்து ஒருகால்கறுத்தும், மூன்றுகால்கறுத்து ஒருகால்வெளுத்தும், கண்கள்வெளுததுந் தீனிகுன்றுமையும் வெம்புகின்ற நீரையுடையமாயனுருத்திரனைப்போது நீலகண்டமும், பீஜமில்லாமையும் வறக்குறைய விருக்கும் பெரியபீஜமும், செவ்வையாகிய பதுமையும், அக்கினியும், சித்திரமும்போல் அசைவில்லாமனும், முகம் வால், நான்குகாற்கள் இவைகளிற் சுழியில்லாமையுமெனப் பூலோகத்தாற் சொல்லிய குற்றங்களில்லாமல் கழுத்தடியின்மார்க்கண்டமிரட்டையாயிராமனு மிருக்கவேண்டும்.

2. சிரசிலிரண்டு சுழியும், செழுமையுள்ள நாசியி லே நான்கு சுழியும், நெஞ்சமார்பிலே இரண்டு சுழி யும், நெற்றியிலே ஒருசுழியும், உட்கட்டிலேஒருசுழி யும், ஆகிய சுழிகள் பத்துங்குறையாமல்நரி-பூனை-நரி யகாக்கை-பேய்-நரிநாய்-செழுமையுள்ளபன்றி இ வைகளுடைய சத்தமில்லாதவையாய்ப் பெரிய அலை யையுடைய கடல்-மேகம்-சங்கம் - இடபம்-பேரிகை இவைகளைப்போல சத்தமுடையனவாயு மிருக்கவே ண்டும்,

3. அதிக கோபத்துடன் பகைக்கின்ற புலி-கரடி கழுதை-செந்நாய்-ஒளியையுடைய பூனை-நரிதரிக்கப் பெற்றகரியகாகம்-தீ-புகை இவைகளினுடைய நிறத் தைப் பொருந்தாதவைகளாய் இதுமூப்புடையன வாய் வாயுவென்னும் வேகத்தோடுங்கூடிப்பிரகாசித் த கிரணங்களையுடைய வெள்ளிய முத்துக்கள் சந்திர ன் நிலரத்தினம் மெல்லிய தாமரையினுடைய மகரந் தம் செழுமைபொருந்திய பொன்காயாசெவ்வரத்த மலர் நல்லபச்சைக்கிளியாகிய இவைகள்போல அ மைந்த உருவத்தையுடையனவாயு மிருக்கவேண்டும்,

4. நெற்றிபரந்து உயர்ந்த மேனுதட்டையுடைய வாய் வெண்ணிற நிறைந்து தம்மிலே வரிசையாய்ஒத் துப் பிரகாசிக்கப் பெற்ற பற்களையுடையவாய்நிறைந்



த நல்லவாசனை சிறந்து நாக்கும்மாவினிளந்தளிர்போ லுஞ் செம்மைநிறம்பொருந்தி இரண்டிமைமயிருக் [illegible] யுடையவாய் உக்கிரமாகியகண்பார்வையுடை யவாய் தேகத்தில் அதிக மாமிசமில்லாமல்உள்ளேவ ளைந்து முக்கோணமாய் பிரகாசிக்கு முகத்தையுடை யனவாயு மிருக்கவேண்டும்,

5. கழுத்து மயிருந் தலைமயிரும் ஒருநிறமாய் மா ர்பினுடனே கண்டமும் பாம்பின்படம்போலொத்து ச் சங்குகள்போலத் தொனியுண்டாய்க்குவிந்து உள் வாங்கி மண்டலஞ் செய்வனவாய் வலிமைகொண்ட குளம்புடையவாய்க் கிளைகொண்டநரம்புகள் மறைந் த தசையையுடையவாய்ப் பிரகாசிக்கின்றமுழங்கால் நெளித்தலில்லாமல் நெளிப்பாகிய முதுகும் பருத்த துடைகளுந் திரண்டு தண்டைக்காலானது நீண்டுமெ லிதுள்ள நிறத்தையுடையனவாயு மிருக்கவேண்டும்,

6. நான்கு கால்களும் நெற்றியும் ஒக்க வெளுத்தி ருக்குமாகிற் பஞ்சகல்யாணிசொன்னவிலைகொடுத்து கொள்ளவும்,

7. மங்களனென்றுஞ், சாரங்கனென்றுங், கங்கா ளனென்றும், மௌவழகனென்றுங், கொங்காள

னென்றுஞ், சன்னசம்பானென்றுங், குங்குமச்சோரனென்றுங், கரியானென்றும், நீலனென்றுஞ், சாரனென்றும், விளங்கிய மன்னானென்றும், [illegible]ஞ்சிவந்தானென்றும், நல்லானென்றும், பொல்லானென்றுங், கருங்காற் சம்பானென்றும், பல நிறத்தையுமுடைய சாதிகுதிரைகள் இவைகளென்றறிக.

அசுவசாஸ்திரம்

முற்றிற்று.

337.170

# பொருள் அட்டவணை.

—:o:—


| பெயர். | பக்கம் |
|---|---|
| [illegible]யங்களின்பயன் | க |
| குதிரை ஜனிக்கும் வேளையின்பயன் | ங |
| பற்களால் ஆயுளறியும் டாப்பு | ரு |
| குதிரையின் ஆயுள்பற்களாலறியும்வகை | அ |
| அவையாவன | அ |
| குதிரை விலைக்குவாங்கும்போது பார்க்கவேண்டிய சகுனங்கள் | ய |
| சாதியறியும்வகை | கக |
| குதிரையின் ராசியறியும்வகை | சங |
| சுழியிலக்கணம் | கச |
| நன்மையைத்தரும் சுழிகள் | கசா |
| இரண்டாந்தரக்குறிப்பு | கஎ |
| சுபாவிர்த்த பலன் | கஎ |
| அசுபாவிர்த்த பலன் | உ0 |
| எச்சரிக்கையுடன் கவனிக்கவேண்டிய சுழிகள் | உஉ |
| பிரதானமாயறியவேண்டிய சுழிகளின்பெயர் | உங |
| இவ்வேழுகுறிகளுக்கு உதவாதென்றறிக | உசா |
| அஞ்சனமென்று பெயர் | உரு |
| குதிரைக்கமையவேண்டிய மங்களச்குறிப்பு | உகூ |
| அளவு இலக்கம் | ஙய |
| வருணபேதம் | ஙக |
| அவசியமறியும் பலன் | ஙரு |
| நாடியறிந்து அதினால் வியாதியை பகுத்தறியும் வகை. | ஙசா |

| பெயர். | பக்கம். |
|---|---|
| குதிரைகளுக்கு வியாதியின்குணம் பகுத்தறியும் வகை. | ௩௮ |
| உள்வியாதி | ௩௮ |
| குதிரைகளுக்கு பேதிக்குகொடுக்கும் விபரம் | ௪௰ |
| பேதியாகாத பெரியகுதிரைக்கு பக்குவம் | ௪௰ |
| மட்டகுதிரைகளுக்கு பேதிமருந்து | ௪௧ |
| நாட்டுத்தட்டுக்கு பேதிமருந்து | ௪௧ |
| நாஇசாதிகுதிரைகளுக்கு கொடுக்கு மோர்விதபேதி மருந்து | |
| வெளிவியாதி ரூபதையும் பிரித்துக்காட்டு வோம் | ௪௩ |
| வெளிவியாதி | ௫௪ |
| உள்ளுக்குமருந்து | ௫௪ |
| குதிரைகளுக்கு கண்ணில்பூவிருக்குமாகில் | ௫௮ |
| குதிரைகளுக்கு எழுவைசுரங்களுக்கு | ௫௬ |
| முன்கண்ட எழுவைச்சுரத்துக்கு முண்டாகு மடையாளங்கள். | ௬௪ |
| குதிரைகளுக்குச் சம்மந்தப்பட்ட வாய்வுகளின் விபரம் | ௬௫ |
| 18-குதிரைக்கு வயிற்றுவலிகண்டிருந்தால் பக்கு வம். | ௭௬ |
| ஷை கண்டவியாதிக்கு வேறொருபக்குவம் | ௮0 |
| பாரிஷவின் விபரம் | ௮௧ |
| இந்தவிக்கத்திற்கு ஒத்தடங்கொடுக்கும் விபரம் | ௮௧ |
| ஜகர்பாறு | ௮௫ |





| பெயர். | பக்கம். |
|---|---|
| விக்கம் | ௮௮ |
| தலைநோய் | ௯0 |
| விவைவாதம் | ௯௫ |
| சகலவிதகாயத்திலமேற்பூசுஞ் சேர்வை | ௯௯ |
| குதிரைக்கு விரையடிக்கும் விபரம் | ௯௮ |
| சொறிசிறங்கு | ௱ |
| அடா | ௱௨ |
| பாதேவைசர் | ௱௫ |
| மோத்திரா | ௱௭ |
| மூசலி | ௱௭ |
| சக்கிரபல்வல் | ௱௯ |
| உஷார் | ௧௧௪ |
| செம்பா | ௧௧௫ |
| குதிரைக்கு பாபிடிப்புக்கு மருந்து | ௧௧௬ |
| குதிரைக்கு அடிக்கும் பலவிதலேப்பு | ௧௧௬ |
| பேல் | ௧௧௭ |
| முதுகுபுண் | ௧௨௩ |
| பம்மனி | ௧௨௩ |
| …முறைகள் | ௧௨௪ |
| குதிரை இளைத்துப்போனதற்கு மசாலா | ௧௨௭ |
| குதிரை நாளுக்குநாள் இளைத்துப்போனால் கொடுக்கு மசாலா | ௧௨௮ |
| பத்திசா மசாலா | ௧௨௯ |
| வெய்யற்காலத்தில் கொடுக்கும் குளிர்ச்சி மசாலா | ௧௩௧ |

# பொருள் அட்டவணை.


| பெயர். | பக்கம். |
| --- | --- |
| [illegible]தவானைக்கண்டா விச்சிக்கமசாலா | ௧௬௨ |
| மர்தவான் குதிரையைக்கண்டா விச்சிக்கு மசாலா | ௧௬௩ |
| குதிரையின் குளம்புக்குள்ளிருக்கு மாமிசமெல்லா மழுகி சேதப்பட்டு அதினால் சீழ்ரேடிவருமாகில் பக்குவம் | ௧௬௪ |
| தாசமசாலா | ௧௬௫ |
| இரைப்புகண்ட குதிரைக்கு | ௧௬௭ |
| காற்குளம்புக்கு ஓத்தடம் | ௧௬ |
| அருமிபண்ணுகிற குதிரைக்கு கடிவாளத்திலே பூசுகிறதற்கு ஒர்விதி கண்டமுறை | க |
| பாசாத்திக் கஷிழ்தம் | க |
| சாசினி | க |
| திவாசலா | க |
| குதிரைகளைவைத்திருக்கு மொழுங்குகள் | க |
| கவனிப்பு | க |
| துன்பத்தைத்தருகின்றவைகள் | க |
| நன்மையைத்தருகிறவைகள் | க |


பொருள் அட்டவணை.

முற்றிற்று.

———